# தொழில் விஞ்ஞானி

(ஜி. டி. நாயுடுவின் வாழ்க்கை வரலாறு)

எழுதியவர்:

என். பெருமாள்

மொழிபெயர்த்தவர்:

இரா. கண்ணன்

யு. எம். எஸ். பவர் பிரஸ், கோயமுத்தூர்.

1949

முதல் பதிப்பு — 1949

உரிமைப் பதிவு

புத்தகம் கிடைக்குமிடம்:
**லைப் புக் டிபோ**
**அவனாசி ரோடு, கோயமுத்தூர்.**

வெளியிடுபவர்: இரா. கண்ணன், கோயமுத்தூர்.
பிரிண்டர்: புரையத் கண்ணன், கோயமுத்தூர்.

ஆங்கில முதல் பதிப்பின்

# முகவுரை

---

தென் இந்தியாவின் மான்செஸ்டர் என்று விளங்குகிற நகரம் கோயமுத்தூர். அங்கே பல பருத்தி மில்கள் உள்ளன. அவைகளின் வானளாவிய புகைபோக்கிகளிலிருந்து சுருள் சுருளாக புகை மெதுவாக உயரே சென்று மேகக் கூட்டத்தோடு கலக்கின்றன. இப்படிப்பட்டதான நகரத்திலே பிரசித்திபெற்ற ஒரு பங்களா இருக்கிறது. வழியோடு சென்றுகொண்டிருக்கும் ஒரு ரயில்வே போர்ட்டரையாவது அல்லது ஒரு வண்டிக்காரனையாவது அந்த பங்களா எங்கே இருக்கிறது என்று கேட்டால், அவன் முகத்தில் புன் சிரிப்புடன் அந்த இடத்தை அறிந்துக்கொள்ளுவான். அதை "கோபால் பா'க்" என்று அவர்கள் சொல்லுகிறார்கள். கோயமுத்தூரிலேயே ஒரு நாளைக்கு இந்த பங்களாவிற்கு விருந்தாளர்கள் வருவது போல வேறொரு பங்களாவிற்கும் வருவதில்லை. இந்த பங்களா ஒரு அரசியல் வாதியினுடையதோ அல்லது ஒரு பத்திரிகாசிரியருடையதோ அல்ல. மந்திரியினுடையதோ அல்லது அரசாங்க உயர்ந்த் கல்வி அதிகாரியினுடையதோ அல்ல. அது இணையற்ற மூளையோடு நாம் அதிசயிக்கக் கூடிய வாழ்க்கையைக்கொண்ட ஒருவரின் பங்களா. ஒரு கதையில் கதாநாயகனைப்போல், இந்த மனிதர் மிகவும் எளிய நிலையிலிருந்து தன்னுடைய சலிப்புரா உழைப்பினாலும் உயரிய எண்ணத்தாலும் சர்வ வல்லமையோடு கூடிய ஒரு உயர்ந்த நிலைமைக்கு படிப்படியாக ஏறியவர்.

நவீன இந்தியாவுடன் அதை தொழிற் துறையிலும், கண்டு பிடிக்கும் துறையிலும், போக்குவரத்து ஸ்தாபனங்களை எற்படுத்தும் துறையிலும் முன்னேற்றம் அடையச்செய்ய, அவர் ஒத்துழைக்கிறார். எனென்றால், அவர் இன்றைய தினம் தென் இந்தியாவில் ஒரு பெரிய பஸ் போக்குவரத்து ஸ்தாபனத்தை நிர்வகிக்கும் ஒரு மேதாவி. ஒரு கண்டு பிடிப்பாளர் என்னும் வகையில் அவர் பாராட்டுதலுக்கு உரியவர். ஆனால் அவருடைய கண்டுபிடிப்புகள் எல்லா வற்றின் உண்மை உயர்வை நாம் நம் நாட்டில் உணர்ந்து கொள்ளுவதற்குமுன் அமெரிக்கா ஐரோப்பா முதலிய அந்நிய தேசத்தவர்களால் அறிந்து பாராட்டப்பட்டது. நாம் தொழிற் துறையில் பிற்போக்கடைந்திருக்கிறோம். ஆகையால் இந்த துக்ககரமான முடிவு இந்தியாவிற்கு எற்பட்ட ஒரு தலைவிதி. ஆனால் இதற்கேற்றாற்போல் அல்லாமல், மக்கள் அவரை அறிந்துகொண்டிருக் கிறார்கள்; மரியாதையும் செய்கிறார்கள்; மேலும் மேலும் விரும்புகிறார்கள். அவருடைய வாழ்க்கை, குறிக்கோள் இவைகளின் மதிப்பு நமக்குப் பிற்காலம் வரக்கூடிய ஒரு ஜன சமூகத்தினால் நிச்சயமாக அறிந்துக்கொள்ளப்படும். அவர்களாலேயே அதன் உண்மை சொரூபத்தை உணர முடியும். ஒருவேளை அவர் நம்மிடையிலிருந்து மறைந்த வுடன் அவர் நோக்கங்களெல்லாம் அறிந்துகொள்ளப் படும் என்று நான் நம்புகிறேன். எனென்றால் கியாதி பெற்ற இந்தியர் ஒவ்வொருவரும் சர்வ சாதாரணமாக இந்த மாதிரிதான் நடத்தப்படுகிறார்கள். சென்னை கவர்னராக இருந்த சர் ஆர்தர் ஹோப் கொஞ்ச காலத்திற்கு முன்பு நப்பீல்டு பிரபுவிற்கு ஒத்திட்டுக் காட்டிய கோபால் நாயுடுவின் குமாரர் துரைசாமி நாயுடுவிற்கும் இந்த கதி எற்படலாம்.

துரைசாமி நாயுடுவின் பங்களாவான கோபால் பாக்கின் முன்புறத்தில் ஒரு அழகிய தோட்டம் இருக்கிறது. கோபால் பாக் நவீன வேலைப்பாட்டுடன் கூடிய ஒரு அழகிய பங்களா. இங்கு புழங்குவதற்குவேண்டிய சகல சாமான்களும் உண்டு. பகலெல்லாம் சதா வியவகாரங்கள் நடந்துகொண்டிருக்கும். இதில் ஒரு முக்கியமான விஷயம் என்னவென்றால், நாயுடு வரவேற்கும் நண்பர்களின் எண்ணிக்கை வியக்கத்தக்கதாயிருக்கும். பாரபட்சம் இல்லாமல் ஒவ்வொருவரையும் சந்தித்துப் பேசுவார். அவர்கள் ஒவ்வொருவருக்கும் வேண்டிய சவுகரியங்களைச் செய்து தருவார். அவர்களை உபசாரம் செய்து பேசிக் கொண்டிருப்பார். ஏனென்றால் அவர் நண்பர்களை சம்பாதிக்கவேண்டுமென்று விருப்பங்கொண்டவர். இந்த மனிதருக்கு மலையத்தனை வேலைகள் ஒவ்வொரு நாளும் கவனிப்பதற்கு இருக்கிறது. விருந்தாளிகள் வந்திருக்கும் போது அவர்களை கவனிக்காமல் தன் வேலைகளை கவனித்தால் அவர்கள் எங்கு தப்பபிப்பிராயம் கொண்டு விடுவார்களோ என்று அஞ்சி, அவர்களை சந்தோஷப் படுத்த எண்ணி, தன்னுடைய வேலைகளை எல்லாம் ஒரு புறம் ஒதுக்கிவைக்கக்கூடிய அளவிற்கு நிலைமை அவருக்கு ஏற்பட்டிருக்கிறது.

ஒற்றைநாடியான உருவமும், நடுத்தர உயரமும், பெரிய தலையும், எப்பொழுதும் சுத்தமாக க்ஷவரம் செய்யப்பட்ட முகத்தையும் உடைய ஜி. டி. நாயுடுவின் முகத்தில் சதா புன்னகை பூத்து நிற்கும். மிகவும் சாதாரண ஒரு உடுத்தும் வேஷ்டி, ஒரு ஷர்ட்டு, ஒரு மேல் துண்டு இவைகளையே அணிந்துக்கொள்ளுகிறார். அவர் மாமிசம் சாப்பிடுவதில்லை. சாராயத்தை வெறுப்பவர்.

சினிமா, சங்கீதம் முதலிய கேளிக்கைகளையும் அறவே வெறுக்கிறார். இந்த நோக்கங்களை தன் வாழ்க்கையின் அடிப்படையாகக் கொண்டிருக்கிறார். இடைவேளைகளில் ஒரு சிகரெட் பிடிக்கிறார். அவர் ஆங்கிலத்தை முறைப்பிரகாரம் ஒரு காலேஜிலாவது கற்றவரல்ல. ஆனால் அவர் தன்னுடைய சொந்த முயற்சியினால் ஆங்கில அறிவை அபிவிருத்தி செய்துக்கொண்டிருக்கிறார். ஆகையால் அந்த மொழியிலேயே தன்னுடைய வியாபாரத்தை நடத்தக்கூடிய சிறந்த அறிவு அவரிடம் காணப்படுகிறது. அகந்தையில்லாமல் மிகவும் அடக்கமானவர். ஜனங்களைப்பற்றியும், மற்ற விஷயங்களைப் பற்றியும் கொள்ளை கொள்ளையாக அபிப்பிராயங்கள் கூறி நாம் அதிசயிக்கக்கூடிய அளவிற்கு சம்பாஷனை செய்யும் ஒரு மனிதர். அவருடன் சில மணி நேரங்கள் அன்னியோன்னியமாகப் பேசிக்கொண்டிருந்தால் அவ்வருடைய வாயிலிருந்து விழும் ஒவ்வொரு வார்த்தையும் உங்களுக்கு ஒரு படிப்பினையாக இருக்கும். அவர் எட்டியமட்டும் பிரயாணம் செய்தவர். அவர் எங்கெங்கு சென்றாரோ அங்கெல்லாம் உள்ள பிரக்யாதிவாய்ந்த மனிதரை சந்தித்து அவர்களுடன் பழக்கத்தை எற்படுத்திக்கொண்டார். அவர்களையெல்லாம் இன்றைய தினம் தன்னுடைய நண்பர்கள் கணக்கில் சேர்த்திருக்கிறார். அதன் பயனாக ஒவ்வொரு வாரமும் வெளி நாடுகளுக்கு அவருடைய சொந்த கடிதங்கள் 500-க்கு மேல் அனுப்பப்படுகின்றன. அவைகள் அவருடைய பல்வேறு காரியதரிசிகளினால் டைப் அடிக்கப்பட்டவைகள்.

1941-ஆம் ஆண்டு கோடையில் கோயமுத்தூரில் எதிர்பாராமல் அவரை சந்திக்கும் பாக்கியம் எனக்குக் கிடைத்தது. என்னுடைய நண்பர் ஒருவர் அவரைச்

சந்திக்க என்னை அழைத்துச் சென்றார். சந்திப்பு மிகவும் விரிவாக இருந்தது. அவரைப்பற்றி என் மனதில் பதிந்தவைகளோ அளவிட முடியாதவை. பிறகு நான் அவரைப்பற்றி நன்றாக அறிந்துக்கொள்ளுவதில் முயற்சி செய்தேன். நாயுடுவின் வாழ்க்கை வரலாறு வாசகர்களை பிரமிக்கச் செய்யும். ஏனென்றால் நானே அவரைப் பற்றியும் அவருடைய வேலைகளைப்பற்றியும் ஒரு சமயம் அறிந்தபோது பிரமித்துவிட்டேன். இந்த ஒரு காரணமே எனக்கு இந்த புத்தகத்தை எழுத தூண்டுகோலாயிருந்தது. இது ஒரு முழு வாழ்க்கையோடு கூடிய ஒரு நாடகம். இந்த நாடகத்தில் உணர்ச்சி மிகுந்த சம்பவங்களும், மனதைக் கவரும் கட்டங்களும், வாழ்க்கைத் துறையில் ஏற்படும் வீரச் செய்கைகளும் ஆகிய ஒரு நாடகத்திற்கு வேண்டிய அம்சங்களெல்லாம் இருக்கின்றன. நாயுடு போன்றவர்கள் நம்மை உபயோககரமான துறையில் புக தூண்டுகோலாக இருக்கிறார்கள். அதன் மூலியமாக நாம் மனித வர்க்கத் திற்கு தொண்டு செய்து போற்றுதலுக்குரிய புகழை அடைவோம். இந்த புத்தகம் படித்து அந்தவிதமான வழிக்கு நாம் சென்றால், நான்காலத்தை வீணாக்கவில்லை என்று நினைப்பேன். இந்த புத்தகம் எழுதும் பணியில் மூளையோடு காலத்தைக் கடத்தியிருக்கிறேன் என்றும் கருதுவேன்.

நான் ஒரு சமயம் அவருடைய அமெரிக்க சுற்றுப் பிரயாணத்தை அறிய விரும்பினேன். ஏனென்றால் நான் அங்கு சில வருஷங்களை சுகமாகக் கழித்திருக்கிறேன். இந்த அபிப்பிராயத்தை நாயுடுவிடம் தெரிவித்தபோது, அமெரிக்கா சம்பந்தமான கடுதாசிகளை பார்க்க மனம் உவந்து அனுமதி அளித்தார். இந்த புத்தகத்தில் பாக்கி

உள்ள சமாசாரங்கள் அவருடன் நெருங்கிப் பழகும் நண்பர்களிடமிருந்து கேட்டுச் சேர்க்கப்பட்டவைகள். நான் இப்படிச் சேர்க்கப்பட்ட உண்மைகளை அவரைக் கொண்டே சரிபார்க்கச் சொல்ல எனக்குச் சந்தர்ப்பம் கிடைக்கவில்லை என்று வருந்துகிறேன். அவருக்கும் இதைப் பார்க்க நேரமோ அல்லது ஆர்வமோ இல்லை. அதுமாதிரியாக அவர் இந்த புத்தகத்தில் என்ன எழுதி யிருக்கிறது என்பதைப்பற்றி ஒரு வரிகூட படிக்காமல் இருக்கிறார். எப்படியிருந்தபோதிலும், நெருங்கிய நண்பர்கள் இந்த புத்தகத்தை முழுவதும் படித்துவிட்டு, இந்த புத்தகத்தில் கூடுமான வரையில் குறிப்பாக எல்லா வற்றையும் கவனித்துக் கையாளப்பட்டிருக்கிறது என்று தீர்மானிக்கிறார்கள். அந்தத் தீர்மானத்தின்படி, இந்தக் கையெழுத்துப் பிரதியை பதிப்பாளரிடம் பயமில்லாமல் அனுப்புகிறேன்.

ஜி. டி. நாயுடுவைப் போலுள்ள பெரிய அநுபவசாலி களைப்பற்றி எழுதுவதற்கு அதிகம் அதிகமாக விஷயங் கள் இருக்கின்றன. தற்காலத்தில் வாழ்க்கை வரலாற்றை எழுதும் முறையை மனதில் கொண்டு, பழைய காலத்தில் எழுதுவதுபோல் பத்திப் பத்தியாக எழுதித் தள்ளாமல் சுருக்கமாக குறிப்பாக உள்ள சில உண்மைகளை மாத்திரம் இங்கே தருகிறேன்.

சென்னை
17—1—44

என். பி.

# முன்னுரை

இந்தியாவின் மானத்திலும் வருமானத்திலும் கண்ணும் கருத்தும் கொண்டவர் நண்பர் ஜி. டி. நாயுடு அவர்கள். எனவே, தன்னலம் பேணாத தேசபக்தர் அவர். சம்பிரதாய வேதாந்தம் என்ற சோம்பல் தத்து வத்தை மதிக்காதவர்; எனவே, அவர் அருமையான காரிய வாதி; ஆனால் சமயோசிதவாதியல்ல. சஞ்சலமும் சந்தேகமும் இல்லாத மனது என்ற செல்வத்தைப் பெற்ற வராகையால், அவர் எதையும் அறைகுறை மனதோடு பேசுவதில்லை. ஆகவே, அவர் எதைப்பற்றியும் அடித்துப்பேசுகிறார். பொய்யும் ஏமாற்றும் அவரோடு உடன் பிறந்தவைகள் என்று சிலர் வம்பளப்பதை நான் கேட்டிருக்கிறேன். முள்ளை முள்ளால் எடுக்கவேண்டும் என்ற தர்ம சாஸ்திரத்தை நம்பும் நாயுடு அவர்கள், மேற்சொன்னவாறு தோற்றம் அளித்தால், அதில் ஆச்சரியமே இல்லை. காமாலைக் கண்ணனுக்கு, உலகம் மஞ்சளாகத் தோன்றுவது இயல்பு என்ற விதிக்கு கட்டுப் பட்டது அந்த வம்புப் பேச்சு. நாயுடு, நல்ல சிந்தனை யாளர். அவர், பள்ளியில் நன்றாய் பயிலாதவர்; என்றா லும், வியக்கத்தக்க மேதாவி. பெரிய உபகாரி; எனினும், ஒன்றுமே யாருக்கும் உதவி செய்யாதவரைப்போல நடிப்பார்; பேசுவார். அவரிடம் ஒரு குற்றமோ குறையோ இருக்குமாகில், அவர் அகம்பாவிபோல காணப் படுவதுதான். அந்த அகம்பாவந்தான், அவரை அல்ப னாக்காமல், தவறான வழியில் செல்லாமல் தடுத்து,

படிப்பறிவில்லா பாமரனும் நாயுடுவின் வரலாற்றை ஏன் அறிந்து கொள்ளவோ அல்லது கேட்கவோ கூடாது; அதற்கேற்ப அவன் ஏன் தன்னுடைய வாழ்க்கையை செப்பனிட்டுக் கொள்ளக் கூடாது என்று சிலர் கேட்கும் கேள்விகளுக்கு இடமளிக்காமல், அவர்களும் படிக்க வேண்டும் என்று எண்ணங்கொண்டு என்னால் முடிந்த அளவிற்கு மிகவும் எளிய நடையில் இந்தப் புத்தகத்தை உருவாக்கியிருக்கிறேன்.

ஆங்கிலத்தில் எழுதிய தன்னுடைய புத்தகத்தை தமிழில் மொழிபெயர்க்க எனக்கு அனுமதி கொடுத்த **ஸ்ரீ பெருமாள்** அவர்களுக்கு எனது நன்றி கலந்த வணக்கம்.

தவிர இந்த புத்தகத்தில் ஒரு சிறிய பாகம் 'நகர தூதன்' ஆசிரியர் **ஸ்ரீ திருமலைசாமி** அவர்கள் மொழி பெயர்த்திருந்தார்கள். அவைகளைக் கொடுத்து உதவியதற்காக அவருக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

மொழி பெயர்ப்பு வேலையில் எனக்கு உதவி செய்த என் நண்பருக்கு நான் எனது நன்றியைத் தெரிவிக்காவிட்டால் என்னுடைய கடமையிலிருந்து தவறியவனாவேன். ஆகையால் **ஸ்ரீ S. ராமையா பிள்ளை** அவர்களுக்கும் என் மனப்பூர்வமான நன்றி.

வணக்கம்

கோயமுத்தூர்
24—5—49

**இரா. கண்ணன்**

# பொருளடக்கம்


| அத்தியாயம் | | பக்கம் |
|---|---|---|
| I. | பால்ய விஷமம் | 1 |
| II. | வாலிப சேஷ்டை | 7 |
| III. | தொழில் பிரவேசம் | 16 |
| IV. | மோட்டார் தொழில் | 24 |
| V. | சிருஷ்டி கர்த்தா | 49 |
| VI. | மேற்கு திசை நோக்கி | 57 |
| VII. | காமிரா மேன் | 71 |
| VIII. | அமெரிக்காவில் | 77 |
| IX. | அரசியல் வாதியல்ல | 95 |
| X. | அரசாங்கத்திற்கெதிராக தனி ஒரு மனிதர் | 102 |
| XI. | விளையாட்டுப் பையன் | 119 |
| XII. | ஜனோபகாரி | 125 |
| XIII. | நீதியைத் தேடிக்கொண்டு | 131 |
| XIV. | இயந்திரக் கண்காட்சி | 156 |
| XV. | பின் குறிப்பு | 166 |

# இயந்திரத் தொழில் விஞ்ஞானி

## I

### பால்ய விஷமம்

1890-ம் ஆண்டுகளில், கோயமுத்தூர் ஜில்லா கிராமாந்திரப் பள்ளிக்கூடங்களில் சிலேட் பலகைகளோ காகிதங்களோ உபயோகித்ததில்லை. அப்பொழுதிருந்த பள்ளிகளுக்கும், இன்றைய பள்ளிகளுக்கும் நிரம்ப வித்தியாசமுண்டு. கிராமத்திலிருக்கும் படிக்கத் தெரிந்த ஒரு உபாத்தியாயர், அங்குள்ள இளம் பிராயமுள்ள சிறுவர்களை ஒன்றுகூட்டி, குறிப்பிட்ட ஒரு தாழ்வாரத் திண்ணை – அல்லது சாவடியில் உட்காரவைத்து, உரத்த குரலில் ராகத்தோடு பாடங்கள் சொல்லிக்கொடுப்பது அக்கால வழக்கம். தரைமீது மணல் பரப்பி, அதில் விரலால் எழுத்துக்களை வரைவதன்மூலம் எழுதும் முறை கற்பிக்கப்பட்டு வந்தது.

கோயமுத்தூர் நகருக்கு தென் கிழக்கே, பதினாறாவது கல்லில் உள்ள லட்சுமிநாயக்கன்பாளையம் என்னும் கிராமத்திலும் அதே பள்ளி முறைதான் அந்த நாட்களில் அனுஷ்டானத்திலிருந்தது. அந்நிலைமையி

லிருந்த லட்சுமிநாயக்கன்பாளையம் பள்ளிக்கு போய்வந்த இளப்பிள்ளைகளுள், எலும்புறுதியும் போர்க்குணமும் ஒளிவிசும் கண்களுமுடைய ஒரு சிறுவனும் இருந்தான். ஐந்து வயதுள்ள அந்தப் பால்யனின் பெயரைக்கேட்டால் துரைசாமி என்ற பதில் கிடைக்கும். அது 1898-ம் வருடம். ஒரு வயதுப் பாலகனாயிருக்கும்போதே, துரைசாமிக்கு, தனது அன்னைக்குக் கொள்ளி வைக்க வேண்டிய துர்ப்பாக்கியம் ஏற்பட்டது. அவனின் பெற்றோர்களது சொந்த ஊரும், ஜனன பூமியும், அன்னையைப் பறிகொடுத்த இடமும் கலங்கல் என்னும் கிராமமேயாகும்.

தாயில்லாக் குழந்தையான துரைசாமியை, தாய் மாமன் ராமசாமி நாயுடு எடுத்துச்சென்று வளர்த்துவந்தார். லட்சுமிநாயக்கன்பாளையம் ராமசாமி நாயுடுவின் வாசஸ் தலம். துரைசாமிக்குக் கல்வி அறிவு ஏற்படவேண்டும் என்பதற்காக அவர் அவனை அந்தக் கிராமப் பள்ளிக்கு அனுப்பிவந்தார். ஆனால் அந்தப் பால்யனுக்கோ பள்ளிக்குச் செல்வதில் விருப்பம் உண்டாகவில்லை. என்ன இருந்தாலும், துரைசாமி பால்யன்தானே! விருப்பமோ இல்லையோ, பால்யனாகையால் பள்ளிக்குப் போய்த்தானே ஆகவேண்டும்! சிரமத்தோடு சிலகாலம் சென்றுவந்தான்; அதுவும் மூன்றே வருடங்கள். சிறை வாசம் போன்றிருந்த பள்ளிக்கூடத்திலிருந்து விடுதலை அடையவேண்டுமென்ற மனத்துடிப்பு துரைசாமியை உள்ளூர அரித்துக்கொண்டிருந்தது. ஆனாலும் தமிழ் படிக்கவும், எழுதவும் பாராமல் பாடம் ஒப்பிக்கவும் அவன் கற்றுக்கொள்ளத் தவறவில்லை.

ஆயினும், அந்தப் பள்ளிக்கூடம் துரைசாமியை அதிக நாள் வைத்திருக்கவில்லை. அதைவிட்டு வெளியேற அவனாகவே ஒரு வழி தயாரித்தான். அது அவனுக்குச் சுலபமாகவும் பட்டது. விரலால் எழுது வதற்காக தரையில் பரப்பியிருந்த மணலை அள்ளி உபாத்தியாயரின் முகத்தில் வீசினான்; அவரது கண்களி லிருந்து ரத்தம் சொட்டிற்று. மறு கணம் துரைசாமி அங்கில்லை!

இந்தச் செய்தியைக் கேட்ட பையனின் மாமன் ராமசாமி நாயுடுவிற்கு கனகோபம்! என்ன செய்வார்? தாயில்லாப் பிள்ளை! பையனைப் பள்ளிக்கு அனுப்பு வதை நிறுத்துவதோடு அவரது கோபாக்னி ஒருவாறு தணிந்தது. உபாத்தியாயரிடம், துரைசாமி விஷமம் செய்தது அது முதல் தடவை அல்ல. முன்னொரு தடவை வேறொரு உபாத்தியாயரின் கண்களை அதே போலக் கெடுத்துவிட்டான். மூன்றாவதாகவும் இன்னொரு விஷமத்துக்கு இடங்கொடுக்கக் கூடாது என்பதற்காகவே பையனின் பள்ளிப் படிப்புக்கு முற்றுப்புள்ளி வைப்ப தென முடிவு செய்தார் ராமசாமி நாயுடு. அதே காலத் திலேயே, கலங்கல் கிராமத்திலிருந்த துரைசாமியின் தந்தை கோபால்சாமி நாயுடுவிடம் அவனை ஒப்படைத்து விட்டார். கோபால்சாமி நாயுடு ஒரு வியாபாரி. தவிர தானியங்கள், புகையிலை, மற்ற பொருள்களை சொந்த சாகுபடியும், செய்துவந்தார். அவர் எட்டு வயதான தன் மகன் துரைசாமியை, குடியானவர்களின் மேற்பார்வையில், தன்னுடைய தோட்டத்திலேயே இருக்கும்படி விட்டு

வைத்தார், எக்காரணத்தைக் கொண்டும் கலங்கலுக்கு வரவே கூடாது என்பது, மகனுக்கு தந்தை இட்ட கட்டளை.

தோட்டத்து வாசம் துரைசாமிக்கு ரொம்பப் பிடித்தமாயிருந்தது. கலங்கலிலிருந்து அன்றாடம் வேலைக்காரர்கள் மூலம் மகனுக்கு சாப்பாடு வந்து சேரும். ஓங்கி வளர்ந்த மரங்கள், பச்சைப் பசேலென்ற விளை பயிர்கள், தலைசாய்ந்த கதிர்கள், பாடும் புள்ளினங்கள், இவற்றினிடையே சுதந்திரமாக சஞ்சரித்துக்கொண்டிருந்தான் அச்சிறுவன். தன்னிச்சையாய், சவுகரியம்போல் அங்கு ஆனந்தமாக ஆடிப் பாடித் திரிவதில் பையனுக்குப் பரமதிருப்தி லட்சுமிநாயக்கன் பாளையத்திலேயே, துரைசாமிக்கு எழுத்தறிவும், படிப்பறிவும் ஏற்பட்டுவிட்டதல்லவா? கலங்கல் தோட்டத்தில் அந்த அறிவை விசாலப்படுத்தி வந்தான். தானே தனக்கு ஆசிரியனாயிருந்து, ஒவ்வொரு நாளும் தமிழ் நூல்களைப் படித்து அவற்றிலுள்ள விஷய ஞானத்தைக் கிரகித்து வந்தான். துரைசாமியின் செய்கைக்கு வேறோர் அர்த்தம் என்னவென்றால், பலவந்தத்தின்மீது படித்துக்கொள்ள அவன் தயாராயில்லை; அவனுக்கு எது பிரியமோ அதைத் தானாகவே படித்துக் கொள்வதில்தான் அவனுக்கு விருப்பம். அதே விதமான கல்விதான், தன் வாழ்வில் தேடிக்கொண்டது!

இப்படியே ஓடிற்று ஒரு வருட காலம். தீபாவளிப் பண்டிகைநாள் நெருங்கிக்கொண்டிருந்தது. பண்டிகையை தனயனோடிருந்து கொண்டாட வேண்டுமென்று தந்தை

கோபால்சாமி நாயுடுவுக்கு ஆசை உண்டாயிற்று. கலங்கலுக்கு துரைசாமியை அழைத்துவரும்படி தோட்டத்து ஆட்களுக்கு சேதி அனுப்பினார். அவர்கள் துரைசாமி சகிதமாக புறப்பட்டு நடந்தார்கள், சாலை வழியே அவர்கள் போய்க்கொண்டிருக்கும்போது, அதில் சென்றுகொண்டிருந்த ஒரு வைக்கோல் பாரம் ஏற்றிய வண்டி, துறு துறுத்த துரைசாமியின் குறும்புக் கண்களில் விழுந்தது. அதில் என்ன சந்தோஷமோ தெரியவில்லை! குடியானவர் எவருக்கும் தெரியாமல், இமைப்பொழுதில், தன்னிடமிருந்த தீக்குச்சியைக் கொளுத்தி, ஒரு பாவமும் அறியாத வண்டிக்காரனை நஷ்டத்துக்குள்ளாகிவிட்டான். வைக்கோல் குவியலில் தீப்பிடித்துக் கொண்டது; வண்டி முழுவதும் அக்னி ஜ்வாலை!

துரைசாமியை கலங்கலுக்குக் கொண்டுவந்து சேர்த்த அதே வேலையாட்கள், வைக்கோல் வண்டியை துரைசாமி எரித்த சேதியையும் கோபால்சாமி நாயுடுவிடம் சேர்ப்பித்தார்கள். மகனைக்கண்டு மகிழவிருந்த அந்தப் பஞ்சு வர்த்தகர், அதைக் கேட்டதும் மனச் சங்கடத்தால் மவுனியானார். சிறுவனான தன் மகனின் புத்திப் போக்கைப்பற்றி அவரால் நிதானிக்கவே முடியவில்லை; என்ன சொல்வதென்றும் அவருக்குத் தோன்றவில்லை. அந்த இடத்தில் வாய்ச்சொற்களும் அவருக்கு ஒத்தாசை செய்ய மறுத்துவிட்டன. ஒரே ஒரு காரியந்தான் அவரால் செய்யமுடிந்தது. துரைசாமியை, மீண்டும் தோட்டத்துக்கே கொண்டுபோய், மறு உத்திரவு வரை அவனை வெளியே அனுப்பவேண்டாம் என்றுவேலைக்காரர்களுக்கு

உத்திரவு போட்டார். அதுமுதல் மற்றும் ஒன்பது வருட காலம் தோட்டக் காட்டிலுள்ள ஏகாந்தமான களத்துவீடே துரைசாமியின் வாசஸ்தலமாயிற்று. ஆயினும் அந்தப் படுசுட்டியின் பற பறத்த பாதங்கள் சும்மாயிருக்குமா? அப்பாவுக்குத் தெரியாமல், அவ்வப்போது கிராமத்துக்கு வருவதும், ஆங்காங்கே சுற்றித் திரிவதும் பிள்ளையின் சம்பிரதாயமாயிருந்து வந்தது.

# II

## வாலிப சேஷ்டை

கடைசியில் துரைசாமி தோட்ட வாசத்தைத் துறந்து, கிராம வாசியாக கலங்கலுக்கே வாலிபம் பூக்கும் பருவத்தில் வந்து சேர்ந்தார். தத்துவாரித்தனமாக அவ்விளைஞர் சுற்றிக்கொண்டிருந்த சமயம் அமெரிக்கா வின் பார்க் டேவிஸ் கம்பெனியார் தயாரிக்கும் "வலி நிவாரணி" (Pain killer) என்னும் தைல புட்டி ஒன்று அவரது பார்வையில் பட்டது. ஒரு ரெவின்யூ இன்ஸ் பெக்டர் மூலம் அதைப்பற்றிய விவரத்தைக் கேட்டறிந் தார். கிராமத்தில், எத்தனையோ பேர் தலைவலியால் வருந்துகின்றனர். அவர்களின் உபாதையை நிவர்த்திக்கக் கூடிய இந்த அற்புத அவுஷதத்தைத் தருவித்து, விற்பனை செய்யலாமே என்ற எண்ணம் துரைசாமிக்கு உண்டா யிற்று. ரெவின்யூ இன்ஸ்பெக்டரின் உதவிகொண்டு, "வலி நிவாரணி" புட்டிகளை, அமெரிக்காவிலிருந்தே தருவிக்க ஏற்பாடு செய்தார். சில வாரங்களில் புட்டிகள் வந்து சேர்ந்தன; விற்பனையும் விறு விறுப்போடிருந்தது. அதோடுமட்டும் அவரது வியாபார ஆசை நிற்கவில்லை, கடிகாரங்கள், ஹார்மோனியப் பெட்டிகள் வேறு பல சில்லரை பொருள்களையும் தருவித்து விற்றுவந்தார். விளையாட்டாகத் தொடங்கிய சிறு வியாபாரம் நல்ல பலனளித்ததில் அவருக்கே அபாரமான திருப்தி!

துரைசாமியின் காளைப் பருவம் அது. தேஜஸ் கொண்ட இளைஞராக இருந்தார் அப்போது. கட்டுமஸ் தான ஒற்றைநாடி உடலமைப்பு, அதற்கேற்ப நல்ல உயரம், பசுந்தான முகவெட்டு! கிராமத்து வனிதையர் சிலருக்கு அவர்மீது அந்தரங்க பிரீதி. அவருடன் நெருங்கிப் பேச வேண்டுமென்று அவர்களில் சிலர் விரும்பினர், துரைசாமி யிடமிருந்த "வலி நிவாரணி" அக்கன்னிகளின் விருப்பத் திற்கு உதவி செய்வதாக இருந்தது. தங்களுக்குத் தலை வலி என்பதாகச் சொல்லிக்கொண்டு, நெற்றிகளில் தைலம் தேய்த்துவிடும்படி அநேகர் அவ்வாலிபரை அண்டிச் சென்றனர். உண்மை தெரியாத துரைசாமி, அவர்களுக்கு தைலமும் தேய்த்து வந்தார். ஆனால், எவ்வித குறைபாடு களுக்கும் இடங்கொடாத ஒழுக்க சீலமும் நெறிமுறையும் அந்த வாலிபனின் அணிகலன்களாக இருந்துவந்தன. தலைவலி நிவாரணங் கோரி தன்னைத் தேடிவந்த நங்கை களிடம் தமாஷ் – பரிகாசம் ரசித்தாரே தவிர, மனோ விகாரத்திற்கான எத்தனங்களில் ஈடுபடவே இல்லை. தலைவலியின் பெயரால், திரும்பத் திரும்ப, சில பெண்கள் தன்னிடம் வருவதைக் கண்டதும், மருந்து வியாபாரிக்குச் சந்தேகம் பிறந்தது. தமாசுக்காக தலைவலியென்று சொல்லி வருகிறார்கள் என்பதை உணர்ந்ததும், அவர் களின் உறவினர்களிடம் அவர்களைப்பற்றி சொல்லி, கண்டிக்கச் செய்தார்.

துரைசாமிக்கு பயமறியாப் பருவம்; எது ஒரு காரியத்திலும், துணிச்சல்! கிராமத்தில் தன்னை ஒத்த வாலிபர்களை ஒருங்கு திரட்டி கைபலமாக வைத்துக் கொண்டார். அந்தப் படைக்கு அவர்தான் தளபதி;

படையினர் தளபதியைப் பின்பற்றி நடக்கவேண்டும் என்பது அவர்களுக்குள் ஏற்பட்ட நியதி. ஒரு நாள், கிராமத்திலுள்ள விதவைகளை கணக்கெடுக்க வேண்டுமென்று அவர்கள் முடிவு செய்தார்கள்; கணக்கும் எடுக்கப்பட்டது. அதற்கப்புறம், அங்குள்ள ஜனங்களின் நல்லொழுக்கத்தைக் கண்காணிக்கும் பரிசோதகப்பணியில் இறங்கினர். கள்ளக் காதலில் ஈடுபட்டோரைக் கண்டுபிடித்து, அதில் சம்பந்தப்பட்ட ஸ்திரீகளின் உறவினர்க்கு, அவர்களால் சேதி அனுப்பப்பட்டு வந்தது. மிகவும் மோசமான சமயங்களில், அதில் சம்பந்தப்பட்ட பெண்களிடம் நேருக்கு நேராகவே சென்று, நடத்தையைத் திருத்திக்கொள்ளும்படி சொல்லவும் செய்தனர். இந்த விதமாகவும், இன்னும் வெவ்வேறு முறையிலும் கலங்கல் கிராமத்தில் துரைசாமியின் இளமைக் காலம் விசித்திரப் பாதையில் கழிந்துகொண்டு போயிற்று. சுருக்கமாகச் சொல்வதானால், அந்த கிராமத்திற்கே அவர் ஒரு 'போக்கிரி'ப் பையன்!

கிராமத்திலுள்ள ஒரு குடியானவர், தன் தோட்டத்தில் மாதுளை மரங்கள் பயிர் செய்திருந்தார். அந்த மரங்கள் நல்ல பலனளித்து வந்தன. மதுரமான கனிகள்! ஒரு தடவை அந்தப் பழங்களில் ஒன்று, தோட்டக்காரரால் கோபால்சாமி நாயுடுவுக்கு அனுப்பப்பட்டது. குமாரர் துரைசாமியே அதைக் கொண்டுபோய்த் தந்தைக்குக் கொடுத்தார். இரண்டொரு நாட்கள் சென்று தனக்கொரு பழம் தரவேண்டுமென்று தோட்டக்காரரைக் கேட்டார் துரைசாமி; அவரது கோரிக்கை பூர்த்தி செய்யப்படவில்லை. மறுநாள் காலை, அந்த குடியானவர் தன்

தோட்டத்துக்குச் சென்றார்; வழக்கம்போல மாதுளை மரங்களையும் பார்வையிட்டார். பாவம்! அவற்றிலிருந்த கனிகள் அத்தனையும், எங்கேயோ, எவராலோ, எப்படியோ மறைந்துபோயின.

ஷெல்லியைப்பற்றிய கதையை நம்மில் சிலர் அறிவார்கள். காகிதக் கப்பல்கள் செய்து, அவற்றை ஆற்று நீரில் மிதக்கவிட்டு ஓடுவதைப் பார்ப்பதில் அவருக்கு ஆனந்தம்! ஒரு தடவை, 'கப்பல் செய்வதற்காகத் துண்டுக் காகிதம் இருந்தால் கொடு, என்று தன் மனைவியைக் கேட்டார். அதற்கு 'இல்லை' என்று பதில்வரவே, அந்த அம்மாளின் கைப் பையிலிருந்து நூறு பவுன் நோட் ஒன்றைப் பிடுங்கி, அதைக் கப்பலாகச் செய்துவிட்டு, ஓடும் நீரில் தனது 'கப்பல்' ஆடி அசைந்து செல்லும் வேடிக்கையைக் கண்டு களித்தாராம் ஷெல்லி! அதே போல, தன்னையொத்த பையன்கள் காகிதப் பட்டங்களை (காற்றாடி) காற்றில் பறக்கவிட்டுக் கொண்டிருப்பதைக் கண்டார் துரைசாமி. தானும் அதைச் செய்ய வேண்டுமென்ற விருப்பம். அங்கு நின்றுகொண்டிருந்த ஒரு பையன் கையில் பட்டம் ஒன்றிருப்பதைக் கண்டார். ஆனால் அதைப் பறக்க விடுவதற்கு நூல் (சாடு) இல்லை. அருகில் பட்டரை வைத்திருந்த ஆசாரி ஆபரணம் செய்வதற்காக தங்கத்தை கம்பியாக இழுத்துக்கொண்டிருப்பதைப் பார்த்தார். உடனே அந்தக் கம்பியைப் பிடுங்கி, அதில் பட்டத்தைக் கட்டினார்! அந்த இடத்தில், அது அவருக்கு ஒரு தமாஷ்!

துரைசாமி, வயதில் பெரியவர்கள் என்று அவர்களிடம் மரியாதையுடன் நடப்பதில்லை. வெண்மையான

இந்த மெலிந்த பையனின் மிதமிஞ்சிய விஷமத்தனங்களுக்கு பெரியவர்கள் தான் பயந்து நடந்தார்கள். ஒரு நாள் அந்தக் கிராமத்தாரில் ஒருவனை பரிகாசப் பெயரிட்டு அழைத்தார்; "நீ தான் கந்தர்வன்" என்று சொல்லி நய்யாண்டி பண்ணினார். அதனால் கோபமடைந்த அந்த மனிதன் துரைசாமியை அடித்துவிட்டான். அன்றிரவு, வழக்கம்போல், "கந்தர்வன்" தன் கூரை வீட்டுக்குள் தூங்கிக்கொண்டிருந்தான்; நடு ஜாமத்திலே தன் வீடு தீப்பற்றி எரிவதையும் அதற்குள் தானே அகப்பட்டுக் கொண்டிருப்பதையும் உணர்ந்து துடியாய்த் துடித்தான். ரோம் நகரம் தீப்பிடித்து எரியும்போது, நீரோ மன்னன் பிடில் வாசித்துக் கொண்டிருந்தான் என்று படித்திருக்கிறோமே, அதேபோல "கந்தர்வன்" வீடு நெருப்புப் பற்றி எரிவதை, துரைசாமியும் சகாக்களும், அருகில் நின்று குதூகலத்தோடு பார்த்துக் கொண்டிருந்தனர். அந்த இடத்துக்கு ஓடோடி வந்த ஒருவர், தீ எரியும் வீடு தாழிடப்பட்டிருப்பதை அறிந்து அதைத் திறந்து விடுவதற்காகப் பாய்ந்தார். அப்பொழுது, அங்கு பறக்கப் பறக்க விரைந்து வந்த அவ்வூர் மக்கள், 'யார் நெருப்பு வைத்தது? என்று அங்கு நின்று கொண்டிருந்த துரைசாமி வகையராவைக் கேட்கவே, தாழ்ப்பாளைத் திறந்து கொண்டிருந்த அடுத்த வீட்டுக் காரனை அந்த வாலிபர்கள் சஞ்சலமின்றி சாந்தமாகச் சுட்டிக் காட்டினார்கள்!

கலங்கல் தோட்டக் காடுகளில் வேலை செய்துவந்த ஏழைக் குடியானவர்களுக்கு மூன்று அணா வீதமும் பெண் வேலையாட்களுக்கு இரண்டணா வீதமும் தினக்

கூலி கொடுப்பதென்று கிராமத்தார் முடிவு செய்திருந் தார்கள். துரைசாமியின் இதயம் ஏழைப் பாட்டாளி மக்களுக்காக பரிந்து நின்றது. அவர்களின் ஊதியத்தை அதிகப்படுத்த வேண்டுமென்று அவர் கேட்டுக்கொண்டார். கிராமத்தார் உடன்படவில்லை. அதோடு அந்தக் கூலி விகிதத் திட்டத்தை யார் மீறுகிறார்களோ அவர்கள், சமூக நிதிக்கு ஐந்து ரூபாய் அபராதம் கொடுத்தாக வேண்டும் என்றும் சொல்லிவிட்டார்கள். துரைசாமியும் அவரது கோஷ்டியாரும் கூடி யோசித்து, அந்தக் கட்டுப் பாட்டை முறியடித்தே தீர்வதென்று முடிவு செய்தனர். குடியானத் தொழிலாளரை வேலை நிறுத்தம் செய்யும்படி அவர்கள் தூண்டினார்கள்; வேலை நிறுத்தமும் தொடங்கிற்று. அது நீடித்தால், பட்டினி கிடக்க நேருமே என்று குடியானவர்கள் அஞ்சினர். "அஞ்ச வேண்டாம்; வலி நிவாரணி வியாபாரத்தில் சம்பாதித்த லாபம் எண்ணூறு ரூபாய் இருக்கின்றது; குடியானவர்கள் கூலி உயர்த்தப்படும்வரை, அந்தத் தொகையின் ஒவ்வொரு தம்படியும் தொழிலாளர்களுக்கே செலவிடப்படும்" என்று துரைசாமி தைரிய மூட்டினார். பக்கத்து கிராமங் களிலிருந்து புதுத் தொழிலாளர் கூட்டி வருவதற்கு கலங்கல் கிராமத்துப் பெரிய தனக்காரர் ஏற்பாடு செய்தார். ஆனால் துரைசாமியோ, கருங்காலித் தனத்துக்கு இடங் கொடுக்க முடியாதென்றும், கொலை நேரும்படியான அளவுக்கும் சென்று கருங்காலித்தனம் தவிடுபொடி செய்யப்படும் என்றும் மிரட்டினார். வேறு வழியில்லை! கடைசியில், துரைசாமி நிர்ணயித்த கூலிக்கே கிராமப் பெரியதனக்காரர் இணங்கி வந்தார்.

ஒருநாள், கலங்கல் கிராமத்து நாவிதனை, துரைசாமி செருப்பால் அடித்துவிட்டார். க்ஷவரம் செய்தல், எண்ணெய் குளியலின்போது உடம்பு தேய்த்தல், மரண காலங்களில் சடங்குகளைக் கவனித்தல் முதலிய காரியாதிகளின்பொருட்டு அந்த நாவிதனுக்கு கிராமத்திலுள்ள ஒவ்வொரு குடும்பத்தாரும் பத்து ரூபாய் பொறுமான முள்ள தானிய தவசங்கள் வழக்கமாகக் கொடுத்து வந்தனர். அது அவனுக்குக் குறைவான ஊதியம் என்பது துரைசாமியின் அபிப்பிராயம். முக க்ஷவரம் செய்தல், முடி வெட்டுதல் — அதற்குமட்டும் துரைசாமிக்கு நாவிதன் தேவையாயிருந்தது. அவர் எண்ணெய் தேய்த்து முழுகுவதில்லை; அவரது வாழ்நாளில் ஒரு தடவைகூட அதைச் செய்தறியார், ஆகவே, நாவிதன் அவருக்குச் செய்யும் வேலைக்காக, மாதம் ஐந்து ரூபாய் சம்பளம் தருவதாக அவராகவே தெரிவித்தார். ஆனால் நாவிதனோ, அவருக்கு வேலை செய்ய ஒழுங்காகவும் கிரமப்படியும் வரத்தவறினான். அதன்பேரில், பலர் அறிய, துரைசாமி அவனை செருப்பால் அடித்தார். நாவிதன், கிராமத் தலைவர்களிடம் பிராது செய்து கொண்டான்; அவர்களோ, பிராதைக் கேட்டதும் முகத்தைத் தொங்கவிட்டார்கள்! "துரைசாமியா!" என்று பெருமூச்சுவிட்டு, "அவன் செய்கைகளில் நாங்கள் தலையிடமாட்டோம்" என்று கூறிவிட்டனர். கிளைவ், இளைஞனாயிருக்கும்போது செய்த சேஷ்டைகளைப்போல, இங்கே துரைசாமியிடமும் காண்கின்றோம். இவைகளிலிருந்து, துஷ்டத்தனமுடைய இளைஞன் மனிதப் பிராயத்தில் மகத்தான காரியங்களைச் சாதிக்கத் தகுந்தவன் என்பது நிதர்சனமாகிறதல்லவா?

இவ்வாறெல்லாம், துரைசாமி சேஷ்டைகள் பல செய்துகொண்டு வந்தாலும், தனக்குத் தானே தமிழில் அறிஞராகவும் பயின்றுகொண்டு வந்தார். தோட்டத்து வாசியாக இருந்த காலமுதல், தமிழ் இலக்கியங்களைக் கறைத்துக் குடித்துவந்தார்; அது அவரது விருப்பத்துக்கும், சிரத்தைக்கும் உகந்ததாகவும் இருந்தது. ராமாயணம், மகாபாரதம், தொல்காப்பியம், சிலப்பதிகாரம், பத்துப்பாட்டு முதலிய சங்க இலக்கியங்களிலிருந்து திருப்புகழ் பாடல்களுடன், வேதாந்தம், சோதிடம், வைத்தியம் முதலிய சாஸ்திரங்கள்வரை நன்றாகப் படித்தறிந்தார். கற்பனை — கட்டுக் காதல் கதைகளைமட்டும் அவர் கைகளால் தொட்டோ, கண்ணெடுத்தோ பார்த்ததில்லை. பெருங் காரியங்களைச் சாதித்திருக்கும் எந்தப் பெரிய மனிதர்களைப் பார்த்தாலும் கட்டுக்கதைப் புத்தகங்களைத் தொட்டறியாதவர்களாகவே இருக்கக் காண்கிறோம். நார்த்கிளிப் பிரபு என்னும் மேதை, கற்பனைக் கதைகள் அத்தனையும் வெறும் குப்பை என்றுகூறி ஒதுக்கித் தள்ளியவர்! ஹென்றிபோர்டும், தாமஸ் எடிஸனும் அதே ரகத்தைச் சேர்ந்தவர்கள்! ஆகவே துரைசாமிக்கும் அவைகளின் மீது வெறுப்பு ஏற்பட்டதில் வியப்பில்லை!

துரைசாமி, வாலிபம் பூத்த காளையாயிற்றே! பிள்ளையின் பருவ காலம் விருதாவில் கழிவதற்கு தந்தை சகிப்பாரா? பருவத்தே பயிர் செய்ய வேண்டுமென்பது ஒரு புறமிருக்க, கலியாணம் செய்தால் தான் மகனின் குறும்புக் குணம் மாறி, குடும்பப் பொறுப்பு உண்டாகும் என்றும் எண்ணினார் கோபால்சாமி நாயுடு; எண்ணியபடி

செய்யவும் செய்தார். கிராமத்துப் பெண்ணான செல்லம்மாள் துரைசாமியின் மனைவியானார். மணமக னாகக் கங்கணக் கையுடன் இருக்கும் காலத்தில் கூட துரைசாமி, தன் குறும்புத்தனத்தை விடவில்லை. நடந்த விஷயம் என்ன தெரியுமா? மணமகள் கழுத்தில் திருமாங்கலியத் திருநாணை முடி போடுவதற்கான முகூர்த்த வேளை நெருங்கிக்கொண்டு வந்துவிட்டது. கிராமப் பெரியதனக்காரர்கள் அதைச் சுட்டிக்காட்டவே புரோகிதரும், முதலில் நடத்தவேண்டிய மந்திராதிகளை சுருக்கிக்கொண்டு, மணமகனை மணவரைக்கு அழைத்து வாருங்கள் என்றார். மணமகன் துரைசாமியோ அங்கு இல்லை. கலியாணப் பந்தலில் ஒரே பர பரப்பு! மாப்பிள்ளையைத் தேடி நாலா பக்கங்களுக்கும் ஆட்கள் விரைந்தோடினர். கடைசியாக, தோட்டக் காட்டில் ஒளிந்துகொண்டிருந்த துரைசாமியைப் பிடித்துக் கொண்டு வந்து சேர்த்தனர். முகூர்த்த வேளையில் ஓடிப்போன காரணத்தை அறிய எல்லோருக்கும் விருப்பம் இருக்கு மல்லவா? தான் செய்துகொள்ளவேண்டிய கலியாணத்தை ஒரு புரோகிதரால் நடத்திவைப்பதென்பதில் அவசியமோ, அர்த்தமோ இல்லை என்றார் மணமகன்; அந்த முறையை தான் வெறுப்பதாகவும் கூறினார். அதற்குமேல் புரோகிதரை ஒதுங்கி உட்காரச் செய்தனர்; சடங்கு மந்திரங்களும் நிறுத்தப்பட்டன. துரைசாமியும் மணமகள் கழுத்தில் மாங்கலியத் திருநாணை ஏற்றினார். அந்த விதமாக துரைசாமி, செல்லம்மாளும் கணவரும், மனைவியும் ஆனார்கள். அப்பொழுது அவருக்கு வயது இருபது.

# III

## தொழில் பிரவேசம்

தோட்டக் காட்டில் துரைசாமி வாசம் செய்து வந்தபோது, ஒரு நாள், உயரமான நடுத்தர வயதுடைய ஒரு ஐரோப்பியர் அங்கு வந்து சேர்ந்தார். அவரது தோற்றத்தைவிட, அவர் ஏறிவந்த வாகனம் துரைசாமிக்கு விசித்திரமாக தோன்றிற்று. ஜெ. கெ. லங்காஷயர் என்னும் பெயருடைய அவர், கோயமுத்தூர் ஜில்லாவில் நிலபுலன்களை அளந்து ஒழுங்குபடுத்தும் (survey and settlement) சர்க்கார் உத்தியோகஸ்தர். துரைசாமிக்கு விசித்திரமாக தோன்றிய அவர் ஏறிவந்த வாகனம் ஒரு மோட்டார் சைகிள். சில இடங்களைச் சுற்றிப் பார்த்து விட்டு கலங்கல் அருகில் வந்தபோது, அவரது வண்டியின் இஞ்ஜின் தொந்திரவு கொடுத்ததால் அந்த இடத்தில் தாமதித்தார். வண்டியை விட்டு அவர் இறங்கிய இடத்தில் சிறுவர்கள் வந்து சூழவே, அவர்களுள் 'வாட்ட சாட்ட மாய்' இருந்த துரைசாமியைப் பார்த்து, கொஞ்சம் மண்ணெண்ணையும் துணியும் கொடுக்கமுடியுமா? என்று கேட்டார். அந்த விசித்திர வண்டியை சிறிதுநேரமேனும் பார்த்துக் கொண்டிருக்க வேண்டுமென்பது துரைசாமியின் ஆசை. மண்ணெண்ணையைக் கொண்டு என்ன செய்யப் போகிறார் என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டு

மென்பதும் வாலிபனின் எண்ணம். ஆகவே அவர் விரைந்து சென்று எண்ணையும் துணியும் கொண்டுவந்து கொடுத்து விட்டு, அந்த மனிதரையும் வண்டியையும் மாறி மாறிப் பார்த்துக்கொண்டே நின்றார். 'வெண் குஷ்டம்' என்கிறார்களே, அந்த வியாதியால் பீடிக்கப்பட்ட மனிதனோ என்று யோசித்தார். அதுவரை ஐரோப்பிய ரையே பார்த்தறியாத அங்கு நின்ற கிராமாந்திர வாலிபர் கண்களுக்கு, வெள்ளை வெளேரென்று பள பளப்பா யிருந்த லங்காஷயரின் தோற்றம் மிகுந்த ஆச்சரியத்தை உண்டு பண்ணிற்று. அவர் தனது வண்டி இஞ்ஜினைக் கழற்றி, துடைத்து, சீராகப் பொருத்தி வைத்துக் கொண் டிருந்ததை துரைசாமி கூர்மையோடு கவனித்துக் கொண் டிருந்தார். அந்த முறைகளைப் பார்த்ததும் அவரது சிரத்தையும் சிந்தையும் சுழலத் தொடங்கின. அந்த வாகனத்தை தனக்கே சொந்தமாக்கிக் கொள்ளவேண்டும் என்ற ஆசை துரைசாமியின் மனதைக் கவ்விக்கொண்டது. ஆனால் அந்த 'வெண் குஷ்டரோகி' அவரது 'விசித்திர' வாகனத்துடன், அதி சீக்கிரத்தில் சிட்டாய்ப் பறந்து விட்டார். வாகனம் மறைந்து போனாலும், துரைசாமி அதை மறக்கமுடியவில்லை; அவரது எண்ணக் குழியில் அந்த நினைவு ஆழப் பதிந்துகொண்டது. சீக்கிரத்திலோ சில காலங் கழிந்தோ, எப்படியாவது அப்படிப்பட்ட வாகனம் ஒன்றை அடைந்தே தீரவேண்டும் என்ற எண்ணம் அவரது மனோபாவத்தில் குடிகொண்டுவிட்டது.

கூண்டுக்குள் இருக்கும் குஞ்சுகளுக்கு இறக்கை முளைத்த பிறகும் கூண்டை விட்டுத் தாண்டக்கூடாது என்றால் அது ஆகக்கூடிய காரியமா? முதலில் கூண்டுக் கும் கிளைக்குமாக தத்தித் தத்தி உட்காரும்; பிறகு

கிளைக்குக் கிளை தாவும்; அப்புரம் மரத்துக்கு மரம் பறக்கும்; கடைசியில் வானத்தையே வட்டமிடும். பறவைகளின் தன்மை அதுவானால் மனிதர்கள்? தோட்டத்து வாசியாயிருந்த துரைசாமி கிராமவாசியானார். பகுத்தறிவு பூத்த பிறகும் பட்டணப் பிரதேசங்களைப் பார்க்காதிருக்க மனம் ஒப்புமா? துரைசாமி கோயமுத்தூரைப் பார்த்ததே இல்லை. அந்த விசித்திர வாகனம்? — அதைப் பற்றிய அபிலாஷையைப் பூர்த்தி செய்ய வேண்டுமென்ற துடிப்பு! அத்தனையும் கூடி அவரை அந்த ஜில்லாவின் தலைநகருக்கு அழைத்து வந்தன.

கலங்கலைவிட்டு கோவைக்கு வரும்போது துரைசாமிக்கு வயது இருபதுக்கு மேலாகிவிட்டது. வந்து கொண்டிருக்கும்போதே வழியில் ஒரு காட்சி! முதன் முதலாக அப்போதுதான் அவர் ரயில் வண்டியைப் பார்க்கிறார். பார்த்ததும் நடுநடுங்கி, ஸ்தம்பித்துப் போனார். சில நிமிடங்கள் வரை, விபரீத சத்தமிட்டுக் கொண்டு வேகமாய் ஓடிய அந்த வண்டியை, அது மறையும் வரை வியப்போடு வைத்தகண் வாங்காமல் பார்த்து நின்றார். இன்னும், இதுபோன்ற என்னென்னவோ அதிசயங்களை நகரத்தில் காணமுடியும் என்ற நம்பிக்கை சூட்சம புத்திகொண்ட இந்த கிராம வாலிபருக்கு உண்டாயிற்று. கோவைக்கு வந்தே விட்டார். கையிலே தம்படி கூட இல்லை! வயிற்றுப் பசியின் தொல்லை பெரிய பிரச்னையாகிவிட்டது. அருகிலே ஒரு ஹோட்டல் இருந்தது; அதில் வேலை செய்வதாகச் சம்மதித்துச் சேர்ந்துகொண்டார். துரைசாமிக்கு ஹோட்டல்காரர் கொடுப்பதாக வாக்களித்த சம்பளம் சோறு போட்டு மாதம் மூன்று ரூபா.

என்னென்னவோ பெரிய விஷயங்களைப் பற்றி யெல்லாம் துரைசாமியின் எண்ணத்திலே அலைபாய்ந்து கொண்டிருந்தது; ஆனாலும், அப்பொழுதிருந்த நிலைமையை உத்தேசித்து ஹோட்டல் வேலையை அமைதியாக ஒப்புக்கொண்டார். பட்டணப் பிரவேசத்தின் முதல் மூன்று வருடகாலம் அப்படிக் கழிந்தது. அதற்கப்புறம் ஹோட்டல் சேவகத்தில் புளிப்புத் தட்டிற்று; அங்கிருக்க மனங்கொள்ளவில்லை. அதை விட்டு வெளியேறும்போது, அதுவரை அவர் சேமித்துவைத்த தொகை நானூறு ரூபாய் கையிருப்பிலிருந்தது. வேறெதிலும் அவருக்கு நாட்டஞ் செல்லவில்லை. அந்த விசித்திர வாகனந்தான் அவரது மனத் திரையில் காட்சி அளித்தது. லங்காஷயர் அப்போது செட்டில்மென்ட் ஆபீசராக கோவையிலேயே இருந்தார். அவரது இருப்பிடம் விசாரித்தறிந்து, அந்த நானூறு ரூபாயுடன், அவரிடம் சென்று, எப்படி எப்படியோ பேசி, மோட்டார் சைக்கிளை வாங்கிக் கொண்டார் துரைசாமி. அது அவர் கைக்கு வந்ததும், அதன் ஒவ்வொரு பாகத்தையும் தனித்தனியே பிரித்துப் பார்த்தார். மீண்டும் ஒழுங்காகப் பூட்டி, உபயோகித்தார். அந்த இயந்திரத்தை விளையாட்டுப் பொருள் போலவே பிரிப்பதும் பூட்டுவதுமாகயிருந்து, அதன் அமைப்பு, வேலைப்பாடு, சூட்சமம் எல்லாவற்றையும் தன்னந் தனியாகவே கற்றுக்கொண்டார்.

மேற்கண்ட விஷயங்களில் ஆவல் அதிகமுள்ள துரைசாமிக்கு, வெறுமனே சிறு மெக்கானிக்காக உழல்வதில் திருப்தி ஏற்படவில்லை. சில நூறு ரூபாய்கள் கடன் வாங்கும் அளவுக்கு சமாளித்துக்கொண்டார்.

அதை மூலதனமாக வைத்து பருத்தி வியாபாரத் துறையில் இறங்கினார். அந்தத் தொழில், சூதாட்டம் போன்ற (speculation) சாகச வர்த்தகமாயிருந்ததால் லாபமும் நஷ்டமும் அடுத்தடுத்து வந்தன. சில மாதங்களில் அவரது முயற்சி முற்றிலும் சிதறுண்டு, கையிலிருந்த காசுகள் அத்தனையும் காற்றாகப் பறந்து போனதை கண்டார். ஆனால் போராட்டத்தை கைவிடும் சுபாவி அல்ல அவர். "அதிர்ஷ்ட தேவதை" அவரிடம் வந்தாலும் சரி, வராவிடினும் சரி; உறுதியாக தொடர்ந்து நடத்திச் செல்லக்கூடியவர்; 'துரதிர்ஷ்டத்தை'த் தாங்கிக் கொள்ளும் தைரியசாலியுங்கூட. துணிச்சலுடைய துரைசாமிக்கு, எந்த ஒரு வேலையானாலும் மிகப் பெரியது—மிகச் சிறியது, சாத்தியமுள்ளது—சாத்தியப் படாதது என்ற பாகுபாடே கிடையாது.

கொஞ்சமும் தாமதியாமல் கோவையை அடுத்த சிங்காநல்லூர் ஜின்னிங் பாக்டரியில் வேலைக்குச் சேர்ந்து விடுவதென்று முடிவுகட்டினார். அதில் உணவோடு மாதம் பன்னிரண்டு ரூபாய் சம்பளத்தில் அவரை வேலைக்கு எடுத்துக்கொண்டார்கள். ஆனால் அவருக்கிருந்த சுயேச்சை உணர்ச்சி, மற்றவர்களின் கீழ் வேலை செய்வதை நீடிக்க விடவில்லை. அவருடைய மூளை சுதந்திரப் புரட்சியில் ஈடுபட்டது; சொந்தத்தில் தொழிலை தொடங்கும்படி தூண்டிற்று. அதற்கு ஏற்ற விதமாக, போதுமான மூலதனம் சேகரித்து, திருப்பூரில் சொந்தமாகவே ஒரு பஞ்சாலை (ஜின்னிங்) ஆரம்பித்தார். இந்தத் தொழிலுக்கு மூலதனமாக பதினேழாயிரம் போடப்பட்டது. முதலாவது உலக யுத்தம் நடந்த

சமயம் துரைசாமியின் பஞ்சாலைத் தொழில் செழித்து வளர்ந்தது. யுத்தமுடிவில், அவருக்குமட்டும் லட்சத்து ஐம்பதினாயிரம் ரூபாய் மீதம். அக்காலத்தில், சிறிய நகரமான கோயமுத்தூரிலுள்ள முக்கியஸ்தர்கள் ஜாபிதாவில் துரைசாமியின் பெயரும் காணப்பட்டுவந்தது. பொது நல காரியாதிகளில் சிரத்தை செலுத்திவந்தார். வருடத்துக்கு வருடம், வெவ்வேறு இடங்களில் கூடிவந்த அகில இந்திய காங்கிரஸ் மகாசபைகளுக்கு போய்க் கொண்டிருந்தார்.

அந்த நிலைமையில், கோயமுத்தூர், அவருக்கு ஒரு சிறிய இடமாகத் தென்பட்டது. அவரது கற்பனா சக்தியில் ஒரே கலக்கம்! பம்பாய் நகரில் பஞ்சு வர்த்தகம் நடத்துவோருக்கு அதிர்ஷ்டமுண்டாகிறதென்று அவர் கனவு கண்டார். வட நாட்டிலிருந்து கோயமுத்தூருக்கு வருகின்ற பஞ்சுத் தரகர்கள் முன்னுக்கு வருவதைப் பார்த்தார். அதன்பேரில் பம்பாய்க்குப் போவதென்று தீர்மானித்தார். தீர்மானப்படியே போகவும் செய்தார். ஒன்றரை வருடகாலம் பம்பாயிலேயே அவரது வியாபாரம் நடந்தது. அந்த ஒன்றரை வருட காலத்தில், திருப்பூரில் சம்பாதித்த ஒன்றரை லட்ச ரூபாய்களும் போய்விட்டன. வெறுங் கையோடு கோயமுத்தூருக்குத் திரும்பிவந்தார். அப்பொழுது, சுயேச்சையாய்த் தொழில் நடத்துவதற்கு முதல் கொடுத்து உதவ, எவரும் முன்வரவில்லை. எங்கேனும் சம்பள வேலைக்குத்தான் போகவேண்டும் என்ற நிலைமை ஏற்பட்டது. என்றாலும் வர்த்தகத் துறையில் நாணயஸ்தர் என்ற கியாதி துரைசாமியின் அணிகலனாயிருந்து வந்ததால், அந்தப் பெயரை எந்த

வகையாலேனும் காப்பாற்றவேண்டியிருந்தது. அதனால், வயது முதிர்ந்த கோபால்சாமி நாயுடு தன் மகனை வீட்டுக்குத் திரும்பி வரும்படி அழைத்துங்கூட, கலங்கலி லிருந்த தந்தையிடம் போகவில்லை.

அந்தக் காலத்தில், சர் ராபர்ட் ஸ்டேன்ஸ் என்னும் பிரசித்திபெற்ற ஒரு ஐரோப்பிய வர்த்தகர் கோயமுத்தூரில் வசித்து வந்தார். அவர், ஒரு பஞ்சு நூற்கும் ஆலைக் (Mill) கும், ரப்பர், தேயிலை, காப்பி தோட்டங்களுக்கும் சொந்தக்காரர்; முதலாவது உலக யுத்தம் முடிந்தபின், மோட்டார்வண்டி வியாபாரமும் நடத்திவந்தார். அவரிடம் துரைசாமி சென்று தனக்கு ஒரு 'மெக்கானிக்' வேலை கொடுக்க வேண்டுமென்று கோரினார். விசால இதயங்கொண்ட சர் ஸ்டேன்ஸ், துரைசாமியின் திறமை களைப்பற்றி ஏற்கனவே அறிந்தவராகையால், அவரைத் தன்னிடம் வேலைக்கு வைத்துக்கொள்ள சம்மதப்பட வில்லை. இன்னொருவரின் கீழ் வேலை செய்வதைவிட சொந்தமாகத் தொழில் நடத்தும்படியும் யோசனை கூறினார். பருத்தி வியாபாரத்துக்குப் பதில், வேறொரு தொழில் செய்யலாமே என்பது ஸ்டேன்ஸ் கூறிய அபிப்பிராயம். துரைசாமி, ஒரு மோட்டார்வண்டி வாங்கி, அதை வாடகைக்கு ஓட்டுவதென்று தீர்மானிக்கப் பட்டது. அதற்காக, சர் ராபர்ட் ஸ்டேன்ஸ் நாலாயிரம் ரூபாய் கடனாக முன்பணம் கொடுத்தார். மற்றொரு நாலாயிரம் ரூபாய் துரைசாமியே சேகரித்தாகவேண்டும்; அவரும் அதைச் சேகரித்து முடித்தார். இந்த சந்தர்ப் பத்தில் காலஞ்சென்ற திவான்பஹதூர் சோமசுந்தரம் செட்டியாரிடம் சென்றபோது, அவரும் துரைசாமிக்கு

ஒரு யோசனை கூறினார். எந்தத் தொழிலாயிருந்தாலும், மூலதனத்தில் ஒரு பாதியை தொழிலில் ஈடுபடுத்திக் கொண்டு மற்றோர் பாதியை அவசரச் செலவினங் களுக்காக ஒதுக்கி வைக்கவேண்டும் என்பதுதான் திவான் பஹதூர் செட்டியார் கூறிய யோசனை. இந்தவிதமாக மோட்டார் தொழிலில் முதன் முதலாகப் பிரவேசித்தார் துரைசாமி! அப்பொழுது காலண்டர் காட்டிய வருடம் 1920!

பழனி — பொள்ளாச்சி! இந்த இரண்டு ஊர் களுக்கும் இடையேயுள்ள தூரம் சுமார் நாற்பது மைல்கள். துரைசாமியால் வாங்கப்பட்ட, பிரயாணிகள் செல்லும் முதல் மோட்டார், பொள்ளாச்சிக்கும் பழனிக்குமாகத்தான் ஓடிக்கொண்டிருந்தது. அதை ஓட்டிச் சென்றவர் வேறு எவருமில்லை! அதன் சொந்தக்காரரான துரைசாமியே தான்! இதுவே ஆரம்ப நிலை. ஆனால் இப் பொழுதோ அவரிடமுள்ள பிரயாண வண்டிகள் ஒரு படை! இந்த ஒரே மனிதர்தான், பொதுஜனப் போக்குவரத்தின் நலனுக்கு இடரின்றி பிரயோஜனப் படக்கூடிய விதமாய் நல்ல நிலைமையில், வல்லமை சுத்தமுள்ள அதிகப் படியான மோட்டார் வண்டிகளை தன் ஆளுகையில் வைத்திருக்கிறார். ஒரு திறமையான மோட்டார் மன்னர் — பிரமுகர் — என்று, இந்த தேசம் முதல் அன்னிய நாட்டார் வரைக்கும், ஜி. டி. நாயுடுவின் பெயர் வியாபகம் அடைந்திருக்கிறது.

கோபால்சாமி நாயுடுவின் குமாரர் துரைசாமி நாயுடுதான், சுருக்கமாக, எளிதாக, அழகாக, பிரியமாக ஜி. டி. நாயுடு என்று அழைக்கப்படுகிறார்!

❀

## IV

# மோட்டார் தொழில்

இந்தியாவில் மோட்டார் 'மன்னர்' என்று வியாபகம் அடைந்துள்ள ஜி. டி. நாயுடு, ரஸ்தா போக்கு – வரத்துப் (problem of road transport) பிரச்னையைப் பற்றிய சகல நுணுக்கங்களையும் தெளிவாகத் தெரிந்தவர். இன்றையதினம், கோயமுத்தூர் ஜில்லாவைச் சேர்ந்த, ஏறக்குறைய எல்லா ரஸ்தாக்களிலும் அவரது மோட்டார் பஸ்கள் ஓடிக்கொண்டிருப்பதோடு, அக்கம்பக்கத்து ஜில்லாக்களான நீலகிரி, மதுரை, மலையாளம் – கொச்சி சமஸ்தானம் – முதலிய பிரதேசங்களிலும் ஒரு பகுதிவரை போய்க்கொண்டிருக்கின்றன. அவரது நேரான நிர்வாகப் பராமரிப்பிலுள்ள யுனைடெட் மோட்டார்ஸ் சர்விஸ் என்னும் ஐக்கிய ஸ்தாபனத்தில் மட்டும் இருநூறு பஸ்களுக்குமேல் இருந்துவருகின்றன; அவைகள் ஓடும் ரஸ்தாவின் நீளம் பதினையாயிரம் மைல்கள். சராசரி, நாள் ஒன்றுக்குப் பத்தாயிரம் மக்களின் பிரயாண சவுகரியங்களுக்கு அவைகள் உதவுகின்றன. இந்த ஸ்தாபனத்தில் ஓராயிரம் பேர்களுக்குமேல் வேலை பார்க்கின்றனர்; இவர்களின் ஊதியமாக, மாதாமாதம், பதினேழாயிரம் ரூபாய்களுக்குமேல் வினியோகம் செய்யப்படுகின்றன. இந்தத் தொழிலின் நிர்வாக அமைப்பு முழுமையும் இன்றைய நவீன முறையில் அமெரிக்க பாணியை அனுசரித்து, திறமையின்

சிக்ராத்தைத் தெளிவுபடுத்துவதாய் இருக்கின்றது. தொழில்முறை முழுமையும் இலாகா வாரியாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு இலாகாவும், தனித்தனியே ஓரோர் பிரதமரைக் கொண்டிருக்கிறது; 'ஜெனரல் மானேஜர்' என்னும் பெயரால், எல்லா இலாகாக்களையும் கவனித்துக்கொள்ள, அங்கே ஒரு பொது நிர்வாக புருஷர் இருந்துவருகிறார்; எல்லோருக்கும் மேலாக நிர்வாகக் கொள்கைகள் அத்தனையும், நாயுடு, தன் கைகளிலேயே வைத்துக்கொண்டு, தாமாகவே நேருக்கு நேர் பார்த்துக் கொள்ளுகிறார்.

இந்த நூற்றாண்டின் மூன்றாவது தசாங்கத்தில் (decade), ஜி. டி. நாயுடு, வெற்றிகரமான மோட்டார் விற்பன்னராக ஆகிவிட்டாரானாலும், கோயமுத்தூரிலுள்ள அவரது பஸ் சர்விஸ்கள், இன்றைய தினம் இருந்துவருவதைப் போன்ற ஏகபோக உரிமை, அந்நாட்களில் அவருக்குக் கொடுத்துவரவில்லை. 1933ல் பல பஸ் சொந்தக்காரர்களை ஒன்று சேர்த்து, கூட்டு ஸ்தாபனம் ஒன்று அமைத்தார்; அதுதான் இப்பொழுது "யுனைடெட் மோட்டார்ஸ்" என்னும் பெயரோடு பிரபலமடைந்துள்ள ஸ்தாபனம். இப்படி அநேகரை ஐக்கியப் படுத்தியதன்மூலம், பஸ் சர்விஸில் நடந்துவந்த போட்டா போட்டி ஒழிந்ததோடு, கூட்டுறவு ஏற்படுவதற்கு முன் நஷ்டமடைந்துவந்த பஸ் சொந்தக்காரர்கள் இப்பொழுது மாதா மாதம் ஒருவித அல்லலுமில்லாமல் லாபத்தொகை வாங்கிச் செல்லுகின்றார்கள். கூட்டுறவுக் கொள்கையில் நாயுடு மிகுந்த நம்பிக்கை கொண்டவர். தனித்தனியே, போட்டா போட்டியுடன் நடந்துவந்த

அநேக பஸ்களை ஒரே நிர்வாகத்தின்கீழ் ஐக்கியப்படுத்தி உருவாக்கியது, அவரது வாழ்க்கையில் அவர் நிறைவேற்றிய மகத்தான காரியங்களில் ஒன்று.

இந்த (கூட்டு) போக்குவரத்து ஸ்தாபனம் பொது மக்களுக்கு செய்துவரும் சேவைகளைப்பற்றி, சரித்திர ரூபமாக அநேக புத்தகங்கள் எழுதலாம். பஸ்களில் ஜனங்கள் உட்காருவதற்கான இடவசதி, வேலைக்காரர்கள் பிரயாணிகளை மரியாதையுடன் நடத்தும் சேவா முறை, பஸ் போய் நிற்குமிடங்களில் (terminals) ஜனங்களுக்காக செய்யப்பட்டுள்ள சவுகரிய ஏற்பாடுகள், அத்தனையும் அந்த மேதை ஜி. டி. நாயுடுவின் சிலாகிக்கத்தக்க பெரு முயற்சியின் விளைவே ஆகும். "யு. எம். எஸ்., அபரிமிதமான அக்கரை கொண்ட ஒரு அறிஞரை மானேஜிங் டயரக்டராக அடைந்திருக்கும் அதிர்ஷ்டமுள்ள ஸ்தாபனம்" என்று புகழ்ந்து, இந்த தேசத்தின் தெளிவான பொருளாதார சாஸ்திரி டாக்டர் பி. வி. நாராயண்சாமி நாயுடு வெளியிட்டதும் திரு. பத்ரிராவ் எழுதியதுமான 'ரோடு — ரயில் போக்குவரத்து' என்னும் புத்தகத்தில் குறிப்பிடுகிறார். "சமுதாய, பொருளாதார நலன்களுக்குப் பயன்படக்கூடிய முறையில் நல்ல நிலைமையிலும் வசதிகளுடனும் போக்குவரத்து சாதனங்களை உதவிவரும் யுனைடெட் மோட்டார்ஸ் ஸ்தாபனம் மிகவும் மெச்சத் தக்கது" என்றும் எழுதியிருந்தார்.

பிரயாணம் செய்யும் மக்களின் சவுகரியங்களை அதிகப்படுத்திக் கொடுப்பதற்காக, இங்கிலாந்திலும் அமெரிக்காவிலும் ஓடுகின்ற மோட்டார் வண்டிகளைப்

போலவே இங்கும் ஓடச்செய்ய வேண்டுமென்பது நாயுடுவின் ஆசை. ஆனால் அவருக்கிருந்துவரும் கிரமமான இந்த ஆசையை ஜில்லா போர்டார் உணர்ந்து கொள்ளவில்லை என்பது, அவர்கள், அவரது எண்ணத்தை நிறைவேற்றுவதற்கான அனுமதி அளிக்க மறுத்து விட்டதிலிருந்து தெரிகிறது. கோவை ஜில்லா போர்டாரின் புத்திப் போக்கை ஒருவர் தெரிந்து கொள்வதே ரொம்பச் சிரமமான காரியம்.

யுனைடெட் மோட்டார்ஸ் சர்விஸின் நற்பெயருக்கு துளிக்கூட அப்பழுக்கு வரக்கூடாதென்பதற்காக, நாயுடு பல்வேறான ஏற்பாடுகள் செய்திருக்கிறார். அந்த வகையில், தமது தொழில் முறை சம்பந்தமாய் நேர்முகமாகக் காட்டிவரும் சிரத்தை போற்றத் தக்கது. அவருடைய வேலைக்காரர்களின் நல் நடத்தைக்காக அவர் சில விதிகள் வகுத்திருக்கிறார். நாணயம், மரியாதை, வேலைமீது சிரத்தை, ஆகிய இவைகளெல்லாம் அந்த விதிகளில் வலியுறுத்தப்படுகின்றன. பஸ் வேலைக்காரர்கள், ஜனங்களிடம் எப்படி நடந்துகொள்ளுகிறார்கள் என்பதை அறிவதற்காக, கலிபா ஹாருன் – அல் ரஷீதைப் போல, அவரே அடிக்கடி மாறு வேடத்துடன் பஸ்களில் பிரயாணம் செய்திருக்கிறார். திண்டுக்கல்லில், அவருடைய 'ஷெட்' காவலாளி ஒருவன் அந்த இடத்தை விட்டு இரவு பூராவும் இல்லாதிருந்ததை ஒரு தடவை கண்டுபிடித்தார். மற்றோர் தடவை, டிரைவர் ஒருவர் பஸ்ஸை அதிவேகமாக ஓட்டிச் செல்வதைத் தெரிந்து கொண்டார். இன்னோர் தடவை, வேறொரு மனிதனை விட்டு பஸ் கண்டக்டரின் கன்னத்தில் அறையச் செய்து,

அந்த கண்டக்டர் கோபங்கொண்டு பதிலறை கொடுக்கிறானா, இல்லையா என்பதைக் கவனித்தார். யு. எம். எஸ். வேலைக்காரர் எவரும், பதிலுக்குப் பதில் கோபத்திற்கான காரியங்களை செய்யக்கூடாது என்று உத்திரவு செய்யப்பட்டிருக்கிறார்கள். பிரஸ்தாப சம்பவத்தில், கன்னத்தில் அறை விழுந்தும் கண்டக்டர் பொறுமையோடிருந்ததற்காக அவனது நடத்தையை மெச்சி, சம்பளமும் உயர்த்தப்பட்டது.

இம்மாதிரியான பரிட்சைகளின்மூலம், யுனைடெட் மோட்டார்ஸ் ஸ்தாபனத்தார், பொதுமக்களிடம் உயர்ந்த யோக்கியதா பட்சத்துடன் நடந்துகொள்ளும் வேலைக்காரர்களுக்குமட்டுமே இடமளித்து வருகின்றார்கள். நம் தேசத்தில் இதைப்போன்ற தொழிலில் ஈடுபட்ட மற்றவர்கள், யு. எம். எஸ். மோட்டார் 'மாலுமி' களிடமிருந்து பாடங் கற்றுக்கொள்ளவேண்டிய முறையில், அவர்கள் அற்புத உதாரண புருஷர்களாயிருந்து வருகிறார்கள். இவைகளுக்கெல்லாம் காரணஸ்தரான அந்த ஸ்தாபனத்தின் 'கவர்னரை' எவ்வளவு புகழ்ந்தாலும் தகும்!

ஒரு தடவையேனும், யுனைடெட் மோட்டார்ஸ் காரியாலயத்துக்குள் சென்று பார்ப்பீர்களானால், அங்கு, நிர்வாக அலுவல்கள் அத்தனையும், அமெரிக்க பாணியில், திறமையோடு, பசுந்தாக நடக்கின்ற பாங்கைக் கண்டு நீங்கள் பிரமிப்பு அடையத்தான் செய்வீர்கள். உண்மையிலேயே, பஸ் வண்டிகளை நிறுத்தி பிரயாணிகளை ஏற்றுவதற்காக, அவ்வளவு ஜாக்கிரதையுடன் சுத்தமாக




யுனைடெட் மோட்டார்ஸ் கட்டிடம்




பஸ் பிரயாணிகள் வசதிக்காக நவீன முறைகளுடன் ஏற்படுத்தப்பட்ட
தங்கும் அறை

வைத்திருக்கும் விசாலமான முற்றத்தை, இந்தியா முழுமையிலும் வேறெங்குமே காண முடியாது. காரியாலயக் கட்டிடத்துக்குள், நீங்கள் அடி எடுத்து வைத்ததுமே, அங்குள்ள விசாரணை (inquiry) அறையிலிருக்கும் ஒரு பெண் குமாஸ்தா, உங்களின் வருகைக்கான அலுவலைக் குறித்து மரியாதையோடு விசாரிப்பார். எஜமானரைப் பார்க்கவேண்டுமென்று நீங்கள் விரும்பினால், உங்கள் பெயர், அலுவல் ஆகியவற்றை 'டெலிபோன்' (amplycall) மூலம் அவருக்குத் தெரிவித்து, அவர் அளிக்கும் பதிலை உங்களுக்கு அறிவிப்பார். அதன்பேரில் சில படிகளில் ஏறி மாடிக்குச் செல்லுவீர்கள். அங்குள்ள ஒரு கதவு மெதுவாகத் திறந்து உங்களுக்கு வழி விடும்; அப்பொழுது, மிகவும் ஆச்சரியத்துக்குரிய அந்தத் தென்னிந்தியத் தொழில் நிபுணரை நேருக்கு நேர் காண்பீர்கள். மரியாதை என்பது அவரிடமே அடைக்கலம் புகுந்திருப்பதால், கைகூப்பி அவர் அளிக்கும் வரவேற்பு உங்களுக்கு உற்சாகம் அளிக்கும். புன் முறுவல் பூத்த முகத்தினராய் எழுந்து முன் வந்து, உங்களை வரவேற்று நாற்காலியில் உட்கார வைப்பார்; செல்வச் சீமானோ — தரித்திர ஏழையோ — நீங்கள் யாராயிருந்தாலும், சந்தோஷமாக உங்களிடம் மனம் விட்டுப் பேசுவார். இந்த வகையில் வந்தவர்களை உபசரிப்பதில் அவரோர் அலாதியான மேதை. உங்களோடு அவர் பேசிக்கொண்டிருக்கும்போதே, மேஜை மீதுள்ள டெலிபோன் 'கிணிகிணி' என்று ஓசையிட்டு அழைக்கும்; ஆலாசியமில்லாமல் ரிசீவரில் பதில் அளிப்பார். அவரது காரியதரிசியான ஒரு மனோகர மங்கை அங்கு வந்து, அவரது கையெழுத்துக்காக

ஒரு கத்தை காகிதங்களை மேஜை மீது வைப்பார். அந்த டெலிபோன், மீண்டும் மணி ஓசை கிளப்பி, நான்கு மைல்களுக்கு அப்பால் பீளமேட்டிலிருக்கும் அவரது எலக்ட்ரிகல் ஒர்க்ஷாப் இஞ்ஜினியரிடமிருந்து செய்தி கொண்டுவந்து சேர்க்கும்! இவ்வளவுக்கும் அந்த அபூர்வ மனிதர் கொஞ்சங்கூட சங்கடப்படாமல், அவரது அமெரிக்க முறையில், உங்களுடன் சந்துஷ்டியாய்ப் பேசிக்கொண்டே, காலதாமதம் ஏற்படாமல் அந்தந்த அலுவல்களையும் செய்து முடிப்பார்.

இந் நாட்களில், பகல் உணவுக்குப் பிறகுதான், அவர் தமது தினசரி வேலைகளில் ஈடுபடுகிறார். ஆனால், யுனைடெட் மோட்டார்ஸ் காரியாலயத்தில் அவர் அலுவல்கள் பார்க்கும் நேரம், காலை ஒன்பது முதல் இரவு ஒரு மணி வரை என்பதாக வழக்கத்திலிருந்தது! அந்த வகையில் அவரைக் கண்டுபேச வந்திருப்போர் அதிகமாயிருந்து, அதனால் வழக்கமாகக் கவனிக்கவேண்டிய வேலைகளுக்குக் குந்தகம் ஏற்படும் எனத் தோன்றுமானால், இரவு ஒரு மணிக்கும் காலை ஆறு மணிக்கும் உள்ள நேரங்களில்தான் அவர்களுடன் பேச முடியும் என்று கூறுவார்.

நாயுடு தம்முடைய தொழில் துறையில் மிகுந்த அக்கறை கொண்டவர். ஹென்ரி போர்டு (Ford) என்னும் அமெரிக்கரைப்போல, நாயுடு அவர்களுக்குத் தம்முடைய ஸ்தாபனத்தில் வேலை செய்கின்ற ஒவ்வொரு நபரைப் பற்றியும் நன்றாகத் தெரியும்; பெயர்களை மட்டுமல்ல, அவரவர்களின் மார்க்கங்கள், பிரீதிகள், வேலை மீதுள்ள

சிரத்தை, கஷ்டம், மனோபாவம் முதலிய எல்லாவற்றையும் தெரிந்து வைத்திருக்கிறார். ஒரு நாள் அவருடைய காரியாலயத்தில் வேலை செய்வோருள் 64 பேர்கள் ரஜாவின் பேரில் வரவில்லை, 43 பேர்கள் சொல்லிக் கொள்ளாமலே வராமல் இருந்துவிட்டனர், 223 பேர் நேரங்கழித்து வந்தனர் அதை அறிந்ததும் அவருக்குப் பெருத்த மலைப்பு! அதுபோன்ற ஒழுங்கீனங்களை சகிப்பவரல்ல அவர். உடனடியாக் அவற்றை நிவர்த்தி செய்வதற்கான வேலையில் ஈடுபட்டார். அதுமுதல், ஒவ்வொருநாளும் அவரே இருந்து, வேலைக்காரர்களின் ஆஜர் பட்டியை எழுதிவரச் செய்தார். இப்படியே ஆறு மாதங்களுக்குப்பின், ஒரு நாள் ஆஜர் பட்டியை எடுத்துப் பார்த்தார். அன்றைய புள்ளி விவரம் இது:— ரஜா எடுத்துக்கொண்டோர் 12 பேர்கள், அறிவிக்காமல் நின்றோர் 6 பேர்கள், நேரங்கடந்து வேலைக்கு வந்தோர் இரண்டே பேர்கள்! இதற்குப் பிறகு மற்றும் ஒரு ஆண்டு ஆனபின் ஒரு நாள் பார்த்தபோது, இரண்டே பேர்கள் ரஜாவிலும் ஒரே ஒருத்தர் அறிவிக்காமலும் வேலைக்கு வரவில்லை; நேரஞ் சென்று வந்தவர்கள் தலைப்பில் ஒரு எண்ணிக்கைகூட கிடையாது! அதன் பேரில், அவர், புது உத்திரவு ஒன்று பிறப்பிக்கவேண்டிய தாயிற்று. உடல் நலமில்லாதபோதும் எவரேனும் வேலை செய்வதாகத் தெரிந்தால் பத்து ரூபாய் அபராதம் விதிக்கப்படும் என்பதாக ஒரு சுற்றறிக்கை பிறப்பித்து எல்லோர் பார்வைக்கும் அனுப்பிவைக்கப்பட்டது.

நாயுடு அவர்களிடத்தில் ஒழுக்கமும், சுத்தமும், திறமையும் மலிந்து காணப்படுகிறது. காலிப் ஹரோன்

அல் ராஸ்சித் (Caliph Haroun al Raschid) தைப்போல நாயுடு அவர்கள் தன்னுடைய பெரிய ஸ்தாபனத்தில் ஒவ்வொரு தொழிலாளியும் வேலை செய்த இடத்திற்கு அவர்கள் அறியாமல் சென்று பார்வையிடுவார். 1943-ஆண்டு ஒரு நாள் இரவு அவர் யு. எம். எஸ். கட்டிடத்திற்குள் சென்று ஒவ்வொரு பிரிவாக (Department) த் தன்னுடைய காரியதரிசிகள் எப்படி பைல்களையும், காகிதங்களையும் வைத்திருக்கிறார்கள் என்று பார்வையிட்டுவந்தார். அப்படி வரும்போது ஒரு இடத்தில் மேஜையில் காகிதங்களையெல்லாம் அலங்கோலமாக வைத்திருப்பதைக் கண்டார். தீர்க்கதரிசியான நாயுடு அவர்கள், தன்னுடைய குமாஸ்தாக்களுக்கு இனி அவர்கள் அதுமாதிரி அசுத்தமாக இராதபடிக்கு ஒரு பாடத்தைக் கற்பிக்க எண்ணி, இரண்டு மூன்று பேர்களின் மேஜையில் சிதறி கிடந்தவைகளை எல்லாம் ஒழுங்காக அடுக்கி வைத்தார். கடைசியில் போகும்போது மேஜையில் ஒரு துண்டுக் காகிதத்தையும் எழுதி வைத்து விட்டுப் போனார். "நீங்கள் உங்களுடைய மேஜைகளைச் சுத்தமாக வைத்துக்கொள்ளப் போகிறீர்களா அல்லது உங்கள் எஜமானரை தினமும் இரவில் இதுமாதிரி வந்து சுத்தம் செய்யச் சொல்லுகிறீர்களா?" என்று அந்தக் காகிதத்தில் கண்டிருந்தது. மறுநாள் குமாஸ்தாக்கள் வேலைக்கு வந்து இந்தக் காகிதத்தைக் கண்டவுடன் ஸ்தம்பித்துப் போய்விட்டார்கள்! ஒரு பக்கம் பயமும், மற்றொரு பக்கம் தன்னுடைய எஜமானர் தங்களுக்காக மேஜையை சுத்தம் செய்து உதவி செய்தாரே என்ற ஒரு "எஜமான விசுவாசமும்" அவர்களுக்கு ஏற்பட்டது.

"அந்நாள் முதற்கொண்டு நான் என்னுடைய குமாஸ்தாக்கள் மேஜையை அசுத்தமாக வைத்திருப்பதைப் பார்க்கவேயில்லை." என்று நாயுடு ஒரு சமயம் என்னிடம் சொன்னார்.

காரியஸ்தர்களை கண்டிப்பதில்கூட அவர் ஒரு அலாதியான சம்பிரதாயமுடையவர். அவர்கள் செய்கின்ற அறிவீனமான சிறு தவறுகளுக்காக லகுவில் சிட்சிப்பதில்லை; அவற்றை எடுத்துக்காட்டி நகைப்பார்; அவரவர் வேலைகளை அபிவிருத்தி செய்துகொள்ளும்படி எச்சரிப்பார்; என்ன சொல்லியும் வழிக்கு வராத வேலைக்காரர்களை தாட்சண்யம் பாராமல் வேலையிலிருந்தே விலக்கிவிடுவார். ஒரு நாள், குல்பர்காவிலுள்ள நண்பர் ஒருவருக்குக் கடிதம் எழுதவேண்டியதிருந்தது. அவரது 'டைப்' அடிக்கும் குமாஸ்தா, "அன்புள்ள மிஸ்டர் குல்பர்கா!" (Dear Mr Gulberga) என்று டைப் செய்திருந்தார். அதைப் பார்த்ததும் அவர் கோபப்பட்டாரா? இல்லை! அடக்க முடியாத பெருஞ் சிரிப்பு! அவரது ஜீவிய தசையிலேயே அவ்வளவு சிரிப்பு சிரித்திருக்க மாட்டார்! நண்பர்களிடம், உள்ளூறச் சிரித்துக் கொண்டே, "எனது காரியஸ்தர்களின் திறமையைப் பாருங்கள்" என்று கூறி, அக்கடிதத்தைக் காண்பிக்கவும் செய்தார்.

இந்தவிதமாக, தமது காரியஸ்தர்கள் செய்கின்ற பிசகுகளை கபடமில்லாமல் வெளிப்படையாய் சொல்லிக் காட்டுகின்ற ஒரு மனிதர், அவராலேயே ஏற்படுகின்ற தவறுகளை எவ்வாறு பாவிக்கின்றார் என்பதையும்

கவனிக்க வேண்டுமல்லவா? ஆம். அவரால் ஏற்படும் தவறுகளை அவர் ஒப்புக்கொள்ள பின்வாங்குவதில்லை; அவைகளுக்காக தமக்குத் தாமே நகைத்து நய்யாண்டி பண்ணிக் கொள்ளவும் செய்கிறார். அவ்வளவோடு இல்லை, "நான் செய்த தவறுகள்" (My Own Blunders) என்னும் தலைப்பிட்டு, பல கடிதங்கள் அடங்கிய தொகுப்புக் கட்டு (file) ஒன்றும் வைத்து வருகிறார்.

அமெரிக்கா, ஐரோப்பா தேசத்தாரின் வர்த்தக ஸ்தலங்களைப் போலவே நாயுடு, அவர்கள் தமது யுனைடெட் மோட்டார்ஸ் ஸ்தாபனத்தில் காரியஸ்தர், டெலிபோன் குமாஸ்தா போன்ற பதவிகளில் பெண்களுக்கும் இடமளித்திருக்கிறார். அவரது ரேடியோ தொழிற்சாலையில் ஒரு ஸ்திரீ இஞ்ஜினீயரும் வேலை பார்த்துவருகிறார்; வெளியிலிருந்து வருவோருக்கு இது ஒரு புதுமையாகவே தோன்றுகிறது.

நாயுடு, அவரது தொழில் துறையில் நடந்து வருகின்ற ஒவ்வொரு அம்சத்திலும் நேர்முக சம்பந்தம் வைத்திருப்பவர். அவரது வாசஸ்தலம், அவரது தொழிற்சாலை, அவரது எலக்ட்ரிகல் கம்பெனி, காரியஸ்தர்கள் வேலை பார்க்கும் அறைகள், மற்றும் அவரது தொழில் சம்பந்தமுடைய முக்கிய இடங்கள் எங்கெங்கு உண்டோ அங்கெல்லாம் டெலிபோன் (amplycall) தொடர்பு இணைத்திருக்கிறார். இதனால், அவர் இருக்கின்ற இடத்திலிருந்தே அந்தந்தப் பகுதிகளில் நடப்பவைகளை உடனுக்குடன் சுலபமாய் அறிந்துகொள்ள முடிகின்றது. ஓரோர் சமயம், பஸ் பிரயாணிகள் தங்கும் கூடத்திலுள்ள

டெலிபோன் இணைப்பின் மூலம், ஜனங்கள் என்ன பேசிக்கொள்கிறார்கள் என்பதை அவர் கவனமாய்க் கேட்பதுண்டு. தம்முடைய பஸ் சர்விஸைப்பற்றி அவர்கள் கொண்டிருக்கும் அபிப்பிராயம் என்ன? ஏதேனும் புகார் பேசுகிறார்களா? என்று அறிவதற்காகவே அப்படி டெலிபோனில் காது கொடுத்துக் கேட்பது வழக்கம். அந்த முறையில், எத்தனையோ அருமையான சேதிகளைக் கேட்டறிந்தார். அந்த சேதிகள், அவரது தொழில் ஸ்தாபன நடைமுறைகளில் திருத்தம் செய்யவும் அபிவிருத்தி பண்ணவும் தூண்டுகோலாய் இருந்திருக்கின்றன.

யுனைடெட் மோட்டார்ஸ் காரியாலயத்திற்குள் சென்றால் அநேகக் கடிதத் தொகுப்புக் கட்டுகள் (File) அழகாக பற்பல விஷயங்களின் பொருட்டு அணிவகுத்து வைத்திருப்பதைக் காணலாம். நான் ஒரு சமயம் அந்த பைல்களின் எண்ணிக்கையை அறிய விரும்பினேன். அப்படி அதைக் கணக்கிடுவதாக இருந்தால் என்னுடைய காலம் வீணாவதுடனல்லாமல் கஷ்டமும் நேரிடும் எப்படி இருந்தபோதிலும், அங்கிருப்பதுபோல ஆயிரக்கணக்கான விதவிதமான விஷயங்களின் பொருட்டு வைக்கப்பட்டிருந்த பைல்களின் கோர்வையளவு நான் வேறு எந்த இந்திய ஸ்தாபனத்திலும் பார்த்ததே கிடையாது. இவைகளெல்லாம் அதை நிர்வாகம் செய்யும் ஒரு தனி மனிதரின் திறமையைக் காட்டுபவைகளாகவே விளங்குகின்றன. மெதுவாக நான் அவரிடம் எவ்வளவு பைல்கள் இருக்கிறது என்பதைக் கணக்கிட்டுவிட்டேன்! எல்லாமாகச் சேர்ந்து 1,00,000 பைல்கள்! அவைகளிலெல்லாம் அவர் எப்படி நினைப்பாக அநேக விஷயங்களைப் பதிவு

செய்துப் பாதுகாத்துவருகிறார் என்பதை நினைத்தால் நமக்கு ஆச்சரியமாக இல்லையா! ஆம். ஒருவர் அவருடைய தொகுப்புக் கட்டுகளைக் கண்ணுற்றால் நிச்சயமாக ஆச்சரியம்தான் அடைவார்.

அந்தக் கடிதத் தொகுப்புகள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு விஷயங்களைப் பற்றி அறிவிக்கும் தபால் கோர்வைகளாகும். தென் இந்தியாவிலேயே, இந்தியர் களால் நடத்தப்படும் வர்த்தக ஸ்தாபனங்களுக்குள், நாயுடுவின் யு. எம். எஸ். காரியாலயம் ஒன்றில் மட்டுமே, அவ்வளவு ஒழுங்கான முறையில் கடிதத் தொகுப்புகள் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. அவைகளுள் சில விசித்திரமானவை. உதாரணமாக இரண்டொன்றை மட்டும் கூறுகிறேன். "சிநேகத்துவம்" (friend ship) என்ற தலைப்பிட்டிருந்த ஒரு தொகுப்பைப் (file) பார்ப்பதற்கு எனக்கு அனுமதி கிடைத்தது. ஒரு காலத்தில் நண்பர்களாக இருந்தவர்கள், பிறகு விலகிப் போனவர்கள், மீண்டும் நட்புரிமை பாராட்டி ஒன்று சேர்ந்தவர்கள் ஆகியோர் சம்பந்தப்பட்ட கடிதங் களின் கோர்வையே அது. அவர்கள் எல்லோரும், அவற்றில் தங்கள் அபிப்பிராயங்களை நாயுடுக்கு எழுதியிருக்கின்றனர்; அவைகள் ஒவ்வொன்றையும் படித்து, எப்படி சிநேகம் ஏற்பட்டது, அந்த சிநேகம் எதனால் முறிந்தது என்பதை அவைகளிலேயே நமது நாயுடு தமது கைப்பட எழுதிவைத்திருக்கிறார். "போலீஸ்" என்ற தலைப்புடனிருந்த மற்றொரு கடிதத் தொகுப்பை யும் எடுத்துப்பார்த்தேன். சட்டப் பாதுகாவலர்களான

போலீசார் சம்பந்தமாய், அநேக நினைவுகளையும் யோசனைகளையும் கொண்ட குறிப்புகள் பல நாயுடுவால் அதில் எழுதப்பட்டிருக்கின்றன. அந்தத் தொகுப்பிலிருந்த கடிதம் ஒன்றில், ஒரு நபர் தன்னுடைய காரியத்தை, சிறு லஞ்சத்தின் மூலம் போலீஸாரைக்கொண்டு, எவ்வளவு சீக்கிரத்தில் சாதித்துள்ளார் என்பதைப்பற்றி எழுதப்பட்டிருக்கிறது. லஞ்சம் கொடுக்காதிருந்தால் அந்தக் காரியம் தாமதப்பட்டுப் போயிருக்குமே! அப்படியிருக்கும்போது, "லஞ்சம் தவறானது" என்ற ஒரு விதிமுறை எதற்காக இருந்துவரவேண்டுமென்பது விளங்கவில்லையே என்கிறார் நாயுடு.

அவர் வைத்திருக்கும் கடிதத் தொகுப்புகளில் சிலவற்றின் வேடிக்கையான தலைப்புகளைப் பாருங்கள்:- ஒன்றின் தலைப்பு, A C F R! (அதாவது Appreciation = பாராட்டு, Courtesy = மரியாதை, Flattery = முகஸ்துதி, Reality = உண்மை. இந்தத் தொகுப்பில் நண்பர்களிடமிருந்தும் மற்றவர்களிடமிருந்தும் வந்த கடிதங்கள் பல இருக்கின்றன.) மற்றொரு தொகுப்பின் தலைப்பு, "எப்படி எருமைகளை வழிக்குக் கொண்டு வருவது" (How to set the buffaloes in line)!. இன்னொன்றின் தலைப்பு, "ஒருவரிடம் எப்படி வேலை வாங்குவது" (How to extract work from one)! வேறொன்றின் தலைப்பு, "என்னுடைய தவறுகள்"! (My Blunders) பிரிதொன்று, "எனது முகமத் பின் துக்ளாக்" (My Mohammad Bin Tughlak)! மற்றுமோர் தலைப்பு, "சங்கீதம், சோதிடம், கடவுள் முதலான

வற்றை எப்படி எதிர்ப்பது" (How to oppose Music, Astrology, God etc) !

இன்றையதினம் இந்தியாவிலே இலாபப் பங்கீடு முறையைப் பற்றி அதிகமாகப் பேசப்பட்டு வருகிறது. நாயுடு இதே முறையை அன்றும் (வியாபாரத்தைத் தொடங்கும்போதும்) விரும்பினார், இன்றும் விரும்புகிறார். அநேக ஆண்டுகள் அவர் அதுமாதிரி தனக்குக் கிடைத்த இலாபத்தை தன்னுடைய தொழிலாளர்களிடையே பிரித்துக் கொடுத்திருக்கிறார். 1920 ஆம் ஆண்டு அவர் முதன் முதலாகத் தன்னுடைய ஒரே ஒரு பஸ்ஸை தானே டிரைவராகக் கொண்டு வியாபாரம் நடத்தியபோதுகூட அந்த ஆண்டு அவருக்குக் கிடைத்த இலாபம் 1750 ரூபாயை அவர் மாத்திரம் எடுத்துக்கொள்ள விரும்பவில்லை. தன்னுடைய கண்டக்டருக்கும், மற்றுமுள்ள வேலையாட்களுக்கும் விகிதாசாரப்படி பகிர்ந்து கொடுத்தார். அந்த நாட்களிலே அவர், சில வாழைப் பழங்களையும், இரண்டு டம்ளர் பாலையும் குடித்துக் கொண்டு தன்னுடைய வாழ்க்கையைத் தினமும் ஐந்து அணாவில்தான் கடத்திவந்தார்.

1929 இல் நூதனத் திட்டம் ஒன்று வகுத்தார் அதன் பிரகாரம், அவரிடமிருந்த ஒவ்வொரு டிரைவருக்கும் ஒரோர் (பஸ்) வண்டியை கொடுத்து விடுவதென்று தீர்மானித்தார். அந்தத் திட்டத்தைப் பரீட்சிப்பதற்காக, ஒரு டிரைவருக்கு ஒரு வண்டி ஒதுக்கி விடப்பட்டது. அவ்வளவுதான்! வெகு சீக்கிரத்தில் வேலைக்காரர்களுக்குள் பொறாமைப் புயல் மூண்டு, தீராத ரகளை

யில் வந்து நின்றது. அதனால் அந்தத் திட்டம் தோல்வியடைந்தது. தமது புதுமைத் திட்டத்தின் பிரகாரம் தொழிலாளர்கள் அனுகூலம் பெறுவதற்கான பக்குவத்தை இன்னும் அடையவில்லை என்று தீர்மானித்து அதைக் கைவிட்டார்.

1931-இல், உலகெங்கும் சுழன்று வீசிய பணக் கஷ்டம் என்னும் சண்டமாருதச் சூறாவளி, நாயுடுவின் ஸ்தாபனத்தையும் பாதிக்காமல் விட வில்லை. அந்நாட்களிலும் போக்கு வரத்து சாதனத் தொழிலை நடத்திக் கொண்டே சென்றதால் ஏற்பட்ட நஷ்டம் அவரைப் பயமுறுத்திற்று. நஷ்டத்தையும் அதனால் உண்டாகும் கஷ்டத்தையும் மேன்மேலும் சுமப்பதற்கு இஷ்டப்படாமல், தொழிலையே அடியோடு நிறுத்தி விடலாமே என்று கூட அவர் தீர்மானிக்கலானார். அவரைப் பொறுத்த வரையில் அந்த யோசனை சரி; ஆனால் ஜீவனோபாயத்துக்காக அவரையே நம்பியிருக்கும் ஏராளமான வேலைக்காரர்களின் கதி என்னாவது? இந்த தர்மசங்கடமான சிந்தனைச் சிக்கல் உதயமானபோது அவர் கூறியது **இது**:-

> "என்னுடைய சொந்தத் தேவைகளை திருப்திசெய்துகொள்வதற்கு தினம் எட்டணா முதல் ஒரு ரூபாய் வரை போதும்; அதுவே எனது கொள்கை. ஆனால் ஜீவனத்துக்காக என்னை நம்பிக் கொண்டிருக்கும் ஐந்நூறுக்கு மேற்பட்ட குடும்பங்களைப் பற்றி யல்லவோ நான் யோசிக்க வேண்டியதிருக்கிறது........"

இந்த யோசனைதான் மற்ற எல்லாவற்றையும் விட அவருக்கு பெரும் பாரமாக வருத்தியது. அதனால், என்ன வானாலும் ஆகட்டும் என்று, தமது தொழிலை தொடர்ந்து நடத்தியதில் இரண்டு லக்ஷ ரூபாய்க்கு மேல் நஷ்டத்துக்குள்ளானார். எவ்வளவு விசாலமான இருதயம் பாருங்கள்! தாராள உள்ளம் படைத்த ஒரு முதலாளி, அவரது தொழிலாளர்களை எந்நாளும் கைவிட மாட்டாரல்லவா?

கூட்டுறவுக் கொள்கையில் நாயுடு நம்பிக்கை கொண்டவராதலால், தென் இந்தியாவில் பஸ் சர்விஸ் நடத்துகின்ற எல்லோரையும் ஒன்று சேர்த்து ஒருமுகப் படுத்த வேண்டுமென்பது அவரது ஆசை. அந்த சிறந்த லட்சியத்தோடு, அவரது இரண்டாவது ஐரோப்பாகண்ட சுற்றுப் பிரயாணத்துக்குப்பின், இந்த மாகாணத்தின் பஸ் உரிமையாளர்களைக்கொண்ட மகாநாடு நடத்துவதற்குப் பெரும் பாடுபட்டார். அவரது முயற்சியின் பலனாக, கோயமுத்தூரில் மகாநாடு கூடிற்று. ஸ்டேன்ஸ் மோட்டார்ஸ் (லிமிடெட்) ஸ்தாபனத்தின் நிர்வாக டயரக்டர் எப். ஜே. ஸ்டேன்ஸ் அதில் தலைமை வகித்தார்.

அந்த அபூர்வ சந்தர்ப்பத்தில், மகாநாட்டின் வரவேற்புத் தலைவர் என்கிற முறையில், தென் இந்தியாவில் பஸ் சர்விஸ் நடத்துவதிலுள்ள சகல நிலைமைகளையும் எடுத்துக்காட்டி, ஜி. டி. நாயுடு அற்புதமாகப் பேசினார். இந்தியாவில், போக்குவரத்து சாதனங்களின் அபிவிருத்தி மார்க்கத்தில் இன்னும் எவ்வளவோ முன்னேறிச் செல்ல வேண்டியதிருக்கிறது என்று நாயுடு கூறியதோடு, அந்தத்

துறையில் சீனா, ரஷ்யா போன்ற நாடுகளுக்கு நம் தேசம் எந்த வகையிலும் பின்னடைந்ததல்ல என்பதையும் எடுத்துரைத்தார். இங்கே பஸ் சர்விஸ் தொழிலின் முன்னேற்றத்துக்கு முட்டுக்கட்டை போடுவது சர்க்கார் விதித்துள்ள அதிகப்படியான வரி விகிதமே என்பதையும் சுட்டிக் காட்டினார். மேலும் அவர் வாதித்தார், இந்த தேசத்தில் இப்பொழுதிருந்துவரும் நிலைமைகள் இதே ஸ்திதியில் இருக்கின்ற வரையில், மோட்டார் பஸ்களுக்கு கட்டாய இன்ஷூரன்ஸ் தேவையே இல்லை என்று.

அந்த மகாநாடு, இந்த மாகாணத்திலுள்ள பஸ் சொந்தக்காரர்களுக்கு இருந்துவரும் கஷ்டங்களை தெரிவித்ததோடு, சர்க்கார் கவனஞ் செலுத்துவதற்கான சில தீர்மானங்களையும் நிறைவேற்றி அனுப்பியது. பஸ் போக்குவரத்துத் தொழிலின் மேன்மைக்காக, நல்லெண்ணத்தோடு நாயுடு செய்துவரும் சேவையை வெகுவாகப் பாராட்டி, அங்கிருந்த ஒவ்வொருவரும் பேசினார்கள்.

பஸ் சர்விஸ்களை சர்க்காரே எடுத்து நடத்த வேண்டுமென்று, இந்தியா முழுதும் அதிகமாய் பேசப்படுகின்றது. போக்குவரத்து சாதனங்களில் அபேதவாதம் (Socialization) ஏற்படவேண்டும் என்று கூச்சலிடுவது இன்றைய அரசியல் சங்கநாதமாயும் ஆகிவிட்டது. ஆனால், ஒரு முதலாளியாயிருந்தும், முதன் முதலாக இந்தக் கொள்கைகளை அரங்கேற்றியவர் ஜி. டி. நாயுடுதான். தமது தொழிலின் மூலம், அவர் நல்ல லாபம் அடைந்து வந்தார் என்பது வாஸ்தவம்; என்றாலும் பொதுஜனங்

களின் சிரத்தையும் சவுகரியமும் அதிகரிக்கவேண்டும் என்பதற்காக, இந்தத் தேசத்திலுள்ள போக்குவரத்து சாதனங்களை சர்க்காரே எடுத்து நடத்துமானால் மிகவும் நன்றாயிருக்கும் என்று அவர் உணர்ந்தார்.

அதே நோக்கத்தின்பேரில், கோமுத்தூர் ஜில்லா மார்க்கங்களில் பஸ் சர்வீஸ் நடத்தும்படி, 1938ல் அந்த ஜில்லா போர்டாருக்கு அபிப்பிராயம் கூறினார். ஜில்லா போர்டார் அதற்கு முன் வருவார்களானால், அந்தக் காலத்தில் 18 லட்ச ரூபாய் பொறுமானமுள்ள தமது பஸ் சர்விஸ் முழுவதையும் போர்டாருக்கே, கிரயம் பெறாமல் கொடுத்துவிடுவதாக வலியத் தெரிவித்துக்கொண்டார். பல லட்ச ரூபாய் விலை மதிப்புள்ள அவ்வளவு பெரிய தொழிலை வெறுமனே விட்டுக் கொடுப்பதற்காக, அவர் ஒரே ஒரு நிபந்தனை மட்டும் விதித்தார். அந்த சர்விஸி லிருந்து கிடைக்கும் நிகர லாபத்தை தொழிற் கல்விக்காக (Industrial Education) உபயோகிக்க வேண்டும் என்பது தான் அவரது நிபந்தனை. ஜில்லா போர்டாரோ, நாயுடு வின் கடிதத்துக்கு, சம்பிரதாயத்துக்காகவேனும், பதில் எழுதவேண்டுமே என்றுகூட எண்ணங்கொள்ளவில்லை.

ஜில்லா போர்டுக்கு வலியத் தெரிவித்ததுபோலவே, தம்மிடமிருக்கும் பெரிய நூல் நிலையத்தையும், (Library) அதற்கு தனிக் கட்டிடம் ஒன்று கட்டுவதற்காக பத்தாயிரம் ரூபாயும், ஒரு நீச்சுத் தடாகம் அமைப் பதற்காக மற்றொரு பத்தாயிரம் ரூபாயும் கோயமுத்தூர் நகர சபையாருக்கு அளிப்பதாக எழுதினார். அதற்கும், "உங்களது கடிதம் கிடைத்தது" என்ற பதில் எழுது வதற்குக்கூட நகர சபையாரின் மனங் குவியவில்லை.

தம்மிடமுள்ள சர்விஸ் பஸ்கள் அனைத்தையும், பிரதி பிரயோஜனம் பெறாமல் ஜில்லா போர்டாருக்குக் கொடுத்து விடுவதாக நாயுடு தெரிவித்திருந்தும், அதை அவர்கள் ஏற்று நடத்துவதை விட்டு, எல்லா பஸ் சர்விஸ் களையும் ஒன்றன்பின் ஒன்றாக எடுத்து நடத்தப்போவ தாகச் சொல்லி, ஒரே ஒரு ரஸ்தாவில் சர்விஸ் தொடங்கி னார்கள். ஆனால் அது தோல்வியில் முடிந்தது. இவை களுக்கெல்லாம் காரணம் என்ன தெரியுமா? அந்தக் காலத்திலே காங்கிரஸ் சர்க்கார் அதிகாரத்திலிருந்தது! ஜில்லா போர்டுகளும் நகர சபைகளும் காங்கிரஸ்காரர் களால் நிர்வகிக்கப்பட்டன!

அதே ஆண்டு, அவரது ஜில்லாவிலும் அதன் அருகி லுள்ள ஜில்லாக்களிலுமிருக்கின்ற இளைஞர்களுக்கு தொழிற் கல்வி அளிப்பதற்காக, அவருடைய பெயரால் கல்வி ஸ்தாபனம் ஒன்று (An Educational Trust) ஏற் படுத்தினார். அதை அமைக்கும் போதே, ஜனோப காரமான அந்த முயற்சிக்கு பணம் கிடைப்பதற்கு ஒரு நல்ல வழியையும் வகுத்தார். கோயமுத்தூரிலும் அதைச் சுற்றிலுமுள்ள நகர சபைகளை யெல்லாம், தம்முடைய மோட்டார் கம்பெனியில், பணம் கொடாமலே பங்குகளை (shares) வாங்கி நடத்திக்கொள்ளும்படி தெரிவித்தார். அதிலிருந்து கிடைக்கும் லாபத் தொகையைக்கொண்டு, ஒவ்வொரு நகர சபையாரும் அந்தந்த ஸ்தலத்தில் தொழிற் பள்ளிகள் வைத்து நடத்தவேண்டுமென்று அவரால் வற் புறுத்தப்பட்டது. தேச முன்னேற்றத்துக்கு ஜீவாதார மாயிருக்கக் கூடிய தொழிற் கல்விப் பள்ளிகளை ஏற்படுத்

துவதற்கு அந்த நகர சபைகள் சுயமாக முயற்சிக்கவும் இல்லை, அதற்கான யோக்கியதையும் அவைகளுக்கு இல்லை. அதுபோன்ற நல்ல காரியத்துக்கு தயாளத்துவ முள்ள ஒரு அறிஞர் வலியக் கொடுத்த அழகான திட்டத் தைப் பாராட்டுவதற்கான அறிவுக் கண்களும் அவை களுக்கு இல்லாது போயிற்று! ஒரே ஒரு நகர சபையைத் தவிர மற்றவைகளெல்லாம், நாயுடுவின் திட்டத்தை ஏற் றுக்கொள்ள முடியாது என்று திருப்பி அனுப்பிவிட்டன. அந்த ஒரு நகரசபை கூட, நாயுடுவின் தொழிற் கல்வி ஸ்தாபன தர்மகர்த்தாக்களிடம் அதன் சம்மதத்தைத் தெரிவிக்குமுன், சர்க்காரின் அனுமதியை வற்புறுத்திற்று! நாயுடு நேர்மையான மனிதராகையால், இந்தக் கோலா கலங்களை கவனித்த பின் ஒரே ஒரு முடிவுக்குத்தான் அவரால் வரமுடிந்தது. காலத்தின் பிரகிருதி தமக்கு விரோதமாயிருக்கிறது போலும் என்று உணர்ந்தார் அவர்!

தொழில் துறையில், நாயுடு, தமது கப்பலை எப் போதுமே சவுகரியமாக செலுத்திச் சென்றதில்லை. அடிக்கடி நாலா பக்கங்களிலும் பலவித இடையூறுகளால் தாக்குண்டார். அதிகார உத்தியோக வர்க்கம், அவரை, தனது முஷ்டிக்குள் அடக்க பெருமுயற்சி செய்தது. பிறவிப் புரட்சிக்காரரான நாயுடு அதற்கெல்லாம் மசிவாரா? முக்கியமான சில ரஸ்தாக்கள் கூடும் இடமாகிய பல்லடத் தில், உன்னதமான பஸ் சந்திப்பு (ஜங்ஷன்) ஒன்றை அவர் நிர்மாணித்திருக்கிறார். அதைப்போன்ற ஒரு பெரிய பஸ் நிலையம் இந்தியா முழுதும் வேறெங்குமே கிடையா தென்று சொல்லலாம். பிரயாணம் செய்கின்ற காலத்தில் ஜனங்களுக்கு வேண்டிய சகல சவுகரியங்களும் அங்கே

உண்டு. விலை வாசிகள் உயராத அந்தக் காலத்தில் ஒரு லட்ச ரூபாய்க்குமேல் செலவிட்டு பூர்த்தி செய்த நிலையம் அது. ஆறாயிரம் மக்களுக்கு மேல் அங்கு அழைக்கப்பட்டு, அவர்கள் முன்னிலையில், சர் ஜி. டி. போக், அதன் திறப்பு விழாவை அமோகமாக நடத்தி வைத்தார்.

பல்லடத்தைப் போலவே, பாலக்காட்டிலும் நேர்த்தியான பஸ் நிலையம் ஒன்றை நிர்மாணிக்க வேண்டுமென்று நாயுடு விரும்பினார். அதற்காக பாலக்காடு நகரசபையாரின் அனுமதி கேட்டு எழுதினார். அவர்கள் அதை நிராகரித்ததோடு, நாயுடுவின் பஸ்களையும் நகரசபைக்குச் சொந்தமான பொது பேட்டைக்குள் கொண்டு வந்து நிறுத்த வேண்டுமென்று வற்புறுத்தினார்கள். ஆனால், நாயுடு பாலக்காட்டில் கட்டுவதற்கு திட்டமிட்ட பல்லடம் பஸ் நிலையத்திலிருப்பதை போன்ற ஜன சவுகரியங்கள், அந்த நகர சபை பேட்டையில் கிடையாது. அதன்பேரில், யுனைடெட் மோட்டார்ஸ் ஸ்தாபனத்துக்கும் பாலக்காடு நகரசபைக்கும் பெருத்த விவகாரம் மூண்டது. அந்த தாவா நீடித்துக் கொண்டே போயிற்று. கடைசியில், நாயுடுவின் கட்சியை ஆதார பூர்வமாய் நிரூபிக்கும் பொருட்டு, அந்த நகரசபையின் பேட்டையிலுள்ள வசதிக் குறைவுகளை சினிமா சுருள்களில் படம் பிடித்து, அவற்றை விளக்கிக் காட்டுவதற்கான சினி-புரொஜக்டர்களுடன் (இயந்திரம்) கோர்ட்டுக்கு எடுத்துச் சென்றுங்கூட, உத்தியோக வர்க்கம் தன்னிஷ்டப்படியே காரியங்களை சாதித்துக் கொண்டது.

1938ல், தேசீய நிர்மாண சபை (National Planning Committee) அமைப்பதற்கு காங்கிரஸ்காரர்கள் பிரயத்தனப்பட்டபோது, அதில் நாயுடு அவர்களையும் அங்கத்தினராக சேர்த்துக் கொள்ள விரும்பினார்கள். அதன்பேரில், அப்பொழுது சென்னையிலிருந்த முதல் காங்கிரஸ் சர்க்காரின் தொழில் மந்திரி வி. வி. கிரி, நாயுடுக்கு கடிதம் எழுதினார். அதில், நாயுடு அவர்களை, மோட்டார் தொழிலில் அபார ஞானமுடையவர் என்று மிக உயர்ந்த முறையில் இந்தியாவின் பெரிய கலா விற்பன்னரும் இஞ்ஜினியருமான சர் எம். விஸ்வேஸ்வரய்யா பாராட்டிக் கூறுகிறார் என்பதை எடுத்துக்காட்டி விட்டு, போக்கு வரத்து சாதனத்துறையில் விசேஷ ஞானமுடையவர் என்கிற முறையில், தேசீய நிர்மாண சபையில் அங்கம் வகிக்க சம்மதிக்க வேண்டுமென்று அவரை (நாயுடுவை) அழைப்பதாய் மந்திரி கிரி எழுதியிருந்தார். மந்திரியின் கோரிக்கைக்கு நாயுடு செவி சாய்க்காததோடு, "நான், என்னுடைய தொழிலை நேர்மையான முறையில் நடத்திக்கொண்டிருந்துங்கூட, உங்கள் காங்கிரஸ் சர்க்கார்—குறிப்பாக சென்னை காங்கிரஸ் சர்க்கார் — என்னை பல விதமான தொந்தரவுகளுக்கும், இடைஞ்சல்களுக்கும் உட்படுத்தி வருகின்றார்கள்", என்று பதில் எழுதினார். அதன்பிறகு, மந்திரி கிரி, கோயமுத்தூருக்கே விரைந்தோடிச் சென்று, நாயுடுவை நேரில் சந்தித்து, அவரை வற்புறுத்தி, அந்த அங்கத்தினர் ஸ்தானத்தை ஏற்றுக் கொள்ளச் செய்தார். அப்படியெல்லாம் நடந்துங்கூட, அந்த சபைக்கூட்டங்களில் ஒரு தடவைகூட நாயுடு உட்காரவில்லை; ஏனென்றால், சில நாட்களுள் அவர் ஐரோப்பாவுக்கு கப்பலேறிவிட்டார்.

கோயமுத்தூரில், மோட்டார் வண்டிகள் உற்பத்தி செய்யும் தொழிற்சாலை நிறுவவேண்டுமென்பது நாயுடு வின் சிந்தையில் குடிகொண்டிருக்கும் அபிலாஷைகளில் ஒன்று என்று தெரிகிறது. இந்தக் காரியத்தில் மூன்று சமஸ்தானங்கள் தம்முடன் ஒத்துழைக்க விரும்புவதாக வும், ஆனால் தொழிற்சாலையை கோயமுத்தூரில் அமைப் பதற்கு அவைகள் சம்மதிக்க மறுப்பதாகவும் நாயுடு தெரி வித்தார். அதுபோன்ற ஒரு தொழிற்சாலை தொடங் கினால், மாதந்தோறும், குறைந்தது ஓராயிரம் மோட்டார் வண்டிகளேனும் உற்பத்தி செய்ய முடியுமே, அது வீணா கிறதே, என்று சொல்லிச் சொல்லி வருந்துகிறார். 'க்ரூட்' (crude) எண்ணெயில் ஓடங்கூடிய 'டியசல்' வண்டியின் இஞ்ஜினும் பெட்ரோலில் ஓடக்கூடிய 'கியாஸ்' வண்டியின் இஞ்ஜினும், அவரது தொழிற்சாலையில் வெற்றிகரமாகச் செய்து பரீட்சிக்கப்பட்டிருக்கின்றன. இந்த முயற்சிக்கு அமெரிக்கரின் உதவி அவசியம் தேவை. ஆனால் சர்வ தேச நிலைமையில் ஏற்பட்டிருக்கும் பெருங் குழப்பம் மாறாமல் நிலைத்திருக்கும்பொழுது, நாயுடு காணுகின்ற பெருங் கனவுகள், இப்பொழுதோ அல்லது சமீப காலத் திலோ, சித்திபெறுமா என்பது சந்தேகந்தான். இப்போர்க் கொத்த ஒரு பெருந் தொழில் முயற்சியில், முதலில் ஐந்து – ஆறு வருஷங்களுக்கு நஷ்டம் ஏற்படச் செய்யும்; அதற்கப்புறம் நஷ்டத்துக்கு இடமிராது. தமக்கு இருப் பதைப்போல, அந்தத் தொழிலில் தீர்க்கமான ஞானமும் சக்தியும் இருக்குமானால், தைரியத்தோடு அந்த முயற்சி யில் இறங்கி, வேலையைத் தொடங்குமாறு நம்முடைய தொழில் முதலாளிகளை அறை கூவி அழைக்கிறார் அவர்.

இந்தியாவிலேயே முதன் முதலாக 1939ல் நாயுடு தொடங்கிய எலக்ட்ரிக் (விசை) மோட்டார் உற்பத்தி செய்யும் தொழிற்சாலையை சர் ஜியார்ஜ் போக் திறந்து வைத்தார்; 1941ல் ரேடியோ பெட்டிகள் செய்யும் தொழிற்சாலை சர் ஆர். கே. ஷண்முகம் செட்டியாரால் திறந்துவைக்கப் பட்டது. இவ்விரண்டிலும், அவைகளுக்குவேண்டிய பாகங்கள் பெரும்பாலும் செய்யப்படுகின்றன.

நாயுடு அவர்களுக்கு மோட்டார் விஞ்ஞானத்தில் நிரம்பத் தேற்சியுண்டு. அவர் இன்றையதினம்கூட கோவையில் தன்னால் ஆரம்பிக்கப்பட்ட ஆர்தர் ஹோப் பாலிடெக்னிக் மாணவர்களுக்கு, மோட்டார் விஞ்ஞானத்தைப்பற்றி உபன்யாசம் செய்கிறார். லண்டனிலுள்ள ஒரு கம்பெனிக்காரர் கோவையிலே ஒரு ஆளை நியமித்து நாயுடு அப்படிப் பிரசங்கம் செய்தவைகளை யெல்லாம் திரட்டிக்கொண்டு போயிருக்கிறார்கள். அப்பேர்ப்பட்ட, அயல் நாட்டாரால் மதித்துப் போற்றப் படுகின்ற அறிஞர் நாயுடு அவர்களை நாம் நம்மிடையே அடைந்திருப்பது நாம் செய்த பாக்கியமல்லவா! அதற்காக நாம் பெருமைகொள்ள வேண்டாமா!

❋

# V

## சிருஷ்டி கர்த்தா

இந்த இருபதாம் நூற்றாண்டின் அதிசயம் என்ன வென்றால், இதில் பிறந்த முதல்தரமான சிருஷ்டி கர்த்தாக்கள் (Inventors) முக்காலும், எந்த பல்கலைக் கழகத்திலும் படித்தறியாத இனத்தைச் சேர்ந்தவர்களா யிருப்பதுதான். இதற்கு தாமஸ் எடிஸனும் ஹென்றி போர்டுமே சிறந்த உதாரண புருஷர்கள்! எடிஸன் இறக்கும் பொழுது, அவர் வாழ்நாளில் தேடிய பொரு ளின் ஒரு பகுதியை அமெரிக்காவில் வேறு என்னென் னவோ பொதுக் காரியங்களுக்கு தானம் செய்தாரானா லும், பல்கலைக் கழகங்களுக்காக ஒரு சல்லிக்காசுகூட ஒதுக்கி வைத்துப்போகவில்லை. காரணம் என்ன ? புகழ் வாய்ந்த அந்த விஞ்ஞானிக்கு சாதாரண கல்லூரிப் படிப் பில் எக்காலமும் நம்பிக்கை கிடையாது என்று அப்போது ஜனங்கள் பேசிக்கொண்டார்கள். இங்கே, கோயமுத்தூரி லிருக்கும் ஜி. டி. நாயுடு கல்லூரிப்படிப்பே இல்லாதிருந் தும், சிறந்த மோட்டார் போக்குவரத்துத் தொழில் வேந்தராயிருப்பதோடில்லாமல் சிருஷ்டி கர்த்தாக்களுக் கான விசேஷ விவேகமுடையவராகவும் இருக்கின்றார்.

லங்காஷயர் என்பவர் வைத்திருந்த மோட்டார் சைகிளைக்கண்டு அதிசயித்த நாள்முதல், நாயுடுவின் மூளை இயந்திரம் சம்பந்தப்பட்ட வேலைகளின் மீதே

பாய்ந்து கொண்டிருந்தது. இருபதுக்குக் கீழ்பட்ட இளம்வயதிலேயே மோட்டார் வண்டி, எண்ணெய் இஞ்சின் போன்றவைகளின் இயந்திர அமைப்புகளைத் தெரிந்துகொள்ள வேண்டுமென்ற ஆசை மிகுந்தது அவருக்கு. இயந்திர விஞ்ஞானத் துறையில் ஒவ்வொன்றைப்பற்றியும், மணிக்கணக்காக அவராகவே தனித்திருந்து சிந்திக்கும் சுபாவமுடையவராகவுமிருந்தார். அந்த முறையில்தான் பத்து வருஷங்களுக்குமுன் அவரால் மின்சார க்ஷவரக் கத்தி (Electric Safety Razor) ஒன்று கண்டுபிடிக்கப்பட்டது.

அது இந்தியாவைத் தவிர இதர நாடுகளில் விற்பனையாகிவந்தது. சிறு எலக்ட்ரிக் செல்களை (dry cells) உள்ளுக்குள் வைப்பதன் மூலம் வேலை செய்யும் சிறிய இயந்திரக் கருவி அது. சீக்கிரமாகவும் சுத்தமாகவும் க்ஷவரம் செய்து கொள்வதற்கு மிகவும் உபயோகமானது; க்ஷவரம் செய்து கொள்ளும்போது முகத்தில் காயமோ, எரிச்சலோ ஏற்படுவதில்லை. அந்த க்ஷவரக் கத்திக்காகவும், யு. எம். எஸ். க்ஷவர தகடு (blades) களுக்காகவும் ஜர்மனியில் இரண்டு பரிசுகளும், லட்சுமணபுரியில் ஒரு பதக்கமும், சென்னையில் மற்றோர் பதக்கமும், பல நற்சாட்சிப் பத்திரங்களும் ஆங்காங்கு நடந்த கைத்தொழில் பொருட்காட்சிகளில் அளிக்கப்பட்டிருக்கின்றன.

மோட்டார் வண்டித்தொழில் அவர் ஈடுபட்ட கொஞ்சக் காலத்தில், தமது யுக்தியைக்கொண்டு ஒரு அபூர்வ முறையைக் கண்டுபிடித்தார். அதை மோட்டார் வண்டி ரேடியேட்டரில் பிரயோகிப்பதன்மூலம், மறுமுறை

தண்ணீர் ஊற்றவேண்டிய அவசியமேயில்லாமல், நூற்றுக் கணக்கான மைல்களுக்கு வண்டியை செலுத்திக்கொண்டு போக முடிகிறது.

1936ல் பஸ்களின் அதிர்ச்சியை சோதிப்பதற்கான ஒரு இயந்திரமும் (vibrator testing machine) க்ஷவரத் தகடுகள் (blades) உற்பத்தி செய்வதற்கான ஒரு இயந்திரமும் தயாரித்தார். பிலிம் காமிராக்களுக்காக (படம் பிடிப்பது) ஒரு நூதன பாகம் அவரால் கண்டுபிடிக்கப்பட்டது. அதன் பெயர் 'டிஸ்டன்ஸ் அட்ஜஸ்டர்' (distance adjuster) என்பது. சாதாரணமாக, இப்பொழுதுள்ள பிரகாரம், ஒரு பொருளை தூரத்திலிருந்து படம் எடுத்தால் அது பிலிமில் சிறிய அளவில் பதிவாகிறது; ஆனால் அதை காமிரா கண்ணாடிக்கு அருகில் வைத்துப் பார்த்தால் அந்தப் பொருளின் உருவம் திரையில் மிகவும் பெரிதாகத் தெரிகிறது. அந்த மாதிரியான ஏற்ற வித்தியாசங்கள் இல்லாமல் செய்வதற்கு நாயுடு கண்டுபிடித்துள்ள 'அட்ஜஸ்டர்' மிகவும் உபயோகமுள்ள அபூர்வ கருவி. பழச்சாறு பிழிந்தெடுப்பதற்கான புதுமுறைக் கருவியும் மற்றும் பல சிறிய பெரிய கருவிகளும் நாயுடுவின் சிந்தனா சக்தியிலிருந்து உருவாகியிருக்கின்றன.

அவரது அற்புத சிருஷ்டிகளில் ஒன்று ஓட்டு பதிவு செய்யப்படும் இயந்திரம் (Vote recording machine)! அதை உபயோகிப்பதன் மூலம், தேர்தல் காலங்களில் அயோக்கியத்தனங்களால் ஏற்படும் மோசடிகளைத் தடுக்க முடியும். அமெரிக்காவில் அதைப்போன்ற இயந்திரம் கண்டு பிடிப்பதற்கு, இளம் பிராயமாயிருக்கும்போதே

எடிசன் எத்தனித்தார்; ஆனால் அங்கிருந்த செனட் அங்கத்தினர் சிலர் அவரைப் பரிகாசம் செய்ததால் அந்த முயற்சியைக் கைவிட்டார். ஜி. டி. நாயுடு, தயக்குத் தோன்றிய முறையில், சொந்த அனுபவத்தைக்கொண்டு எந்த நாட்டிலும் செய்யப்படாத அந்த அபூர்வ இயந்திரத்தைச் செய்து முடித்தார். ஒரு தடவை சென்னை பார்க் கண் காட்சியில் வைத்து, அது எல்லோருக்கும் காட்டப்பட்டது. அதைப்போன்ற ஒரு இயந்திரம் செய்வதற்கு எடிசன் முயற்சித்தார் என்பதை அறிவீர்களா என்று நாயுடு அவர்களை கேட்டபோது, அதைப்பற்றி தமக்கு எதுவுமே தெரியாது என்று பதில்கூறினார். அது அவர் மனதிலே உதித்தது; உதித்ததை அவர் உருவாக்கினார்!

புதிதாகவும், அபிவிருத்தியுடன் புதிப்பித்தும் மேலும் பலவற்றை அவருக்கிருக்கும் அரிய அபூர்வ நேரங்களுக்கு மத்தியில் சிருஷ்டித்திருக்கிறார். அனுதினமும், மூன்று நான்கு மணி நேரம், அவர் கண்டு பிடித்த ஒவ்வொன்றையும் பரீட்சிப்பதிலும் சோதிப்பதிலும் செலவிடுகிறார்; அந்த வகையில் அவைகளில் ஒன்றுக்கேனும் சொற்ப வாரங்களுக்குமேல் கால விரயமானதில்லை. வெளி அலுவல்களும் மற்ற வேலைத் தொந்தரவுகளும் இல்லாமல், நாயுடுவின் கவனமும் காலமும் சிருஷ்டித் துறையில் முழுதும் ஈடுபடுவதற்கான வகையில் போதிய அவகாசம் அளிக்கப்பட்டால், அது அவ்வளவும் இந்தியாவின் அமோக லாபத்துக்கு உரியதாகவே இருக்கும். வாஸ்தவம்: நாயுடுவைத் தேடி வருவோர் எல்லோரையும் அனாவசியமாய் உள்ளே அனுமதிக்கக் கூடாதென்று

அவரது வாசஸ்தல முன் வாசல் காவலாளியை உத்திரவு செய்திருப்பது உண்மை; ஆனால் அவரது சிநேகிதர்களை காவலாளியால் தடுக்க முடிவதில்லையே! அதற்கு இதற்கு என்று என்னென்னமோ காரியங்களுக்கெல்லாம் அவரிடம் பேசவும் யோசனை கேட்கவும் வருகின்ற சிநேகிதர்களின் தொகைக்குக் குறைவேது!

அவர், ரேடியோ பெட்டி (Radio set) ஒன்றை பூரணமாகச் செய்து முடித்திருக்கிறார்; அது நன்றாக வேலை செய்கிறது. நயமான விலையில் திறம்பட உழைக்கக்கூடிய ரேடியோ பெட்டிகளை உற்பத்தி செய்வதற்காக ஒரு தொழிற்சாலை இப்பொழுது தொடங்கி விட்டார். ஆனால் அதற்கு வேண்டிய சில சாமான்கள் தருவிப்பதற்கு அவர் செய்த முயற்சிகள் அத்தனையும் தோற்கடிக்கப்பட்டுப் போனதால், அவரது நேரம் முழுவதையும் அந்த வேலைக்கு உபயோகிக்க முடிவதில்லை. வெகு சீக்கிரம் இந்த "வில்லங்கங்களிலிருந்து விடுபட்டு விடுவேன்" என்று ஒவ்வொரு நாளும் நண்பர்களுக்கு நாயுடு சொல்லத்தான் செய்கிறார்; ஆனால் அதுதான் அவரால் ஆகக்கூடியதாக இல்லை.

நாயுடு, தம்மால் கண்டுபிடிக்கப்பட்டவைகளில் ஒன்றைக்கூட (அவைகளை பிறர் 'காப்பி' அடித்து செய்ய முடியாதபடி, தமக்குமட்டும் சொந்தமானவை என்று ஊர்ஜிதம் செய்து கொள்ளும் பொருட்டு) இந்தியாவில் பதிவு (Patent) செய்து கொள்ளவில்லை என்று கூறுகிறார். 1940-ல் அமெரிக்காவிலிருந்து வந்த ஒரு கடிதத்தில் காணப்படும் பின்வரும் அபிப்பிராயம் கவனிக்கத் தக்கது:—

"மிஸ்டர் நாயுடுவின் சிருஷ்டிகளை, இங்கே எங்களைச் சேர்ந்த வெகுபலர், மிக உயர்வாக மதிக்கின்றார்கள்; ஆனால் அவர் அவைகளை எங்களுக்கு விலைக்குக் கொடுக்க மறுக்கிறார். இது தான் அவற்றை விற்பனை செய்வதற்கு ஏற்ற இடம்! அமெரிக்கராகிய நாங்கள் அவைகளை வாங்கிக் கொள்ள ஆவலோடிருக்கிறோம்"!

மற்றொரு கடிதத்தின் சாராம்சம் இது:—

"மிஸ்டர் நாயுடு உதாரகுணமுள்ள பெரிய மனிதர் என்று (அமெரிக்க) நண்பரொருவர் அவரை வெகுவாக பாராட்டிப் பேசினார். ஒரு இயந்திரத்தில் ஏற்பட்ட கோளாறை எப்படி செம்மைப் படுத்துவது என்று, சொற்ப வார்த்தைகளின் மூலம் தெளிவு படுத்தினார் நாயுடு. அவர் அளித்த அந்தப் பொன்னான யோசனையைக் கேட்டு நடந்ததின் மூலம் 2,000 டாலர்கள் காப்பாற்றப்பட்டன."

ஒரு அமெரிக்க கப்பெனியார், நாயுடு அவர்களுக்கு மாதம் 3,000 டாலர்கள் சம்பளம் கொடுப்பதாகவும், அவர் கண்டுபிடித்த க்ஷவர கத்தியையும், யு. எம். எஸ். க்ஷவர தகடுக்ளையும் தங்களுடைய தொழிற்சாலையில் உற்பத்தி செய்யுப்படியாகவும் கேட்டுக்கொண்டார்கள். ஆனால் பணம் சம்பாதிப்பதற்காக அமெரிக்காவுக்கு வரவில்லை. என்றும், தம்மால் சாத்தியப்பட்ட எல்லாவற்றையும் கற்றுக்கொள்வதற்கு மட்டுமே வந்ததாகவும் கூறி, அந்த வேலையை அவர் மறுத்துவிட்டார். அமெரிக்காவாகிய

அந்நிய தேசத்தில் செய்யப்பட்ட ஒரு இயந்திரத்தின் பழுதை, அதே தேசத்தில், அதே தேசத்தார், ஒரு தென் இந்திய சிருஷ்டிகர்த்தாவின் உதவியால் செப்பனிட்டிருப்பார்களானால், அவருக்கு (அந்த தென் இந்தியருக்கு) இயந்திர விஞ்ஞானத் துறையில் எவ்வளவு தெளிந்த அறிவுத்திறன் இருந்துவரவேண்டும், பாருங்கள்!

இயந்திர விஞ்ஞானத் தொழில்களின் மூலம் க்ஷேம வளர்ச்சி அடைந்துகொண்டிருக்கும் வேறு எந்த தேசத்திலேனும், ஜி. டி. நாயுடுக்கு இருப்பதைப்போன்ற சிருஷ்டி மூளையுள்ள ஒரு மனிதர் பிறந்திருப்பாரானால், அவருடைய பெருமையை அந்தத் தேசம் நன்றாக உணர்ந்திருக்கும்; ஆனால் நாயுடு பிறந்தது இந்தியாவாக இருப்பதால், சரியான முறையில் தேசம் அவரைத் தெரிந்து கொள்ளவில்லை! அவர் தம்மால் ஆகக்கூடியதைச் செய்வதற்கு எப்போதும் தயாராய் இருக்கிறார். பத்திரிகை மண்டலமும், அவருடைய நடவடிக்கைகளைப் பற்றி சரியாகக் கவனிக்கவில்லை! இந்த தேசத்தில் பிரசுரமாகும் விஞ்ஞானத்துறை சஞ்சிகைகள்கூட, அவர் கண்டு பிடித்தவைகளைப் பற்றிய வரலாறுகளை நியாயமான முறையில் பிரசுரிக்கவில்லை! பத்திரிகைக்காரர்களுடன் சிநேகம் செய்துகொள்ளவோ விளம்பர காரியங்களில் பொழுது போக்கவோ அவருக்கு நேரமே இல்லை; சந்தடியில்லாமல், அவர் செய்யவேண்டியவைகளை செய்து கொண்டே போகிறார். அந்த மனிதருடைய ஜீவிய காலத்திலேயே, நம் தேச மக்கள் அவரது திறமையைப் பயன் படுத்தி அடையக்கூடிய அநுகூலங்களை அடையாது போனால், அதனால் நம் தேச மக்கள்தான் நஷ்டமடைந்தவர்களாக ஆவார்களே தவிர, நாயுடு அல்ல!

"என்னால் உற்பத்தி செய்யப்பட்டவைகளெல்லாம், நம் தேசத்தில் எனக்குமட்டும் சொந்தமாக்கிப் பதிவு செய்து கொள்ளாமல் விட்டு வைத்திருக்கிறேன். பகிரங்கமாகச் சொல்லுகிறேன், இந்தியர் யாராயிருந்தாலும், அவைகளை எடுத்துச் செய்து கொள்ளலாம். அவர்கள் அவைகளை வைத்து வேலை செய்து உற்பத்தியைப் பெருக்கி தேசத்துக்கு உதவட்டும்" என்று அவர் ஓர் சந்தர்ப்பத்தில் தெரிவித்தார்.

சிருஷ்டிக் கர்த்தா என்கிற முறையில், விஞ்ஞானம் சம்பந்தமான புத்தகங்களையோ தஸ்தாவேஜிகளையோ உபயோகிப்பதற்கான சவுகரியம் அவருக்கு இல்லை. சரியாகவோ, தவறாகவோ, எப்படியெல்லாமோ அனைத்தையும் அவராகவே செய்து பார்த்து, தம்மைத் தாமே பூரண தேர்ச்சி யுடையவராக்கிக் கொண்டார்; அதற்கேற்றபடி, அவரது புத்தி என்னும் பூமி அதிசயிக்கத் தக்க வளமுடையதாயிருக்கின்றது. அந்த முறைகளினால் அப்பொழுது அவரது காலம் அதிகமாகவே விரயமாகியிருக்கக் கூடும்; என்றாலும் அவருக்குள்ள திருப்தி என்னவென்றால், தாமாகவே சிந்தித்து செய்யப்பட்டவைகளாயிருப்பதால், அவை ஒவ்வொன்றும் மூலமானதும் (original) தமக்கே சொந்தமானதுமாகயிருக்கின்றன என்பதுதான். விஞ்ஞானிகளின் வரிசையில் நாயுடுக்குரிய ஸ்தானம் ஊர்ஜிதமாகிவிட்டது; ஆனால் தீர்க்கதரிசி எவரும் அவரது ஜீவிய தசையில் அவருக்குரிய மரியாதை பெற்றிருந்ததாகக் காணோம்!

*

## VI

# மேற்குத் திசை நோக்கி

1929ல் குயென்ஸ் என்னும் ஒரு ஜர்மன் வர்த்தகரும் அவரது மனைவியாரும் கோயமுத்தூர் வந்தார்கள் ஹனோவர் நகரிலிருந்து வந்த ரப்பர் சாமான் வியாபாரி குயென்ஸ். இந்தியாவில் சுற்றுப் பிரயாணம் செய்து கொண்டு வருகையில், கோயமுத்தூரை அடைந்ததும் குயென்ஸ் மனைவிக்கு காய்ச்சல் நோய் கண்டது. முஸாபரி பங்களாவில் போதுமான வசதியில்லாததால், யுனைடெட் மோட்டார்ஸ் "தங்கும் அறை" (waiting room)-ல் தங்கியிருந்தார்கள். ஜி. டி. நாயுடு அதை அறிந்ததும், அவர்களுக்கு சகல சவுகரியங்களும் செய்து கொடுக்கப்பட்டன. அவர்கள் அந்த நகரை விட்டு புறப்படுமுன், நாயுடு அவர்களிடம் வந்து, ஜர்மனிக்கு வரவேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள். அதன் பிறகும், வருஷா வருஷம் அவர்களிடமிருந்து 'கிருஸ்துமஸ் வாழ்த்துகள்' நாயுடுக்கு வந்துகொண்டிருந்தன; அதோடு, 'ஜர்மனிக்கு வந்தால் நல்லது' என்று விடாமல் எழுதிக் கொண்டுமிருந்தார்கள். அவர்கள் அழைப்பை ஏற்று, 1932 கோடையில் ஐரோப்பாவுக்குப் புறப்படுவதென்று நாயுடு தீர்மானித்தார்.

நாயுடு அவர்களின் கடற் பிரயாணம் கொழும்பு துறைமுகத்திலிருந்து ஆரம்பமாயிற்று. "ஜியார்ஜஸ் பிலிப்பார்" என்னும் மனோகரமான பிரஞ்சு கப்பலில் புறப்பட்டார். அவரோடு இரு நண்பர்களும் சென்றார்கள். நான்கு நாட்கள் அலைகளின் எதிர்ப்பை அடக்கிக் கொண்டு சென்ற அந்தக் கப்பல் ஐந்தாம் நாள் நடுக் கடலிலே தீப்பற்றிக்கொண்டு நிராதரவாக நின்றது. கப்பல் தீப்பற்றிக்கொண்டது என்பதை அறிந்த நாயுடு வின் மனம் தன்னை மாத்திரம் காப்பாற்றிக்கொள்ள வேண்டுமென்ற குறுகிய மனப்பான்மைக்கு இடமே கொடுக்கவில்லை. தன்னுடன் வந்த தோழர்கள் காப்பாற்றப்பட வேண்டுமே என்ற நேர்மை அவரை முன்னுக்குத் தள்ளியது, அனலைக்கக்கும் அக்கினி அவரைப் பின்னுக்குத் தள்ளியது. கப்பலின் தளத் திலேயே தனது சகாக்களைத் தேடித் தேடி மூன்று மணி நேரம் அலைந்தார். அவர்கள் ஒரு 'லைப் போட்' (Life boat) டின் மூலம் தப்பியோடிவிட்டார்கள் என்பதை அறிந்தவுடன் தைரியமாகக் கடலிலே குதித்து, மற்றொரு 'லைப் போட்'டின் மூலம் சுகமாகத் தப்பித்துக் கொண் டார். அப்படியிருந்தும் அவர் இரண்டு உயிர்கள் — ஒரு ஆங்கில மாதும், ஒரு சீன மாதும் — இவ்வுலகத்தின்கண் உயிர் வாழ்வதற்குக் காரணமாயிருந்தார். கடைசியாக அவரும் அவருடைய சகாக்களும் ரஷ்யா தேசத்தைச் சேர்ந்த ஒரு எண்ணைக் கப்பலால் காப்பாற்றப்பட்டு 'ட்ஜிபௌட்டி' (Djibouti) என்ற இடத்தில் இறக்கி விடப்பட்டார்கள். அதற்குப் பிறகு தன்னுடைய பிரயாணத்தை ஒருவித அபாயமும் குறுக்கிடாமல்

தொடர்ந்தார். மான்செஸ்டரிலிருந்து தென் இந்தியாவில் தன் நண்பர் ஒருவருக்கு நாயுடு அவர்கள் "ஜியார்ஜஸ் பிலிப்பார்" தீப்பற்றியதைப் பற்றி விபரமாகக் கடிதம் எழுதினார், அதிலே அமைந்திருக்கும் சில வாக்கியங்கள் அவரின் உதார குணத்திற்கும் நன் நடத்தைக்கும் அணிகலனாக விளங்கின.

"........ஜியார்ஜஸ் பிலிப்பாரிலே" நடந்த சம்பவங்கள் கஷ்டம் வருங்காலத்திலே மனிதர்களின் நடத்தை எப்படி மாறுகிறது என்பதை எனக்குத் தெளிவு படுத்தியது. மனிதர்கள், தாய், தந்தை, குழந்தைகள் என்ற சம்சார சாகரத்திலே ஒன்றாகப் பிணைக்கப்பட்டிருக்கிறார்கள். அனால் அவர்களில் ஒவ்வொருவருக்கும் மரணம் என்னும் பயம் வந்து கௌவிக்கொள்ளும்போது தன்னை தான் காப்பாற்றிக்கொள்ள முயற்சிக்கிறார்கள்! இந்த சில மணி நேரங்கள் 'ஜியார்ஜஸ் பிலிப்பாரில்' நடந்த சம்பவமிருக்கிறதே, அதில் நான் கற்றவைகள் அனேகம். நான் அங்கே ஜாதி வெறியைக் காணவில்லை; சகோதர மனப்பான்மையைத்தான் கண்டேன். அடிமை யுணர்ச்சி எழவில்லை; சுதந்திர தேசிய உணர்ச்சித்தான் எழும்பிற்று. மனிதனை மனிதன் வெறுக்கும் மாசை நான் கற்கவில்லை; பந்துக்கள் அபிமானத்தைக் கற்றேன்; மித்ரு நேசத்தைக் கற்றேன்........"

முதலில் நாயுடு அவர்கள் 'மார்ஸெல்ஸை' வந்தடைந்தார்கள். பிறகு ஜெர்மனியிலுள்ள ஹானோவருக்கு க்வென்ஸை சந்திப்பதற்காகச் சென்றார்கள். அவர்

அட்லாண்டிக் மகா சமுத்திரத்தைக் கடந்து அமெரிக்காவிற்குச் சென்றார். சுறுங்கக் கூறுமிடத்து அவர் உலகத்திலுள்ள அநேகமாக எல்லா முக்கிய தேசங்களுக்கும் சென்று பார்வையிட்டார். அமெரிக்காவிலே அவர், மோட்டார் தொழிற்சாலையையும், முக்கிய நகரங்களையும் பார்வையிட்டார். அநேக வியாபார நிபுணர்களையும், கண்டுபிடிப்பாளர்களையும், (Inventers) சந்தித்து பல விஷயங்களை அறிந்து கொண்டார். அவர் தன்னுடைய பிரயாணம் முழுவதிலேயுமே உயர்ந்த வகுப்பில் (First class) தான் பிரயாணம் செய்தார். தங்கியதும் புகழ்பெற்ற முதல் தரமான ஹோட்டல்தான். கூட்டங் கூட்டமாக வந்து இந்தியாவைப்பற்றி அறிய ஆவலுள்ள பத்திரிகை ஆசிரியர்கள் அவ்வளவு பேர்களுக்கும் பேட்டியளித்தார். இந்தியாவைப் பற்றி பேசினார். அந்த சமயத்திலே அவருக்கு ஆங்கிலத்திலே அவ்வளவு பரிச்சயம் கிடையாது. ஆனால் வியாபாரம் செய்யக்கூடிய அளவிற்கு ஆங்கிலம் தெரியும். ஆகையால் அவர் தன்னுடைய ஐரோப்பிய பிரயாணத்தை ஒருவித கஷ்டமுமில்லாமல் கடத்த முடிந்தது. இப்படியே நாயுடு அவர்கள் அமெரிக்காவின் மேற்குக் கடற்கரையை அடைந்து அங்கிருந்து நேராக ஜப்பான் செல்ல கப்பல் ஏறினார். ஜப்பானிலிருந்து வீடு திரும்பும் மார்க்கத்தில், மஞ்சூரியா, கொரியா, மங்கோலியா, சைனா, இந்தோசைனா, மலாய், சிலோன் முதலிய நாடுகளுக்கும் விஜயம் செய்தார்.

நாயுடு அவர்கள் முதல் தடவையாக ஜெர்மனிக்கு விஜயம் செய்திருந்தபோது, கொலோனிலும், பானிலும்

உள்ள பெண்களுடைய முயற்சியின் வலையில் அகப் படாமல் இருந்தார். ஹெயில் ப்ரோன் நகரத்தில் தன்னுடைய புகழ்பெற்ற கண்டுபிடிப்பான ரெசன்ட் க்ஷவரக்கத்தி (Rasant Blade) யைப் பரிசோதிப் பதில் ஈடுபட்டிருந்தார். அதே தொழிற்சாலையில் ஒரு அழகிய பணக்காரக் குடும்பத்தைச் சேர்ந்த ஜெர்மன் மாதும் வேலை பார்த்துக்கொண்டிருந்தாள். அவள் நாயுடு அவர்களிடம் 'மாய வலை' களை வீச ஆரம்பித்தாள். அவளுக்கு இதற்கு முன்பாக இரண்டு முறை விவாகமாகி இரண்டு முறையும் விவாக ரத்து ஆகிவிட்டது. அவள் நாயுடு விடத்திலே "எனக்கு இதற்கு முன்பு இரண்டு முறை விவாகமாகியிருக்கிறது. என் இரண்டு கணவர் களும் என்னிடத்திலேயுள்ள பணத்திற்காகத்தான் என்னை மணந்தார்களேயொழிய என் மேலுள்ள ஆசை யாலல்ல! ஆகையால்தான் இப்பொழுது நான் ஜெர்மனிய ஆடவர்களை அறவே வெறுக்கிறேன். ஆனால் இந்தியர் களோ அப்படியில்லாமல் முற்றிலும் மாறுபட்டவர் களாகவே யிருக்கிறார்கள். ஆகையால் தான் நான் உங்களை மணக்க விரும்புகிறேன்" ....... என்று தனது ஆசையை வெளியிட்டாள். ஆனால் ஒழுக்க சீலரான நாயுடுவோ தனக்கு இதற்கு முன்பு விவாகமாகி விட்ட தென்று மறுத்துவிட்டார். அது அவளுடைய மனதை நிரம்பவும் புண்படுத்தி விட்டது. இருந்தபோதிலும் 1932-ஆம் ஆண்டு கிருஸ்துமஸ் நாளன்று அவள் தன்னு டைய கையொப்பமிட்ட படத்தை (Autographed Picture) நாயுடு அவர்களுக்கு அனுப்பியிருந்தாள். அதில் பின் வரும் வாக்கியங்கள் கண்டிருந்தது. "......... நீங்கள்

என்னை விரும்பாவிட்டாலும் நான் தங்களுக்கு ஆனந்த மான கிருஸ்துமஸையும், பலன் தரத்தக்க புத்தாண்டையும் விரும்புகிறேன்'' அந்தப் படத்தை தமாஷுக்காக இன்னும் தன்னுடன் நாயுடு வைத்திருக்கிறார்.

1933-ஆம் ஆண்டு நாயுடு கொழும்பு மார்க்கமாக இந்தியா வந்தடைந்தார். "ஜியார்ஜஸ் பிலிப்பாரில்'' நாயுடு அவர்களுடைய ஐரோப்பிய பிரயாணத்தைப்பற்றி இந்தியாவிலுள்ள எல்லாப் பத்திரிகைகளும் எழுத ஆரம்பித்தன. இந்த சமயந்தான் அவருடைய பெயர் முதன் முதலாக பத்திரிகைகளில் பிரசுரமாயிற்று! அவர் கொழும்புவிலிருக்கும் போது அவருக்கு சென்னையில் விருந்து உபசாரம் செய்வதற்காக அநேக நண்பர்களிட மிருந்து தந்திகள் வந்தவண்ணமிருந்தன. அப்படிப்பட்ட விளம்பரங்கள் விரும்பாத நாயுடு, அவைகளை ஏற்க மறுத்தார்! எப்படியும் மக்கள் தனக்காக எழும்பூர் ஸ்டேஷனில் காத்திருப்பார்கள் என சந்தேகித்து வழி யிலே ஒரு ஸ்டேஷனில் இறங்கி, ஒரு நாள் தங்கி, மறு படியும் பிரயாணத்தைத் துவக்கினார். ஒரு நாள் இவர் தாமதித்துச் சென்றாலும் கூட்டம் இவருக்காக ஸ்டேஷ னில் காத்திருந்தது. இவரை எதிர்கொண்டழைக்க வந்தவர்களிலே எண்பது பேர்கள் மாணவர்கள். அவர் களை நாயுடுவிற்கு முன் பின் தெரியாது. ஆனால் அவர் களின் விண்ணப்பத்தின்படி, அவர்களின் தராதரத்திற்குத் தக்கவாறு அனைவருக்கும் உபகாரச் சம்பளம் கொடுத்தார். மேலும் அப்படியாக உபகாரச் சம்பளம் பெற்ற ஒவ்வொரு மாணவனும், நாயுடு தனக்கு உபகாரச் சம்பளம் கொடுத்து உதவுவதாக மற்றவர்களுக்குச்

சொல்லாமல் பரம ரகசியமாகவே வைத்துக்கொள்ள வேண்டுமென்று கண்டிப்பாகக் கட்டளையிட்டார். அதுமாதிரியாக இந்த எண்பது மாணவர்களுக்குள்ளேயே ஒருவருக்கொருவர் நாயுடு அவர்களின் உபகாரச் சம்பளத்தைப் பற்றியே தெரியாமலிருந்தது. மேலும் நாயுடு அவர்கள் இங்கிலாந்தில் நான்கு மாணவர்களுக்கு தலைக்கு பத்து பவுன் வீதம் மாதாந்திர உபகாரச் சம்பளமாக அநேக ஆண்டுகள் கொடுத்துவந்திருக்கிறார்கள் அவர், தான் விரும்பி, தன் மன சாந்திக்காக எதைச் செய்யவேண்டுமென்று நினைக்கிறாரோ அதையே தான் செய்தாரேயொழிய, அதன் வழியாக தன்னுடைய பெயர் பிரபலமாகும், தன் கீர்த்தி எங்கும் பரவும் என்ற குறுகிய எண்ணத்தோடு அல்ல.

'ஜிபார்ஜஸ் பிலிப்பார்' கோர விபத்திலிருந்து தப்பிப் பிழைத்த நாயுடு அவர்களின் கழுத்தில் ஆயிரக்கணக்கான மாலைகள் அணிவிக்கப்பட்டன. அவர் அவைகள் யாவையும் தன்னுடைய புன்னகையால் ஏற்றுக்கொண்டார். எல்லோரையும் கண்டு மகிழ்ந்து மறு நாள் அவர் கோவைக்குப் பிரயாணமானார்.

1932-ஆம் ஆண்டில் நடந்த அவருடைய முதல் வெளி நாட்டுச் சுற்றுப் பிரயாணம் முழுவதுமே அவருக்கு ஒரு தீரச் செயலாகத் தோன்றிற்று. 'ஜியார்ஜஸ் பிலிப்பார்' விபத்திலிருந்து தப்பியதுகூட அவருக்குப் பெரிதாகத் தோன்றவில்லை, லண்டன்மா நகரத்தை அடைந்தவுடன் அவர் ஒரு நாள் எக்ஸைடர் (Exeter) நகரத்திலிருந்து, தலை நகருக்குத் திரும்பி வந்துகொண்

டிருந்தார். முன்பே அவர் ஒரு குறிப்பிட்ட 'ரயிலில்' தனக்காக ஒரு இடத்தை ரிசர்வ் செய்து வைத் திருந்தார். அந்த வண்டி போகும் வழியில் ஒரு கோர விபத்திற்கு உள்ளாகி விட்டது. அத்துடன் இணைக்கப்பட்டிருந்த எல்லா வண்டிகளும் கீழே சாய்ந்து அநேகம் உயிர்கள் பலியாயின. நாயுடு அவர்கள் அந்த விபத்திற்கு அதிர்ஷ்ட வசமாக ஆளாகவில்லை. காரணம்! அவர் அந்த ரயில் கிளம்புவதற்கு முன்பே வேறொரு ரயிலில் லண்டன் வந்து சேர்ந்து விட்டார். இருந்தபோதிலும் லண்டனிலுள்ள அனேகம் இந்திய நண்பர்கள் நாயுடு அவர்களை அந்த ரயில் விபத்தினால் இறந்த அனேக ஆயிரக்கணக்கான மக்களின் சங்கியை யிலேயே சேர்ந்துவிட்டார்கள். அவர்களில் சில பேர்கள் கூட விபத்து நடந்த இடத்திற்கே சென்று நாயுடு அவர் களுடைய பிரிவிற்காக ஏங்கிக் கண் கலங்கி நின்றார்கள். அவர்களிடையே நாயுடு அவர்களும் நின்றுகொண்டு தன்னைப்பற்றி என்ன பேசிக்கொள்ளுகிறார்கள் என்பதைக் கேட்டுக்கொண்டுதானிருந்தார்கள்!

சில மாதங்கள் கழித்து அவர் டோக்கியோ நகரத்தி லிருக்கும்போது, அங்கிருந்து கொரியாவிற்கு ஆகாய விமான மூலமாக பிரயாணம் செய்யத் தீர்மானித்தார். அவர் ஆகாய விமான மூலமாக நாட்டைக் கடந்து கடலைக் குறுக்கிட்டுச் செல்லும்போதுதான் அந்த அபாயகரமான சுழற் காற்று வந்தது. விமானியால் விமானத்தைக் கட்டுப்படுத்த முடியவில்லை. பிரயாணி களுக்கு எந்த சமயம் ஆபத்து நேரிடுமோவென அவன் அஞ்சி நின்றான். அந்த சுழல் காற்றினால் 3900 வீடுகள்

நாசமாயின. சில கப்பல்கள் கூட ஹார்பின் கடல் நீருடன் ஐக்கியமாகி விட்டன! அப்படியிருந்தும் இந்த ஆபத்திலிருந்து அவர் அதிர்ஷ்டவசமாக தப்பிவிட்டார்!

மறுபடியும் அவர் சீனாவிற்குச் சென்றிருந்தபோது, பீக்கிங் (Peiking) கிலிருந்து கோபிப் பாலைவனத்திற்குப் போகலாமென்றுத் தீர்மானித்தார். அங்கிருந்து அவர் 'பெரிய மதிற் சுவரை' (Graet Wall) யும் சென்று பார்வையிட்டார். தன்னுடைய பிரயாணம் முழுவதையும் மோட்டார் காரின் மூலமாகவே கடந்தார். போகும் வழியில் திருடர் கூட்டம் ஒன்று இவர்களை வந்துச் சூழ்ந்து கொண்டது. அந்தப் பக்கங்களிலே இதுமாதிரி நடக்கக்கூடியது சர்வ சகஜம். ஆனால் இந்த தடவை கூட அவர் தன்னை சமாளித்துக்கொண்டு தன்னுடைய உயிரை திருடர்களிடமிருந்துக் காப்பாற்றிக் கொண்டார். இதுமாதிரியாக அவருடைய பிரயாணம் முழுவதுமே பற்பல பயங்கரமான திடுக்கிடும் சம்பவங்கள் நடந்திருக்கின்றன. அவர் அவைகளையெல்லாம் பொருட்படுத்தாமல் மென்மேலும் தன்னுடைய பிரயாணத்தை செய்து கொண்டுதானிருந்தார்.

சுற்றுப் பிரயாணம் தான் மனிதனின் அறிவை விருத்தி செய்யக்கூடியது. சுற்றுப் பிரயாணத்தின் மூலம் அவன் வாழ்க்கையில் அநேகம் உண்மைகளைத் தெரிந்துக் கொள்ளுகிறான் என்ற ஒரு படிப்பினை நாயுடு அவர்களுக்கு இப்பொழுதுதான் புலப்பட்டது. இந்த ஒரு எண்ணம் அவருடைய மனதில் வேரூன்றிவிட்டதினால் தானோ என்னமோ, அவருடைய மனது அவரை

இரண்டாவது முறையாக ஐரோப்பாவில் சுற்றுப் பிரயாணம் செய்யத் தூண்டியது. இந்தத் தடவை வெளி நாட்டிலுள்ள போக்குவரத்துப் பிரச்னைகளை முக்கிய மாக அறிவதற்கு ஆவலுள்ளதாலேயே அவர் ஐரோப்பா சென்றார். இதற்கிடையில் முக்கியமாக உள்ள எல்லா தொழிற்சாலைகளையும் பார்வையிட்டார். இங்கிலாந்தி லுள்ள எல்லா தரும ஸ்தாபனங்களும் அவரை அழைத்து மரியாதை செய்தன. பொதுவாக அவருடைய முழுப் பிரயாணம் முடிய அநேக மாதங்களாயின.

'ஐசாக் வால்டனின்' கம்பிளீட் ஆங்லரைப் (Izzak Walton's Complete Angler) போல நாயுடு அவர்களும் ஒரு முழுச் சுற்றுப் பிரயாணியாகவே விளங்கு கிறார். பிரயாணத்தைத் துவக்கு முன்பாக அவர் எந்தெந்த இடத்தைப் பார்க்கவேண்டுமென்று ஒரு குறிப்பை வரைந்துக் கொள்ளுவார். ஆகையால் அவருக்கு அவர் விஜயம் செய்யும் ஒவ்வொரு இடத்தைப் பற்றியும் நன்றாகத் தெரிந்துகொள்ள முடிந்தது. வண்டிக்காரர் களும் அல்லது ஊரைச் சுற்றிக் காண்பிப்பவர்களும் (Guides), அவர் அந்த ஊரில் அதிகம் பழக்கப்பட்ட வரைப்போல கேள்வி கேட்பதைப் பார்த்து ஆச்சரியப் பட்டுப் போனார்கள். ஒருவராவது அவரை ஏமாற்ற முடியவில்லை! ஆய்ந்து ஆராய்ந்து பார்க்கக் கூடிய பேராற்றல் அவரிடத்திலே யிருந்தது. அவர் துருவித் துருவி ஆராய்ந்து பார்க்கக் கூடிய ஒரு மாணவராகவே யிருந்தார். ஆகையால்தான், அவர் ஒரு இந்தியராக இருந்தபோதிலும், அயல்நாட்டுச் சுற்றுப் பிரயாணத் தினால் அதிகப் பலனை அடைந்தார். அவர் தன்னுடைய

பிரயாணத்தின் போது எதைப் பார்த்து, அநுபவமடைந்தாரோ, அவைகளையெல்லாம் உங்களுக்குச் சொல்ல வேண்டுமென்றால், நீங்கள் கண்முன் காண்பது போலவே, அப்படியே, அழகாக விவரித்துச் சொல்லக் கூடிய நல்ல ஞாபகசக்தி அவரிடத்திலே இருக்கிறது. அவர் செல்லுமிடமெல்லாம் தன்னுடன் ஒரு **சலனப்படம் பிடிக்கும் காமராவை** (Movie Camera) யும் எடுத்துச் செல்லுவது வழக்கம். அவருடைய சுற்றுப் பிரயாணத்தின் போது அவர் முக்கியமான ஒன்றையாவது படமெடுக்கத் தவறியது கிடையாது!

லண்டன் மாநகரத்திலுள்ள தபால்காரர்களின் திறமையைப்பற்றி நாயுடு அவர்கள் அதிகமாகக் கேள்விப்பட்டிருக்கிறார்கள். அவர்களைச் சோதிக்க விரும்பி அங்கிருந்து பர்மிங்காம் நகரத்திற்குச் சென்று தன் விலாசத்திற்கு பின் வருமாறு "ஜி. டி. நாயுடு, லண்டன், W. C. I.", என்று ஒரு கடிதமெழுதி தபாலில் சேர்ப்பித்தார். குறித்த சமயத்திலே கடிதம் அவரை வந்தடைந்தது. உண்மையிலேயே லண்டன் மாநகரத்திலுள்ள தபால்காரரின் திறமையைக் கண்டு அவர் திகைத்துப்போனார். மற்றொரு சமயம் தன்னுடைய சலனப்படம் பிடிக்கும் பெட்டியை தலை நகரத்தில் எங்கோ தவற விட்டுவிட்டார். ஆனால் என்ன ஆச்சரியம்! "இழந்த பொருள்கள் காரியாலயம்" (Lost Property Office) அதை நாயுடு அவர்களிடம் ஒரு நொடிப் பொழுதில் சேர்ப்பித்தது. மறுபடியும் ஒரு சமயம் அவர் இந்தியாவிற்கு அங்கிருந்து 'ட்ரங்க் போன்' மூலமாகப் பேசினார். அவரிடமிருந்து ஐந்து நிமிடத்திற்காக பணம் வசூலிக்கப்பட்ட போதிலும்

அவர் போனில் பேசியது மூன்றே நிமிடங்கள் தான். இதை அவர் டெலிபோன் கண்ட்ரோலருக்கு எழுதிக் கேட்டார். அதன் பயனாக இவர்கள் இரண்டு பவுனை நாயுடுவிற்கு திருப்பிக் கொடுத்தார்கள் அதை பெருந் தன்மையோடு லண்டன்மாநகரத்தின் டெலிபோன் தொழிலாளர் நிவாரண நிதிக்கு அன்பளிப்பாக கொடுத்து விட்டார்.

இந்த தடவை நாயுடு அவர்கள் ஐரோப்பிய பிரயாணத்தைத்தீர்க்கமாகச் செய்வது என தீர்மானித்தார். ஐரோப்பாவிலுள்ள எல்லா முக்கிய தேசங்களுக்கும் அவர் விஜயம் செய்தார். அவர் பிரயாணத்தின்போது அங்கங்கே பார்க்க வேண்டியவற்றிற்கெல்லாம் முன் கூட்டியே ஒரு பட்டியல் தயாரித்து வைத்திருந்ததினால், அவர் விஜயம் செய்த எல்லா தேசங்களிலும் எதெது முக்கியமோ அவைகளையெல்லாம் ஒன்று விடாமல் பார்த்து பல விஷயங்களை அறிந்துகொண்டார். அவ ருடைய பிரயாணத்திலே யெல்லாம் அவர் குறிப்பாக ரஷ்யா தேசத்தைதான் பார்வையிட அதிக ஆசைப்பட்டார்.

ஜெர்மனி தேசத்திலே நாயுடு அவர்கள் அநேக ஆச்சரியப் படக்கூடிய அனுபவங்களுக்கெல்லாம் ஆளாகி யிருக்கிறார். அவர் ஹிட்லரைச் சந்தித்துப் பேச எண்ணங்கொண்டு, மனுச் செய்துகொண்டார். ஆனால் ஹிட்லர் தனக்குநேரமில்லையென பேட்டியளிக்க மறுத்து விட்டார். சில நாட்களுக்குப் பிறகு நாயுடு அவர்கள் கோலோன் நகரத்தில் 'டாம்' ஹோட்டலிலே (Dom Hotel) தங்கியிருக்கும்போது 'நாஸி'க் கட்சித் தலைவர் கள் அவ்வளவு பேரும் அங்கேயே வந்து தங்கினார்கள்.

ஹிட்லர்கூட அந்தத் தலைவர்கள் கூட்டத்தில் இருந்தார். இந்த அரிய சந்தர்ப்பத்தைக் கைநழுவ விடக்கூடாதென அவர் தீர்மானித்து, தன்னுடைய வேண்டுகோளை — ஹிட்லரைக் கண்டு பேச வேண்டுமென்பதை — மறுபடியும் தெரிவித்தார். சில நிமிட நேரங்களுக்குப் பிறகு ஹிட்லர் நாயுடு அவர்களுக்கு பேட்டியளித்தார். அவர்கள், இருவருக்கும் நடுவே டாக்டர் லே (Dr. Ley) என்பவர் ஒருவர் பேசுவதை மற்றவருக்கு மொழி பெயர்த்துச் சொன்னார். அவர்கள் அளவளாவிய பிறகு, நாயுடுவும் ஹிட்லரும், நாயுடு அவர்களுடைய ஜெர்மனி விஜயத்தைப்பற்றிப் பேசிக் கொண்டிருந்தார்கள். "நாங்கள் நிச்சயமாக அரசியல் விஷயத்தைப் பற்றிக் கொஞ்சங்கூட பேசவில்லை" என நாயுடு அவர்கள் சர்வ சாதாரணமாக யாரோ ஒருவர் கேட்ட கேள்விக்குப் பதிலளித்தார். "இல்லாவிட்டால், நான் அவரிடம் என்ன அரசியல் விஷயமாகப் பேசுவது"? என்று அவர் நம்மைக் கேட்கிறார். பதில் சொல்லுங்கள்.

ஹிட்லர் மற்ற தன் சகாக்களான கோயரிங், லே, ஹெஸ், கோயப்பெல்ஸ் இவர்களுடன் நாயுடுவின் காமிரா முன்பாக படம் பிடிக்கக்கூடிய தோரணையிலே நின்றார். அவரும் அவர்கள் யாவரையும் படம் பிடித்தார். ஹிட்லர், நாயுடுவிடத்தில் தன்னுடைய கையொப்பமிட்ட படத்தைக் (Autographed Picture) கொடுத்தார். "நான் நாஸித் தலைவர்கள் எல்லோரையும் கண்டேன். அவர்களுடன் பேசவும் பேசினேன். ஆனால் டாக்டர் லே அவர்களுடன்தான் அதிக நேரம் பேசிக்கொண்டிருந்தேன். அவர் அருமையான ஆங்கிலத்தில் அழகாகப் பேசினார்".

ஹிட்லரைச் சந்தித்துப் பேசிய மறுநாள் ஜெர்மன் சேனையானது டசல்டார்ப் (Dusseldorf) என்ற இடத்தில் பயிற்சிகள் செய்யும்போது அதை அப்படியே நாயுடு அவர்கள் படம் பிடித்தார்கள் அதற்காக அவர்கள் இவரைக் கைது செய்துவிட்டார்கள். பிறகு நாயுடு இவ்விதம் படம் பிடிப்பது தன்னுடைய பொழுதுபோக்கு எனச் சொன்னவுடன் விட்டுவிட்டார்கள் இரகசிய போலீசார் (Gestapo) நாயுடுவை வெகு மரியாதையாகவும், அன்பாகவும் நடத்தியதாகச் சொன்னார்.

ஏப்ரல் மாதத் தொடக்கத்திலேயே ஸ்ட்ராத்மோர் (Strathmore) என்ற பி. அண்ட் ஓ. மெயில் போட் (P. & O. Mail Boat) டில் இந்தியா வந்து சேர்ந்தார். அதே கப்பலில்தான் இந்தியாவுக்கு வைசிராயாகப்போகும் லின்லித்கோபிரவும் அவருடைய மனைவியும் பிரயாணம் செய்தார்கள். இவர்களுக்குக் கப்பலிலுள்ள ஆறு இந்தியப் பிரயாணிகள் வரவேற்பளித்தார்கள். நாயுடுவும் அவர்களைப் படம் பிடித்து அவர்களுடைய பழக்கத்தையும் ஏற்படுத்திக்கொண்டார்.

VII

## காமிரா மேன்

கோவையிலே பிரசித்திபெற்ற மோட்டார் மன்னர் என்று விளங்கும் ஜி. டி. நாயுடு அவர்கள், வியாபாரத்திலும், புதிய புதிய கருவிகளைக் கண்டுபிடிப்பதிலும் (Invention) மாத்திரம் தனது அரிய நேரத்தையும் ஆர்வத்தையும் செலுத்தவில்லை. இவைகளல்லாது அவர் வேறு துறைகளையும் அரிய ஆவல்கொண்டிருந்தார் என்பதை நான் உங்களுக்கு எடுத்துக்காட்ட முடியும். அவர் எதை எதை ஆர்வத்துடன் ஆராய்ந்து அதன் நுட்பங்களை அறிய ஆவல் கொண்டார் என்பதை சொல்லுவதென்றால் ஒரு நீண்ட பட்டியல் தயார் செய்யவேண்டும். உங்களுடைய பொன்னான நேரமும் வீணாகும், அவர் எதை விரும்பவில்லை என்று நாம் சொல்லுவது மிகச் சுலபமல்லவா! இப்பரந்த உலகத்தின்கண் அவர் ஆராய்ந்து அறியாத. அறியவிரும்பாத பொருள்கள் ஒன்றுகூட இல்லை! சாதாரணமாக ஒரு மனிதனை எடுத்துக்கொண்டால் அவன் ஒரு பொருளை அடைய ஆர்வங்கொள்ளுவான். அடைந்தவுடன் அதை அனுபவிப்பான், இதுதான் சாதாரணமாக உலகத்தில் சகஜமாக நடக்கக்கூடியது. ஆனால் நாயுடு அவர்களோ ஒரு பொருளைக் கண்ணுற்றால் அதைக் கூர்ந்து கவனிப்பார். கவனித்தவைகளை தன் மனதிலேயே பதிப்பார். பதித்தவைகளை, அநேகம் புத்தகங்களி

விருந்து தான் கற்றவைகளைக்கொண்டு அலசி அலசி ஆராய்வார். ஆராய்ந்தவைகளை வைத்துக்கொண்டு தானே ஒன்று அதுமாதிரி செய்தும்விடுவார். சில சமயங்களில் ஏதாவது ஒரு புதிய பொருளைக்கண்டாரோ, அதைப் பற்றி ஆராய ஆர்வம் கொண்டு அநேக பணி நேரங்கள் அதற்கடியிலேயே அப்படியே உட்கார்ந்துவிடுவார். நாயுடு அவர்கள் அப்படிப்பட்ட தனி இனத்தைச்சேர்ந்தவர். அவர் முக்கியமாகக்கவனம் செலுத்திய துறைகளிலே படப்பிடிப்புக் கலையும் ஒன்று. அவரிடத்தில் ஒரு சமயம் விலை உயர்ந்த படம் பிடிக்கும் காமராக்கள் அதிகம் இருந்தன. அவைகளின் மூலம் அவர் எல்லாவற்றையும் படம் பிடித்தார். முதல் ஐரோப்பிய சுற்றுப்பிரயாணத் தின் போது அவருக்கு படப்பிடிப்பு ஒரு தொத்து வியாதியைப்போல பிடித்துக்கொண்டது. அவர் வெளியில் எப்பொழுது சென்றாலும் சரி தன்னுடன் இரண்டு வித 'காமிரா'க்களை – ஒன்று சலனப்படம் எடுக்கக்கூடியது மற்றது நிலை (Still) படம் எடுக்கக்கூடியது – எடுத்துக் கொள்ளாமல் செல்லவேமாட்டார். அவர் சலனப்படம் எடுக்கக்கூடிய 16 m. m. 'காமிராவை'த்தான் அதிகம் உபயோகப்படுத்தியிருப்பார் என்று நான் நினைக்கிறேன். ஐந்தாம் ஜியார்ஜ் மன்னர் 1935ம் ஆண்டு காலமானபோது நாயுடு அவர்கள் லண்டனில்தான் இருந்தார்கள். பிரேத ஊர்வலத்தில் லக்ஷக்கணக்கான பொதுமக்கள் கலந்து கொண்டார்கள். கூட்டத்தில் ஏற்பட்ட நெருக்கடியின் காரணமாக ஒருவர் இறந்தார், நூற்றைம்பது பேர்கள் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டார்கள். பத்தாயிரக் கணக்கான மக்கள் 'ஆம்புலன்ஸ்' படையினரால் அநேக இடங்களில் முதற் சிகிச்சை கொடுக்கப்பட்டார்கள். நாயுடு



ஹிட்லரை ஜெர்மனியில் நாயுடு சந்தித்து பேசியபோது எடுத்த படம்




பேடன்வீலரில் நேருஜியை நாயுடு படம் எடுத்து அதில் அவருடைய கையொப்பத்தையும் வாங்கிக்கொள்ளப்பட்டது

அவர்களும் அந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டு முழு ஊர்வலத்தையும், 'ஆம்புலன்ஸ்' படையினரால் கொடுக்கப் பட்ட' முதற்சிகிச்சை' யையும் படமெடுத்தார்கள்!

முந்திய அத்தியாயத்தில் நாயுடு அவர்கள் ஹிட்லரை படம் பிடிப்பதற்காக ஜெர்மனிக்குச் சென்றபோது கைது செய்யப்பட்டார் என்பதைச் சொன்னோம். ஹிட்லரை அநேக மார்க்கங்களில் விதவிதமான படங்களில் பிடித்தார். பிடித்தப் படங்களை திரும்பிப்பார்த்தபோது' ஹிட்லருடைய முகம், ஒன்றிலிருந்ததைப் போல மற்றதில் இல்லை! ஒவ்வொன்றிலுமுள்ள முக மாற்றத்தைக்கண்டு நாயுடு ஹிட்லருடைய காமிரா முகத்தோற்றம் மாறுவதை வியந்ததாக ஒரு தடவை என்னிடம் சொன்னார். நாயுடு பிடித்த படங்களில் ஒன்றிலாவது ஹிட்லருடைய முகபாவம் ஒன்றாகவேயில்லை. அவைகளில் ஹிட்லர், பற்பல எண்ணங்களிடையே ஊசலாடும் எண்ணத்தனாக தோற்றமளித்தார், ஒன்றில் மட்டும் ஹிட்லருடைய முகம் ரொம்பவும் அழகாகயிருந்தது. ஆனால் மற்றதிலோ! நாயுடு அதுமாதிரி ஆபாசமான படத்தை அதுவரை எடுத்ததேயில்லையென்று சொன்னார்!

1935-ஆம் ஆண்டில் லண்டனில் ஒரு 'ஒலிம்பிக்' கண் காட்சி (Olymbic Exhibition) பத்து நாட்கள்வரை நடந்தது. சில மோட்டார் தொழிலில் ஆர்வமுள்ள அறிஞர்களின் அழைப்பிற்கிணங்க் நாயுடு அவர்கள் அந்தக் கண்காட்சி சாலையில் "டியஸல்' என்ஜினைப்பற்றி ஒரு உபன்யாசம் செய்தார். மற்றொரு நாள் எட்டாம் எட்வர்ட் மன்னர் (தற்பொழுது உள்ள விண்ட்ஸர் பிரபு) காட்சிசாலையைக் காணவருவதாகயிருந்தது. ஆகையால்

அங்கே மற்றொருவரையும் அனுமதிக்கவில்லை 'காமிரா மேன்' நாயுடு எப்படியோ நெருக்கியடித்துக்கொண்டு காட்சிசாலையின் கதவுகளண்டை வந்து நின்றுகொண்டு வரப்போகும் மன்னரைப் படம் பிடிப்பதற்காகத் தயாராக யிருந்தார். மாட்சிமை தங்கிய மன்னர் அவர்கள் காரிலிருந்து இறங்கியவுடன்' நாயுடு அவர்கள் தன் காமிராவுடன் ரோட்டுக்கே வந்து மன்னரின் வருகையை நன்றாக படம் பிடித்துக் கொண்டிருக்கும்போது ஒரு போலீஸ்காரன் நாயுடுவின் கழுத்தில் கையைக்கொடுத்து வெளியே தள்ளிக்கொண்டு சென்றான். ஆனால் மன்னர் அவர்களே அப்போது போலீஸ்காரனிடம் நாயுடுவை ஒன்றும் தொந்திரவு செய்யவேண்டாம் என்று கட்டளை யிட்டபோது! அவர் மேயர் பிரபுவுடன் (Lord Mayor) மன்னரின் பின்னாலேயே சென்று, மன்னர் காட்சி சாலையை பார்வையிடும் காட்சியை சுமார் ஒரு மணி நேரம், வேடிக்கைப் பார்த்து 400 அடிகள் கொண்ட படம் பிடிக்க முடிந்தது!

இந்தியாவில் முக்கியமாகவுள்ள அநேக நகரங் களிலே கூடிய இந்திய நேஷனல் காங்கிரஸ் கூட்டத்திற்கு நாயுடு அவர்கள் ஒரு காங்கிரஸ் தலைவர் மாதிரியில்லாமல், ஒரு பார்வையாளராகவே சென்று பார்வையிட்டார். அரசியல் விவகாரங்களைப்பற்றி அறிய அலாதியான ஆர்வம் அடைந்திருந்தார். மனித வாழ்க்கையை அலசி அலசிப்பார்க்கும் ஒரு மாணவராகவும் இருந்தார். ஆனால் அவைகளைப்பற்றி அறிந்தவுடன் அவருக்கு வியப்புதான் உண்டாயிற்று. அவர் காந்திஜியையும் மற்றும் பல வருஷங்களாக காங்கிரஸின் வளர்ச்சிக்காக

உழைத்து உருக்குலைந்த தலைவர்கள் யாவரையும் பேட்டி கண்டார். அவர்களை ஆசைக்காக பார்க்கவேண்டுமென் பதற்காகத்தான் பார்த்தார்! அப்படிப்பட்டவர்களிலே நேருஜியும் ஒருவராவர். கமலாநேருவின் அந்தியகாலத்தில், அவருக்கு சிசிச்சை செய்யும்பொருட்டு, நேருஜி பேடன் வீலர் (Baden Veiler) என்னுமிடத்தில் தங்கியிருக்கும் போது, நாயுடு அவர்கள் கமலாநேருவின் உடல்நிலைமைப் பற்றி அவ்வப்போது விசாரித்துவந்தார், அப்பொழுதே நேருஜியை சந்தித்து சில விநாடிகள் பேசிக்கொண் டிருந்தார். நேருஜி பேடன் வீலரில் தங்கியிருந்ததை யும் சலனப்படம் மூலமாகவும் நிலைப்படம் (Still Film) மூலமாகவும் பதிவுசெய்துகொண்டார். அப்படி எடுத்த படமொன்றை நேருஜியிடம், நாயுடு உடனே கொடுத்து அவருடைய கையெழுத்தை (Autography) யும் வாங்கிக் கொண்டார்.

அதற்குப்பிறகு நேருஜி அவர்கள் லண்டனில் நடந்த விருந்துகளில் கலந்துகொணடபோது நாயுடு அவை களைப்படம் பிடித்தார். அங்கே உள்ள காக்ஸ்டன் ஹாலில் (Caxton Hall) நேஜியையும் காலமான C. F. ஆண்ட்ருஸ் அவர்களையும் தன் 'காமிரா' முன்பாக நிற்கச்சொல்லி அவர் பதிவுசெய்துகொண்டார். இந்திய மாணவ கூட்டுறவு சங்கத்தின் சார்பாக நடந்த ஒரு கூட்டத்தில் நெருஜி தலைமை வகித்தபோது அதையும் படமெடுக்காமல்விடவில்லை!

இரண்டு வருடங்கள் கழித்து, திரிபுரா காங்கிரசில் சுபாஷ் சந்திரபோஸ் தலைமை வகித்தபோது நாயுடு அங்கு சென்றிருந்தார், அவர் அங்கே தன்னுடைய

'காமிராவுடன்' சென்றபோது சில காங்கிரஸ்காரர்கள் படமெடுக்க அனுமதிக்கவில்லை. கடைசியாக எப்படியோ தான் விரும்பியதைச் செய்துதான் முடிந்தார். நாயுடு அவர்கள் நேருஜி தங்கியிருந்த குடிசைப் பக்கமாக வந்தபோது, நம் பிரதமரவர்கள் நாயுடுவின் பேடன்வீலரில் பழகிய முகத்தைக் கண்டுகொண்டார். உடனே அவர் புன்முறுவல் பூத்த முகத்துடன் இவரின் அருகில் வந்து, தன் கைகளை உயரே தூக்கி வணக்கம் செலுத்தினார், பிறகு அவர்கள் ஒருவருக்கொருவர் பேசிப் பிரிந்தனர்.

உலகத்திலுள்ள எல்லா இடங்களுக்கும் சென்று, 'படப்பிடிப்புக் கலையில்' அவருக்கிருந்த ஆர்வத்தினால், அநேக அரசர்களையும், அறிஞர்களையும், தலைவர்களையும், வெற்றியுடன் தனது காமிராவில் பதிவு செய்துக் கொண்டுவந்த ஒரு மனிதர், தென் இந்தியாவின் பிரசித்தி பெற்ற பாடகியான ஸ்ரீமதி எம். எஸ். சுப்புலக்ஷ்மியைப் படம் பிடிக்க முயற்சி செய்தபோது தோல்வியைத்தான் கண்டார். கோவையிலுள்ள ஒரு மில் முதலாளியின் வீட்டில் சுப்புலக்ஷ்மி பாட ஒப்புக்கொண்டு வந்திருந்தார். நாயுடு அவர்கள் தன்னைப் படம் பிடிக்கப் போகிறார்கள் என்பதை அறிந்த அந்த அம்மாள், தனது மறுப்பைத் தெரிவித்தார். கடைசியாக அவர் நடத்தவேண்டிய பாட்டுக் கச்சேரியைக்கூட நடத்தாமலேயே கோவையை விட்டுப் போய்விட்டார்! ஒரு வேளை இந்த சிறிய எண்ணத்திற்கு தான் உடன்படாமல் கச்சேரி செய்தால் திறமைவாய்ந்த நாயுடுவின் மனம் புண்ணாகுமோ என்று நினைத்து, அவர் கச்சேரி செய்யாமலே போய்விட்டார் போலும்!

## VIII

## அமெரிக்காவில்

**சு**ற்றுப்பிரயாணம் என்னும் நோய் இப்பொழுது நாயுடு அவர்களைக் கடுமையாகப் பிடித்துக்கொண்டது. விஸ்தாரமான பிரயாணத்தின் பலனை அவர் நன்றாக உணர்ந்திருந்தார். அது அவருடைய அறிவை விருத்தி செய்கிறது என்பதையும் நன்றாக அறிந்திருந்தார். அவர் தன்னுடைய பஸ் கம்பெனியை கோவையிலேயுள்ள தனது திறமை வாய்ந்த மனிதர்கள் கையில் ஒப்படைத்து விட்டு, மென்மேலும் பிரயாணம் செய்து அரிய பல விஷயங்களை ஆராய்ந்து அறிந்துக்கொள்ள விரும்பினார். ஆகையால் அவர் மறுபடியும் ஒரு பெரிய சுற்றுப் பிரயாணத்திற்காகத் திட்டம் போட்டுக்கொண்டு 1939-ஆம் ஆண்டு ஐரோப்பாவிற்குச் சென்றார். ஒரு சில மாதங்களை இங்கிலாந்தில் கழித்தார். அவர் இங்கிலாந்தை அடைந்தவுடனே ஹிட்லர் யுத்தமும் ஆரம்பமாயிற்று. ஆகையால் இங்கிலாந்து தேசமே கஷ்டமான நிலையிலே யிருந்தது. இருந்தபோதிலும் நாயுடுஅவர்கள் நியூயார்கில் அதே ஆண்டு அக்டோபரில் நடந்த உலகக் கண்காட்சிக்கு (World Fair) போவதெனத் தீர்மானித்து அந்த புதிய உலகத்திற்குப் பிரயாணமானார். அவர் நியூயார்க்கை அடைந்தவுடன் அந்த நகரத்திலேயே சிறந்த கம்மோடோர் (Commodore) என்ற ஹோட்டலில் தங்கினார். அந்த

ஹோட்டலில் சாதாரண நாட்களிலேயே தங்கும் செலவு அதிகமாகும் காட்சியின் பொருட்டு அதையும்விட அதிக கிராக்கியாகத்தான் இருந்தது. "நான் புறப்படும்போது இனாம் மாத்திரம் 70 டாலர்கள் கொடுத்தேன்' என்று நாயுடு அவர்கள் இந்தியாவிலுள்ள ஒரு நண்பருக்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டிருந்தார். அதிலே இனாம் என்றால் அந்த தேசத்தில் என்ன என்பதைப் பற்றியும் விவரித்திருந்தார். ஆனால் அவருடைய பெருந்தன்மை வாய்ந்த ஹிருதயம் அதைப் பொருட்படுத்தவில்லை.

நியூயார்கில் அவருடைய தினசரி வாழ்க்கையில் அவர் செய்யவேண்டிய வேலைகளை ஒழுங்காக வரையறுத்து அதன்படி நடந்துவந்தார். தினந்தோறும் காலை 10 மணிக்கு காட்சிக்குச் சென்று பார்வையிடுவார். படிப்பினையைக் கற்றுக்கொள்ளக்கூடிய பொருள்கள் காட்சியில் எவைகள் இருந்தனவோ அவைகள் யாவற்றையும் அவர் காணத் தவறவில்லை. வேடிக்கைக் காட்சிகளை அங்கே அவர் நிச்சயமாகப் பார்க்கவேயில்லை. காட்சி நடந்துகொண்டிருந்த இடத்தையும் அதிலுள்ள தனி ஜாகைகளின் அமைப்பையும் கூர்மையாகக் கவனித்து மனதிலே பதித்துக்கொண்டார். அவர் அவைகள் யாவற்றையும் அப்படியே 4000 அடி நீளமுள்ள சலனப் படம் பிடித்தார் — காட்சி விபரம் அடங்கிய பதினான்காயிரம் காகித கட்டுகளை இந்தியாவிலுள்ள தன் நண்பர்களுக்கு அனுப்பினார். தான் கண்டவைகளுக்கும் கண்டறிந்தவைகளுக்கும் விரிவான ஒரு குறிப்பையும் வரைந்து கொண்டார். நியூயார்கிற்கு இது அவருடைய இரண்டாவது விஜயமாக இருந்தபோதிலும், அங்கே அவர் கண்ட

ஒவ்வொரு பொருள்களையும் நுணுக்கமாகக் கவனித்தார் அங்கே எவைகளையெல்லாம் பார்த்தாரோ அவைகளை பற்றி விரிவாக தன்னுடைய நண்பர்களுக்கு அவ்வப்போது எழுதிவந்தார். "இங்கு மக்களெல்லோரும் நன்றாகப் படித்த அறிவாளிகளாக இருக்கிறார்கள். அவர்களுக்கு ரயில் வரும் நேரம் நன்றாகத் தெரியும். ஆகையால் இங்கு, நியூயார்கிலே, லெவல்கிராசிங்கோ (Level crossings) அல்லது கேட்டுகளோ கிடையாது" என்று நாயுடு அவர்கள் இந்தியாவிலுள்ள தன் நண்பருக்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டார். ஆயிரம் மைல்கள் அமெரிக்க ரயிலில் பிரயாணம் செய்தாலும் பிரயாண முடிவில் அழுக்காகாத வெள்ளை சட்டையுடன் இறங்கலாம் என்ற உண்மை அவருக்குப் புலப்பட்டதும் ஆச்சரியமடைந்துபோனார். நியூயார்கிலே பெட்ரோல் காலன் 15 ஸென்ட்களுக்கு அதாவது நம் நாணயத்திற்கு 7 அணாவிற்கு விற்பதேக் கண்டு வியப்படைந்தார். நாயுடு அவர்கள் வெகு நாட்களாக வயிற்று வலியல் துன்பப்பட்டுவந்தார். அதைப் பற்றி அங்கே பிரசித்திபெற்ற வைத்திய நிபுணர் பிக்கார்ட் (Dr. Pickard) என்பவரைக் கலந்து ஆலோசித்தார். பிறகு நியூயார்கைவிட்டு சிகாகோ சென்றார்.

நாயுடு அவர்கள் நியூயார்கிலே இருக்கும்போது பின் வருமாறு தன் நண்பர்களுக்குக் கடிதமெழுதினார்:

"....நான் காட்சிக்குத் தவறாமல் சென்று வந்தேன். நான் எப்பொழுதும் காட்சி சாலையில் நுழையும் முதல் மனிதனாகவும், வெளிவரும் கடைசி மனிதனாகவும் இருந்தேன். தினந்தோறும் நான்

காலை ஆகாரத்தை முடித்துக்கொண்டு காட்சி சாலைக்குப் போவேன். சாயங்காலம் வரையில் ஒன்றுமே சாப்பிடாமல் திரும்பி வருவேன்........"

சிகாகோவிலிருந்து அவர் மிசௌரி (Missouri) யிலுள்ள செயிண்ட் லூயி (St. Louis) பட்டணத்தில், அங்குள்ள ஒரு பள்ளியில் சேர்ந்து கல்வி பயிலலாம் என்ற குறிக்கோளுடன் சென்றார். அங்கே "பேர் கிரௌண்ட்ஸ்" ஹோட்டலில் (Fair Grounds Hotel) தங்கினார். அமெரிக்காவிலேயே ஒரு பட்டணத்தில்தான் அவர் சேர்ந்தாற்போல் சில வாரங்கள் தங்கியிருந்தது.

செயின்ட் லூயியில் குளிர் கால சீதோஷ்ணஸ்திதி மிகவும் மோசமாக இருந்தது. அதாவது பூஜ்யத்திற்கும் கீழாக 11 டிகிரி இருந்தது என்றால் குளிர் எவ்வளவு அதிகம் என்று பார்த்துக்கொள்ளுங்கள். நாயுடு அவர்கள் வெளியிலே கிளம்பும்போது ஐரோப்பிய முறையில் ஆடைக்ளை அணிந்துச் செல்லவில்லை. தனது இந்திய கலாச்சாரத்தை ஒட்டியே சாதாரண ஒரு வேஷ்டி, சட்டை, மேல் துண்டு இவைகளுடனேயே சென்றார்! அப்படிப் பட்ட அந்த அகோரமான குளிரிலேகூட அவர் சரியாக ஆகாரமே சாப்பிடவில்லை. அவர் இந்தியாவிலுள்ள தன்னுடைய நண்பருக்கு எழுதியதாவது.

"ஒரு நாள் நான் ஒரு வேலையைக் காலையில் ஒன்பது மணிக்குத் துவக்கினேன். மறு நாள் 12 மணி வரையில் ஊண் உரக்கமின்றி தண்ணீர்கூட அருந்தாமல் வேலை செய்தேன். நான் இருந்த இடத்திற்கு அருகிலேயே இவைகள் சாதாரணமாய் கிடைக்கும்!"

அவர் வழக்கமாக ஒரு நாளைக்கு நான்கு மணி நேரங்கள்தான் தூங்குவதில் கழித்தார். மற்ற நேரங்களையெல்லாம், புதிய இடங்களையும், நண்பர்களையும் பார்ப்பதிலும், பார்த்தவைகளை கடிதம் மூலம் எழுதுவதிலும், படம் பிடிப்பதிலும், படிப்பதிலேயுமே சிலவு செய்தார். இங்கே அவர் 1940-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் ஒரு தொழிற் பள்ளியி (Technical School) ல் சேர்ந்தார். கார்டர் கார்புரேடர் ஸ்கூல் (Carter Carburator School) என்ற அந்தத் தொழிற் பள்ளி மிகவும் பிரசித்திப் பெற்றது. ஆகையால் அங்கேயே அவர் தொழிற் கல்வி பயில விரும்பினார். அந்தப் பள்ளி ஒவ்வொரு மாதமும் 40 மாணவர்களுக்கு தலைக்கு 200 டாலர்கள் செலவு செய்து பயிற்சி கொடுத்துவந்தது. நாயுடு அவர்கள் அங்கு வேலை செய்ததற்காக வாரா வாரம் 16 டாலர்கள் ஊதியமாகப் பெற்றுவந்தார். அவர் தன்னுடைய 47-வது வயதில் முதன் முதலாகப் பள்ளிக்குச் சென்றார் என்பதை நாம் நினைத்தால், நமக்கே ஆச்சரியமாயில்லையா! நம் தென் இந்தியர்களில் ஒரு சிலருக்குத்தான் அந்த வயதில் அப்படிப்பட்ட விஷயங்களையெல்லாம் கற்றுக்கொள்ளவேண்டும் என்ற அவா அரும்புகிறது!

"இந்தப் பள்ளியில் பயிலும் மாணவர்களெல்லோரும் சாதாரண மனிதர்களல்ல; அங்கேயுள்ளவர்களில் நான் ஒருவன்தான் இன்ஜினீரிங் அறியாதவன்!" என்று நாயுடு அவர்கள் தன்னுடைய நண்பருக்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டார்கள். மற்றொரு நண்பருக்கு தான் ஏன் செயின்ட் லூயிக்கு படிக்கச் சென்றார் என்பதை விவரித்துக் கடிதமெழுதினார்:

"......நான் என் வாழ் நாட்களில் கடுமையாக வேலைகளைச் செய்துவிட்டேன். நான் எவ்வளவு விரும்பினேனோ அவ்வளவு சம்பாதித்துவிட்டேன். ஆகையால் எனக்கு இனி அநேக சிக்கல்கள் நிறைந்த கஷ்டமான வேலைகளை செய்யவேண்டுமென்ற தேவையில்லை. இந்த ஒரு எண்ணமானது எனக்கு நான் மிகவும் பலஹீனமாக இருக்கும்போதுதான் தோன்றிற்று. என் உடம்பு கொஞ்சம் குணமானதும், மற்றவர்களுக்கு உதவி செய்யும் பொருட்டாவது, படிப்பினையைக் கற்றுக்கொள்ளக்கூடிய இந்த அரிய சந்தர்ப்பங்களை ஒருபோதும் இழக்க என் மனம் இடங்கொடுப்பதில்லை......"

கொஞ்ச நாட்கள் அவர் அந்தப் பள்ளியில் பயின்று வந்தார். அந்தப் பள்ளியிலே படித்த முதல் இந்தியர் ஜி. டி. நாயுடு அவர்கள்தாம். அந்தப் பள்ளியை விட்டுப் பிரியும் சமயத்தில், தனக்கு அரிய பல விஷயங்களைக் கற்றுக்கொடுத்த அந்த பள்ளி உத்தியோகஸ்தர்களுக்குத் தனது நன்றியறிதலைத் தெரிவிக்கும் பொருட்டு நம் நாயுடு ஒரு வாழ்த்துப் பத்திரத்தை (Greetings) தமிழிலே எழுதி அவர்களுக்குக் கொடுத்தார். அதை அமெரிக்கப் பத்திரிகைகள் பிரசுரித்திருந்தன.

பள்ளி நேரம்போக மீதி நேரங்களிலே நாயுடு அநேக இடங்களில் பிரசங்கம் செய்தார். இம்மாதிரி கூட்டங்கள் ஒன்றில், அமெரிக்க முறையிலே இவருக்கு பணம் கொடுக்க முன் வந்ததை பெருந்தன்மையுடன் வேண்டாமென மறுத்துவிட்டார். அந்தக் கூட்டங்களிலே வேதாந்தம் சமத்துவம் – சமுதாயம் இவ்வைகளைப் பற்றி இந்திய

முறைப்படி பேசினார். "நான் எப்பொழுது கொஞ்சம் களைப்பாறலாம் என்று உட்கார்ந்துக் கொள்ளுகிறேனோ அப்பொழுதுதான் மக்கள் என்னைச் சூழ்ந்துக்கொண்டு இந்தியாவைப்பற்றி கேள்விகள் கேட்க ஆரம்பிப்பார்கள். ஆசையோடு வந்து கேள்விகள் கேட்கும் நண்பர்களுக்கு எப்படி நான் முடியாது எனச் சொல்லமுடியும்" என்று அவர் கோவையிலுள்ள தன் நண்பருக்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டிருந்தார்.

"அமெரிக்கர்கள் இந்தியாவைப்பற்றி அறிய மிகவும் ஆவலுள்ளவர்களாகவே யிருக்கிறார்கள். அவர்கள் உண்மையாகவும், நேசபாவத்தோடும், நல்ல நடத்தை யோடும் கூடிய அறிவாளிகளாகவே விளங்குகிறார்கள்." என்று தன் இந்திய நண்பர்கள் கேட்ட கேள்விகளுக்கு அமெரிக்கர்களைப் புகழ்ந்து பேசினார். மேலும் "அமெரிக்கர்கள் வேதாந்தத்திலும், வைதீகத்திலும் இந்தியர்களைவிட மிகவும் பிற்போக்கடைந்திருந்தார்கள். ஆனால் அவர்கள் விஞ்ஞானத்திலும், கைத்தொழிலிலும் மற்ற எல்லா நாடுகளையும்விட மிக மிக முன்னேற்ற மடைந்திருக்கிறார்கள்." என்று கூறினார்.

"ஒருவனையும் ஏமாற்றாதே; உன்னையும் ஏமாற்றிக்கொள்ளாதே; உன்னிடமும், இன்னும் வேறு ஒருவரிடமும் திருடாதே. சாராயம் முதலிய லாகிரி வஸ்துக்களிலிருந்து விலகியிரு. வீணாக் காதே; உடலைக் காப்பாற்று; ஒழுக்கமாயிரு; இயற்கை அழகுடன் விளங்கு. இந்துமதமே இந்த அடிப்படைக் கொள்கையின் மேல்தான் கட்டப் பட்டிருக்கிறது" என்று அவர் ஒரு கூட்டத்தில் பேசும்போது சொன்னார்.

"எல்லா நாடுகளுக்கும் அநேக எதிரிகள் இருக்கின்றார்கள். ஆனால் அமெரிக்காவிற்கோ புகை பிடிக்கும் துர்வழக்கமே பெரிய எதிரி!" என்று அவர் மற்றொரு கூட்டத்தில் பேசினார்.

"நாகரீக சிகையலங்காரமும், அழகிய ஆடைகளும், பௌடர் பூசிய முகமும், வர்ணம் தீட்டிய உதடும் ஒருக்காலும் அழகை உண்டாக்காது. உன்னுடைய மனதிலே, நீ ஒழுங்காயும், உண்மையாகவும், பெருந் தன்மையாகவும் இருப்பதாக எண்ணினால் போதும். அதுவே இயற்கையான அழகு!" என்று அவர் மற்றுமொரு கூட்டத்தில் பேசினார்.

அவர் ஒரு கூட்டத்தில் பேசிக்கொண்டிருக்கும்போது அங்குள்ளவர்கள் எல்லோரும் 'நாஸி' க்கட்சி எண்ணங் களை யுடையவராகத் தென்பட்டார்கள். அவர் தன்னுடைய பிரசங்கத்தை முடித்தவுடன் சில பேர்கள் விதவிதமான கேள்விகளைக் கேட்டனர். "உங்களில் எவ்வளவு பேர்கள் ஜெர்மனிக்குச் சென்றிருக்கிறீர்கள்?" என்று நாயுடு கேள்வி கேட்டவர்களைத் திருப்பிக் கேட்டார். சிறிது நேரம் நிசப்தம் நிலவியது. "எனக்கு அந்த தேசத்திலுள்ள ஒவ்வொரு மூலை முடுக்கைப் பற்றியும் நன்றாகத் தெரியும்" என்று சொல்லி ஜனங் களை அவர்கள் கொண்டுள்ள எண்ணத்திலிருந்து திருப்ப முயன்றார். ஜனங்கள் அவ்வளவு பேரும் நாயுடுவை அப்படியே நம்பினார்கள். அவர்கள் ஹிட்லரின் கீழுள்ள ஜெர்மனியைப் பற்றிய எண்ணத்தையும் மாற்றிக்கொண்டு விட்டார்கள்.

டேவன்போர்டில் (Davenport) அவர் பத்து நாட்கள் சலனப்பட இயந்திர தொழிற்சாலை (Film Projector Factory) யைக் கவனிப்பதில் ஈடுபட்டார். "நான் இங்கு எவைகளைக் கண்டேனோ அவைகளையெல்லாம் நன்றாக ரசித்தேன்" என்று சொன்னார். ஒரு சமயம் அவர் இந்த ஊரில் தன்னுடைய இந்திய பாணியிலே உடைகளை அணிந்துகொண்டு வீதி வழியாகச் சென்று கொண்டிருக்கும்போது, சில அமெரிக்கச் சீமாட்டிகள், நாயுடுவைப் பார்த்தார்கள். அவர்கள் உடனே போலீசுக்கு, அரைகுறையாக ஆடை அணிந்த ஒரு ஆசாமி வீதி வழியாகப் போய்க் கொண்டிருக்கிறார், அவரை உடனே கைது செய்யுங்கள் என்று வேண்டிக்கொண்டார்கள். போலீசார் வந்து நாயுடுவைக் கைது செய்தார்கள். அவர்கள் நாயுடுவை ஜெயிலுக்கு அழைத்துச் செல்லும் போது நாயுடுவும் மௌனமாகவே அவர்களுடன் சென்றார். போலீசாரைப் பார்த்து இவர்கள் ஒரு கூட்டுக் கொள்ளை காரர்களோ என்று தமாஷாகக் கேட்டார். பின்பு உண்மையை அறிந்த போலீசார்களும், தங்களுடைய தவறை உணர்ந்து நாயுடுவிடத்தில் மன்னிப்புக்கோரி அவரை விட்டுவிட்டார்கள். சால்ட் லேக் நகரத்திலுள்ள ஒரு பத்திரிகை நிருபரிடத்தில் நாயுடு சொன்னார்:

> "......நம் ஜனங்கள் இந்த யுத்தத்தில் இங்கிலாந்து வெற்றி பெற விரும்புகிறார்கள். ஜெர்மனி, இத்தாலி, ஜப்பான் முதலிய தேசங்கள் மற்ற சிறிய நாடுகளை அழிக்கும் வேலையில் ஈடுபட்டிருப்பதால் நாம் அவைகளை வெறுக்கின்றோம்!"

செயின்ட் லூயியில் நாயுடு விளையாடவும் செய்தார்! ஒரு சமயம் அவர் சில நண்பர்களுடன் மிருகக் காட்சி சாலைக்குச் சென்றார். ஊர்வன இருக்கக்கூடிய கூண்டிற்கருகில் சென்று, ஒரு பாம்பை வசியப் படுத்தினார். இவர் ஒரு பக்கமாக நகர்ந்தால், பாம்பும் அதே பக்கமாக இவரையே பார்த்துக்கொண்டு நகர்ந்தது. அந்த பாம்பு அவரிடம் அடங்கி ஒடுங்குவதைக் கண்ணுற்ற அவருடைய அமெரிக்க நண்பர்கள் மிகவும் வியப் படைந்தார்கள்.

இந்தியாவில்கூட இன்றும் நாயுடு அவர்கள் தன்னுடைய வேலையாட்கள் எங்காவது பாம்பைக் கண்டால், அதைக் கொல்லக்கூடாது எனக் கட்டளை யிட்டிருக்கிறார். ஒரு சமயம் பாம்பு ஒன்று நாயுடுவி னுடைய ஆபீஸ் கட்டிடத்தில் புகுந்துவிட்டது. தொழிலாளிகள், பாம்பு எப்பொழுதும்போல மண் பானையை கொண்டு அதன் முன் வைத்ததும் அதற்குள் செல்லவில்லை என்று நாயுடு அவர்களுக்குச் சொல்லி அனுப்பினார்கள். விஷயமறிந்த நாயுடு தான் வரும் வரை பாம்பை ஒன்றும் செய்யவேண்டாமென்று போன் மூலம் சொல்லிவிட்டு உடனே அவ்விடத்திற்குச் சென்றார். ஒருவனை விட்டு பானையை அந்த பிடிவாதம் பிடித்த பாம்பின்முன் கொண்டுவைக்கச் சொன்னார். பாம்பும் பானைக்குள் பயத்தோடு புகுந்துக் கொண்டது. உடனே அதை அவ்விடத்தை விட்டு அகற்றிவிட்டார்கள்.

அநேக நாட்களாக நாயுடு அவர்களுக்கு வசியத்திலும், சம்மோகனத்திலும் (Hypnotism) மரண்ாந்தர விஞ்ஞானத்

திலும் (Spiritualism) அதிக சிரத்தை எடுத்துவந்தார். கானன் டாயல் (Conan Doyle) ஆலிவர் லாட்ஜ் (Oliver Lodge) இவர்களுடைய புத்தகங்களை இவர் முதலிலேயே படித்திருக்கிறார். அதிலுள்ள விளையாட்டுக்களையும் அவர் அவ்வப்போது கையாண்டிருக்கிறார். அவர் ஜோசிய சாஸ்திரத்தில் வல்லுனராயிருந்தார். ஆனால் அதைப் பொருத்துத்தான் மனிதனுடைய வாழ்க்கை நடக்கிறது என்பதை இவர் அறவே நம்பவில்லை. ஜோசியம்பார்ப்போர் யாவரும் மற்றவருடைய குறிப்பை அறிந்து அதன்படி மனம்போன போக்காகத்தான் சொல்லுகிறார்களே யல்லாது சாஸ்திரத்தில் சொல்லவில்லை என்பது அவரின் அபிப்பிராயம். ஒரு சமயம் சென்னையில், பனை ஓலைகளின்மூலம் தன் நண்பர் ஒருவருக்கு எதிர் காலத்தைப் பற்றிச் சொல்லிக்கொண்டிருக்கும் ஒரு ஜோசியரை, திடீரென்று நாயுடு குறுக்கிட்டு அதுவரைச் சொன்ன விஷயங்களைத் திருப்பிப் படிக்கச் சொன்னார்! ஜோசியர் திருப்பிப் படிக்க முடியாமல் விழித்தார். பனை ஓலைச் சுவடியிலிருந்து எதையும் தான் படிக்கவில்லை என்றும், தனக்கு உண்டான ஒருவித உணர்ச்சியின் வேகத்தினால் உதிர்த்த பாக்களே அவைகள் என்று உண்மையை ஒப்புக்கொண்டார்! இதேபோலத்தான் நாயுடு அவர்களும் அதிர்ஷ்டம் என்று சொல்லுவதை நம்புவது கிடையாது. எடிசன் ஒருமுறைச் சொன்னார், எல்லாக் காரியங்களும் நிறைவேறுவது 90 சதவிகிதம் கஷ்டப் படுவதினாலும், 10 சத விகிதம் மனிதனுக்கு ஏற்படும் ஒருவித உள்ளுணர்ச்சியாலும் என்று. ஆனால் நாயுடு அவர்கள் முழுவதும் உள்ளுணர்ச்சியால்தான் நிறை

வேறுகிறது என நம்பினார். ஒருவர் கஷ்டப்பட்டு வேலை செய்தால், அவர் வேண்டுவது கிடைக்கும். கிடைத்த பலன் திருப்திகரமாக இல்லையென்றால், அவர் அதை அடைய எடுத்துக்கொண்ட முயற்சிகள் சரியான வழியில் அல்ல என்று நாயுடு அவர்கள் சொன்னார்கள்.

1940-ஆம் வருஷம் புத்தாண்டு நாளன்று நாயுடு சிகாகோ நகரத்திலிருந்தார். அந்த நகரத்திலேயே உள்ள மிகக் கவுரவமான ஓட்டலில் தங்கியிருந்தார். அங்கு வித விதமானக் கொண்டாட்டங்கள் நடந்தன. குடிப்பதும், கூத்தாடுவதும், சப்தம் போடுவதும் வானைப் பிளந்தன. நாயுடு அவர்களும் அக்கூட்டத்தில் கலந்து கொண்ட போதிலும், குடிப்பதும், கூத்தாடுவதும் அவரை மகிழ்விக்கவில்லை! எப்பொழுது ஐரோப்பியப் பிரயாணம் ஆரம்பித்தாலும், ஒரு காகிதத்தில் 'மது, மாது, மாமிசம்' இவைகளை தான் தொடுவதில்லை என உறுதி மொழிகள் எழுதி அதைப் பத்திரமாக தன்னுடைய பையிலேயே வைத்திருப்பார். அந்த விடுதியில் அன்றிரவு அந்தக் காகிதத்தை எடுத்துப் பார்த்தார்! புத்தாண்டு களியாட்டத்திலே அவர் ஒரு பார்வையாளராக மட்டுமே இருந்தார். நடு இரவிற்குப் பின்புதான் அவரவர்கள் தங்கள் விடுதிக்குச் சென்றனர். நாயுடுவும் தன் விடுதிக்குச் சென்றார். இவர் தன் இடத்திற்குச் சென்று உட்கார்ந்தவுடன், கதவு தட்டப்பட்டது, கதவைத் திறந்து பார்த்தால், நான்கு அழகிய பெண்மணிகள் வாசலில் நின்றுகொண்டு உள்ளே வர முயன்றார்கள். அவர்கள் ஒரே குடியில் முழுகிப் போயிருந்தார்கள். அவர்கள் நாயுடுவின்மேல் கைகளைப் போட்டு, ஒருத்தி

இவரை முத்தமிடக்கூட முயன்றாளாம்! இவைகளை எல்லாம் அவர் மெதுவாகத் தடுத்துக்கொண்டு அவர்களை வெளியே தள்ளிக் கதவைத் தாளிட்டார். ஆனால் அவர்கள் மறுபடியும் திரும்பிவந்து மிகவும் பலமாகக் கதவைத் தட்டி திறந்துவிட்டார்கள்! இவருக்கோ எல்லாம் ஒரே ஆச்சரியமாகயிருந்தது. ஒருத்தி சொன்னாள் "நான் சொல்லுகிறேன் கேளுங்கள், என்னைப் பிடிக்காவிட்டால், என் சிநேகிதியை எடுத்துக் கொள்ளுங்கள்"! என்று. பிறகு எல்லாரும் இதையே சொன்னார்கள். முடிவாக குடி வெறியினால் ஒவ்வொரு வராகக் கீழே விழுந்து, அவருடைய அறையிலேயே தூங்கிவிட்டார்கள். இந்த வேடிக்கையைப் பார்த்துக் கொண்டு இரவு முழுவதும் விழித்துக்கொண்டேயிருந்தார் அவர். மறுநாள் அப் பெண்கள் நாயுடுவிடம் தாங்கள் குடி வெறியினால் முந்திய நாள் செய்த தவறை மன்னிக்கும் படியாய்க் கேட்டுக்கொண்டார்கள். நாயுடு மாத்திரம் திடமான மனதுள்ளவராக இல்லாவிட்டால் அன்றிரவு என்ன ஆவது! அவர்களில் ஒருத்தி பிற்பாடு நாயுடுவை மணந்துக்கொள்ள இன்னமும் தனக்கு விருப்பமிருப்ப தாக நயமாக ஒரு கடிதம் எழுதியிருந்தாள். அது நாயுடுவை மிகவும் ஆச்சரியத்துக் குள்ளாக்கியது. அமெரிக்கப் பெண்மணிகள் இந்தியாவிலிருந்து, இந்தியர் களுடைய பழக்க வழக்கங்களைக் கற்றுக்கொள்ளாமல், இந்தியரை மணக்க முன்வரக்கூடாது என்று அந்தக் கடிதத்திற்கு பதில் எழுதிவிட்டார்!

நாயுடு அவர்கள் அமெரிக்காவிற்கும் இந்தியாவிற்கும் இடையே நடத்திய கடிதப் போக்குவரத்து பெறுகிற்று.

அவர் அவ்வளவு கடிதங்களையும் எழுத முடியவில்லை. ஆகையால் ஒரு ஸ்டெனோ (steno) வை வாரம் 20 முதல் 30 டாலர்கள் வரை சம்பளத்திற்கு அமர்த்திக்கொண்டார். அவர் தனக்கு வேண்டிய மின்சார சாமான்களுக்கும், இயந்திரங்களுக்கும், அமெரிக்க வர்த்தகர்களிடம் ஆர்டர் கொடுத்துவந்தார். ஒவ்வொருநாளும் அப்படியே அவருடைய கடிதப் போக்குவரத்து அதிகமாயின. ஒரு சமயம் 'டைப்' அடிப்பதில் நேர்ந்த ஒரு சிறிய தப்பிதத்தால் 180 டாலர்களை இழக்க நேர்ந்தது! நாயுடுவுக்கே 'டைப்' அடிக்கத் தெரியும். இருந்தபோதிலும் ஒவ்வொன்றையும் அடிக்க அதிக நேரமானதினால், அவருடைய அரிய நேரத்தை வீணாக்க அவர் விரும்பவில்லை! ஆனால் அந்த அமெரிக்க 'டைப்' அடிக்கும் பெண், இந்தியப் பெயர்களை 'டைப்' அடிக்கும்போது அநேக வேடிக்கையான தப்பிதங்க்ள் ஏற்படும். அப்படி ஏற்பட்ட ஒரு பிழையுள்ள விலாசத்தை கீழே கொடுக்கப்பட்டிருக்கிறது.

"ரிடயர்ட் கம்யூனிஸ்ட்,
எக்ஸ்டென்ஷன், கோயமுத்தூர்!"

ஒரு சமயம் அவருக்கு ஒரு அமெரிக்க வியாபாரியிடமிருந்து கீழ்கண்டவாறு விலாசமிட்ட கடிதம் வந்தது:

"யுனைடெட் மோட்டார்ஸ், கோயமுத்தூர்,
ஜி. பி. நாயுடு,
ரூம், 855,
சிக்காகோ, இல்லினாயிஸ்"

செயின்ட் லூயியில்கூட மிகக் கஷ்டப்பட்டு வேலை செய்யும் நாயுடு அவர்கள், மிகவும் எளிமையான, முனிவர்

களின் ஆகாரத்தைப்போல, உணவை தினமும் உட்கொண்டார். ஒரு நண்பருக்குக் கீழ்வருமாறு கடிதம் எழுதினார்:

> "காலை, மத்தியானம், இரவு இந்த மூன்று வேளைகளிலும், தக்காளி ரசம் நான்கு அத்திப் பழம் இன்னும் ஒரு தானிய வகை இவைகளைத்தான் நான் உபயோகிக்கிறேன். காலையில் நான் சாப்பிட்டு வந்த தானிய வகை ஓட் மீல் (Oat Meal) அல்லது அவுல் (கார்ன் ப்ளேக்ஸ்) அல்லது அரிசிப்பொரி உணவு (Puffed rice). எனக்கு முட்டை சாப்பிடு வதில் ஒருவித தடையும் கிடையாது. ஓரளவு முட்டையும் பாலும் ஒன்று என நான் நினைக்கிறேன். ஆனால் இங்கு சமயல் செய்வோர் முட்டைக்கும் மாமிசத்திற்கும் ஒரே கரண்டியை உபயோகப் படுத்துவதால்தான் இவ்விடம் அதைச் சாப்பிடுவதற்கு நான் பயப்படுகிறேன்."

அங்கே சாப்பாட்டின் விலை ரொம்பவும் அதிகமாக இருந்தது. ஒரு கிளாஸ் தக்காளி ரசத்தின் விலை 30 சென்டுகள். அந்தப் பணத்திற்கு நமது இந்தியாவிலே இரண்டு நல்ல சாப்பாடுகள் கிடைக்கும் என்று அவர் ஒரு சமயம் சொன்னார்!

செயின்ட் லூயியிலும் மற்ற நகரங்களிலுமுள்ள பத்திரிகை ஆசிரியர்கள் அடிக்கடி நாயுடு அவர்களை பேட்டி கண்டு அவருடைய படத்தைத் தங்கள் பத்திரிகையில் முக்கியமாக தலையங்கத்தில் பிரசுரித்தார்கள். வியாபார ஸ்தலங்களைப் பார்வையிட்டதும், அலெக்ஸாண்டர்

விக்டர் (இவர்தான் 16 m. m. காமராவை கண்டுபிடித்தவர்) போன்ற பெரிய கண்டுபிடிப்பாளர்களை (Inventors) சந்தித்ததும், இவைகளையெல்லாம் பத்திரிகைக்காரர்கள் படம்பிடித்துத் தங்கள் பத்திரிகைகளில் பிரசுரித்தார்கள். "அமெரிக்கப் பெண்மணிகளின் உயரமான குதிகளை யுடைய ஜோடுகளையும், வர்ணம் பூசிய உதடுகளையும் கண்டு இந்துவின் கண்டனம்" என்ற தலைப்புக்களுடன் அநேகமாக எல்லாப் பத்திரிகைகளிலும் காணப்பட்டன. டெட்ராய்ட் நியூஸின் (Detroit News) நிருபரான ஜாக்ஸன் டி. ஹாக் (Jackson D. Hag) என்பவர் நாயுடுவை 1932-ல் பேட்டிகண்டு படங்கூட எடுத்துக்கொண்டார். 1940-ஆம் ஆண்டு நாயுடு மறு முறை அங்கு சென்றபோது அதே படம் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டிருந்தது. அதுமாத் திரம் அல்ல அவருடைய கதையை ஹாக் அவர்களே எழுதியிருந்தார்கள்.

அமெரிக்கப் பத்திரிகைகளில் வெளிவந்த விளம்பரங் கள் நாயுடுவை மிகவும் சங்கடத்திற் குள்ளாக்கியது. "பேட்டியளிப்பதைப் பற்றியும், விளம்பரத்தைப்பற்றியும் நான் கவலைப்பட வில்லை, பொதுவாகவே ஜனங்கள் விளம்பரத்தை விரும்புவார்கள். ஆனால் அமெரிக்கா விலோ, அதுமாதிரி ஏதாவது விளம்பரங்கள் பத்திரிகையில் வந்துவிட்டால் மிகவும் கஷ்டமாய்விடும். உடனே ஆண்களும், பெண்களும் விருந்து சாப்பாட்டிற்கு அழைத்துவிடுகிறார்கள்" என்று அவர் சொன்னார்.

இந்தத் தடவை அவருடைய அமெரிக்கப் பிரயாணத்தின்போது அவரே எதிர்பார்க்காத சில கஷ்டங்

களுக்கு ஆளானார். அவருடைய வயிற்றுவலி அங்கேயும் வந்துவிட்டது. கையிலோ பணத்தட்டு ஏற்பட்டது. யுத்தத்தின் காரணமாக இந்தியாவிலிருந்து அமெரிக்காவிற்கு அதிகத் தொகை அனுப்பமுடியாது போயிற்று. அவர் செயின்ட் லூயியிலிருக்கும்போது கோவையிலுள்ள அவர் ஆபீசிலிருந்து ஒரு தந்தி வந்தது. அவர்கள் கோவை இம்பீரியல் பாங்கியில் பத்தாயிரம் ரூபாய் நாயுடுவிற்கு அனுப்பும்படியாகக் கட்ட பாங்கார் பணத்தை ஏற்க மறுத்தனர் எனத் தந்தியிலிருந்தது. "இந்தத் தந்தியைக் கண்டதும் எனக்கு மிகவும் பயமாகப் போய்விட்டது. சில நாட்களுக்கு நான் என்னுடைய செலவுகளையெல்லாம் குறைத்துக்கொண்டேன். நான் வேறு ஒரு வியாபாரமும் செய்யவில்லை. அன்று வரையில் நான் அமெரிக்க வியாபாரிகளிடம் 10,000 டாலர்கள் பெறுமானமுள்ள சாமான்களைத்தான் பதிவு செய்திருந்தேன்" என்று நாயுடு அவர்கள் தன் இந்திய நண்பருக்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டிருந்தார்கள். அமெரிக்க வியாபாரிகள் இவருக்கு சாமான்களை சரசமான விலைக்குக் கொடுத்துதவினார்கள். இந்தியானாபோலிஸ் மெஷினரி கம்பெனிக்காரர்களும் (Indianopolis Machinery Company) மற்ற வியாபாரிகளும், நாயுடு சில மாதங்களில் இந்தியா திரும்பிய பிறகு அந்த சாமான்களுக்குப் பணம் கொடுத்தால் போதும் என்றார்கள்.

அப்பொழுது நியூயார்க்கில் இந்திய வியாபாரக் கமிஷனராயிருந்த மிஸ்டர் ஹெச். எஸ். மாலிக் என்பவரை அவர் போய் பார்த்தார். அவர் நாயுடு இந்தியாவிற்குத்

திரும்பிப் போகும் பிரயாணச் சிலவிற்கு மாத்திரம் தன்னால் இந்தியாவிலிருந்து பணம் தருவிக்க ஏற்பாடு செய்யமுடியுமென்று சொன்னார். அதற்குப் பிறகு விஷயங்கள் ஒருவாறாக சமாளிக்கப்பட்டன.

1940-ஆம் ஆண்டுக் கடைசியில் அவர் கிழக்கு மார்க்கமாக இந்தியா வந்தடைந்தார். கொச்சித் துறை முகத்தில் சுங்க அதிகாரிகள் நாயுடுவினுடைய 'மூட்டை முடிச்சு' களைச் சரிவரச் சோதனை போட ஐந்து நாட்கள் பிடித்தன. அவருடைய 37,000 கடிதங்களைப் படித்துப் படித்து ஆராய்வதற்கே அவர்களுக்கு முக்கால் வாசி நேரம் வீணாகியிருக்கும். அவர்கள் இப்படிச் சோதனைப் போட்டதும், காலதாமதப் படுத்தியதும் நாயுடு அவர்கள் ஒரு ஜெர்மன் உளவாளி என்ற ஒரு தப்பபிப்பிராயத்தினால்தான்! இந்தக் கதைகள் யாரோ அவருக்கு வேண்டாதவர்களும், போலீஸ் இலாகா உத்தியோகஸ்தர்களும் திரித்து விட்டிருக்கிறார்கள். பல நாட்கள் புளுகிக்கொண்டிருந்தவனுடைய உண்மை ஒரு நாள் தெரியத்தானே செய்யும்! அதுமாதிரியே இதுவும் அடியோடு அழிந்துவிட்டது!

❋

## IX

## அரசியல் வாதி அல்ல.

ஜி. டி. நாயுடு அவர்களின் விஞ்ஞான முன்னேற்றமும் தொழில் துறை முன்னேற்றமும் யுத்தத்தின் காரணமாக தடைப்பட்டன. அவர் தன்னுடைய இயந்திரத் தொழிலை விருத்தி செய்யவேண்டுமென்ற குறிக்கோளுடன் அமெரிக்காவிற்குச் சென்று பற்பல கஷ்டங்களுக்குள்ளாகி, பயின்ற பாடங்களெல்லாம் பாழாயின. அவர் போட்டுக்கொண்டு வந்திருந்த புதிய திட்டங்களெல்லாம் இடிந்துபோயின. அவர் சுத்தமாக வெளி நாடுகளுடன் தொடர்பு வைத்துக்கொள்ள முடியாமல் போய்விட்டது. சுற்றுப்பிரயாணத்திலிருந்து திரும்பியவுடன் அப்பொழுது இந்திய அரசாங்கத்தின் காமர்ஸ் மெம்பராக இருந்த சர் ஏ. இராமசாமி முதலியார் அவர்களுக்கு ஐந்து வால்வுகளைக்கொண்ட ரேடியோ பெட்டிகளை 70 ரூபாய் செலவில் இந்தியாவிலேயே தயாரிக்க முடியுமென்று நாயுடு கடிதம் எழுதினார். அது 1941-ஆம் வருஷம் மார்ச்சு மாதத்தில். அதே வருஷம் ஜுலை மாதத்தில் அவர் ஒரு ரேடியோ தொழிற்சாலையை கோவையிலேயே ஆரம்பித்தார். சர் ஆர். கே. ஷண்முகம் செட்டியாரவர்கள் திறப்பு விழாவை அமோகமாக நடத்திக்கொடுத்தார்கள். நாயுடு அவர்கள் மாதம் 300 ரேடியோப் பெட்டிகளை தயாரிக்க வேண்டுமென்று திட்டம் போட்டிருந்தார்கள். மறுபடியும் யுத்தத்தின்

காரணமாக அவரால் ஒன்றும் செய்யமுடியாமல் போய் விட்டது. எப்படி இருந்தபோதிலும் தொழிற்சாலையில் வேலை சுமாராக நடந்துகொண்டிருக்கிறது.

இதற்கிடையில் அவரால் ஆன உதவியை யுத்தத்தின் பொருட்டு கொடுக்க முன்வந்தார். அவர் இந்தியா திரும்பிய பிறகு, சுற்றுப் பிரயாணத்தின் போது அவர் அடைந்த அநுபவங்களையெல்லாம், கோவையிலே திவான்பகதூர் இரத்தின சபாபதி முதலியார் அவர்களைத் தலைவராகக்கொண்டு கூடிய ஒரு பெரிய பொதுக் கூட்டத்திலே சொன்னார். அவர் மேலும் "இந்த யுத்தத்திலே, ஆங்கிலேயர்களுக்கு நிறைய உதவி செய்யுங்கள். ஆங்கிலேயர்கள் இந்த யுத்தத்தில் எப்படியும் என்றாவது ஒரு நாள் வெற்றியைத்தான் அடைவார்கள்" என்று இப்படியெல்லாம் மன்றாடினார். ஊருக்கு உபதேசம் செய்கிறாரே; அவர் யுத்தத்திற்காக என்ன உதவியைச் செய்தார் என்று நமக்குக் கேட்கத் தோன்றுகிறதல்லவா! அவர் மாகாண யுத்த நிதி வசூலுக்கு தனது ஒத்துழைப்பைத் தெரிவிப்பதற்காக, அப்பொழுது சென்னை கவர்னராயிருந்த சர் ஆர்தர் ஹோப் அவர்களை தனது இல்லத்திற்கு அழைத்து ஒரு பெரிய தேநீர் விருந்து நடத்தினார். 1943-ஆம் ஆண்டு கவர்னரிடத்தில் யுத்த நிதியின் பொருட்டு ஒரு பெரிய தொகையை கொடுத்தார். பிறகு 1944-ஆம் வருஷத்திலும் யுத்த நிதிக்காக கொடுத்தார்.

அநேக இடங்களில் நாயுடுவினுடைய அரசியல் கொள்கைகளைப்பற்றி பேசப்பட்டு வருகின்றன. அவர் ஒரு தீவிர 'ஜஸ்டிஸ்' கட்சிக்காரர்; ஆகையால் பிராமணர்

களை வெறுக்கிறார் என்று சிலபேர்கள் தவறுதலாகச் சொல்லுகிறார்கள். இதைப்பற்றி அறிய ஆவல்கொண்டு நாயுடு அவர்களையே நான் நேரில் கேட்டபோது அவர் சொன்னார் "எனக்கு உலகத்தில் ஒரு குறிப்பிட்ட மனிதன் மீதோ; சமூகத்தின் மீதோ வெறுப்பு கிடையாது. என்னுடைய தொழில் ஆரம்பத்தின்போது எனக்கு சில பிராமணர்களிடம் வெறுப்பு ஏற்பட்டிருந்தது உண்மை. காரணம் என்னுடைய காரியாலயத்தில் வேலை பார்த்தவர் களில் இரண்டுபேர் பிராமணர். ஒருவரை நான் நம்பி எல்லா பொறுப்பையும் அவரிடம் கொடுத்ததற்காக ஒரு பெரிய தொகையை சதி மோசம் செய்துவிட்டார்; மற்றொருவர் அதுமாதிரியான கெட்ட செய்கையைச் செய்தாலும், என்னிடம் மன்னிப்புக் கோரியதால் அவரை மறுபடியும் வேலைக்கு வைத்துக்கொண்டேன் என்று அவர் சொன்னார். இரண்டாமுறை லண்டனுக்கு சென்றபோது நாயுடு அவர்கள் ஒரு சூட்டிப்பான பிராமணப் பையனைக் கண்டார். அவன் பலவித ஆல்லல்களுக்கிடையே தனது படிப்பை தொடரவேண்டியிருந்தது. நாயுடு அவர்கள் அவனுடைய ஏழ்மையை எண்ணி மனமுவந்து லண்டனில் கல்லூரிப் படிப்பு முடியும்வரை மாதம் பத்து பவுன் உபகாரச் சம்பளம் கொடுத்துவந்தார். இன்றைய தினம் அந்த இளைஞன் எம். எஸ். எம். ரயில்வேயில் ஒரு கௌரவமான உத்தியோகத்தில் இருக்கிறான்.

இரண்டு வருஷ காலம் நாயுடு அவர்கள் பழனி முனிசிபல் கௌன்சிலில் அங்கத்தினராக இருந்தார். கோவை முனிசிபல் கௌன்சிலிலும் — அவர் ஒரு அங்கத்தினர். 1936-ல் நடந்த மாகாணப் பொதுத்

தேர்தலில் நாயுடு அவர்கள் மதராஸ் லெஜிஸ்லேடிவ் கௌன்சிலில் கோயமுத்தூர் தொகுதிக்கு அபேக்ஷகராக நின்று ஒரு காங்கிரஸ்காரரால் தோற்கடிக்கப் பட்டார். இந்த தேர்தலில் நின்றதைப்பற்றி விவரம் கேட்டபோது பொப்பிலி ராஜாவிற்கு தான் கொடுத்த வாக்குறுதியினாலேயே, தேர்தலில் அபேக்ஷகனாக நிற்க நேர்ந்தது என்று சொன்னார். இந்த தேர்தலை முன்னின்று பொறுப்பேற்று நடத்தியவர்களின் நடத்தை களைப்பற்றி மக்கள் பலவாறாகப் பேசிக்கொண்டார்கள். ஏதோ 'வோட்'டுப் பெட்டிகளைக்கூட மாற்றி வைத்து விட்டதாகப் புரளி! மற்றவைகளெல்லாவற்றையும்விட இந்தத் தேர்தல்தான் நாயுடு அவர்களை ஒரு 'வோட்' பதிவு செய்யும் இயந்திரத்தைக் கண்டுபிடிக்கத் தூண்டியது. அந்த இயந்திரப் பெட்டியில் வோட் போட்டால் பித்தலாட்டம் செய்ய முடியாது. எலக்ஷ னில் அதிகம் செலவு செய்தார். ஒரு விஷயத்தில் ஊக்கம் செலுத்தினால் அதை முடிவு காணாது விடுபவர் நாயுடு அல்ல.

நீங்கள், நாயுடு அவர்கள் எந்த அரசியல் கொள்கை களை அதிகமாக ஆதரிப்பவர்கள் என்று அறிய அவா கொண்டீர்களானால்; நான் உங்களுக்கு ஒரே வார்த்தையில் சொல்லிவிடுகிறேன். அவர் ஒரு அரசியல் வாதியல்ல! அவர் ஒருபோதும் ஒரு அரசியல் கட்சியையும் சேர்ந்த வரல்ல. அவருடைய வாழ்க்கையின் குறிக்கோளெல்லாம் ஒரு தொழில் நிபுணராகவும், கண்டுபிடிப்பாளராகவும், அறிஞராகவும் திகழ்வதற்கே செலவிடப்படுகின்றன; செலவிடவும்பட்டன! அவர் அரசியல் துறையில் இறங்கி

அதன் வழியாக அநேக பட்டங்களையும், அந்தஸ்தையும் அடைய வேண்டும் என்று எப்போதுமே நினைத்தது கிடையாது. எந்தக் கொள்கைகள் அவர் மனதிற்கு நியாயம் என்று படுகிறதோ, அதை அவர் ஆதரித்தார். அதற்காக அவரை நாம், அந்தக் கொள்கைகள் எந்தக் கட்சியில் அனுஷ்டானத்தில் இருக்கிறதோ அந்தக் கட்சியை சேர்ந்தவர் என்று சொல்லிவிட முடியுமா? அவருடைய ஒவ்வொரு அணு இரத்தத்திலேயும், தான் புதிய பல கருவிகளைக் கண்டுபிடிக்கவேண்டும் என்றும், தான் ஒரு கண்டுபிடிப்பாளராகத் திகழவேண்டும் என்றும் எண்ணம் ஊறிக்கிடக்கும்போது, நமது தென் இந்தியாவில் தற்போது இருக்கும் அரசியல் கட்சிகளின் கஷ்ட நஷ்டங்களுக்கு உள்ளாக அவருடைய புரட்சி மனம் ஒருக்காலும் ஒப்பாது என்று நினைக்கிறேன். இந்த உண்மையை, தாமே தெரிந்துகொள்ளக்கூடிய அதி மேதாவியான நாயுடு அவர்கள் நாம் சொல்லித்தான் தெரிந்துகொள்ள வேண்டுமா? நாயுடு அவர்கள் எந்த ஒரு காரியத்தையும் நன்றாக ஆராய்ந்து அதனுடைய உண்மைகளை மனதிலே பதித்துவைத்திருந்தார். ஆகையால் எந்தக் காரியங்களானாலும் சரி, அவர் அவைகளைத் தானே தன் போக்கிற்கே, சரியாக செய்து முடிக்க ஆசைப்பட்டார்.

59-வது வயதில் அவர் எப்பொழுதும்போல தனது அலுவல்களைக் கவனித்துக்கொண்டிருக்கிறார். அவர் மிகவும் ஆர்வத்தோடு உழைக்கிறார். அவர் ஆர்வத்தோடு உழைத்த உழைப்பு விழலுக்கிறைத்த நீர்போலல்லாமல், எல்லா மக்களுக்கும் தேசத்திற்கும் மிகவும் பயன் படு

கின்றது. பணமோ அவர் வாழ்கைக்கு போதுமானதாக இருக்கிறது. ஒழுக்கமோ அவரிடமே அடைக்கலம் புகுந்திருக்கிறது. எண்ணங்களோ அவருடைய மனதிலிருந்து நையாக்ரா நதியின் நீர்வீழ்ச்சிபோல கொட்டிக் கொண்டிருக்கிறது. அப்படிக் கொட்டிக்கொண்டிருக்கிற எண்ணங்களோ, இந்தியாவை தொழிற் துறையிலே வெற்றிகரமான மாறுதலைச் செய்வதாக இருக்கிறது, என்ற இந்தக் கனவுடன்தான் தூங்கி அவர் தினமும் படுக்கையைவிட்டெழுவது!

நாயுடு அவர்கள் சிகாகோவில் ஷெர்மான் ஹோட்டலில் தங்கியிருக்கும்போது, வார்னர் எலெக்டிரிக் கம்பெனி (Warner Electric Company) யின் உப தலைவரான எப். ட்ராபர் (F. Draper) என்னும் ஒரு அமெரிக்க வியாபாரி அவருக்கு ஒரு கடிதம் எழுதினார். அதில் ஒரு பகுதி நம்முடைய கவனத்தைக் கவருவதாயிருக்கிறது:

"......உங்கள் வருகையை நான் எவ்வளவு போற்றுகிறேன் என்பதை உங்களுக்குத் தெரிவிக்க இந்தச் சந்தர்ப்பத்தை உபயோகப்படுத்திக்கொள்ளுகிறேன். உங்களோடு நான் கழித்த நேரம் என் வாழ்நாளிலேயே மிகவும் பயன்தரத் தக்கவை. அதை நான் உங்களிடமிருந்து அதிகமதிகமாய் கற்றுக்கொள்வதற்குக் கிடைத்த ஒரு அரிய சந்தர்ப்பமாகவும் கருதுகிறேன். உங்கள் வாழ்க்கை முறையை ஓரளவுக்கேனும் பின்பற்றுவதற்கான வலிமை எனக்குக் கிடைக்கவேண்டுமென்பதே என்னுடைய அவா."

"நான் படித்தறிவதற்குச் சில புத்தகங்கள் கொடுப்பதாகச் சொன்னீர்கள். அதைப்பற்றி உங்களிடமிருந்து தகவல் வருமென்று நம்புகிறேன். ஒருக்கால் நீங்கள் தாய்நாடு திரும்பியவுடன் அவைகளை அனுப்பிவைக்கலாம் என்று இருக்கிறீர்கள் போலும். நான் ஏன் இப்படியெல்லாம் நினைக்கிறேன் என்று கேட்டால், வாழ்க்கையை, உயரிய ஒழுக்கங்களையும், நோக்கங்களையும் அடிப்படையாகக்கொண்டு ஆரம்பிக்கப்பட்ட உங்களைப் போலுள்ள அதிமேதாவிகள் பொய் வாக்குக் கொடுப்பதற்குத் தகுதியுடையவர்களாகமாட்டார்களன்றோ!"

"அதை ஞாபகப்படுத்துவதற்காக எழுதுகிறேன் என்று தயவு செய்து கருதிவிடவேண்டாம். உங்கள் தொழில்முறைக்காக மட்டுமல்லாமல், உங்கள் தேசத்து மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்காக, எவ்வளவு சுறுசுறுப்புடன் இரவு பகலாய் வேலை செய்துவருகிறீர்கள் என்பதை நான் நன்கு உணர்வேன்.

"உங்கள் திரும்புகால் பிரயாணத்தை சுகமாக முடித்துக்கொண்டு இந்தியாவை அடைந்தபின், உலக முழுவதிலும் உங்களன்பிற்குப் பாத்திரப்பட்ட பல்லாயிரக் கணக்கான நண்பர்களில் என்னையும் ஒருவனாக மதிக்குமாறும் அதன் ஞாபகார்த்தமாக ஏதாவது ஒரு ஞாபகச் சின்னம் அனுப்ப வேண்டுமாறும் கோருகிறேன்.

# X

## அரசாங்கத்திற்கு எதிராக தனி ஒரு மனிதர்

அரசியல் நிர்ணய சபை அங்கத்தினர்களில் ஒரு சில விஷமிகளின் சதியால், ஆர். கே. ஷண்முகம் செட்டியாரவர்கள் தன்னுடைய வேலையை இராஜினாமா செய்யும்படியாக ஆயிற்று. நிதி மந்திரி நம் நாயுடு அவர்களுக்குச் சாதகமாக அவருடைய பெயரையே "வருமான வரியை அமுக்குகிறவர்கள்" (Tax Dodgers) என்று சர்க்காரால் தீர்மானிக்கப்பட்டுள்ள ஒரு சிலர் களடங்கிய ஜாபிதாவிலிருந்து எடுத்துவிட்டதாக அவர்கள் ஒரு வதந்தியைக் கிளப்பிவிட்டார்கள். அப்படித்தான் கிளப்பிவிட்டார்களே அதையாவது ஒரு ஆதாரத்துடன் செய்தார்களா! அதுவுமில்லை! நாயுடு அவர்களின் வருமான வரி பிரச்னைகளெல்லாம் நிரம்பவும் பழைய காலத்தவை. அதாவது வரதாச்சாரி வருமான வரி கமிஷன் நியமனமாவதற்கு முன்பே உண்டானவை. இன்று இந்தியாவின் பல பாகங்களிலிருந்து ஜனங்கள் "யார் இந்த நாயுடு?" என்று கேட்கிறார்கள். இதோ பதில் தருகிறேன். சுமார் 30 வருஷங்களுக்கு முன்பாக நாயுடு அவர்கள் ஒரு சாதாரண பஸ் டிரைவர். அப்பொழுது அவருக்கு கல்வி ஞானம் கிடையாது. தன்னுடைய பிற்கால வாழ்வில் தனக்கு இப்படிப்பட்ட பாக்கியங்களெல்லாம் கிட்டும் என்பதைக்கூட அவர் அப்போது

நினைத்தாரில்லை. ஆனால் 30 வருஷங்களுக்கு பிற்பாடு என்ன? 1946-இல் சென்னை கவர்னராயிருந்த சர் ஆர்தர் ஹோப், நாயுடுவை ஏற்கும்படி கொடுத்த நைட்ஹூட் (Nighthood) பட்டத்தை மறுக்கக்கூடிய மனோதைரியம் வந்தது! காரணம்? நாயுடு அவர்கள் எந்த ஒரு காரியத்தையும் நடை முறையில் செய்து காட்டக்கூடியவர். தவிற, அவர் சாதாரண எளிய பொது மக்களிலிருந்து விலகி, தனி மதிப்புடன் வாழக்கூடியவர் அல்ல. அவரது எண்ணமெல்லாம் 'பெரிய மனிதர்' ஹோதாவிலில்லாமல், 'ஊருடன் கூடி வாழ்' என்ற பழமொழிக்கேற்ப இருந்தது. ஆகையால் அவர் தன் பெயருக்கு முன்னால் ஒரு 'சர்'ரையோ வேறு எந்த அடைமொழிகளையுமோ போட்டுக்கொள்ள விரும்ப வில்லை என்றால் ஒன்றும் ஆச்சரியமில்லையல்லவா!

இப்படியெல்லாம் கண்ணியமாக நடந்துக்கொள்ளும் நாயுடு அவர்களை எப்படி 'வருமான வரியை அமுக்கு கிறவர்' என்று சொல்ல முடியும்? அவைகளெல்லாம் ஒரு பெரிய ருசிகரமான கதை. அந்த கதை பல குட்டிக் கதைகளைக்கொண்ட முழுதும் தீறச் செயல்கள் நிரம்பிய ஒரு நாடகம் என்றே சொல்லலாம். நாயுடு அவர்கள் கோயமுத்தூர் டவுனில் ஏறக்குறைய எழு மோட்டார் கம்பெனிகளின் 'மானேஜிங் ஏஜென்டாக' இருந்திருக்கிறார். 1945-ஆம் ஆண்டில் அவர் தன்னுடைய வியாபாரத்திலிருந்து விலகி ஓய்வு எடுத்துக் கொள்ள விரும்புவதாகச் சொன்னார். அவர் ஒரு சமயம் பத்திரிகை நிருபர்களிடம் பேசிக்கொண்டிருக்கும்போது குறிப்பிட்டது என்னவென்றால் "நான் என்னுடைய

வாழ் நாளில் முதல் 25 வருஷங்களில் பல விஷயங்களை எவ்வளவு கற்றுக்கொள்ள முடியுமோ அவ்வளவையும் கற்க ஒதுக்கிவைத்திருந்தேன். அடுத்த 25 வருஷங்களில் நான் எவ்வளவு பொருள் சம்பாதிக்க முடியுமோ அவ்வளவையும் சம்பாதிக்க ஒதுக்கிவைத்திருந்தேன். மூன்றாவது 25 வருஷங்களை மக்களின் நல் வாழ்வின் பொருட்டு, நான் அடைந்த ஆராய்ச்சி அநுபவங்களையும், சம்பாதித்த பொருள்களையும், செலவிட்டு அவர்களை சீர்திருத்த எண்ணங் கொண்டிருக்கிறேன்." அந்த எண்ணங் கொண்டுதான் நாயுடு அவர்கள் "ஆர்தர் ஹோப் இன்ஜினீரிங் காலேஜை (Arthur Hope College of Technology) ஆரம்பிப்பதற்கும், ஆர்தர் ஹோப் பாலிடெக்னிக் (Arthur Hope Polytechnic) கை ஆரம்பிப்பதற்கும் நிறைய பொருளுதவி செய்தார். அதோடுகூட ஆந்திரா யுனிவர்ஸிடிக்கும், மதராஸ் யுனிவர்ஸிடிக்கும், ஸ்ரீ இராமகிருஷ்ணா வித்யாலய நிதிக்கும் இன்னும் அநேக தரும ஸ்தாபனங்களுக்கும் நிறைய பொருளுதவி செய்திருக்கிறார். இவ்வளவு ஜனோபகார செய்கைகளையும் கண்டு, அப்பொழுது சென்னை கவர்னராக இருந்த ஆர்தர் ஹோப் அவர்கள், நம் நாயுடு அவர்களை இந்தியாவின் நப்பீல்டு பிரபு (Lord Nuffields of India) என்று பட்டப் பெயரிட்டு அழைத்தார்கள்.

இப்பொழுதுதான் இந்திய அரசாங்கம் தம்முடைய கூர்மையான பார்வையை நேர்மையான நாயுடு அவர்களின் மேல் செலுத்திற்று. அப்படி நாயுடு ஒரு நப்பீல்டு பிரபுவாக இருந்தால் அவருடைய சொத்து எவ்வளவு இருக்க வேண்டும்? அவருடைய சம்பாத்தியம் எவ்வளவு

இருந்திருக்கும்? அவர் எவ்வளவு வரி செலுத்தியிருக்கிறார்? எவ்வளவு பணம் பாங்கியில் போட்டுவைத்திருக்கிறார்? இப்படியெல்லாம் எண்ணக் கோட்டைகளை எழுப்பிக்கொண்டு கோவை வருமான வரி உத்தியோகஸ்தர்கள் ஒவ்வொருவரும் இதே கேள்விகளைத் தனக்குத் தானே கேட்டுக்கொள்ள ஆரம்பித்தனர்.

ஜனோபகாரத்தின் பொருட்டு அவ்வளவு பெரிய தொகையை செலவிட பணம் எங்கிருந்து கிடைத்தது என்று நான் ஒரு சமயம் கேட்டபோது நாயுடு இந்த பதில் சொன்னார்:

> "1945-ஆம் ஆண்டிற்குள்ளாகவே நான் மானேஜிங் ஏஜென்டாக இருந்த எல்லா கம்பெனிகளிலிருந்தும் விலகி அதில் எனக்கிருந்த பங்குகளையும் விற்றுவிட்டேன். அந்தக் கம்பெனிகளில் நான் ஆதியில் போட்ட 100 ரூபாய் பங்குகள் ஒவ்வொன்றும், நான் அவைகளை விற்கும் சமயத்தில் 300 ரூபாய் மதிப்பிற்கு ஏறிற்று. இம்மாதிரி வழிகளில் சம்பாதித்த பணம் பூராவையும் தருமக் கைங்கரியங்களின் பொருட்டு பகிர்ந்துக் கொடுத்துவிட்டேன்".

இதுதான் நாயுடு அவர்களுடைய சுருக்கமான பதில். அது எவ்வளவுதான் உண்மையாக இருந்தபோதிலும் வருமான வரி உத்தியோகஸ்தர்கள் 'தான் பிடித்த முயலுக்கு மூன்றே கால்' என்றுதான் சாதிக்கிறார்கள். நாயுடு தன்னுடைய போக்குவரத்து கம்பெனிகளின் மூலியமாக சம்பாதித்த உண்மை வருமானத்தை அமுக்கி

விட்டார் என்று ஒருதலைப் பட்சமாய் சாதித்தார்கள். அப்படித் தன்பேரில் சாட்டப்படுகின்ற பொய் குற்றத்தை எதிர்த்து நிற்கிறார் நம் நாயுடு.

"என்னுடைய கம்பெனிகளில் டிக்கட்டுகள் மிஷின்கள் மூலியமாகவே வழங்கப்படுகின்றன. ஆனால் இன்றைய தினம் மற்ற கம்பெனிகளில் கண்டக்டர் டிக்கட் கொடுக்கும்போது பிரயாணிக்குக் கொடுப்பதில் உண்மையானக் கட்டணத்தையும் அதன் நகலில் குறைவான கட்டணத்தையும் எழுதிக்கொள்ளக் கூடும். ஆகையால் எங்கள் கம்பெனிகளில் டிக்கட் நகல்களை வைத்துக்கொண்டு ஏமாற்ற முடியாது. விஷயம் இப்படியாக் இருக்கும் போது என்னை எப்படி உண்மையான வருமானத்தை அமுக்குகிறவர் என்று சொல்ல முடியும்?" என்று அவர் என்னைக் கேட்டார்.

இந்த சமயத்தில்தான், அதாவது 1945-ஆம் ஆண்டு கோவைக்கு வருமான வரி ஆபீசராக ஸ்ரீ முத்துகிருஷ்ண ஐயர் வந்தார். அவர் கோவைக்குப் பக்கத்து ஜில்லாவான சேலத்திலிருந்து மாற்றப்பட்டுவந்தவர். நம் நாயுடு அவர்களின் பேரிலும், அவருடைய போக்குவரத்து ஸ்தாபனங்களின் பேரிலும் ஒரு லக்கு வைத்திருந்தார்.

நாயுடு அவர்கள் தன் சம்பந்தப்பட்ட கம்பெனிகளின் வரிகளை 1946-ஆம் ஆண்டு மார்ச் மாதம் முடிய முழுவதையும் கட்டிவிட்டார். வருமான வரி ஆபீசர் எந்த வரி விதித்திருந்தாரோ அவைகளாவையும் ஒரு பைசாகூட விடாமல் கட்டிவிட்டார். ஆனால்




கண்டக்டர் கையாளும் இயந்திரம். அச்சு அடித்துக் கணக்கும் போட்டுக்கொண்டு டிக்கட்டையும் கொடுக்கக்கூடியது




ஆபீசில் பஸ்கள் வரும் நேரத்தையும், போகும் நேரத்தையும்
கணக்கிடக்கூடிய இயந்திரம்

முத்துகிருஷ்ண ஐயர் கோவைக்கு வருமான வரி உத்தியோகஸ்தராக வந்த ஆரம்பத்திலேயே நாயுடு அவர்களுடைய ஸ்தாபனங்களின் கணக்குப் புஸ்தகங் களையெல்லாம் மறுபடியும் பரிசோதனை செய்வதற்காக தாக்கல் செய்யப்படவேண்டுமென்று கட்டளையிட்டார்; இதற்கேற்ப, தொழில் விஞ்ஞானியாகிய நாயுடுவை, இந்திய நப்பீல்டு பிரபு என்று கவர்னரவர்கள் என்றைய தினம் புகழ்மாலை சூட்டினாரோ, சில விரோதிகள் சமயம் பார்த்துக்கொண்டிருந்து என்றையதினம் சதி செய்ய நினைத்தார்களோ, அதுவும் கோயமுத்தூரில் அநேகம் பொறாமைக்காரர்கள் இவருடைய சுயேச்சை வாழ்க்கை யையும், அடங்காப்பிடாரித் தனத்தையும் நினைத்து பாமர ஜனங்களின் நன் மதிப்பை சுலபமாய் சம்பாதிக்க விரும்பாதிருந்தும் வீர புருஷர் என்று யாரும் புகழுமாறு பிரசாரம் செய்து கொள்ளாமலிருப்பதையும் கண்டார் களோ அன்று அதாவது இந்த சந்தர்ப்பத்தை வருமான வரி அதிகாரிகள் உபயோகித்துக்கொண்டார்கள்.

முத்துகிருஷ்ண ஐயர் நாயுடு அவர்களுடைய போக்குவரத்து ஸ்தாபனங்களின் வரவு செலவுக் கணக்குகளை தாக்கல் செய்ய சொன்னபோது நாயுடுவி னுடைய பங்களாவின் ஒரு பாகம் எதிர்பாராத விதமாக நெருப்புப் பற்றிக்கொண்டு எரிந்தது. இந்த சந்தர்ப்பத் தைச் சரியாய் பயன்படுத்திக்கொள்ள எண்ணி நாயுடுவின் விரோதிகள், வருமான வரி அதிகாரியிடம், வருமான வரி சம்பந்தமாகவுள்ள முக்கியமான புஸ்தகங்களெல்லாம் எரிந்துவிட்டன என்று சொன்னார்கள். முத்துகிருஷ்ண ஐயரும் அதுதான் சரியான சந்தர்ப்பம் என்று மனம்

பூரித்து எதெது எரிந்துபோய்விட்டது என்று சொன்னார்களோ, அவைகளையெல்லாம் உடனே நாயுடு தாக்கல் செய்யவேண்டுமென்று கர்ஜித்தார். ஆனால் அவரே ஆச்சரியப்படக்கூடிய அளவில் நாயுடு, கோரிய எல்லா புஸ்தகங்களையும் தாக்கல் செய்தார். முத்து கிருஷ்ண ஐயருக்கோ, தான் தன்னுடைய முயற்சியில் தோற்றுவிட்டோமே என்று ஆத்திரம் கொண்டார். முத்துகிருஷ்ண ஐயர் நாயுடுவின் சில விரோதிகளின் பேச்சைக் கேட்டுக்கொண்டு அவரிடம் காரணமில்லாமல் அநியாயமாக நடந்துக்கொள்ளுகிறார் என்பதை அறிந்த வுடன், நாயுடுவும் அவரிடத்தில் கொஞ்சம் ஜாக்கிரதை யாகவே நடந்துகொண்டார்.

முத்துகிருஷ்ண ஐயரோ கண்ணில் விளக்கெண்ணை யைப் போட்டுக்கொண்டு, நாயுடுவின் கணக்கில் எங்கே தப்பிதம் கிடைக்கும் என்று 'கொட்டக்கொட்ட' விழித்து விடிய விடியப் பார்த்தார். இதற்கேற்றார்போல ஒரு சம்பவமும் நடந்தது. நாயுடு அவர்கள், அவருடைய நண்பரொருவருக்கு 35,000 ரூபாய் கொடுத்திருந்தார். ஆனால் அந்த நண்பரோ தன்னுடைய கணக்குப் புஸ்தகத்தில் 12,000 ரூபாய்தான் வந்ததாகப் பதிவு செய்துகொண்டிருந்தார். முத்துகிருஷ்ண ஐயர் நாயுடுவின் புஸ்தகத்திலுள்ள இந்த ஒரு பதிவையே சுட்டிக் காண் பித்தார். நாயுடுவையோ அல்லது அவருடைய கணக்குப் புஸ்தகத்தையோ நம்பவில்லை. தனக்கு 12,000 ரூபாய் தான் வந்தது என்றுப் பதிவு செய்துகொண்டாரே ஒரு நண்பர் அவரைத்தான் பூரணமாக நம்பினார்! இதுதான்

யுத்த காண்டத்தின் ஆரம்பப் படலம்! நாயுடு அவர்கள் இவைகளின் பொருட்டு ஒரு சிறிதேனும் கவலைப் பட்டதாகவே தெரியவில்லை.

பெருந்தன்மை வாய்ந்த ஸ்ரீமான் முத்துகிருஷ்ண ஐயரவர்கள், மற்றும் அநேக பழைய புஸ்தகங்களையும் தாக்கல் செய்யச்சொல்லி, தயாள மனப்பான்மையோடு, பழைய தீர்ந்துபோன விஷயங்களையெல்லாம் ஆராய்ந்து நாயுடு சம்பாதித்தது இவ்வளவு என்றும், அதற்கு இவ்வளவு வரி போடலாமென்றும் தன்னிச்சையாக, மனம் போனபடி உத்திரவிட்டார். அதுமாதிரியாக அவர் கணக்குப்போட்டு 1941-ஆம் வருஷத்திலிருந்து விதித்த வரித் தொகை 24 லட்சம்! இது நாயுடு அவர்கள் ஏற்கனவே கட்டிவிட்டத் தொகைபோக புதியதாக இஷ்டம் போல் போட்டத் தொகை.

நாயுடு அவர்கள் 'இது அநியாயம்' என்று எதிர்த்தார். பயனில்லை! மேல் அதிகாரிகளுக்கு அப்பீல் செய்து கொண்டார். இந்திய அரசாங்கத்தை அண்டி "இது நியாயமா?" என்றும் கேட்டார். ரொம்பவும் கடுமையாக டில்லி வருமான வரி போர்டாருக்கு தந்திமேல் தந்தியாகக் கொடுத்தார். இவைகளுக்கெல்லாம் 1946-ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் அங்கிருந்து பின்வருமாறு ஒரு பதில் வந்தது. "போர்டார் இதில் தலையிட காரணம் ஒன்றும் இருப்பதாகத் தெரியவில்லை." இந்திய அரசாங்கத்தார் தன்னுடைய கீழ் உத்தியோகஸ்தர், அவர்களின் நடத்தை எப்படியிருந்தபோதிலும், ஒவ்வொரு விஷயத்திலும் எதைச் சொல்லுகிறார்களோ அதையே 'வேதவாக்கென'

நம்புகிறார்கள். ஆனால் பொதுஜனங்களில் நிரம்பவும் கண்ணியமாக உள்ள ஒருவர் எந்த உண்மையை எடுத்துச் சொன்னாலும் அது "ஏழை வாக்கு அம்பலத்திற்கேறாது" என்ற பழமொழிக்கேற்பவே இருக்கிறது. இதைப் போலவே, நாயுடு அவர்களும், மேலிடத்து அதிகாரிகளிட மிருந்து ஆதரவான பதிலை அடையவில்லை என்றால் அதில் ஒன்றும் ஆச்சரியமில்லை.

எல்லாவற்றிற்கும் மேலாக நாயுடு விரும்பியது தன்னுடைய 'கேஸை' முத்துகிருஷ்ண ஐயரைத் தவிர்த்து வேறு யாராவது ஒரு உத்தியோகஸ்தர் பரிசீலனை செய்து நியாயம் வழங்கவேண்டும் என்பதுதான். முத்துகிருஷ்ண ஐயர் தனக்கு நேர் எதிரியாக இருக்கிறார்! அவர் வேண்டுமென்றேதான் தனக்கு மாத்திரம் சரியான தீர்ப்புக் கூறவில்லை என்பது நாயுடு அவர்களின் கருத்து. ஆனால் அரசாங்கம் அவருடைய அவாவை பூர்த்தி செய்தார்களா? அதுவுமில்லை! நாயுடு அவர்களின் கருத்திற்கே அவர்கள் ஒத்துவரவில்லை!

"ஒருதலைப்பட்சமாகத் தீர்ப்பளிக்காத எந்த ஒரு நியாயஸ்தலத்திலாவது இந்த முத்துகிருஷ்ண ஐயரைத் தவிர வேறு யாராவது ஒரு உத்தியோகஸ்தர் எனக்கு 'மரண தண்டனை' விதித்தாலும்கூட, நான் அதைச் சந்தோஷமாக ஏற்றுக்கொள்ளுவேன்'' என்று நாயுடு மேலிடத்திலுள்ள வருமான வரி உத்தியோகஸ்தர்களுடன் விவாதித்தார்.

ஆனால் இந்திய அரசாங்கம், வருஷா வருஷம் ஏறக்குறைய $2\frac{1}{2}$ லட்ச ரூபாய்களை வரியாக அநேக




New Oldsmobile car disabled before attachment

17

வருமான வரி பாக்கிக்காக நாயுடுவின் சொத்துக்களை ஜப்தி செய்வதற்கு முன்பு புத்தம் புதிய இந்த 'ஓல்ட்ஸ்மோபைல்' கார் பாழாக்கப்பட்டது




Valuable properties of G. D. Naidu being attached and taken by the Revenue Inspector of Coimbatore and the Village Headman on 23—7—'48

விலையுயர்ந்த நாயுடுவின் சொத்துக்களை கோவை கிராம மணியக்காரரும், ரெவின்யூ இன்ஸ்பெக்டரும் 23-7-48-ல் ஜப்தி செய்கிறார்கள்

வருஷங்கள் செலுத்திய நம் நாயுடுவை நம்பாமல், மாதம் 800 ரூபாய் சம்பளம் வாங்கும் ஒரு அற்ப வருமான வரி உத்தியோகஸ்தரைத்தானே பூரணமாக நம்பிற்று! என்ன அரசாங்க முறை இது? "இந்த சர்க்காருக்குக் கொடுப்பதைக் காட்டிலும் சும்மாயிருக்கலாம். நான் இனி ஒரு பைசாகூட வருமான வரியின் பேரால் கொடுக்க மாட்டேன்! எதுவந்தாலும் வரட்டும் கவலையில்லை!" என்று ஒரு பிரதிக்ஞையை செய்துகொண்டார் நம் நாயுடு அவர்கள்.

பிறகு முத்துகிருஷ்ண ஐயர் என்ற ஒரு சாதாரண வருமான வரி உத்தியோகஸ்தரின், தயாள (கொடுமை) மனப்பான்மையினால் விதிக்கப்பட்ட, வரியான 35 லட்ச ரூபாய்களை ஈடுசெய்யும்பொருட்டு, நாயுடு அவர்களின் சொந்த சொத்துக்களை அரசாங்கத்தார் ஜப்தி செய்தார்கள். புரட்சி வீரரான நாயுடு அவர்கள் "என்னை சரியாக நடத்தவில்லை, எனக்குச் சரியான நீதி வழங்கப்படவில்லை"! என்று தன்னால் முடிந்த மட்டும் எதிர்த்து நின்றார்! ஆனால் ஒருவரும் உதவி செய்வாரில்லை. ஒருவேளை இந்திய அரசாங்கத்தாரின் தீர்மானங்கள் அசைக்கமுடியாதவைகளோ தெரியவில்லை! நாயுடு அவர்கள் தனக்கு வழங்கிய நியாயம் ஒருதலைப் பட்சமானது என்று சொல்லுவதை கவனிக்கக்கூடிய நிலையில் அப்பொழுது அரசாங்கத்தார்கள் இருந்ததாகத் தெரியவில்லை!.

இந்திய அரசாங்கம் நாயுடுவினுடைய சொந்த சொத்துக்களை ஜப்தி செய்யும்போது, அவர் சென்னை

வருமான வரி கமிஷனரிடத்தில், தான் தன்னுடைய கேஸைப்பற்றி மேலிடத்தில் நியாயம் வழங்கும்படி அப்பீல் செய்துக்கொண்டிருப்பதாயும் அதன் முடிவு இன்னும் தெரியவில்லை என்றும் அதுவரை ஜப்தியை ஒத்திவைக்க வேண்டுமென்றும் தெரிவித்தார். மேலும் அப்படி அவர்களுக்கு நாயுடுவின்மேல் நம்பிக்கையில்லை யென்றால் இம்பீரியல் பாங்கை தனக்காக ஜாமீன் கொடுக்கும்படி செய்கிறேன் என்றும் தெரிவித்தார். ஆனால் அந்த 'கமிஷனர்' இந்த உபகாரத்தையும்கூட நாயுடுவிற்குச் செய்ய மனம் இரங்கவில்லை! கோவை வருமான வரி உத்தியோகஸ்தர் நாயுடுவை அவரிடமுள்ள சில லட்சங்கள் பொறுமான இந்திய கவர்ன்மெண்டு பாண்டுகளை வேண்டுமானால் ஜாமீனாகக் கட்டலாம் என்று தெரிவித்திருந்தார். நாயுடுவின் மனம் மறுபடியும் புரட்சி மார்க்கத்திலிறங்கியது. இப்பொழுது அவருக்கு மனோ திடம் முன்பு இருந்ததையெல்லாம்விட மிகவும் அதிகமாகவே இருந்தது. இந்திய அரசாங்கத்தின் சாதாரண வருமான வரி உத்தியோகஸ்தர்களின் கட்டளைக்குக் கீழ்படிந்து நடக்கக்கூடிய அப்பேர்ப்பட்ட தாழ்ந்த இனத்தைச் சேர்ந்தவரல்ல, நம் நாயுடு! அவர் உடனே என்ன செய்தார் தெரியுமா? தன்னிடமுள்ள அநேக லட்சங்கள் பொறுமானமுள்ள கவர்மெண்டு 'பாண்டு'களை, கோவையில் நூற்றுக்கணக்கான ஏழையில் தொழிலாளிகளுக்குப் பிரித்துக் கொடுத்துவிட்டார்!

"நான் என் தேசத்திலுள்ள ஏழைப் பாட்டாளி மக்களுக்குத்தான் என்னுடைய சொத்தையெல்லாம் கொடுப்பேனேயொழிய, ஒரு குற்றமும் செய்யாத

என்னைக் கழுத்தைத் திருகி பழிவாங்க நினைக்கும் இந்த அநீதி நிரம்பிய அரசாங்கத்திற்கு ஒரு பைசாகூட கொடுக்கமாட்டேன்" என்று அவர் தீர்மானம் செய்துவிட்டார்.

பிறகு பாங்கியிலிருந்து நிறைய பணத்தையெடுத்து அந்தப் பணத்தையெல்லாம் அவர் ஒரு சமயம் நடத்திய அந்தப் பெரிய போக்குவரத்து ஸ்தாபனத்தின் உண்மைத் தொழிலாளிகளுக்குப் பிரித்துக் கொடுத்துவிட்டார். அப்போது அவர் சொன்னார்:

"என்னுடைய ஏழைத் தொழிலாளிகள் எனது வருஷக்கணக்கான உழைப்பின் பலனை அனுபவித்து ஆனந்தமாக இருக்கட்டும். இந்த அரசாங்கத்திற்கு நான் ஒரு பைசாகூட கொடுக்கமாட்டேன்".

இதுமாதிரி செய்ததினால் கொஞ்ச காலத்திற்குள் ஆயிரக்கணக்கான ஜனங்கள் இவரை ஒரு வீரர் என்று மதிக்கும்படியாய்விட்டது. இவைகளெல்லாம் செய்வதற்கு முன்பே, நாயுடு அவர்களை தென் இந்தியாவில் அறியாதவர்கள் ஒருவருமில்லை.

இப்படிப்பட்ட ஒரு இனத்தைச் சேர்ந்த மனிதரான நாயுடு, இப்பொழுது இப்படியெல்லாம் நடந்துகொள்ளுகிறாரே, அவருடைய மனோ நிலைதான் என்ன? கோத்தி (Gothe) என்னும் ஒரு ஜெர்மானிய அறிவாளி சொல்லியிருக்கிறார்: 'ஜனங்கள் புரட்சி செய்தால் அது எப்போதும் நியாயமாகத்தான் இருக்கும்.' ஆகவே இப்பொழுது சொல்லுங்கள் நாயுடு அவர்கள் செய்வது

சரியா? தப்பா? என்னால் இரண்டையும் சொல்ல முடியவில்லை. அருமை வாசகர்களே! நீங்கள் தீர்ப்புக் கூறுங்கள். நான் இதுவரை எழுதிய உண்மையான கதையின் சாரங்களை பகுத்தறிவைக்கொண்டு அலசிப் பாருங்கள். அப்பொழுது தெரியுமல்லவா உங்களுக்கு நாயுடு செய்வது சரியா, தப்பா என்று.

கோவை நகரவாசியாகிய இந்த நாயுடு அவர்கள் சாதாரண ஒரு பஸ் டிரைவராகயிருந்து, தன்னுடைய முயற்சியினால் பெரிய தனவானாகி, ஜனோபகாரியாக மாறியவர். அல்லும் பகலும் உழைத்துழைத்து உறமேறியது அவர் உடம்பு. அப்படி வாழ்க்கையிலே வெற்றியைக்கண்ட ஒரு மனிதர் இந்திய அரசாங்கத்தின் ஒரு சாதாரண வருமானவரி உத்தியோகஸ்தரால் நசுக்கப் படுகிறார் என்றால் நாம் என்னத்தைச் சொல்லுவது! நியாயத்தை அடையவேண்டுமென்று அவர் கொண்ட ஆசையை அளவிட முடியாது. தன்னை அநியாயமாக வருமான வரி உத்தியோகஸ்தர்கள் கழுத்தையறுக் கிறார்கள் என்பதை நினைத்து அவர் அடைந்த வருத்தத் திற்கும் அளவே கிடையாது. இது அவருடைய வாழ்க்கையுடனே தோன்றியது. அவர் இதன் பொருட்டு தன் உயிரே போயினும் கடைசிவரை போராட உறுதி கொண்டவர். அதனால் அவரது பொன்னான வாழ்க்கையைக் கேவலம் ஒரு அநியாயத்தின் பொருட்டா வீணாக்குவது? அப்படியில்லையென்றால் அவர் என் தன்னுடைய நடத்தைகளில் இப்படிக் கடூரமாகக் காணப் படுகிறார்? நாயுடுவின் வாழ்க்கையைப்பற்றி சிரத்தை எடுத்துக்கொள்ள வேண்டுமென்ற எண்ணம் இந்த கவர்ன்மெண்டுக்கு என் ஏற்படப்போகிறது?

இந்த முத்துகிருஷ்ண ஐயர் என்பவர் யார் தெரியுமா? அவர் சேலத்தில் வருமான வரி உத்தியோகஸ்தராய் இருந்தவர். அப்பொழுது அவர் லஞ்சம் வாங்கினார் என்று அவர் பேரில் நான்கு 'பெட்டிஷன்கள்' இருந்தது உங்களுக்குத் தெரியுமல்லவா! அதைப்பற்றி அவர்கள் ஏதாவது விசாரணை செய்தார்களா? செய்யவில்லை என்று சொல்லுகிறீர்களோ! அப்பொழுது அந்த நான்கு 'பெட்டிஷன்களின்' கதிதான் என்னவாயிற்று? ஓஹோ! அதை வருமான வரி இலாகாவிலேயே அமுக்கிவிட்டார்களா! அப்போது, அவர் கோவையில் வருமான வரி உத்தியோகஸ்தராயிருந்தபோது வாரம் தவறாமல் சென்னை சென்று வந்தாரே அதன் மர்மம்தான் என்ன?

மேலும், முத்துகிருஷ்ண ஐயருக்குக் காது செவிடு அல்லவா? அவர் காதில் ஒரு கருவியை வைத்துக் கொள்ளாவிட்டால், ஒன்றையும் அவரால் கேட்க முடியாதல்லவா? இந்த ஒரு காரணத்தாலேயே யார் அவரிடம் விசாரணையின் பொருட்டு வருகிறார்களோ அவர்களின் உறுதிமொழிகளைக்கூட சரியாகப் பதிந்துக் கொள்ள முடியாது! இந்த மனிதரின் உண்மைகளை எல்லாம், எப்பொழுதாவது இந்த அரசாங்கம் விசாரிக்க வேண்டுமென்று நினைத்ததா? அப்படியில்லை என்றால் ஒருவேளை அரசாங்கம் அவருடைய வேலைத் திறனைக் கண்டு திருப்தி அடைந்துவிட்டதா? அல்லது அவர் மிகவும் நேர்மையானவர் என்ற எண்ணம் எழும்பிவிட்டதா?

எல்லாவற்றிற்கும் மேலாக, சஞ்சலமடைந்த நாயுடு அவர்கள், ஒருதலைப்பட்சமாகத் தீர்ப்புக் கூறாத ஒரு

நியாயஸ்தலத்தை ஏற்படுத்தி அதில் தன்னுடைய கேசை விசாரித்தால் மிகவும் அனுகூலமாயிருக்கும் என்று விடுத்த வேண்டுகோளை நிறைவேற்ற வேண்டியது நம் அரசாங்கத்தின் கடமையல்லவா? கண்மூடி கட்டிய குதிரை எப்படி பக்கவாட்டில் திரும்பிப் பார்க்க முடியாதோ, அதுமாதிரி அரசாங்கத்தார் நாயுடுவின் கேசைப்பற்றி கொண்டுள்ள அபிப்பிராயம் மாறாமலிருக்கிறது! இதை நான் சொல்லவேண்டியதில்லை. ஒரு அநாகரீக படிப்பறிவு இல்லாத பாமரன்கூட நியாயம் என்று ஒருக்காலும் ஒத்துக் கொள்ளமாட்டான். மேலும் நாயுடு அவர்கள் பாரபட்சமற்ற நீதிஸ்தலத்திலே சரியானபடி விசாரணை செய்யாமல், 'வருமான வரியை அமுக்குகிறவர்' என்ற பெயரை உலகம் பூராவும் அறியும்படி செய்யப்பட்டுவிட்டார். என்னே கொடுமை!

நாயுடு அவர்கள் எதைச் சொல்லுகிறாரோ அதை உண்மையென்று நான் உங்களுக்குச் சொல்லவரவில்லை. ஆனால் நாயுடு அவர்கள் தனக்கு நியாயமான நீதி வழங்கப்படவேண்டுமென்று கேட்டபோது கவர்ன்மெண்டார் மறுத்ததின் மர்மம் என்ன? அதாவது முத்துகிருஷ்ண ஐயரிலிருந்து அவருக்குப் பின் வந்த உத்தியோகஸ்தர்கள் எல்லோருக்குள்ளும், நாயுடுவைப் பழி தீர்த்து நசுக்கவேண்டுமென்ற எண்ணம் எழும்பி ஒரு சதியாலோசனை நடந்திருக்கிறதென்பது இதனால் நிதர்சனமாகிறதல்லவா?

அது போனால் போகட்டும் இன்னுமொரு கேள்வி கேட்போம். அப்படி முத்துகிருஷ்ண ஐயர் சரியாக

இருந்தால், அவர்தான் அரசாங்கத்திற்கு நாயுடுவிடம் மறு வரி விதித்து 35 லட்ச ரூபாய் ஆதாயம் செய்துவைத்தாரே அதற்காகவேனும் அரசாங்கம் அவருக்கு உடனே பெரிய உத்தியோகத்தைக் கொடுக்கக் கூடாதா? அந்த உயர்வு அவருக்கு நிரம்பகாலம் கொடுக்கப்படவேயில்லை! காரணமென்ன? ஒருவேளை முத்துகிருஷ்ண ஐயரே தான் ஒரு யோக்யதையினால் பெரிய பதவியை அடைய வேண்டுமென்று விரும்பவில்லையா? சந்தர்ப்பங்கள் இப்படியிருக்கும்போது நாயுடு அவர்களின் பேரில் ஒருதலைப்பட்சமாகச் சாட்டப்பட்ட குற்றத்தைப்பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

முத்துகிருஷ்ண ஐயர், நாயுடு அவர்களின் கணக்கு களை மறுபடியும் பரிசோதனை செய்து விதித்த வருமானவரி நியாயமானதாயும், நீதியுள்ளதாயுமிருந்தால், முத்துகிருஷ்ண ஐயருக்கு முன்பு 1941-இல் இருந்து 1945 வரையில் கோவையிலேயிருந்த வருமானவரி உத்தியோகஸ்தர்களெல்லாம் நாயுடுவினுடைய கணக்குப் புஸ்தகங்களை சரியாகப் பரிசீலனை செய்யவில்லை என்றுதானே அர்த்தம். அப்படித் தன் கடமையைச் சரிவர செய்யத் தவறிய உத்தியோதஸ்தர்களின்மீது நம் அரசாங்கத்தார் நடவடிக்கை எடுக்கவேண்டியது அவர்கள் கடமையல்லவா? ஏன் அவர்கள் ஒருவர் மீதாவது இன்றுவரை ஒருவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை? அவர்கள் எல்லோரும் அநியாயமாக நடந்து, முத்துகிருஷ்ண ஐயர் மாத்திரம் நியாயமாக நடந்தாரா? இல்லை! இல்லை! இந்தக் கதை முழுவதும் முற்றிலும் மாயம்! உண்மையாயும் பாரபட்சமில்லாமலும்

சர்வ ஜாக்கிரதையாகக் கவனித்து எந்தத் தீர்ப்புச் செய்தாலும் அதைப்பற்றி எவரும் குறைகூற முடியாது. அப்படியிருக்க நாயுடு விஷயத்தில் ஏன் இந்த அநீதி நடந்திருக்கிறது?

நாயுடு அவர்கள் ஒரு சாதாரண மனிதரல்ல. சென்னை அரசாங்கத்தின் காங்கிரஸ் மந்திரிகள் அநேகம் தடவைகள் நாயுடுவின் ஜாகைக்கு விஜயம் செய்து, அவருடனேயே உண்டு களித்து அவருக்கு நிரம்ப மரியாதை கொடுக்கிறார்கள். அமெரிக்கா, ஐரோப்பா முதலிய இடங்களிலிருந்து பார்வையாளர்கள் (Visitors) தென் இந்தியாவில் சுற்றுப் பிரயாணம் செய்தால், நாயுடு அவர்களைப் பார்க்காமல் செல்லவேமாட்டார்கள். உலகத்திலுள்ள அவருடைய ஆயிரக்கணக்கான நணபர்கள் அரசாங்கத்தாரால் நம் நாயுடு அவர்களுக்கு இன்னும் என்னென்ன நேரிடுமோ என்று கண்ணும் கருத்துமாகக் கவனித்து வருகிறார்கள்.

*

# XI

## விளையாட்டுப் பையன்

நாயுடு அவர்களுக்கு வாழ்க்கையே ஒரு சந்தோஷகரமான நாடகம். அவரிடம் மனோதிடமும், திரேக வலுவும் நிறைய காணப்பட்டன. ஆகையால் எந்த ஒரு காரியத்தை எடுத்துக்கொண்டாலும் அதை எப்படியும் நிறைவேற்றலாம் என்ற அசைக்க முடியாத உறுதியைக் கொண்டவர். ஒரு நாள் நானும் அவரும் உட்கார்ந்து கொண்டு இரவு 2-மணி வரையில் பேசிக்கொண்டிருந்தோம். காலையில் நான் ஆறு மணிக்கு எழுந்தபோது, நாயுடு அவர்கள் தன்னுடைய காலை ஆகாரத்தை முடித்துக் கொண்டு, அவருடைய அலுவல்களைக் கவனிக்கக் கிளம்பிவிட்டார். அப்பொழுது அவர் புன்னகை பூத்த முகத்தினராய் ஒரு இளம் வாலிபரைப்போலத் தோற்ற மளித்தார். களைப்பு என்பதை அவர் அறியவேமாட்டார். ஏதாவது ஓய்வு எடுத்துக்கொள்ள இஷ்டமா என்றால் அதுவும் கிடையவே கிடையாது! கடுமையான வேலையையும் கனிவுடன் வரவேற்பார். தன் வாழ்நாள் பூராவும் உழைத்துக்கொண்டு இருக்கப்போகிறதாகவே அவர் சொல்லுகிறார். எவ்வளவு கடுமையாக வேலைசெய்யும்போதும், கடுகடுத்த முகம் கிடையாது. காய்ந்துவிழும் இனத்தைச் சேர்ந்தவரோ என்று நினைத் தால், அவர் வாயிலிருந்து விழும் ஒவ்வொரு சொற்களிலும் நகைச்சுவை ததும்பும். நாயுடு அவர்களிடையே காணப் படும் இவ்வளவு சிறந்த குணங்களும் நம் தென் இந்தியர்

களுக்கு ஒருங்கே அமையப்பெற்றிருப்பது மிகவும் அரிது. இந்த மேதாவியை சிலர் ஒரு விளையாட்டுப் பையன் என்றுகூடக் கருதுகிறார்கள். ஆம். அவர் தன் நண்பர்களிடத்தில் எப்பொழுதும் விளையாட்டாகத்தான் கேலி செய்கிறார். ஆனால் இந்த விளையாட்டுகள் ஒருவருக்கும் வினையாய் முடியுமளவுக்கு விடமாட்டார்.

ஒரு நாள் நாயுடு அவர்கள், அவருடைய நண்பர் திவான் பகதூர் சி. எஸ். இரத்தினசபாபதி முதலியார் அவர்கள் தேநீர் விருந்திற்கு எல்லோரையும் அழைப்பதாக நகரவாசிகளுக்கு 'அழைப்பிதழ்' அனுப்பிவிட்டார். முதலியார் அவர்களுக்கு, நாயுடு அவர்கள் செய்திருப்பதைப்பற்றி ஒன்றுமே தெரியாது. அழைப்பிற்கிணங்க மாலையில் முதலியார் அவர்களின் பங்களாவில் திரளான கூட்டம் கூடிவிட்டது. நம் நாயுடு அவர்களும் சென்றிருந்தார்கள். வெளியிலிருந்து திரும்பிய முதலியாரவர்கள், தன்னுடைய பங்களாவில் கோவை பிரமுகர்கள் கூடி நிற்பதைக்கண்டார். எல்லோரும் ஒரு விருந்துக்குச் செல்லுகிற தோரணையிலே உடையணிந்து நிற்கிறார்களே! இங்கே என்ன விசேஷம் என்று வியப்படைந்தார். விசாரித்ததில் அவர்கள் அவருடைய அன்பான அழைப்பிற்கிணங்கவே வந்ததாகச் சொன்னார்கள். முதலியாரவர்களோ எல்லையில்லா ஆச்சரியமடைந்தார்கள். இந்த விளையாட்டை முதலியாரவர்கள் சரியாகச் செய்யவில்லை என்று விருந்தினர்களுக்கு நாயுடு அப்பொழுதுதான் சொன்னார். பிறகு, எல்லா விருந்தினர்களையும் நாயுடு தன் இல்லத்திற்கு அழைத்துச் சென்றார், அங்கே முன்னேற்பாடாகவே தேநீர் தயார் செய்து வைக்கப்பட்டிருந்தது! விருந்தும் சந்தோஷமாக நடைபெற்றது!

ஸ்ரீ வெள்ளிங்கிரி கவுண்டர் விஷயத்திலும் ஒரு சமயம் இந்தமாதிரி நடந்துகொண்டிருக்கிறார். கவுண்டர் ஒரு சமயம் ஜில்லா போர்டு தலைவராக தேர்தலில் நின்ற போது, ஜனங்கள் அவர் மிகவும் வல்லமை வாய்ந்தவர்; அவருக்குப் போட்டியாக ஒருவரும் அந்த ஸ்தானத்தை அடைய முடியாது என்று பேசிக்கொண்டனர். அதற்கு அடுத்து நடந்த தேர்தலில், நாயுடு அவர்கள் வேண்டு மென்றே விளையாட்டிற்காக, கவுண்டருக்கு எதிராக ஒருவரை நிற்கச் செய்தார். முன்பு நடந்த தேர்தலில் கவுண்டர் அடைந்த ஆதரவு இந்தத் தேர்தலில் அவருக்குக் கிடைக்கவில்லை. அவருடைய நிலைமை கொஞ்சம் ஆட்டங் கண்டது. இந்தத் தேர்தலில் கவுண்டருக்கும், அவருக்குப் போட்டியாக நின்றவருக்கும் சமமாகவே 'வோட்டு' கள் கிடைத்தன. மூன்று வருஷங்களுக்குப் பிறகு நாயுடு அவர்களால் ஜில்லாபோர்டு தலைவராக நிறுத்தப்பட்ட ஒருவர் ஜயித்தார். கவுண்டர் ஒரு காங்கிரஸ்காரர். அப்பொழுது சென்னை சர்க்காரும் காங்கிரஸ் ஆட்சியின்கீழ்தானிருந்தது. இவ்வளவு தூரம் நாயுடு அவர்கள் செய்தது பூராவும், கவுண்டருக்கு இடையூறு செய்யவேண்டுமென்ற ஒரு கெட்ட எண்ணத் தினாலல்ல. அவர் ஒரு விளையாட்டுப் பிரியர்தானே! ஆகையால் வேடிக்கையாக விளையாடினார்.

1936-ல் திவான்பகதூர் சி. எஸ். இரத்தினசபாபதி முதலியார், சில கோவை காங்கிரஸ்காரர்களின் வேண்டு கோளுக்கிணங்க தன்னுடைய 'திவான்பகதூர்' பட்டத்தை அரசாங்கத்தாருக்கு வாபஸ் செய்துவிட்டார். லெட்டர் பேப்பரில் ( letter heads ) கூட பட்டத்தை நீக்கியே தன் பெயரை அச்சு அடித்துக்கொண்டார்! நாயுடு

முதலியாருடைய வீட்டிற்கு நடந்து சென்றார். பிறகு தன் வீட்டிற்கு அழைத்தார். அவருக்கு ஒரு பெரிய விருந்து அளித்தார். பின்பு முதலியாரை கேட்டார் "நீங்கள் அநேக வருஷங்கள் மக்களுக்குச் செய்த உபகாரத்தின் பயனாகவும், உழைப்பின் பயனாகவும் அடைந்த அந்த பட்டப்பெயரை புறக்கணிக்க உங்களுக்கு எப்படி அவ்வளவு சீக்கிரத்தில் மனம் வந்தது?" நாயுடு அவர்களுக்கு முதலியார் மிகவும் நல்ல மனிதர், அவர் தன்னுடைய ஒரு சில நண்பர்களை சந்தோஷப்படுத்தவே தன் 'பட்டத்தை' உதறிவிட்டார் என்பது நன்றாகத் தெரியும். அவர் சம்பந்தமில்லாத இந்த விஷயத்தில் தலையிட்ட காரணம் என்னவென்பீர்கள்! நாயுடு விரும்பியது முதலியார் அவர்களின் 'பட்டம்' திருப்பிக் கொடுக்கப்பட வேண்டும் என்பதே. அதற்குப் பிறகுகூட முதலியாரவர்கள் சி. பி. இ. (C. B. E.) என்னும் 'பட்டத்'தையும் அடைந்தார்கள்.

1944-ஆம் ஆண்டு நாயுடு அவர்கள் தன்னுடைய பெண்ணுக்கு கோவையில் கலியாணம் செய்தார். கலியாண வைபவத்தில் சென்னை கவர்னர் சர். ஆர்தர் ஹோப்பும் கலந்துகொண்டார். கலியாணம் மிகவும் சாதாரண முறையிலே சிக்கனமாக செய்விக்கப்பட்டது. இந்தத் திருமணச் சடங்கை நடத்தப் புரோகிதர் ஒருவரும் இல்லை. அப்பொழுதிருந்த கஷ்ட நிலைமையின் காரணமாக மணமகன் ஸ்ரீ பாலகிருஷ்ணனும், மணமகள் ஸ்ரீமதி சரோஜினியுமே, தங்கள் வாழ்க்கை ஒப்பந்தத்தை சாதாரண முறையிலே நடத்த விரும்பினார்கள் — அதன் படியே நடந்தது. மோதிரத்தையும், மாலையையும் ஒருவருக்கொருவர் மாற்றிக்கொண்டு, கணவன் – மனைவி ஆனார்கள்.

அன்றையதினம் பலர் சொற்பொழிவாற்றினார்கள். கவர்னர் அவர்கள் சிறிது நேரம்பேசிய பிறகு, ஆங்கிலத்தில் வழங்கப்படும் ஒரு கருத்துள்ள சிறு கதையை எடுத்துச் சொன்னார்கள். "ஒரு ஆணும் பெண்ணும் மணந்துக் கொள்ளும்போது, அவர்கள் ஒருவருக்கொருவர், அவர்களுடைய வாழ்க்கையைப் பொருத்து எந்தத் தீர்மானம் செய்வதாயிருந்தாலும், பெரிய விஷயங்களை கணவனுக்கே கொடுக்கப்படவேண்டும் சிறிய விஷயங்களை மனைவிக்கு ஒதுக்கிவிடப்படவேண்டும் என்று உடன்படிக்கை செய்துக்கொண்டார்களாம்". கவர்னர் அவர்கள் சிரித்த முகத்துடன் தமாஷாகவே தனக்குக் கலியாணமாகி நெடுநாளாகியும் தான் ஒரு பெரிய தீர்மானத்தையாவது செய்வதற்கு சந்தர்ப்பம் ஏற்படவில்லை என்று சொன்னார்!

நாயுடு அவர்களுடைய நண்பர்கள், அவர் கலியாணத்தில் கையாண்ட சிக்கனத்தைப் பார்த்து ஆச்சரியமடைந்தார்கள். வருபவர்களுக்கு விருந்து கிடையாது. 'மேள தாள' முழக்கம் கிடையாது. கலியாணத்திற்கு வரும் நண்பர்களுக்கு சம்பிரதாயத்துக்காக தேங்காயாவது கொடுக்கப்பட வேண்டுமென்று சிலர் நாயுடுவிடம் சொன்னார்கள். அதற்குப் பதிலாக மாங்காயும், கற்கண்டும் ஏன் கொடுக்கக்கூடாது என்று அவர் எதிர்த்து கேட்டார். இந்த விஷயங்களிலெல்லாம், அவருடைய மூளை இந்த விதமாகத்தான் வேலை செய்யும். கடைசியாக அவர் நினைத்தபடியே மாம்பழமும், கற்கண்டுமே எல்லோருக்கும் வழங்கப்பட்டது!

1927-ல் ரங்கநாயகி அம்மாள் என்பவரை, நாயுடு இரண்டாந்தாரமாக மணந்துக்கொண்டார். அவருடைய

முதல்தாரத்திற்கு இரண்டு பெண்கள் இருக்கிறார்கள். அவர்களிருவருக்கும் மணமாகிவிட்டது. இரண்டாந் தாரத்திற்கு 9 வயதுள்ள ஒரு பையன் இருக்கிறான். எப்பொழுதும் சிரித்த முகத்துடனேயே இருக்கும் தனயனுக்கு தகப்பனார் அடிக்கடி வேடிக்கைக் காட்டுவார். 'கோபால் பாக்' பங்களாவை பார்க்க செல்லும் ஒவ்வொருவரும், தெலுங்கும் தமிழும் நன்றாகப் பேசத் தெரிந்த இந்தப் பையனைப் பார்த்து சந்தோஷமடைகிறார்கள். நாயுடு அவர்கள் தன்னுடைய குடும்பத்தினருடன் தெலுங்கில் பேசினாலும், தன் தாய் மொழி தமிழ் என்றே சொல்லுகிறார். அவர் குடும்ப வாழ்க்கையை கவனித்தால், உறவினர்கள் அவருடன் சகஜமாக இருப்பது தெரியும். ஒரு நாள் அவர் தன்னுடைய மருமகனோடு சகஜமாக, ஒரு இளம் நண்பரைப்போல பாவித்து, பேசிக்கொண்டிருப்பதைக் கண்டேன். இவ்வளவு சகஜமாகப் பழகும் அந்த மனிதருக்கு ஒருவரும் மரியாதை கொடுத்து அடங்கி நடக்கமாட்டார்களே என்று நினைக்கலாம். ஆனால் ஒவ்வொருவரும் அவரிடம் சிறந்த மரியாதையுடனேயே நடந்துக்கொள்ளுகிறார்கள். அந்த மரியாதை அவர்களிடம் இயற்கையாக இருந்தாலும், எல்லோரும் தனக்கு அடங்கி மரியாதையாக நடக்க வேண்டுமென்ற எண்ணங்கொண்டவரல்ல. இதேமாதிரி தான் கோவை நகரவாசிகளும். அவரைக்கண்டு அஞ்சுவார்கள் சிலர், அன்பொழுகப் பேசுவார்கள் சிலர். வெறுப்பார்கள் சிலர் விரும்பி அழைப்பார்கள் சிலர், பொதுவாக அந்த நகரவாசிகள் தன்னை நன்றாய் அறிந்து கொள்ளும்படி நடந்துகொள்ளுகிறார்.

❋

# XII

## ஜனோபகாரி

வாஷிங்டன் போஸ்டு என்னும் பத்திரிகையின் சொந்தக்காரரும், யூதர்களிலேயே பெரிய பணக்காரரு மான பிரசித்திபெற்ற அமெரிக்கன் யூஜின் மேயர் (American Eugene Mayor) என்பவரைப் பற்றி என்ன சொல்லப்படுகிறது தெரியுமா? அவர் யேல் (Yale) நகரத்தில் படித்துப் பட்டம் பெறுவதற்கு முன்னமேயே தன்னுடைய பிற்கால வாழ்வை வகுத்துக் கொண்டாராம்! அவரது படிப்பிற்குப் பிறகு முதல் 20 வருஷங்களை பணம் சம்பாதிப்பதற்காகவும் அடுத்த 20 வருஷங்களை பொதுஜனத் தொண்டின் பொருட்டும் மூன்றாவது 20 வருஷங்களை எல்லாவற்றிலிருந்தும் விடுபட்டு நிம்மதியாக வாழ்வதன் பொருட்டும் வகுத்துக்கொண்டார். அதைப் போலவே நாயுடு அவர்களும் தன் வாழ்வை வகுத்துக் கொண்டார் என்பதை முந்திய அத்தியாயத்தில் பார்த்தோம். அதற்கேற்ப அவர் தன்னுடைய 50-வது வயதில், தான் நடத்திவந்த பெரிய மோட்டார் கம்பெனியிலிருந்து விலகிக்கொள்ள நினைத்தார். இந்த செய்தி 1944-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 9-ஆம் தேதி தெரிவிக்கப்பட்டது.

அன்றைய தினம் அவர் சென்னை கவர்னரை கோவைக்கு வரவேற்று அவருடன் தேநீர் அருந்தினார். கவர்னர் தமது புதல்வியையும் கோவைக்கு அழைத்து

வந்திருந்தார். கோபால் பாக்கில் நடந்த தேநீர் விருந்தில் அநேக பிரசித்திபெற்ற பிரமுகர்களெல்லாம் கலந்து கொண்டார்கள்.

விருந்துண்டபிறகு நாயுடு அவர்கள், கவர்னர் அவருடைய அழைப்பிற்கு அன்பாக இணங்கி வந்ததிற்காகவும், அவருடைய மகளையும் கூட அழைத்து வந்ததின் பொருட்டும் தன் நன்றியைத் தெரிவிப்பதற்காக எழுந்து ஒரு விரிவான சொற்பொழிவு ஆற்றினார். அதை அழகாகவும், ஆணித்தரமாகவும் பேசினார். அவர் பேசிக் கொண்டு வருகையில், தன்னைப் பற்றியும், தன்னுடைய அலுவல்களைப் பற்றியும், எப்படி மோட்டார் தொழிலை மிகச் சிறியதாக ஆரம்பித்து, இன்றைய தினம் கியாதியுடன் விளங்கக்கூடிய அளவுக்கு வந்தது என்பதைப்பற்றியும் குறிப்பிட்டார். மேலும் அன்றைய தினத்திலிருந்து அந்த கம்பெனிகளில் தனக்கிருந்த நிர்வாக அலுவல்களையெல்லாம் வெவ்வேறு பொறுப்பானவர்களிடம் ஒப்படைத்துவிட்டதாகவும் தெரிவித்தார்.

இந்த சம்பவத்தைக் குறித்து, கவர்னரிடத்தில் தன்னுடைய ஒத்துழைப்பை மாகாண கவர்னர் வார்பண்டு (Provincial Governor's War Fund) க்குத் தெரிவிப்பதற்காக, லட்சத்துப் பத்தாயிரம் ரூபாய்க்கு நாயுடு அவர்கள் ஒரு 'செக்' எழுதிக் கொடுத்தார்கள். அரசாங்கத்திற்கு கடனாகவும் பத்து லட்சம் ரூபாய்க்கு கவர்ன்மெண்டு பாண்டுகள் வாங்கி வைத்திருப்பதாயும், அதிலிருந்து வரக்கூடிய வருமானத்தை சிறந்தது என்று கருதிய பற்பல மக்களின் நல்வாழ்வின் பொருட்டு செலவு செய்யப்

படவேண்டுமென்றும் அவ்விடத்திலேயே தெரிவித்தார். அவருடைய மோட்டார் தொழிலாளிகளின் க்ஷேமங்களைக் குறித்தும், மாகாண தொழிலாளர்களின் க்ஷேமங்களைக் குறித்தும், தாழ்த்தப்பட்ட வகுப்பாரை உயர்த்தி சீர்திருத்தும் பணியில் ஈடுபடுவதின் பொருட்டும், இம் மாகாணத்திலுள்ள தாழ்த்தப்பட்டவர்களை விருத்தி செய்வதற்கு ஒரு செய்தித்தாள் ஆரம்பிப்பதின் பொருட்டும், இன்னும் அவர் ஜனோபகாரத்திற்காகச் செய்த தருமங்களையெல்லாமும் அவைகளுக்காக ஒதுக்கப் பட்ட பணத்தையும் தெரிவித்தார். ரேடியோ தொழிலிலும், மோட்டார் தொழிலிலும் புதிய கருவிகளைக் கண்டுபிடிப்பவர்களுக்கு உபகாரச் சம்பளம் கொடுப்பதற்காகவும், பச்சையப்பன் கல்லூரி, இராமகிருஷ்ண மடம், ஆந்திரா யூனிவர்ஸிட்டி இவைகளுக்கும் நிறைய பணம் ஒதுக்கி வைத்திருந்தார்.

அவர் சம்பாதித்த பணத்தையெல்லாம்; 25 வருஷங்களில் முன்பு திட்டம் போட்டிருந்தபடி செலவிட எண்ணங்கொண்டு இப்பொழுது மற்றும் எந்தெந்த வகையில் தருமம் செய்ய வேண்டுமோ அவைகளின் பொருட்டு தயாள மனப்பான்மையுடனும், ஜனோபகார சிந்தையுடனும் ஒதுக்கி வைத்தார். இந்தியாவிலேயே ஒரு சிலர்தான் இவரைப்போல் செய்திருக்கலாம்; நம் தொழில் விஞ்ஞானி நாயுடுவிடமிருப்பது போல நல்லெண்ணமும், தயாள மனப்பான்மையும், ஒரு சிலருக்குத் தான் இருந்திருக்க முடியும். எனக்குத் தெரிந்து தென் இந்தியாவிலே சில பேர்கள், கல்வி ஸ்தாபனங்களுக்கும் மற்ற தருமங்களுக்கும் பண உதவி செய்திருக்கிறார்கள். ஆனால் யாராவது

ஒருவர் இதையும் நாயுடு செய்தவைகளையும் சீர்தூக்கிப் பார்த்தால், அவர் நிச்சயமாக நாயுடுவின் செய்கையைக் கண்டு புகழ்வார். ஏனென்றால் அவருக்கு இணையாக உள்ளவர்கள் ஒரு சிலரே என்று சொல்லக்கூடிய அளவிலே, தன்னுடைய வாழ்நாள் பூராவும் கஷ்டப்பட்டு சம்பாதித்த அத்தனை பணத்தையும் மக்களின் சுகவாழ்வின் பொருட்டு சிறந்த வழியிலே செலவிட்டார். நாயுடுவினுடைய புகழ்ச்சிக்குரிய இக்காரியங்களெல்லாம் கவர்னரை மிகவும் பரவசப்படுத்தி, அவர் வாயாலேயே இந்த சந்தர்ப்பத்தில் நாயுடுவுக்கு புகழ்மாலை சூட்டினார்.

சர் ஆர்தர் ஹோப், நாயுடு அவர்களுடைய சொற்பொழிவிற்கு பதில் கூறும் வகையில் எழுந்து நின்று, நம் இந்திய தொழில் விஞ்ஞானியை புகழ்ந்து பேச ஆரம்பித்தார்:

> "நாயுடு அவர்கள் கோவைமா நகரத்திற்கே ஒரு எடுத்துக்காட்டாக இருக்கிறார் என்று நான் நினைக்கிறேன். அவர் இப்பொழுது சொன்னதுபோல், தன்னுடைய தொழிலை மிகவும் சிறிய முறையிலே ஆரம்பித்து தற்பொழுது மிகவும் பெரிய மனிதராக மாறிவிட்டார். கோவை நகரம் கூட மிகவும் சிறிய முறையிலே ஆரம்பிக்கப்பட்டு, இன்று ஒரு பெரிய பட்டணமாக விளங்குகிறது; மேலும் சிறிது நேரத்திற்கு முன்பு, இந்த விருந்தில் ஒரு நண்பர் தான் தென் இந்தியாவிற்கு வருவதற்கு முன்பு கோயமுத்தூரைப் பற்றி கேள்விப்பட்டதில்லை என்று சொல்லக்கேட்டேன். சில வருஷங்களுக்குள்ளேயே, கோவைமா நகரம், பம்பாய், கல்கத்தா,

சென்னை நகரங்களைப் போல உலகம் அறியச் செய்யப்படும் என்று நான் நிச்சயமாக நம்புகிறேன். ஏனென்றால் நாயுடு அவர்களைப் போலுள்ள மனிதர்கள் இவ்விடமிருக்கிறார்கள். அவர் இந்த சொற்ப காலத்திற்குள் செய்த ஆச்சரியமான செய்கைகளின் பொருட்டு நான் என்னுடைய மனப் பூர்வமான வந்தனத்தை அவருக்கு தெரிவித்துக் கொள்ளுகிறேன். வார் பாண்டுகளின் பொருட்டு அவர் நிறைய பணம் கொடுத்திருக்கிறார், மற்றும் ஜனோபகாரம், தர்மம் இவைகளின் பொருட்டும் நிறைய பணம் செலவு செய்திருக்கிறார். அவருடைய தயாள மனப்பான்மையினால் செய்த இந்த உபகாரங் களுக்கு நான் அவருக்கு வந்தனம் செலுத்த விரும்புகிறேன்.

"இங்கிலாந்தில், எங்களிடையே, நம் நாயுடு அவர்களைப் போலவே, நப்பீல்டு பிரபு என்று ஒருவரிருக்கிறார். அவர் எப்பொழுதும் தன் கம்பெனிகளிலிருந்து வரக் கூடிய லாபத்திலிருந்து நற்காரியங்கள் செய்வதற்காக, அதிகமான பணத் தைக் கொடுக்கிறார். நாயுடு அவர்களுக்கு நப்பீல்டு பிரபுவைப் பற்றித் தெரியாதிருக்கலாம். ஆனால் அவர் செய்கைகள் நப்பீல்டு பிரபு செய்வதையே ஒத்திருக்கின்றன. நான் இதை மிகவும் பாராட்டு கிறேன். அவர் செய்த வெகுமதியையும், அதற்காக அவர் கொடுத்த பணத்தின் பொறுமானத்தையும் பிரித்துப் பார்த்தால், அது ஒரு ஆச்சரியப்படக் கூடிய உதாரணமாகவே விளங்கும். இந்தியாவின் மற்ற எல்லா பாகங்களிலுமுள்ள யாராவது இந்த

உதாரணத்தை மனதில் பதித்து, செய்கையில் காட்டும்போது, யுத்த நிதிக்கு மாத்திரமல்லாமல், ஏழைகளுக்கும், கஷ்டப்படுபவர்களுக்கும் உதவி செய்யும் பொருட்டு, பின்பற்றுவார்கள் என்று நான் நிச்சயமாக நம்புகிறேன். நான் அவர் செய்திருக்கும் வெகுமதிகளை மிகவும் பாராட்டுகிறேன். நாயுடு விரும்புவது போல, நல்ல முறையில் பணத்தை உபயோகிக்கப்படும். நாயுடு அவர்கள், இந்த இராஜ தானியில் மட்டுமல்ல, இந்த தேசம் பூராவிலும் உள்ள ஜனங்கள் பின்பற்றக் கூடிய அளவிலே ஒரு உதாரண புருஷராக விளங்குகிறார் என்பதை நான் நிச்சயமாக நம்புகிறேன்.''

அவர் பேசி முடிந்த பிறகு நாயுடுவின் மகள் ஸ்ரீமதி சரோஜினி, ஆர்தர் ஹோப்புக்கும், அவருடைய பெண்ணுக்கும் வந்தனோபசாரம் கூற கூட்டம் இனிது முடிவுற்றது. தன் சொந்த முயற்சியால், வாழ்க்கையில் வெற்றியைக் கண்ட கோவை வாசியான இந்த நாயுடு அவர்களின் குடும்பத்திற்கு அன்று ஒரு நன்னாள். அவருடைய செய்கைகளும், வாழ்க்கையின் குறிக்கோளும், இன்றைய தினம் ஆயிரக் கணக்கான தென் இந்தியர்களின் அன்பிற்குப் பாத்திரமாகி அவர்கள் இருதயத்தில் பதிந்துகிடக்கின்றன.

❋

## XIII

## நீதியைத் தேடிக்கொண்டு

நாயுடு அவர்கள் தன்னுடைய பெரிய போக்குவரத்து ஸ்தாபனத் தொழிலைவிட்டு விலகிக்கொள்ளுவதிலிருந்து அவருடைய வாழ்க்கையில் ஒரு புதிய சகாப்தம் துவக்கமாகிறது! தாழ்ந்த முறையில் ஆரம்பித்து உயர்ந்த நிலைமைக்கு வந்தவர். போதிய அளவு பணம் சம்பாதித்தார். இப்பொழுது, அவர் போட்டிருந்த திட்டத்தின்படி, தன்னிடையே வாழும் மக்களின் நல்வாழ்வின் பொருட்டு, தன் சம்பாத்தியத்தை செலவு செய்ய முற்பட்டிருக்கிறார். மோட்டார் மன்னர் என்று இந்தியாவில் தனிப் பெருமையுடன் விளங்குவதற்கேற்ப, நாயுடு அவர்களுடைய கவனம், ஒரு தேற்ச்சி பெற்ற கலைஞனுக்கு எப்படி விதவிதமாக எண்ணங்கள் உதயமாகுமோ, அப்படியெல்லாம் எண்ணங்கள் எழும்பின. மக்களுக்குத் தொழிற்கல்வி போதிக்கப்பட வேண்டும் என்று விரும்புகிறார். அதற்காக வாதாடவும் செய்கிறார். இன்றையதினம் நம் பல்கலைக் கழகங்களிலும் கல்லூரிகளிலும் படித்து தேறி வரும் லட்சக்கணக்கான பி. ஏ. முதலிய பட்டதாரிகளினால் நாட்டின் நலனும், உயர்ந்த பண்பும் அடைய முடியாது. ஆனால் தொழிற்கல்வி மாத்திரமே இன்றைய இந்தியாவிற்குத் தேவை என்பதைக் கண்டுகொண்டார். இந்த விவகாரத்தை ஒருவரும்

மறக்கவோ, குற்றஞ் சொல்லவோ முடியாது. தொழிற் கல்வி பயின்று, ஏதாவதொரு இயந்திரத் தொழிலை நன்றாக அறிந்தவன் எப்பொழுதும் எந்த வேலைக்கும் தகுதியுடையவனாயிருக்கிறான். ஆனால் ஒன்றுக்கும் உதவாத பல்கலைக்கழக பட்டதாரிகளில் 100-க்கு 98 பேர்கள் குமாஸ்தா உத்தியோகத்திற்கே லாயக்காயிருக்கிறார்கள். அவர்களால் அதைத்தவிர வேறு ஒரு வேலையையும் செய்ய முடியாது. செய்யவும் தெரியாது. இது நம் கண்முன்பாக காணப்படும் பிரத்தியட்ச உண்மை. நம் எல்லாரையும்விட நாயுடு இதை நன்கு அறிந்தவர். எதையும் நேரில் செய்கையில் செய்துகாட்டக் கூடியவர், வாழ்க்கையில் மகத்தான வெற்றியைக் காண்கின்றார் என்பதற்கு எடுத்துக்காட்டாக அவரே ஒரு உதாரணத்தின் அசைக்கமுடியாத அஸ்திவாரமாக இருக்கிறார். அவருடைய மனக் கடலிலே இந்தவிதமான எண்ண அலைகள் எழும்பி எழும்பி, செய்கை என்னும் கரையில் மோதின. தொழிற் கல்வியைப் போதிக்கக் கூடிய ஸ்தாபனங்கள் அதிகம் அதிகமாக ஏற்படவேண்டும் என்பதற்காக தன்னாலான முயற்சியை மிகச் சிரத்தை யோடு செய்துகொண்டிருந்தார். ஆனால் அரசாங்கத்தார் இதற்கு இணங்காததுபோல் தங்களுக்குள் வேறு ஏதோ திட்டமிட்டிருந்தார்கள். நாயுடுவிற்கு அரசாங்கத்தாரின் செய்கைகள் சாரமில்லாததாகத் தோன்றிற்று. அவர்கள் போதனா முறையின் முக்கியமான தேவைகளை அறிந்து கொள்ளாமலிருக்கிறார்கள் என்று கருதினார். அரசாங்கத்திற்குச் சம்பந்தமில்லாத தனிப்பட்டவர்கள் யாரேனும் தன்னைப்போல் இந்த விஷயத்தில் நேரடியான சிரத்தை




ஜே. ஜே. ருத்ரா, மேன்மை தங்கிய கவர்னர் சர் ஆர்தர் ஹோப், ஜி. டி. நாயுடு
ஹோப்ஸ் காலேஜில்




சர். எ. ராமசாமி முதலியாரின் ஹோப்ஸ் காலேஜ் விஜயத்தின்போது

காட்டி தொழிற் பள்ளிகளை ஆரம்பிக்கவில்லை என்றால், அரசாங்க இயந்திரத்தை நகர்த்தவே முடியாது என்று நாயுடு நினைத்தார். அதற்குப் பிறகு 1945-ல் எப்படி நாயுடுவின் சொந்த முயற்சியினால், கோவையில் இரண்டு தொழிற் பள்ளிகள் ஆரம்பிக்கப்பட்டன என்பதுதான் நமக்கு நன்றாகத் தெரியும். அப்பொழுது சென்னை கவர்னராக இருந்த சர் ஆர்தர் ஹோப் என்னும் ஆங்கிலேயர் தொழிற் கல்வியின் மதிப்பைப்பற்றி நன்கு அறிந்தவர். ஆகையால் அவரும் நாயுடு அவர்களுடைய அபிப்பிராயத் திற்கு இணங்கிவந்தார். இந்த ஸ்தாபனத்தை ஆரம்பிக்க தன்னால் எவ்வளவு உதவி செய்ய முடியுமோ அவைகளை துரிதமாகச் செய்யவேண்டுமென்ற தன்னுடைய பொறுப்பை உணர்ந்து செய்தார். இதன் முடிவு நிரம்பவும் போற்றிப் புகழத்தக்கது. நாயுடு அவர்கள் தயாள மனப் பான்மையுடன் நன்கொடையாக அளித்த லட்சக் கணக்கான தொகையின் உதவியால் எழும்பிய ஸ்தாபனங் களில் ஒன்று ஆர்தர் ஹோப் என்ஜினியரிங் காலேஜ் (Arthur Hope College of Technology) மற்றொன்று ஆர்தர்ஹோப் பாலிடெக்னிக் (Arthur Hope Polytechnic) இந்த ஸ்தாபனங்கள் இன்றும் நன்றாக வேலை செய்து வருகின்றன. ஆர்தர் ஹோப் பாலி டெக்னிக்குக்கு, சொல்லிக்கொடுப்பதற்கு தகுதியும், தேர்ச்சியும் உடையவர்கள் கிடைக்காமற் போகவே நாயுடு அவர்களே, ஹானரரி டைரக்டராகவும், பிரின்ஸ்பர்லாகவும் நியமிக்கப் பட்டார். கல்வியையே தன் வாழ்வின் முக்கியக் குறிக் கோளாகக் கருதும் நாயுடு அவர்களும், இந்தப் பதவியை சந்தோஷத்துடன் ஏற்றுக்கொண்டார்கள்.

நாயுடுவின் உதவியால் ஆரம்பிக்கப்பட்ட இந்த இரண்டு தொழிற்கல்வி ஸ்தாபனங்களும், இந்தியாவை தொழிற் துறையில் பிரசித்தியுறச் செய்ய உபயோகப் படுத்தப்படவேண்டுமென்று அவர் விரும்பினார். நம் தேச முழுமையிலும் மூட்டை மூட்டையாக செல்வமுடைய பணக்காரர்கள் இருக்கிறார்கள். அவர்கள் நினைத்த மாத்திரத்தில் ஒரே நாளில் இவைகளை ஆரம்பிக்க முடியும். ஆனால் ஆரம்பிக்கப்பட்ட அந்தக் கம்பெனிகளில் உற்பத்திசெய்யப்படுகின்ற பொருள்கள், தற்பொழுது இந்தியாவிலும், வெளி தேசங்களிலும் செய்யப்படும் ஒவ்வொரு பொருள்களைக் காட்டிலும் சேர்த்தியான தாயும், குறைந்த விலையுள்ள தாயும் செய்யக்கூடிய திறமை வாய்ந்த போதுமான நிர்வாக புருஷர்கள் நம்மிடையே இருக்கின்றார்களா? என்ற ஒரு சந்தேகத்திற்கிடமான கேள்வி உண்டாகிறது. இது உடனடியாக நாம் கவனிக்க வேண்டிய ஒரு பிரச்னையாகவே இன்றும் இருந்து வருகிறது. இதோ கோவையிலேயுள்ள ஜி. டி. நாயுடு அவர்களிடத்திலே அப்படிப்பட்ட அறிவுத் திறனை நீங்கள் காணலாம். அரசாங்கத்தாரும், பொதுமக்களும் ஒத்துழைத்தால்தானே அவருடைய அறிவுத்திறன் நம் நாட்டில் நம் க்ஷேம வளர்ச்சியின் பொருட்டு பிரயோகிக்கப்படும்! அவர் எப்பொழுது அரசாங்கத் தாரையும், பொதுமக்களையும் கூட்டுறவின்பொருட்டு அண்டினாலும் சரி, அவருக்கு நன்மை ஒன்றும் செய்ய முடியாவிட்டாலும் தீமையையே அதிகம் செய்கிறார்கள். இந்த மகானுபாவர்கள் என் இப்படிச் செய்கிறார்கள் என்பதை நினைத்துப்பார்த்தால் எனக்கு ஆச்சரியமாகவே இருக்கிறது!




கவர்னர் அவர்களின் ஆர்தர் ஹோப் பாலிடெக்னிக்
விஜயத்தின் போது




கவர்னர் அவர்கள் ஆர்தர் ஹோப் பாலிடெக்னிக்கை பார்வையிடும்போது

நாயுடு அவர்கள் இரும்பு சுவாசப்பையை நம் இந்தியாவிலேயே செய்ய விரும்பினார். இங்கிலாந்திலிருந்து நப்பீல்டு பிரபு, இந்தியாவிலுள்ள ஒரு சில ஆஸ்பத்திரிகளுக்கு வெகுமதியாக இந்த சிறந்த மருத்துவக் கருவிகளில் சிலவற்றை அனுப்பிவைத்தார். இந்திய நப்பீல்டு பிரபுவான நாயுடு இப்பொழுது அந்தக் கருவிகளை அமெரிக்காவிலிருந்து மிகவும் சரசமான விலைக்குத் தருவித்து சில ஆஸ்பத்திரிகளுக்குக் கொடுக்கலாமென்று நினைத்தார். அது நினைத்தமாத்திரத்தில் அவ்வளவு சுலபமாகச் செய்யக்கூடிய காரியம் இல்லை. அற்ப சீமை சாமான் வியாபாரம் செய்யும் ஒரு வியாபாரி அந்த சரக்கை இறக்குமதிசெய்ய என்னென்ன கஷ்ட நஷ்டங்களுக்கு உள்ளாவானோ, அவைகளையெல்லாம் நாயுடு அவர்கள் எதிர்நோக்கவேண்டியதாயிற்று. அந்த சாமான்களை இறக்குமதி செய்வதற்கு லைசென்ஸ் கோரி மனுசெய்து கொண்டார். லைசென்ஸ் கிடைத்தது. பிறகு அதற்கு வேண்டிய டாலர் மாற்றத்திற்கு மனுச்செய்துக் கொண்டார்; எல்லாம் சட்டப்படி செய்யவேண்டியிருக்கிறதே என்று அவர் தன் முயற்சியிலிருந்து பின்வாங்கவில்லை. கொஞ்ச காலத்தில் டாலர் மாற்றங் கிடைத்தது. உடனே அவருக்குக் கிடைத்த லைசென்ஸ் காலாவதி ஆகிவிட்டது. மறுபடியும் லைசென்ஸ் புதுப்பிப்பதற்குள், டாலர் மாற்றத்திற்குக் கொடுக்கப்பட்டிருந்த 'டைம்' காலாவதியாகிவிட்டது. இந்த அல்லல்களுக்கிடையில் அவர் சிறு சிறு தொல்லைகளுக்கும் ஆளாகவேண்டியிருந்தது. நாட்டிற்கு நல்லது செய்யலாம் என்று கருதி யாராவது முயற்சி செய்தால், அந்த முயற்சியை, சிகப்பு நாடா வர்க்கத்தை தன் ஆட்சி பீடமாக வைத்து அமர்ந்

திருக்கும் இந்த அதிகார வர்க்கம் ஏதாவதொரு விதத்தில் தடை செய்கிறது என்பதற்கு இது சிறந்த உதாரணமாக விளங்குகிறது.

நாயுடு அவர்கள் ஜனங்களின் நன்மையைக் குறித்து எந்தக் காரியத்தை செய்ய முயற்சித்தாலும் நமது சென்னை அரசாங்கமும், இந்திய அரசாங்கமும் அவரை சில சமயம் ஒழுங்கற்ற முறையில் நடத்திவருகிறது என்பதைக் குறிப்பிட்டேன். எனக்கு நினைவிருக்கிற இன்னம் சில சம்பவங்களையும் இங்கே கூறுகிறேன். அவைகளெல்லாம் முற்றிலும் உண்மை. சில வருஷங்களுக்கு முன்பு அவருடைய பெரிய பஸ் தொழிலில் ஜனங்களின் பிரயாண சவுகரியங்களை முன்னிட்டு ஒரு நல்ல முறையோடுகூடிய பஸ் ஸ்டாண்டை கட்டுவதற்கு லைசென்ஸ் கேட்டார். ஆனால் அரசாங்கம் அநுமதிக்கவில்லை. அமெரிக்காவிலும், ஐரோப்பாவிலும் உள்ளது போல சிறந்த சாதனங்களோடுகூடிய பஸ்களை இங்கே தன்னுடைய ஸ்தாபனங்களில் வைக்க லைசென்ஸ் கோரினார். அப்படிப்பட்ட பஸ்களுக்கு லைசென்ஸ் ரத்து செய்யப்பட்டது. நவீன முறையில் 'பதிவு செய்யும் மிஷினை (Recording Machine) தன் தொழிலில் புகுத்தினார். அதன் மூலமாக அவருடைய ஆபீசில் பஸ்கள் வரும் நேரமும், போகும் நேரமும் கணக்கிடப் பட்டது. அதையும் அரசாங்கத்தார் ஒத்துக்கொள்ள வில்லை. இவைகளுக்கெல்லாம் காரணம் என்ன தெரியுமா? ஜனங்களுக்கு பிரயாண வசதியை செய்து கொடுப்பதற்கான சட்டதிட்டங்களை வகுப்பது அரசாங்கம். நாயுடு அவர்கள் செய்கையில் ஒரு படி

மேலே ஏறி தன்னுடைய பஸ்களில் பிரயாணம் செய்பவர்களுக்கு சகல சவுகரியங்களும் செய்யப்படவேண்டும் என்ற ஒரு எண்ணங்கொண்டு தானாகவே, சர்க்கார் உத்திரவு வரும் வரையில் காத்திராமல், ஒரு குறையும் ஒருவரும் சொல்லமுடியாதபடி சவுகரியம் செய்துகொண்டிருந்தால், எப்படி இந்த அரசாங்கம் அநுமதி அளிக்கும். அதன் கவுரவத்திற்கு அது ஒரு இழுக்கல்லவா! சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் ஒவ்வொருவரும் நாயுடு செய்வதை விரும்பாமல் தங்கள் கட்டளையின் கீழ் நாயுடு ஒவ்வொன்றையும் செய்யவேண்டுமென்று எண்ணங் கொண்டார்கள். அப்படி அவர்களிடமிருந்து வரும் உத்திரவுகள் தான் நல்ல முறையிலே இருக்குமா என்றால், தப்பான முறையில் பிரயாணிகளுக்குச் சவுகரியம் கொடுக்கக்கூடாததாய்த்தான் இருக்கும். இவைகளை எல்லாம் நாம் எப்பொழுது, எப்படித் தாண்டுவது.

இந்தியாவிலேயே முதன் முதலாக எலெக்ட்ரிக் மோட்டார் உற்பத்தி செய்யும் தொழிற்சாலை கோவையிலே ஆரம்பிக்கப்பட்டது என்ற பெருமை நாயுடு அவர்களையே சாரும். இதற்கு வேண்டிய இரும்பு முதலிய கச்சாப் பொருள்களை வரவழைப்பதற்கு அரசாங்கத்தாரை அனுமதி கோரினார். இதற்குக் கூட அரசாங்கம் தனது மறுப்பைத் தெரிவித்தது. அயல்நாடுகளிலிருந்து எலக்ட்ரிக் மோட்டார்கள் வரவில்லை. இந்தியாவிலேயே 'எலெக்ட்ரிக் மோட்டார்' செய்கிறேன் என்று நாயுடு சொன்னதை கவர்ன்மெண்டார் வேறு வழியில்லாமல் ஒருவாறு ஒத்துக்கொண்டார்கள். கம்பெனியை ஆரம்பித்து நடத்த அனுமதித்தாலும் அதற்கு தருப்பிடிக்காத

நல்ல இரும்பு முதலானவற்றை சப்ளை செய்யக் கூடாது என்று மறுத்துவிட்டார்கள். எதாவது ஒரு இந்தியன் ஒரு எலெக்டிரிக் மோட்டாரை செய்யவேண்டுமென்றால், அவனுக்கு கவர்ன்மெண்டாரின் கருணா கடாட்சம் இருக்கவேண்டும் போலிருக்கிறது. அது தனக்கு இல்லாத தினால், இவ்வளவு தொந்திரவுகளும் வருகிறது என்று நாயுடு நினைத்தார். கவர்ன்மென்டார் நாயுடுவை மேலெழும்பவொட்டாது எப்படித் தடுத்தால்தானென்ன! நாயுடு சாதாரண மனிதரா? அவர் ஒரு பெரிய கண்டு பிடிப்பாளர் அல்லவா? அவர் கண்டுபிடித்த பொருள்களுக் கெல்லாம், புகழ்பெற்ற லீப்ஸி கண்காட்சியிலும் மற்று முள்ள ஜெர்மானிய கண்காட்சிகளிலும் பரிசுகள் வழங்கப் பெறவில்லையா? நாயுடு அவர்கள் வகுக்கும் வழி எப் பொழுதும் நேர்மையாகவும் கணக்காகவும் இருக்கும். நாயுடு ஆரம்பித்த இந்தத் தொழிற்சாலையில் ஆயிரம் ஆயிரமாக எலெக்டிரிக் மோட்டார்கள் உற்பத்தி செய்யப் பட்டன. அவைகளை உபயோகித்தவர்கள் எல்லோரும் இலாபம் அடைந்தார்கள். அவைகள் நேர்த்தியான வேலைப்பாடுடன் குறைந்த விலைக்கே கொடுக்கப்பட்டன. ஆனாலும், இந்திய தொழில் மேதாவிகள், நாயுடு செய்யும் இந்த மோட்டார்களின் மதிப்பை முறையாக அறிந்து கொள்ள முடியவில்லை. ஆங்கிலேய தொழிற் விற்பன் னர்கள் நாயுடுவின் முயற்சியைக் கண்டு வியந்து அணுகி தங்கள் தேசத்தில் இந்த மோட்டார்களை விற்பதற்கு ஏஜென்ஸி கொடுக்கவேண்டுமென்று நாயுடு அவர்களைக் கேட்டார்கள்! நம் தேசத்தில் கோயமுத்தூரிலேயே செய்யப்படும் பொருளாயிற்றே, இதை நாம் வைத்து வியாபாரம் செய்து ஏன் இலாபம் சம்பாதிக்கக் கூடாது?

என்று நம இந்திய தேச முதலாளிகளில் யாருக்காவது உணர்ச்சி உண்டாயிற்றா? இதற்குமேல் நாயுடு அவர்கள் இயந்திரக் கருவிகளையும், மோட்டார் கார்களையும் (Automobile) உற்பத்தி செய்யத் திட்டமும் செய்திருந் தார்கள். இதில் கூடவா அரசாங்கத்தார் தம் மறுப்பைத் தெரிவிக்கவேண்டும்! அரசாங்கத்தார் மன முவந்து அனுமதி கொடுக்கிறார்கள் என்று வைத்துக் கொண்டா லும், நம் இரத்தத்தில் தான் அடிமை மனப்பான்மை ஊறி உறைந்து நிற்கிறதே! அதுவும் வெகுவாக நம் இந்திய முதலாளிகளிடத்திலும் காணப்படுகிறது. நாயுடு அவர்கள் நிறைய கார்களை செய்தாலும், அவர்கள் வெளிநாட்டி லிருந்து இறக்குமதியாகும் கார்களைத்தான் வாங்கு வார்கள். அவர்கள் எல்லோரும் வெளியில் பேசிக் கொள்ளுவதெல்லாம் என்னமோ 'சுதேசி' தொழிலை ஆதரிக்கவேண்டுமென்றுதான். நாயுடு அவர்களுக்கும் பொதுஜன ஆதரவு கிடைத்தால்தானே, அவர் தன் முயற்சி யில் வெற்றியைக் காணமுடியும்!

நாயுடு அவர்கள் இங்கிலாந்தில் இருந்தபோது ஒரு சமயம், அங்கே டியசல் என்ஜின்களைத் தயாரிப்பவர் களிடம், அவர்கள் இன்ஜின்கள் செய்வதில் சில அம்சங் களில் மாறுதல்கள் செய்யும்படி யோசனை கூறினார். நாயுடு கூறிய மாறுதல்கள் அவர்களுக்கு நல்லதென்று படவே அதை ஒத்துக்கொண்டு அதன்படி திருத்திக் கொண்டார்கள். இங்கிலாந்தில் மட்டுமல்ல நாயுடுவைப் பாராட்டினது; தொழிற் துறைகளிலேயே சிறந்தது என்று கருதப்படும் ஜெர்மனி தேசத்தில் கூட நாயுடுவின் ஒப்பற்ற புத்திகூர்மையைக் கண்டு, அவர் டியசல்

என்ஜினைப் பற்றிக் கூறியதை நம்பி அதன்படி தங்கள் தொழிலைத் திருத்திக் கொண்டார்கள். ஆனால் நம் இந்தியாவிலோ! நம்மிடையே உதித்த ஒரு தொழில் விஞ்ஞானியை நாம் சரியாக உபயோகித்துக் கொள்ளக் கூடிய அறிவுத்திறன் இல்லாமலிருக்கிறோம்! சண்டை ஆரம்பமாவதற்கு முன்னால் நாயுடு ஜெர்மன் தொழில் முதலாளிகளின் கூட்டுறவின் பேரில் இந்தியாவில் ஒரு டியஸல் மோட்டார் தொழிற்சாலை திறப்பதற்கு ஏற்பாடு செய்து கொண்டிருக்கும்போது, யுத்தமே அதற்கு ஒரு தடங்கலாக வந்தது. ஆகையால் இந்தத் திட்டத்தையும் கைவிடும்படியாக ஆயிற்று. நாயுடு எப்படி தன்னுடைய ஒவ்வொரு முயற்சியிலும், பின்வாங்க நேர்ந்து, கடைசியில் மனமுடைந்து எடுத்த காரியத்தை கைவிட்டார் என்பதற்கு உதாரணமாக இவைகளெல்லாம் ஒரு சில சம்பவங்கள். அப்பொழுதெல்லாம் அவர் தனக்குத் தானே பின்வரும் கேள்வியைக் கேட்டுக்கொள்ளுவார்: "சில்லரை விஷயங்கள் கூட எனக்கு நேர் எதிராக இருக்கும்போது, நான் இவைகளைக் குறித்து என் சஞ்சலமடையவேண்டும்?" இந்தப் பாழும் இந்தியாவிலல்லாமல் வேறு அமெரிக்கா, ஜெர்மனி முதலிய அந்நிய தேசங்களிலே நம் நாயுடு அவர்கள் பிறந்திருப்பாரானால், அவருடைய தன் நிகரில்லாத் தனிப்பெருமை பொக்கிஷம் போல் போற்றப் பட்டு நாட்டின் நலனுக்கு உபயோகிக்கப்பட்டிருக்கும். ஆனால் நம் இந்தியர்களோ, அநேக வருஷங்கள் ஆங்கில ஏகாதிபத்தியத்திற்கு தாசானு தாசனாக வால்பிடித்துக் கொண்டிருந்தவர்கள். அவர்களின் ஒவ்வொரு சொட்டு இரத்தத்திலும் அடிமையுணர்ச்சிதான்



இந்தியாவிலேயே முதன் முதலாக எலெக்டிரிக் மோட்டாரை வெற்றியுடன்
செய்து முடித்த நாயுடுவினுடைய நேஷனல் எலெக்டிரிக் ஒர்க்ஸின்
ஒரு தோற்றம்




நேஷனல் எலெக்டிரிக் ஒர்க்ஸ் தொழிற்சாலையின் ஒரு தோற்றம்

ததும்பி நிற்கின்றது. அவர்களுக்குத் தானாக ஒரு விஷயத்தையும் ஆராய்ந்து அதற்கு ஆவன செய்யத் தெரியாது. கிட்டத்தட்ட 200 வருஷ காலங்கள் ஆங்கிலேயர் இட்ட கட்டளைப்படி நடந்துவந்துவிட்டோம். இந்த அடிமை யுணர்ச்சி நம்மை எவ்வளவு தூரம் பாதித்திருக்கிறது என்று பாருங்கள். நம்மிடையே அப்படிப்பட்ட ஒரு சிறந்த புருஷர் வாழ்வதற்கு நாம் கொடுத்து வைத்திருந்தாலும் அவரை சரியாக அறிந்துகொள்ள சக்தியற்றவர்களாயிருக்கிறோம். அவருடைய வாழ்நாளில் நாம் அவருக்கு என்ன மரியாதையைச் செய்கிறோம். அவரை நாம் எங்கே பயன்படுத்தி நம் வாழ்வைச் சீர் படுத்திக்கொள்ளுகிறோம். இது ஆயிரக்கணக்கான அனுதாபத்துக்குரிய விஷயங்களில் ஒன்று. ஆனால் இது நம் தினசரி வாழ்க்கையில் நடக்கக்கூடிய ஒரு உண்மை!

இன்றைய தினம் பற்பல துறைகளில் உலகத்திலேயே கீர்த்தியுடன் விளங்குகிற நம் இந்தியர்களின் வாழ்க்கை வரலாற்றை சற்று பாருங்கள். கவி தாகூரின் கீதாஞ்சலி என்னும் கவிதையை ஆங்கிலேய இலக்கிய கர்த்தாக்களான யேட்ஸ், ஸெமாண்ட்ஸ் இருவரும் படித்து அங்கீகரித்தனர். அந்த அங்கீகரிப்பின் பயனாக அவருக்கு 'நோபல்' பரிசு வழங்கப்பட்டது. சர் சி. வி. ராமனின் விஞ்ஞான சிறப்பு அந்நிய தேசத்தவர்களால் அறிந்து பாராட்டப்பட வேண்டியிருந்தது! ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழகத்தில் ஸ்ரீ இராதாகிருஷ்ணனை சிறந்த தத்துவ ஞானி என்று அறிந்து போற்றிய பிறகுதான் நாம் அவரின் உயர்வைப் புகழ்ந்தோம். இந்த மனிதர்கள் அந்நிய

தேசத்தவர்களிடமிருந்து நிபுணர்கள் என்ற புகழுரைகளை அடைந்த பிறகாவது நாம் அவர்களை நல்ல நோக்குடன் பார்க்கிறோமா! அல்லது அவர்கள் செய்தவைகளை பாராட்டி, நம் தேசத்திற்கு அவர்களை பயன்படுத்திக் கொள்ளுகிறோமா! நம் நாட்டிலே உதித்த வீர புருஷர்களைப் போற்றி புகழ வேண்டாமா! வேண்டும்! ஆனால் கொஞ்சம் கவனக் குறைவு! கவனமாக ஒன்றைப் பார்த்து அதை அறிந்துகொண்டு விட்டாலோ! சாதாரண இந்த அழியக்கூடிய மனித உடலை அமரராகப் பாவித்து கடவுள் என்று வழிபடுகிறோம்! இது மாதிரி முடிந்த இரண்டு சம்பவங்களைக் கூறுகிறேன். அது நம் அறியாமை என்றோ அல்லது செய்கையில் மிதமிஞ்சியத்தனம் என்றோ எப்படி வேண்டுமென்றாலும் வைத்துக் கொள்ளலாம்.

ஒரு குறிப்பட்ட துறையிலே நிபுணர்களாக இருக்கும் அநேக இந்தியர்களின் மதிப்பை அறிந்து உபயோகப் படுத்திக் கொள்வது இங்கிலாந்தும் அமெரிக்காவும் தான். ஆகையால், அப்படிப்பட்ட நிபுணர்கள் நம்மிடையே, சகோதர இந்தியனால் மதிக்கப்படாமல் துன்ப வாழ்வை நடத்த விரும்பாமல், இந்தியாவை விட்டே வெளிநாடுகளில் சென்று வசிக்கிறார்கள். கப்பல் கட்டுவதில் நல்ல அனுபவமும் திறமையும் வாய்ந்த ஒரு வங்காளியைப்பற்றி எனக்குத் தெரியும். அவர் இங்கிலாந்திலும், ஜெர்மனியிலும் சேர்ந்து படித்த காலேஜ்கள் ஒவ்வொன்றிலும் கப்பல் என்ஜினீரிங்கிலே முதன்மையாகத் தேற்சியடைந்தார். அந்த இரண்டு தேசங்களும் அவருக்கு நம்பிக்கையான பெரிய பதவிகளெல்லாம் கொடுக்க முன் வந்தன;

ஆனால் தன் தேசத்திற்கு உழைக்கவேண்டும் என்ற எண்ணம் அவருக்கு எழும்பி, தேசப்பற்றின் காரணமாக அந்த பதவிகளை யெல்லாம் வேண்டாமென மறுத்து இந்தியா வந்தடைந்தார். கப்பல் கட்டும் தொழிலில் நம் தேசத்தை சிறந்ததாகச் செய்யவேண்டுமென்று ஒரு நல்ல எண்ணத்தோடு அதற்கு வேண்டிய திட்டங்களை வகுத்துக் கொண்டு பட்டிணம் பட்டிணமாகச் சுற்றினார். ஒருவராவது அவரைக் கவனிக்கவில்லை. கடைசியாக கல்கத்தாவிலுள்ள ஒரு ஆங்கிலேய கம்பெனி அவருடைய அறிவுத்திறனை மெச்சி வேலைக்கு அமர்த்திக்கொண்டது. ஆங்கில உத்தியோகஸ்தர்களையும், அவரையும் நிறவேற்றுமைக்காக பிரித்து நடத்தியதால் அந்தக் கம்பெனியில் அவர் அதிக காலம் வேலையிலிருக்கவில்லை. "என் வாழ்நாளில் இந்த இந்திய மண்ணில்கூட காலடி வைக்கமாட்டேன்" என்று சபதம் செய்துகொண்டு இப்பொழுது திரும்பவும் இங்கிலாந்திற்கே சென்றுவிட்டார்! இந்திய சிற்பத்திலும் கலைகளிலும் சிறந்தோங்கி விளங்கிய சிலோன்காரரான டாக்டர் ஆனந்த குமாரஸ்வாமியைத்தான் எடுத்துக் கொள்ளுவோமே. அவருக்கு உரிய நல்ல ஸ்திதியிலே அவரை நாம் வைத்திருந்தால், அவர் இந்தியாவை விட்டு வெளிநாடுகளுக்குச் சென்று தன் அறிவை பயன்படுத்த வேண்டுமென்று விரும்பியிருப்பாரா? ஆனால் நாம் என்ன செய்தோம். அவரை அவமதித்தோம்; அதற்குப் பதிலாக ஆங்கிலேயர்களைப் புகழ்ந்தோம். பிறகு எப்படி இந்தியாவிலிருக்க அவர் மனம் ஒப்பும்? ஆகையால் இந்தியாவை விட்டு போஸ்டனுக்குச் சென்றார். நான் அவரை போஸ்டனில் நேரில் சந்தித்துப் பேசிக் கொண்டிருந்ததால் எனக்கு இதைச்

சொல்லமுடிந்தது. அவர் இறந்தவுடன் அவர் பிரிவிற்காக மனம் பதைத்து நின்றோம்; ஆனால் அவருடைய ஜீவிய தசையிலே நாம் அவருக்குச் செய்த மரியாதை என்ன? நாம் இன்னமும் அதே நிலையிலேயிருக்கிறோமா; அல்லது தேச முன்னேற்றத்தில் கொஞ்சமாவது அபிவிருத்தி யடைந்திருக்கிறோமா; என்று அதிசயப்படக்கூடிய அள விற்கு இவைகளெல்லாம் எனக்குத் தோன்றுகின்றன. இவைகளையெல்லாம் நோக்குங் காலத்தில், நம் நாட்டின் நல்வாழ்வின் பொருட்டு நாம் உபயோகப்படுத்திக் கொள்ள கூடிய பெரிய தொழில் விஞ்ஞானியான நம் நாயுடுவை நாம் நடாத்துகிற விதத்தை நினைக்கும் போது எனக்கு கடுகளவேனும் ஆச்சரியம் தோன்றவேண்டுமே? அதுதான் இல்லை. நம்முடைய இவ்வளவு அரியாமைக்குக் காரணம், நம்மிடையே இன்று வாழும் விஞ்ஞானிகளெல்லாம், கல்லூரியில் பயின்று பட்டம் பெற்றவர்கள். அவர்கள் தங்கள் நேரத்தை ஆராய்ச்சியின் பொருட்டு வீணாக்கு கிறார்கள். தன் வாழ்வின் முக்கால் பாகத்தையே ஆராச்சியின்பொருட்டு செலவிட்டால், கடைசியில் கண்டு பிடிப்பது ஏதோ ஒரு துறையிலே ஏதோ எதிர்பாராத வகையில் ஒரு சிறிய வஸ்து. ஒரு காரியத்தை செய்கையில் நேரடியாகச் செய்துகாட்டக் கூடியவர்கள் காலடிபட்ட இடத்திலே நிற்கக்கூட இவர்கள் லாயக்கில்லை என்று காண்கிறோம். ஒரு ஊக்கம் நிறைந்த அரசாங்கம்கூட இதுமாதிரி தயாரிக்கப்பட்ட விஞ்ஞானிகளின் புத்திமதி களையே கேட்கின்றது. ஆகையால் ஆட்சியாளர்கள் தங்கள் செய்கைகளின்மூலமாக உண்மையான உருவத்தை உணர முடியவில்லை. ஒரு வேளை சிகப்பு நாடா வர்க்கத் தையும், பல்லவியை திரும்பத் திரும்பப் பாடும்

பழக்கத்தைக்கொண்ட செய்கையையும், பாச்சைஅறித்த பைல்களையும் அவர்கள் அபிமானமாக அனுபவித்து வருவதால் இப்படிச் செய்கிறார்கள் போலும்! நான் நினைத்ததற்கு இவைகளாவது ஒரு காரணமாக இருக்கும் அல்லவா?

நாயுடுவின் திறமை பூராவும் இயந்திரங்களில் மட்டும் உழன்றுகொண்டிருக்கவில்லை. அவருடைய கூர்மையான மூளை எல்லாத் துறைகளிலும் சுழன்று வேலை செய்தது. அவருடைய கண்டுபிடிப்புகளெல்லாம் உண்மையான பொதுமக்களுக்கு பயன் விளைவிக்கக்கூடிய சிறந்த எண்ணத்துடன் கண்டுபிடிக்கப்பட்டது. இந்த இடத்தில் தான் நாயுடுவின் பெருந்தன்மை நன்கு வெளிப்படுகிறது. மூலைமுடக்குகளிலே எல்லாம் உணவைப் பெருக்குங்கள் என்ற பாட்டுப் பாடுவதை நாம் கேட்கிறோம். நாயுடு இந்தத் துறையிலே காட்டிய முயற்சி மிகவும் போற்றத்தக்கதாக இருக்கிறது. கோயமுத்தூர் விவசாய காலேஜுடன் இணைக்கப்பட்டிருந்த ஒரு கமிட்டியில் நாயுடு ஒரு அங்கத்தினராக இருந்தார். நாயுடு நம் தேசத்தில் எப்படி உணவு தானிய வகைகளைப் பெருக்கலாம் என்று புத்திமதி கூறியபோது, அநேக விஞ்ஞானிகள் (பள்ளியில்பயின்று பட்டம்பெற்றவர்கள்) மோட்டார் தொழிலில் ஈடுபட்டிருக்கும் ஒருவர், விஞ்ஞான ரீதியில் உணவு தானியத்தைப் பெருக்குவது பற்றியோ அல்லது விவசாயத்தைப் பற்றியோ என்ன தெரிந்திருக்க முடியும் என்று ஆச்சரியமடைந்துபோனார்கள்! பிறகு அவர் என்ன செய்யமுடியுமோ அதையெல்லாம் செய்கையில் செய்து காண்பித்தார், கோவையிலே அவர்

ஆற்றிய பிரசங்கத்தில் அவர் வாயால் வெளி வந்த சில வார்த்தைகளை இங்கே தருகிறேன். தன்னுடைய சொந்தத் தோட்டத்திலே பயிரிடப்படும் பயிர்களை உதாரணத்துடன் விளக்கியபோது அவர் சொன்னதாவது:

"......இந்தக் காம்பவுண்டிற்குள், சுவற்றிற்குப் பின்புறமாக நீங்கள் 10 அடி உயரமுள்ள ஒரு பருத்திச் செடியைக் காணலாம். அதிலிருந்து ஒரு வருஷத்திற்குள்ளாக விளைச்சலில், $2\frac{1}{4}$ அங்குல இழையுள்ள 24 இராத்தல் பருத்தி கிடைத்தது இந்த செடியின் விதையை மறுபடியும் விதைத்த போது நான்கு மாதங்களுக்குள்ளாக செடிகள் 5 அடிக்கு மேல் வளர்ந்தன, இந்த காம்பவுண்டிற்குள்ளேயே ஒவ்வொன்றும் ஆறு முதல் பன்னிரண்டு அடி நீளமுள்ள 26 கிளைகளுடனும், 2, 3 அடி நீளமுள்ள கிளைகளுடன் கூடிய $18\frac{1}{2}$ அடி உயரமுள்ள சோளச் செடியும் வளர்ந்திருக்கிறது. அந்த செடியில் மொத்தம் 39 கதிர்கள் இருந்தன. எல்லாத் தண்டின் மொத்த நீளம் 181 அடி. மறுபடியும் இந்தச் செடியின் விதைகள் விதைக்கப்பட்டபோது எட்டு வாரத்திற்குள்ளாக செடிகள் பத்தடிக்கு மேல் வளர்ந்தன ......"

இதற்கிடையில் பழவகைகளிலும் அவர் தன் கவனத்தைச் செலுத்தினார். ஆரஞ்சுப் பழத்தை இனிப்பிலிருந்து கசப்பிற்கும், புளிப்பிலிருந்து, இனிப்பிற்கும், சில இரசாயன முறைகளைக் கையாண்டு அவரால் மாற்ற முடிந்தது. அவர் சில இரசாயன திரவங்களை, செடியின் தண்டிலும், பழத்திலும்

ஊசியின்மூலம், டாக்டர் நோயாளிக்கு ஊசியின்மூலம் மருந்தை எப்படிச் செலுத்துகிறாரோ அதுமாதிரி உள்ளே செலுத்துகிறார். இதுமாதிரியாகவே, வாழைப் பழங் களை நல்ல இனிப்பாக்கும் பொருட்டு சில முக்கியமான இரசாயன வஸ்துவை உட்செலுத்துகிறார். இதைப் பொறுத்த அளவில் நிரம்பவும் உபயோகமான விஷயமாக தொன்றாமலிருக்கலாம். ஆனால் எந்தத் துறையிலே முயற்சி எடுத்துக் கொண்டாலும், நாம் ஆச்சரியப்படக் கூடிய அளவிற்கு இந்த விஞ்ஞானியால் எந்தக் காரியத்தை யும்வெற்றியோடு சாதிக்க முடியும் என்பதை உங்களுக்கு எடுத்துக்காட்டவே இவைகளைச் சாதாரணமாக விளக்கிச் சொன்னேன்' எப்படியிருந்த போதிலும் அவருடைய அவா, முயற்சி, காரியசித்தி எல்லாம் பலரகத்தைச் சேர்ந்தவைகள்.

இப்பொழுது இந்த மனிதருடைய மற்றொரு வியாபகத்திற்கு வருவோம். நாயுடு நீதியை விரும்புகிறவர் உத்தியோக வர்க்கத்தின் அக்கிரமமான ஆணைக்கு அவர் அடிபணிபவர் அல்ல. சுதந்தரத்தை எந்த விதத்திலும் இழக்க அவர் மனம் ஒப்பாது. அவர் எப்பொழுதுமே தன்னுடைய வாழ்க்கையில் நீதியையே அடிப்படையாகக் கொண்டு ஒவ்வொரு காரியத்தையும் செய்ய முயன்றார். அவருடைய பெரிய பஸ் போக்குவரத்துக் கம்பெனியில் உள்ள ஆயிரக்கணக்கானத் தொழிலாளிகளை வேண்டு மானால் நீங்களே கேட்டுப் பாருங்கள். முதலாளி என்ற முறையிலே அந்த ஸ்தானத்திற்கு நாயுடு நிரம்பவும் தகுதி உள்ளவர் என்று உங்களிடம் மனப்பூர்வமாக ஒத்துக் கொள்ளுவார்கள். மேலும் நாயுடுவின் பெருங்

தன்மையையும், தொழிலாளிகளின் க்ஷேமத்தைக்குறித்து எடுத்துக்கொண்டிருக்கிற ஆழ்ந்த சிரத்தையையும் நிச்சயமாக உங்களிடம் சொல்லத்தான் செய்வார்கள்.

நாயுடு அவர்கள் சில லட்ச ரூபாய்களை தருமத்திற்கும், தொழிற்பள்ளி ஆரம்பிப்பதின் பொருட்டும் கொடுத்ததை கண்ணுற்ற கோவை வருமானவரி உத்தியோகஸ்தர்கள், நாயுடுவின் உண்மையான செல்வ நிலைமை எப்படி இருக்கும் என்று அதிசயப்பட்டார்கள். ஒரு மனிதர் சில லட்ச ரூபாய்களை பொதுஜன நன்மைக்கு கொடுத்தாரானால் அவரிடம் நிச்சியமாக கோடிக்கணக்கான ரூபாய்கள் இருக்கவேண்டுமென்று அவர்கள் நினைத்து விட்டார்கள். சர் ஆர்தர் ஹோப் எப்படி நம் நாயுடுவை 'இந்திய நப்பீல்டு பிரபு' என்று புகழ்ந்தார் என்பது நமக்குத் தெரியும். ஆகையால், நப்பீல்டு பிரபு மாதிரி நாயுடுவும் ஒரு கோடீஸ்வரராக இருப்பார் என்று வருமானவரி உத்தியோகஸ்தர்கள் தீர்மானித்துவிட்டார்கள். இந்த தப்பெண்ணத்தின்பேரில், சர்க்காரின் வரி இலாகாதார்கள் தங்கள் மனம்போன போக்கில் வருமானத்தை கற்பனை செய்து கொண்டு, நாயுடுவிற்கு வரி விதித்தார்கள். நாயுடு தாக்கல் செய்திருந்த ரிக்கார்டுகளை பரிசோதனை செய்து அதிலிருந்த உண்மைகளை அறிந்து வரி விதிக்கப்படவில்லை. கோயமுத்தூரிலுள்ள வருமானவரி உத்தியோகஸ்தர்களின் நடத்தை சரியாக இல்லை. நல்ல முறையோடு கூடியதாக இல்லை என்றுகூட அனுமானத்திற்கும் வந்துவிட்டது. இப்பொழுது தொழில் விஞ்ஞானியான நம் நாயுடுவிற்கு அநீதியை எதிர்த்து போராட நிர்பந்தமான சம்பவம் ஏற்பட்டு

விட்டது. நாயுடுவை எளிதில் ஏமாற்றவோ, மனங் குன்றும்படி செய்யவோ முடியாது. என்பதை அறிந்து கொண்டிருந்தாலும், அவருக்கு இந்த அற்ப உத்தியோகஸ் தர்கள் செய்த உபத்திரவம் கணக்கில் அடங்கா. ஒரு பெருந்தொகையை வருமான வரியாகப்போட்டு அதை நாயுடு உடனே கட்டவேண்டுமென்று கட்டளை இட்டார்கள். அந்த வருமான வரியை எப்படி விதித்தார்களென்றால், நாயுடு அவர்களின் உண்மையான வருமானத்திற்கு பொருந்தாததும், நிரம்பவும் வித்தியாச மானதுமான ஒரு பெரிய தொகையை வருமானமாக மனதிலே கற்பனை செய்துகொண்டு, அதற்கு எவ்வளவு வரி சர்க்கார் சட்டப்படி விதிக்கவேண்டுமோ, அதை எல்லாம் விதித்தார்கள். நாயுடு இந்த அநீதியான கட்டளைக்கு கீழ்படிபவர் அல்ல. அவர் ஒரு விஞ்ஞானி. பிறவிப் புரட்சிவீரர். தற்போது சிலோனில் இந்தியப்பிரதி நிதியாக இருக்கும் ஸ்ரீ வி. வி. கிரி அவர்கள் ஒரு சமயம் அவரை ஒரு மாசிஸ்டு என்று புகழவில்லையா? நாயுடு தன் நிலைமையை உணர்ந்து அதைப் பலப்படுத்திக் கொள்ளுவதில் ஈடுபட்டார். வருமானவரி உத்தியோகஸ் தர்கள் கிளப்பிவிட்ட ஒரு பயங்கரக் குழப்பத்திலிருந்தும் தன்னை விடுவித்துக்கொள்ள தன் நிலைமையை பலப் படுத்திக் கொண்டார். யுத்த காலத்தில் நாயுடு நிறைய சம்பாதித்திருக்கக்கூடும் என்றும், ஆகையால், உண்மை எப்படி இருந்தபோதிலும், நாயுடு அந்த சமயத்தில் எவ்வளவு சம்பாதித்திருப்பார் என்று அவர்கள் உத்தேசித்து அந்த வரியை போட்டதாகவும், வருமானவரி உத்தியோகஸ்தர்கள் சொன்னார்கள். இதை நாயுடு எதிர்த்தார். அந்த சமயத்தில் மற்ற கம்பெனிகளின்

வருமானத்தையெல்லாம் கொண்ட ஒரு பட்டியல் தயார் செய்து அதையும் வருமானவரி உத்தியோகஸ்தர் தன்னிச்சையாய் சொன்னதையும் ஒத்திட்டுக் காண்பித்து தனக்கு எப்படிப்பட்ட அநீதி வழங்கப்பட்டிருக்கிறது என்பதை தெளிவாக எடுத்துச் சொன்னார். மற்ற கம்பெனிகள் எல்லாம் குறைந்த வருமானத்திற்கு குறைந்த வரி விதிக்கப்பட்டிருந்தது. நாயுடு சம்மந்தப்பட்டதில் அதிகமாக வருமானம் கணக்கிடப்பட்டு அதிகமான வரி விதிக்கப்பட்டது. உத்தியோகஸ்தர்கள் நாயுடுவிற்கு எதிராக சட்டப்படி எல்லாவற்றையும் செய்து கொண்டு போனார்கள். இதைக்குறித்து தனி ஒரு மனிதராக அரசாங்கத்துடன் எதிர்த்து சண்டை போடுகிறார் நம் நாயுடு.

ஒரு மனிதன் கஷ்டப்பட்டு நெற்றி வியர்வை நிலத்தில் விழ உழைத்து சம்பாதிக்கிறான். தேசத்தில் யுத்தம் போன்ற நெருக்கடி ஏற்பட்டால், வரியின் போரால் தன்னுடைய சம்பாத்தியத்தை கூட்டியோ குறைத்தோ கொடுத்து உதவி செய்யலாம். அப்படி யில்லாமலிருக்கும் போது, கூடுதலோ குறைச்சலோ அவனுடைய உழைப்பின் பலனை அவன் அனுபவிக்கவேண்டும் அல்லவா? இவைகளை எல்லாம் நினைக்கும்போது, இந்த விஷயம் மிகவும் லேசானதல்ல. நாயுடுவைப் பொருத்தமட்டில் தன்னுடைய சொத்தையெல்லாம் எந்த மக்களிடையே அவர் உதித்தாரோ அவர்களின் சுகவாழ்வின் பொருட்டும், ஜனோபகாரத்தின் பொருட்டும், ஏழை மக்களின் நலன் பொருட்டும், தன் சொத்தையெல்லாம் செலவிடுவார். வருமானவரி உத்தியோகஸ்தர்கள் தன் பேரில் சட்டப்பூர்வமாக

நடவடிக்கை எடுத்துக் கொண்டவுடன், தன் கேசை மிகவும் பிரசித்திபெற்ற வக்கீலான காலஞ்சென்ற சர் சிமான்லால் செடால்வாட் என்பவரை ஏற்படுத்தி வாதிக்க வேண்டுமென்று நாயுடு விரும்பினார். மிகவும் தீர்க்கமாக யோசித்து சர் செடால்வாட் "நான் உங்கள் கேசை நடத்தி அதற்காக உங்களிடமிருந்து நிறைய பீஸ் வாங்கி, அந்த பீஸ் பணத்தின் ஒவ்வொரு ரூபாயிலும் 15 அணாவை எதற்காக அரசாங்கத்திற்கு வரியாக கொடுக்க வேண்டும்"? என்று நாயுடுவை கேட்டார். நாயுடு இரண்டாவதாக பம்பாயில் மிகவும் பிரக்கியாதி வாய்ந்தவரும், சட்டத்தில் நிறைந்த அனுபவஞான முடையவருமான ஸ்ரீ கங்கா என்பவரை வக்கீலாக வைக்கலாம் என்று எண்ணி அவரிடம் சென்றார். சில அலுவல்களை உத்தேசித்து அவரும் கேசை வாதிக்க ஒத்துக் கொள்ள முடியவில்லை. இன்றைய தினம் உள்ள இந்திய காபினேட்டில் டாக்டர் அம்பேத்கார் அவர்கள் மெம்பராக வேலையை ஒத்துக் கொள்வதற்கு முன்னால் அவரிடத்திலும் நெருங்கிப் பார்த்தார். தானே வந்து நடத்த வேண்டுமென்ற அவசியமிருந்தால், அந்தசமயத்தில் தொழில் விஞ்ஞானியான நாயுடுவிற்காக அவருடைய கேசை வாதிக்க விரும்புவதாயும், தயாராயிருப்பதாயும் டாக்டர் அம்பேத்கார் அவர்கள் சொன்னார்கள்.

இதற்கிடையில் நாயுடு அவர்கள் தன்னுடைய வரி விஷயங்களை ஒரு முடிவுக்குக் கொண்டு வருவதைப் பொருத்தவரையில் தன்னால் எவ்வளவு தூரம் நன்றாக முடிவுசெய்ய முடியுமோ அவ்வளவையும் பல வழிகளிலே செய்யத் தலைப்பட்டார். நாயுடு சொல்லுவது உண்மை

என்று நம்பாமல் கேவலம் வருமானவரி உத்தியோகஸ்தர் களின் பேச்சை நம்பி ஒவ்வொரு காரியத்தையும் தவறு தலாகச் செய்துகொண்டுவரும் முறைக்கு அரசாங்கம் வந்துவிட்டது. இது நாயுடு அவர்களுக்கு ஏளனமாகவும் நகைக்கத்தக்கதாயும் தோன்றிற்று. இப்பொழுதுகூட இந்த அநீதியை எதிர்த்து சண்டை போடவும், இது அநியாயம் என்று தன்னால் முடிந்த அளவிற்கு அழுத்திச் சொல்லுவதையும் தவிற அவருக்கு வேறு புகலிடமும் இல்லை, போக்கிடமும் இல்லை. அவர் சில லட்சங்கள் பொறுமான கவர்ன்மென்ட் பாண்டுகளை எடுத்து மாணவர் களின் கையில் கொடுத்து, வீதியிலே செல்லும் ஏழைத் தொழிலாளர்கள் ஒவ்வொருவருக்கும் வெகுமதியாக ஆயிரம் ரூபாய் பொருமானமுள்ள பாண்டுகளையும் நூறு ரூபாய் பொருமானமுள்ள பாண்டுகளையும் கொடுக்கச் சொன்னார். அதுமாதிரியாக சில லட்சங்கள் பொறுமானமுள்ள கவர்மெண்டு பாண்டுகள் வழங்கப் பட்டன. நாயுடு அவர்கள் தன்னுடைய நெருங்கிய நண்பர்களிடம் சொன்னார் "நான் என்னுடைய பணத்தை எல்லாம், மக்களுக்குத்தான் கொடுப்பேனேயொழிய, அநீதியாக நடக்கும் அரசாங்கத்திற்கு அகாரணமாக கொடுக்கமாட்டேன்" என்று. அவர் மேலும் தன்னுடைய கம்பெனியில் நெடுநாட்களாக உழைத்துவரும் உண்மையான ஊழியர்களுக்கு சில லட்ச ரூபாய்களை கொடுத்தார். அவர்களின் சம்பளத்தை நிரம்பவும் அதிக மாக்கினார். அதன் காரணமாக நீங்கள் இப்பொழுதுகூட காணலாம், நிரம்பவும் குறைவான சம்பளம் வாங்குபவன் என்று கருதப்படும் ஒரு பியூன், 100 ரூபாய் சம்பளம் வாங்குகிறான். இதற்கு மேலாக அவர் அநேக வருஷங்கள்

நடத்திவந்த மோட்டார் கம்பெனிகளில் தனக்கிருந்த எஜமான அலுவல்களையெல்லாம், அந்தக் கம்பெனியில் உள்ள வேலைக்காரர்களுக்கே கொடுத்து விட்டார். அதி மேதாவியான நாயுடு தமாஷ் செய்யும் ஒரு மனிதர் என்று கூறினாலும் பொருந்தும். இன்றைய தினம் வியாபாரத்தை நடத்திவரும் கூட்டுறவுக் கம்பெனிகளின் டைரெக்டர் ஸ்தானத்தில்கூட அவர் தன்னுடைய அன்பிற்குப் பாத்திரமான இரண்டு நாய்களை வைத்திருக்கிறார்! எப்படி கம்பெனிகளில் வைத்திருப்பதற்குக் காரணம், நாய்கள்கூட கம்பெனி டைரெக்டராக இருக்கலாம் என்பதற்காகப்போலும். இதில் ஏளனம் என்ன? அவருக்கு நீதி வழங்க மறுத்தால், செய்கைகளிலே மிதமிஞ்சிக் காணப்படுவார். அது அவருடைய சுபாவம்!

பிறகு அவர் தன்னுடைய ஆஸ்தியில் ஒரு பகுதியை எடுத்து அந்தப்பணத்திற்கு ஒன்றுக்கும் உதவாத பலாக ஓட்டை உடசல் இரும்பு சாமான்களை வாங்கி அதை என்னுடைய வீட்டின் காம்பவுண்டிற்குள் போட்டு வைத்திருக்கிறார். அவைகள் மழையில் நனைந்து, வெய்யிலில் காய்ந்து, நாளுக்கு நாள் துருப்பிடித்துப் பாழாகின்றன. உண்மை என்னவென்றால், நீதியும் ஒழுங்கும் அற்றதனால், நம்பிக்கைவைக்க லாயக்கில்லாத வருமானவரி உத்தியோகஸ்தர்களை அவர் நம்பவில்லை; ஆதலால் தன் ஆஸ்தியை வரியாகக் கொடுப்பதைக் காட்டிலும், இதுமாதிரியாக தன்னிடமுள்ள ஒவ்வொரு பைசாவையும் விரயமாக்கிவிடுவது நலம் என்று அவர் கருதியதுதான். அதனால் அவருக்கு நிரம்ப கஷ்டம் உண்டாகிறதுமல்லாமல், நம் தேசத்திற்கு எவ்வளவு

பொருள் நஷ்டமுண்டாகிறது என்பதையும்கூட அவரால் கவனிக்க முடியவில்லை. லட்சக்கணக்கான ரூபாய்கள் பொறுமானமுள்ள மெஷின்களையும், ஆயுதங்களையும் அவர் தன்னுடைய மாளிகையில் வாங்கிப் போட்டு அவைகள், சூரிய வெப்பத்தினாலும், மழையாலும், நெருப்பாலும், இன்னும் என்னென்னமோ விதங்களினாலும் அடிபட்டுப் பாழாகின்றன என்பது நான் அறிந்தது.

நீதி வழங்கப்பட வேண்டும் என்பதற்காக அரசாங்கத்துடன் இந்த விதமான வழிகளிலே சண்டை போட்டுக் கொண்டிருக்கிறார். ஜியார்ஜ் பெர்னார்ட்ஷாவை ஒரு சமயம், அவர் ஒழுங்கான நடத்தையின் கோட்பாட்டிற்கு உள்ளடங்கி நடக்கிறாரா என்று கேட்டபோது, தன்னை போலீஸ்காரன் ஒழுங்காக நடந்துகொள்ள அநுமதிக்க மாட்டேனென்கிறான் என்று ஏளனமாகவும், சுபாவமாக உள்ள வேடிக்கை பேச்சினாலும் அமரிக்கையாக பதிலளித்தார். இன்றைய தினம் இந்த இந்திய உப கண்டத்திலே, அநீதியே அவதாரமெடுத்துவந்த அரசாங்க வரி வசூலிப்பவர்கள் நம் நாயுடுவை நேர்மையானதும் ஒழுங்கானதுமான பாதையிலிருந்து, தேசத்திற்கெதிராக புரட்சி செய்யும்படியான ஒரு மார்க்கத்திற்குத் திருப்பிக் கொண்டுபோகிறார்கள்! இந்தவிதமாக அவர் எந்த முடிவுக்காக இப்படி நடக்கிறார் என்பதை நம்மில் சில பேர்கள் ஓரளவிற்கு அறிந்திருக்கலாம். ஆனால் நாம் இப்பொழுது என்ன செய்யவேண்டும். கோத்தி சொல்லிப்போன சந்தர்ப்பத்தை மறுபடியும் கவனிப்போம்

"மக்கள் புரட்சி செய்தால், அவர்கள் எப்பொழுதும் நியாயமாகவே இருப்பார்கள்',.

சாதாரண உலகப்போக்கு இருப்பதா? அல்லது இறப்பதா? என்று ஒன்றும் தெரியாமல் திகைக்கும் நாயுடுவிற்கு ஒவ்வொரு செய்கையையும் அநீதியையே அடிப்படையாகக் கொண்டு ஆக்குகிற இந்த உலகத்திலே, சரித்திரத்திலேயே அநேக அட்டூழியங்களை புரிந்திருக்கின்ற இந்த உலகத்திலே நீதி என்ற ஒன்றைக் காண்போமா என்ற ஆசை மேலிட்டு இருதயம் கொழுந்துவிட்டு எரிந்துகொண்டிருக்கிறது!

# XIV

## இயந்திரக் கண்காட்சி

1948-ஆம் ஆண்டு ஜுன் மாதம் கோபால் பாக்கில் ஒரு தொழிற் கண்காட்சி சாலை சிறப்பாக நடைபெற்றது ஒரு நாளைக்கு சராசரி ஆயிரம் பேர் அதற்கு விஜயம் செய்தனர். நேருஜியின் உதகை விஜயத்தின்போது, இந்த காட்சியை திறக்கச் செய்யலாம் என்று எதிர்பார்க்கப் பட்டது. ஆனால் அதுமாதிரி நடக்க இயலவில்லை.

இந்தத்தொழிற் கண்காட்சிசாலை, நாயுடு அவர்களின் முயற்சியால் ஸ்தாபிக்கப்பட்ட இண்டஸ்டிரியல் லேபர் வெல்பேர் அஸோசியேஷன் லிமிடெட் மேற்பார்வையின் கீழ் நடத்தப்பட்டது. இயந்திரம் என்பது என்ன என்று அறியாத பாமர மக்களுக்கு, தொழிற்சாலைகளில் எப்படி மெஷின்களை உபயோகப்படுத்தப்படுகின்றன என்பதைப் பற்றியும், அவைகள் இந்த இயந்திர சகாப்தத்திலே மனித வர்க்கத்தின் முன்னேற்றத்திற்கு எப்படி ஊன்றுகோலாக உபயோகப்படுகின்றன என்பதைப் பற்றியும் எடுத்துக் காட்டவேண்டும் என்ற எண்ணத்துடனே இந்த காட்சி சாலை துவக்கப்பட்டது.

இந்தக் காட்சி சாலை நடந்துகொண்டிருக்குபோது இடையிடையே, பற்பல துறைகளிலே கீர்த்தியுடன் விளங்கும் தென் இந்திய பிரமுகர்களின் சொற்பொழிவுகள்

இருந்தன. அவைகளிடையே புகழ்பெற்ற விஞ்ஞானி சர். சி. வி. ராமன் அவர்களின் பிரசங்கம் குறிப்பிடத் தக்கது. அங்கேயேயுள்ள நாயுடுவின் சொந்த சினிமா தியேட்டரில் கல்விப் படங்களும் காண்பிக்கப்பட்டன. அவர் தன்னுடைய உலக சுற்றுப் பிரயாணத்தின்போது, விஜயம் செய்த எல்லா தேசங்களிலுமிருந்தும், பலவிஷயங் களைப்பற்றி எடுத்த கல்வி சினிமா படங்களையெல்லாம் இந்த தியேட்டரில் நிறைய சேமித்து வைத்திருக்கிறார். அவைகளைத் தொடர்ந்தாற்போல் போட்டுக் காண்பிப்ப தென்றால் 600 மணி நேரம் பிடிக்கும்!

நாம் இதுவரை அறிந்தபடி கோபால்பாக் என்பது நாயுடு அவர்கள் சாதாரணமாக வசிக்குமிடம், ஆனால் அவர் தொழிற் துறையிலும், விஞ்ஞானத் துறையிலும் எடுத்துக் கொண்ட முயற்சியும் செய்கையும், தன் வீட்டிலேயே வித விதமான பாக்டரிகளையையும், மெஷின்களையும் ஏற்படுத்த அவ்வளவு உயர்ந்ததும் அபாரமானதுமான நிலைமைக்கு படிப்படியாக அவரை ஏற்றிற்று. இதுமாதிரி யாக அங்கே ஒன்பது வகைத் தொழில்களை நிருவியிருக் கிறார் ஜூன் மாதம் 15 ந்தேதி நாயுடு அவர்கள் திறந்து வைத்த இந்தத் தொழிற் கண்காட்சி சாலை அமைக்கப்பட் டிருந்த கட்டிடம் 1948 ஆம் வருஷம் ஜூன் மாதத்தில் பத்தாவது தொழிற்சாலையாகச் சேர்த்துக் கட்டப் பட்டது. இந்த எல்லாக் கட்டிடங்களும், பூமிக்கடியிலேயே எலெக்டிரிக் கம்பிகளால் இணைக்கப்பட்டிருக்கின்றன. தவிர இந்தக்கட்டிடங்களில், ஒன்றிலிருப்பவர் மற்றதி லிருப்பவருடன் பேசவேண்டும் என்று நினைத்தமாத்திரத்

திலே நம்பரை திருப்பிவிட்டவுடன் தானாக இயங்கக் கூடிய டெலிபோன் கருவிகளாலும் இணைக்கப்பட்டிருக் கின்றன.

350 அடி நீளமும் 70 அடி அகலமுமாகக் கட்டப் பட்டுள்ள இந்தக் கட்டிடத்தின் ஹாலில் எதிரொலி கிடையாது; நிறைய வெளிச்சம், காற்று வசதி இவைகளுடனே சுகாதார முறைப்படி கட்டப்பட்டது; கண்ணுக்கு உகந்ததான வர்ண வேலைப்பாடுடன் கூடியது. இந்த வேலைப்பாட்டின் முக்கிய அம்சம் என்னவென்றால் காலையானாலும் சரி, மாலையானாலும் சரி நீங்கள் இந்த ஹாலில் நுழைந்துவிட்டிர்களானால் நிச்சியமாக உங்கள் நிழலை நீங்கள் பார்க்கவே முடியாது. இந்தக் கட்டிடத்தைக் கட்டிமுடித்தது தொழில் விஞ்ஞானியான நாயுடுவின் பெருமைக்கு சேரும். சாதாரணமாக ஒருவருக்கும் கிட்டாத புகழுக்குரிய ஒரு சிற்பி என்ற போற்றுதலுக்கும் உரியவர்.

சிறந்த முறையோடு கட்டப்பட்ட இந்தக் கட்டிடத் திற்குள் யாராவது நடந்து சென்றால், அநேக பெரிய பெரிய மெஷின்கள் அழகாக அணி வகுத்து வைக்கப் பட்டிருப்பதைக் காணலாம். அவைகள் நாயுடு அவர்களின் "உயிர் தோழர்கள்". ஏன்? நாயுடு அவர்களையே " ஒரு மெஷின்" என்று கூடச் சொல்லிவிடலாம்! அப்படி என்றால் நாயுடு அவர்களுக்கு விரோதிகள் யாரென்று சொல்லுங்கள்! நாயுடுவின் கனிந்த உள்ளத்தை நன்கு அறிந்திருப்பவர்கள் அவருடன் நெருங்கிப் பழகும் ஒரு

சிலர்கள். நான் நாயுடுவுடன் நெருங்கிய தொடர்பு வைத்துக்கொள்ளாவிட்டாலும், அவர் நண்பர்களிடம் இருந்து நம் மனது கரையும்படியான பல கதைகளைக் கேட்டிருக்கிறேன். இங்கே காட்சி சாலையில் வைக்கப் பட்டிருந்த மெஷின்களின் மொத்த மதிப்பு ஏறக்குறைய 25 லட்சங்கள் இருக்கலாம்.

இந்தக் கட்டிடத்திற்குள் ஒருவர், சிலவித ஆகாய விமான என்ஜின்கள், ரோல்ஸ் ராய்ஸ், (Rolles Royce) ப்ராட் அண்டு விட்னே மோட்டார் என்ஜின்களையும் இன்னும் பல ரக என்ஜின்களையும் காணலாம். ஆகாய விமான என்ஜின் எப்படி வேலை செய்கிறது என்பதை தெளிவாகக் காண்பிப்பதின் பொருட்டு ஒரு போர்டில் அவைகளைப் பிரித்து மாட்டிவைக்கப்பட்டிருக்கிறது. ஹைட்ராலிக் முறையை பயன்படுத்தி எப்படி விமானத்தைக் கட்டுப்படுத்துவது என்பதையும் இன்னும் சில முறைகளையும் தெளிவாகக் காணலாம் அந்த இடத்திற்குப் பொறுப்பாளியாக உள்ளவர் உங்களிடம் அந்த மெஷின்களைப்பற்றி மிகவும் எளிய முறையிலே எடுத்துச் சொல்லுவார். அதைப்பற்றி ஒன்றும் தெரியாத உங்கள் மனதிலேயே வெகு சீக்கிரத்தில் அவைகளின் உபயோகம் பதிந்துவிடும். படிப்பறிவில்லா பட்டிக்காட்டுப் பாவை கூட ஏரோப்ளேன் என்ஜின் எப்படி வேலை செய்கிறது என்பதைப்பற்றி எளிதாக தெரிந்துக்கொள்ள முடிந்தது. நூற்றுக்கணக்கான கிராமப்பெண்கள் கூட காட்சி சாலையைக்காண வந்திருந்தார்கள். இது உண்மை. இதேவிதமாக மோட்டார்கார் என்ஜின்களையும் ஒருவர் காணலாம். அவைகளைக்கூட அந்தக் காட்சி

சாலைக்குப் பொறுப்பாயுள்ளவர்கள், பார்வையாளர்களுக்கு விவரித்துச் சொன்னார்கள், மோட்டார்கார் ஒரு சிக்கலான மெஷின்: அதை ஓட்டுவது நிரம்பவும் கஷ்டம் என்று எண்ணியிருந்தவர்கள், காட்சி சாலையைக் கண்ணுற்று, மோட்டார்காரின் மெஷின், அது வேலை செய்யும் விதம் இவைகளைப் பார்த்து அறிந்துகொண்டவுடன்; பூ! காரில் இவ்வளவுதானா இருக்கிறது என்று வியந்தார்கள். இன்றைய நவீன இயந்திர உலகத்திலே உழன்று கொண்டிருக்கும் பெரிய பெரிய சிக்கலான மெஷின்களையெல்லாம், அதைப்போலவே சிறிய அளவிலே, மெஷினைப்பற்றியே கனவு கண்டிராத நம் மக்கள் எளிதிலே புரிந்து கொள்ளும் வகையிலே செய்து வைத்திருந்த மெஷின்களுடன் ஒப்பிட்டுக் காட்டி அதை சீக்கிரத்தில் நம் மனதிலே பதியும்படி செய்தார்.

பிறகு அங்கே வித விதமான டூஆல் (Do all) மெஷின்களையும் பார்க்கலாம் இவைகளெல்லாம் ஜெர்மானியர்களாலும், அமெரிக்கர்களாலும் தயாரிக்கப்பட்ட அதி அற்புத மெஷின்கள். அந்த தேசங்களுக்கு நாயுடு விஜயம் செய்தபோது, ஒரு குழந்தைக்கு விளையாட்டு சாமான்கள் வாங்க எப்படி ஊக்கம் உதயமாகுமோ அதுமாதிரி, கோவையிலேயுள்ள தன்னுடைய தொழிற்சாலைகளில் உபயோகப்படுத்தும் பொருட்டு, அந்த மெஷின்களையெல்லாம் மிகவும் கஷ்டப்பட்டு லட்சக்கணக்கான ரூபாய்களுக்கு வாங்கினார். இந்த மெஷின்கள் வெட்டும் வேலையையும், தேய்க்கும் வேலையையும், நயப்படுத்தும் வேலையையும், ஒட்டும் வேலையையும் செய்தன. ஒரு மெஷினால் ஒரு

அங்குலத்தை பாத்தாயிரம் பாகமாக்கி அதில் ஒரு பாகத்தைக்கூட அளக்க முடியும். அது மிகமிக நுணுக்கமாகவும், கணக்காகவும் அளக்கக்கூடிய ஒரு கருவி. இவைகளைத் தவிர வேறு மின்சாரத்தினால் கணக்கிடக் கூடியதும், பரிசோதிக்கக் கூடியதுமான கருவிகளும் இருந்தன. சிலவற்றால் மெஷின்களின் சக்தியையும் பிறவற்றையும்கூட கணக்கிட முடிந்தது. அநேகமாக இந்த மெஷின்களெல்லாம் ஒரு பெரிய தொழிற்சாலையில் உபயோகப்படுத்தக் கூடியதாக இருந்தன. அங்கே சாதாரணமாக இவைகளின் மூலம் மில்லிங் ஹாபிங் பிளேனிங்கு முதலிய வேலைகள் செய்யப்படும். இவைகளிலே சில மெஷின்கள்கூட நான்கு ஐந்து டன்கள் வரை நிறையுள்ளதாயிருந்தது. இவைகளுக்கிடையில் நாம் சலவை செய்யும் இயந்திரத்தையும் கண்ணுற்றோம். இருபது வருஷங்களுக்கு முன்பே இது அமெரிக்காவில் சர்வ சாதாரணமாக உபயோகத்திலிருந்தது. ஆனால் அதே பொருள் நம் தென் இந்தியாவிலே இன்றும் ஒரு புதுமையாகவும் அதிசயமாகவும் காணப்படுகிறது!

நாயுடு அவர்கள் சொந்தமாகக் கண்டுபிடித்த பொருள்களும் அங்கே வைக்கப்பட்டிருந்தன. நாயுடு கண்டுபிடித்தவைகளிலே 'மாக்ரோ ப்ளக்ஸ் டெஸ்டிங் யூனிட்' (Magro Plux Testing Unit) என்ற கருவியினால் ஏதாவதொரு இரும்பு சட்டத்திலோ அல்லது இரும்பு சாமானிலோ உள்ள வெடிப்புகளையும், நசுங்கல்களையும் மிகவும் சிறியதாயிருந்தாலும் கூட நுணுக்கமாக கண்டு பிடிக்க முடியும். காட்சி சாலையின் ஒரு பக்கத்திலே

இந்த மெஷின் வைக்கப்பட்டிருந்தது. இரண்டாவதாக, அங்கே ஆட்டோ சிலின்டர் ரீ போரிங் மெஷின் இருந்தது. இந்த மெஷின் இன்றையதினம் அமெரிக்காவில் 3,000 ரூபாய் கிரயத்தில் தயாரிக்கப்படுகிறது என்றாலும், நாயுடு அவர்கள் அதை 1,500 ரூபாய்களுக்குள் மிகவும் குறைந்த செலவில் செய்து முடித்தார். மூன்றாவதாக, அவருடைய புகழ்பெற்ற யூ. எம். எஸ். ரேடியோ. அதைப் பொருத்தமட்டில் ஒரு அதிசய காட்சிப் பொருளாகத் தோன்றிற்று. இந்த ரேடியோ பெட்டியில் 'வால்வை'த் தவிர மற்றவையெல்லாம் நாயுடு அவர்களாலேயே செய்யப்பட்டவை. நாயுடு அவர்களும் ஐந்து வால்வுகளைக் கொண்ட ரேடியோப் பெட்டிகளை ஒவ்வொன்றையும் எழுபது அல்லது எண்பது ரூபாய் செலவில் தயாரிக்கத் திட்டம் போட்டிருந்தார். ஆனால் வால்வைக்கூட இறக்குமதி செய்துகொள்வதற்கு இந்திய அரசாங்கத்தார் போதிய உதவிசெய்ய முன்வரவில்லை. ஆகையால் இந்த ரேடியோ தொழிற்சாலையை துடங்கி ஏழு வருஷங்கள் ஆகியும், அதற்காக எடுத்துக்கொண்ட முயற்சிகள் பாழாயின. பிறகு நாயுடு அவர்களின் கீர்த்திபெற்ற ரேசன்ட் ப்ளேடு காட்சி சாலையில் இருந்தது. ஒரு அங்குலத்தை இருநூறு பாகமாக்கி அதில் ஒரு பாகம் கனமுள்ள இந்த ப்ளேடு உலகத்திலேயே மிகவும் மெல்லியது என்று சொல்லும்படியாக இருந்தது. மேலும் இது மிகவும் சுலபமாக இருநூறு தடவைகள் க்ஷவரம் செய்கிறது என்று உபயோகிக்கிறவர்கள் சொல்லுகிறார்கள். இந்திய அரசாங்கத்தார்கள் அதற்கு வேண்டிய எஃகுவைக் கொடுக்க முடியாததினால், ப்ளேடு உற்பத்தியை நாயுடு




யு. எம். எஸ். ரேடியோ தொழிற்சாலை



(13) Clock with 6 feet dial and 4 faces made in the U. M. S. Radio Factory, "Gopal Bagh" (1948)

யு. எம். எஸ். ரேடியோ பாக்டரியில் செய்யப்பட்ட 6 அடி சதுரமும் 4 முகங்களும் கொண்ட கடியாரம்

கைவிடவேண்டியதாயிற்று. இந்த ப்ளேடு லக்ஷ்மணபுரி தொழிற் கண்காட்சியிலும், 1936 – 37-ல் ஜெர்மனியில் நடந்த லீப்ஸி சந்தையிலும் முதற் பரிசுகள் அடைந்தது.

அங்கே என்னுடைய கவனத்தைக் கவர்ந்த ஒரு காட்சிப் பொருள் என்னவென்றால், நாயுடு கண்டுபிடித்த ஒரு சிறிய விளையாட்டு பொம்மை மோட்டார்கார்தான். அவர் அதற்கு மோட்டாரைப் போலவே சிறிய அளவில் ஒரு என்ஜினை செய்து அதையும், நுண்ணிய பிளக்குகள், வயர்கள் முதலானவற்றையும் மாட்டி இருந்தார். இதை ஓடவிட்டவுடன், ஒரு அவுன்ஸ் பெட்ரோலுக்கு இந்த பொம்மைக் கார் ஒரு மைல் தூரம் ஓடிற்று. சரி, இந்த அற்ப விஷயம் இதைப் பொறுத்த அளவில் ஒன்றும் இல்லாததுதான். ஆனால் நாயுடு அவர்கள் சிறந்த வகையில் சிக்கனமான செலவில், எளிய முறையில், எவரும் கையாளக்கூடிய அளவில், சரசமான விலையில் ஜனங்கள் உபயோகப்படுத்தும் மோட்டார் காரைச் செய்யமுடியும் என்ற ஒரு அசைக்கமுடியாத உண்மையை எடுத்துக் காட்டிற்று. அவர் ஒரு மோட்டார் தொழிற் சாலையை ஆரம்பிக்க விரும்பியபோது, இந்தியாவின் ஆட்சி பீடத்தில் அப்போது அமர்ந்திருந்த ஆங்கிலேய அதிகார வர்க்கம் அதற்கு வேண்டிய மூலதன சம்பந்தமான உத்திரவை கொடுக்க மறுத்துவிட்டது.

பிறகு, நாயுடு தன் தொழிற்சாலையில் செய்த பெரிய கண்ணாடி பிளேட்டுகளும் காட்சி சாலையில் காணப் பட்டன. நாயுடுவால் கண்டுபிடிக்கப்பட்ட கூட்டல் கணக்கு போடும் இயந்திரமும் அங்கே காணப்பட்டது.

பிறகு நாயுடு அவர்களால் கண்டுபிடிக்கப்பட்டவைகளில் மிகவும் சிறந்தது என்று கருதப்படும் மோட்டாரின் அதிர்ச்சியை சோதிக்கும் இயந்திரம் (Auto Vibrator Testing Machine), காசைப் போட்ட மாத்திரத்தில் பாடக்கூடிய இயந்திரம் (Slot Singing Machine), ஆரஞ்சு ரசம் பிழியக்கூடிய சாதனம், காமிராவில் ஏற்படும் தூர வித்தியாசங்களைச் சரிப்படுத்தும் கருவி (Camera Adjuster) இன்னும் இதைப்போலுள்ள சுமார் 80 வகை கண்டுபிடிப்புகளில் முக்கியமானவைகளையெல்லாம் ஒருவர் கண்ணுற்றிருப்பார். ஸ்ரீமான் நாயுடு அவர்களுடைய கண்டுபிடிக்கும் மேதாவித் தன்மையினாலும், சலிப்புராத உழைப்பினாலும் எப்பொழுதும் ஏதாவது ஒன்றில் சுறு சுறுப்பாக வேலை செய்துகொண்டிருக்கும் அவருடைய இரண்டு உறமேறிய கைகளினால் ஆக்கப்பட்ட பொருள்களே இவைகள்.

இந்த காட்சி சாலையைப் பார்க்கவந்தவர்களிலே ஒருவரான சர். சி. வி. ராமன், அதைச் சுற்றிப் பார்த்த பிறகு "இந்த காட்சிசாலை முழுவதும் நிகரற்றதாயிருக்கிறது" என்று என்னிடம் சொன்னார். அவர் ஒரு வார்த்தைக்கூட அபரிமிதப்படுத்திச் சொல்லவேண்டும் என்பதற்காகச் சொல்லவில்லை. நானே இதைப்போலுள்ள காட்சிகளை அமெரிக்காவிலும் மற்றும் மேலைய நாடுகளிலும், ஜப்பானிலும் பார்த்திருக்கிறேன். ஆனால் இந்தியாவிலேயே இதைப்போலுள்ள காட்சியில் இதுதான் முதன்மையானது. அப்படியில்லாவிட்டாலும் நம் தென் இந்தியாவிலேயாவது முதன்மையானது என்று நான் பூரணமாக நம்புகிறேன். இன்றைய உலகத்திலுள்ள

நவீன தொழிற்சாலைகளிலே தினசரி வேலை செய்து கொண்டிருக்கும் சில முக்கியமான மெஷின்களின் மதிப்பைப் பற்றி சர்வ சாதாரண மனிதன்கூட தெளிவாகவும் சுலபமாகவும் அறிந்துகொள்ளும்படி விரிவாகச் சொல்ல முடிந்தது. இதற்கிடையில் ரொம்ப பேர்கள் இந்த மெஷின்களெல்லாம் இரகசியமென்றோ அல்லது தம்மால் அறிய முடியாத இரகசியமென்றோ தமக்குள் நினைத்திருக்கக்கூடும். மெஷின்களை உற்பத்திசெய்து உபயோகிக்கும் நாயுடு இப்பொழுது யார் அவருடைய காட்சிசாலையைக் கண்ணுற்றார்களோ அவர்களுக்கு இந்த மெஷின் ஓரளவிற்கு இரகசியமாக இருந்தாலும், அவைகள் அறியமுடியா இரகசியமில்லை என்பதை நிரூபித்துவிட்டார்.

❋

## XV

## பின் குறிப்பு

இதுவரை நான் இந்த புத்தகத்தின் கதா நாயகரும் கண்டுபிடிப்பாளரும் விஞ்ஞானியுமான நாயுடுவைப் பற்றி நீங்கள் நன்றாக தெரிந்துக்கொள்ளும்படி கண்ணாடியில் காண்பதுபோல் தெளிவாக எடுத்துச் சொன்னேன். அவர் இப்பொழுதுங்கூட ஓயாமல் உழைத்துக்கொண்டும், வருத்தப்பட்டுக்கொண்டும், சிரித்துக்கொண்டும் வேடிக்கை செய்துகொண்டும் காலத்தைக் கழித்துவருகிறார். அவருடைய உயர்ந்த நோக்கங்களும் அவைகளில் அடங்கி இருக்கின்றன. இந்த மனிதரைப்பற்றி பூராவும் விவரிக்க முடியாவிட்டாலும் ஓரளவு உங்களுக்கு எடுத்துச் சொன்னேன். அவரைப்பற்றி தீர்க்கமாக எழுதுவ தென்றால் அது என்னைப்போல் உள்ளவர்களுக்குச் சாத்தியமில்லை. டைப் அடிக்கும் மெஷினுக்கு முன்னால் உட்கார்ந்துகொண்டு அப்படியே நினைவுக்கு வந்ததை டைப் அடித்த செய்திகளே இவைகள். நான் படிக்கும் போது மேஜையின் மேலுள்ள நாயுடுவின் படத்தை அடிக்கடி பார்ப்பதுண்டு. ஆழ்ந்த கருத்துக்கொண்ட பார்வை, கோபத்துடன் கூர்மையான பார்வை, பிரகாசிக்கும் பார்வை, இவைகளெல்லாம் அவர் படத்தில் உள்ள அந்த இரண்டு கண்களிலிருந்து என்னை உற்று நோக்கும். "நீங்கள் இதையெல்லாம் எதுக்காக செய்கிறீர்கள்?" என்று அவர் என்னை அடிக்கடி கேட்பதுபோல்

என் நினைவுக்கு வரும். அவருக்கு என்ன பதில் சொல்லு வதென்று எனக்குத் தெரியவில்லை; ஆனால் மற்றவர்கள் கேட்கும் கேள்விகளுக்கு பதில் கொடுக்க முடியும். வைஷ்ணவ சமயாச்சாரியரான இராமாநுஜர் ஒரு சமயம் பேரின்பத்தை அடையும் மார்க்கத்தை அறிந்ததாகவும், அந்த வழியைப்பற்றி பூலோகத்திலுள்ள ஒவ்வொருவ ரிடமும் உடனே சொல்லிவிடவேண்டும் என்ற ஆசை அவருக்கு எழும்பி அதை அடக்கமுடியாமல் தன்னைச் சுற்றியிருந்தவர்களிடம் எல்லாவற்றையும் உடனே கூறினார். இந்த விபரம் நம்மிடையே சொல்லிக்கொள்ளப் படுகிறது. நான் மேதாவியுமல்ல, தெரியாததை தெரிந்த தாகப் பாவித்தவனுமல்ல. நம்முடைய நாட்டில் உதித்த நாயுடுவை போலுள்ள ஒரு மேதாவியை நான் அறிந்தவுடன் எனக்கும் அந்த இராமாநுஜரைப்போல் ஏதோ ஒரு விதமான அவசரப்புத்தி தோன்றிற்று. அவரைப்பற்றி மற்ற தேச மக்களுக்குச் சொல்ல ஆவல் கொண்டேன். நாயுடுவை நன்றாய் அறிந்துகொண்டபிறகு நாமும் அவரது ஒப்புயர்வற்ற செய்கைகளை நம் நாடு பூராவிலும் உபயோகப்படுத்தி முன்னேற்றம் அடையச்செய்ய வேண்டுமென்ற இடைவிடாத எண்ணங் கொண்டேன். இந்த ஆசையை தவிர்க்க முடியவில்லை. ஆகையால் அதை தீர்த்துக்கொள்ள வேண்டியதாயிற்று. இதன் பலனாக இந்த புத்தகம் வெளிவந்தது.

இப்படி புத்தகம் எழுதிக்கொண்டிருக்கும்போது எனக்கு முன்னால் எமில் லட்விக்கினுடைய "மேதாவியும் நடத்தையும்" (Genius & Character) என்ற புத்தகம் தென்படுகிறது. நல்லது. அந்த இரண்டு குணங்களையும்

இந்த புத்தகத்தின் கதாநாயகராகிய நாயுடுவிடம் நான் காணுகிறேன். மேலும் என்னுடைய மேஜையின் மேலுள்ள மற்றொரு படம் சிறந்த எழுத்தாளரான பெர்னாட்ஷா அவர்களுடையது. அவர் மேதாவித் தன்மையோடும், கண்ணியமான நடத்தையோடும் கூடிய குறிப்பிடத்தக்க ஒரு உதாரண புருஷர். அயர்லாந்தில் உதித்த கியாதிவாய்ந்த இந்த ஷாவுடன், இந்தியாவில் உதித்த இந்த திறமைவாய்ந்த விஞ்ஞானியை ஒப்பிட விரும்பவில்லை. ஆனால் இவர்கள் இருவருக்குமிடையில் பொதுவாக சில சிறந்த குணங்கள் தென்படுகின்றன. இருவரும் வெவ்வேறு துறைகளில் கவனத்தைச் செலுத்தினாலும், இவர்கள் இருவரும் ஒரு பொதுப் பள்ளியிலாவது முறையாக படித்துப் பட்டம் பெற்றவர் கள் அல்ல. ஆனால் நாம் நன்கு மதிக்கும்படியான அளவிற்கு சிறந்த முறையிலே அவர்களுக்கு திறமை அமைந்திருக்கிறது. இந்த இருவரும் நீதியைத் தேடிக் கொண்டு அலைபவர்கள்தான். மனித வர்க்கத்திற்கு நியாயத்தை வழங்கவைக்க வேண்டுமென்று உரிமையோடு போராடும் வீரர்கள். ஒரே ஒரு வித்தியாசத்தைத்தான் இருவர்களிடையிலும் நான் காணமுடிந்தது. அந்த வித்தியாசமும் ஏன் எழும்பிற்று என்றால், தீர்க்கதரிசி களை அவர்கள் வாழ்நாளிலேயே நன்கு அறிந்து அவருக்கு வேண்டிய மரியாதைகளைச் செய்யக்கூடிய மனிதர்க ளிடையே பெர்னாட்ஷா இருப்பதால் அவருடைய உயர்வு நன்கு ஸ்தாபிதமாயிற்று. நாயுடு அவர்களின் புகழ் ஸ்தாபிதமாகவில்லை. காரணமென்ன? நம் ஜனங் களுக்குத்தான் ஒரு தீர்க்கதரிசியை வாழ்நாளில் கௌரவிக்க வேண்டுமென்ற எண்ணம் கிடையாதே!

என்னுடைய மேஜையின் மேலுள்ள நாயுடுவின் படம் என்னை கூர்ந்து பார்க்கும் முறையில் மாத்திரம் இருக்கவில்லை. ஆனால் என்னுடைய நினைவுகளை கல்கத்தாவிலிருந்து வெகு தூரத்திற்குக் கடத்திச் செல்லுகிறது. சில வருஷங்களுக்கு முன்பு சிலசமயம் இரண்டு மூன்று நாட்கள் நாயுடுவுடன் உட்கார்ந்துக்கொண்டு பேசிக் கொண்டிருந்தது என் நினைவுக்கு வருகிறது. கோபால் பாக்கிற்கு விருந்தாளியாக வரும் அநேக நண்பர்களுடன் அவர் சரசமாக சல்லாபம் செய்துகொண்டிருப்பதும் என் நினைவிற்கு வருகிறது. சொற்பொழிவுகள் ஆற்றும் போது அவருடைய உருவம் என் மனத்திரையிலே நிலவுகிறது. கோயமுத்தூரில் அவர் நடத்திவந்த இஞ்சினீரிங் பள்ளி மாணவர்களுக்கு, தொழிற்கல்வி அவர் சொல்லிக் கொடுக்கும் முறையும் என் கவனத்திற்கு வருகிறது. விவேக புத்தியுடன் விஷமத்தனமாக ஒரு ரசமான விளையாட்டினால் நம் எல்லோரையும் அவர் சிரிக்க வைக்கும் விதமும் நினைவுக்கு வருகிறது. இந்த விஞ்ஞானி நிரம்பவும் நுண்ணிய மனப்பான்மையுடன் தனிமையாக உட்கார்ந்துகொண்டு பல பிரச்னைகளால் தன்னுடைய மூளைக்கு வேலை கொடுத்துக்கொண்டிருப்பது என் கண்முன் தெரிகிறது. அப்பொழுது அவருடைய மெல்லிய விரல்களுக்கிடையில் சிகரெட்டுக்குப் பின் சிகரெட் வந்துக்கொண்டிருக்கும். அவருடைய மெல்லிய உதடுகளுக்கு இடையில் வரும் புகை மேகக் கூட்டங்களைப்போல் அறை பூராவிலும் பரவும்.

யுனைடெட் மோட்டார்ஸ் கட்டிடத்திலுள்ள தன்னுடைய ஆபீசில் உட்கார்ந்துகொண்டு வேலை செய்கின்ற விதம் இன்றுங்கூட நன்றாக என் கவனத்துக்கு

வருகிறது. அப்பொழுது அவர் தன்னுடைய 'டைப்' அடிக்கும் பெண் குமாஸ்தாக்களைக் கூப்பிடுவார். அவர்கள் ஒருவர் பின் ஒருவராக வருவார்கள். நாயுடு அவர்கள் அன்றையதினம் அனுப்பவேண்டிய பதில்களுக்கும் கடிதங்களுக்கும் அவர்களிடம் 'வாசகம்' சொல்லிக்கொண்டிருப்பார். இடையில் கம்பெனி காரியஸ்தர்களுக்கு பேட்டியும் அளிப்பார். அதே சமயம் ஒரு நண்பரை வரவேற்று அவருடன் அந்நியோன்னியமாக சம்பாஷணை நடத்துவார். சில வினாடிகளுக்குப் பிறகு அவருடைய வேலையாட்கள் செய்த குற்றத்திற்காக சந்தோஷ முகபாவனையைமாற்றி கடுமையாகக் கண்டிப்பார். நாயுடுவின் பெரிய புத்தக நிலயங்களை அவருடன் சென்று நான் பார்வையிட்ட அந்த நாள் என் நினைவிற்கு வருகிறது. அந்த லைப்ரரியில் தொழில் விஷயங்களையும் இன்னும் இதர விஷயங்களையும் கொண்ட பழைய பத்திரிகைகள் சஞ்சிகைகள் டன் கணக்கிலே இருந்தன. அவர் அங்கே சேமித்துவைத்திருந்த ஆயிரக்கணக்கான புத்தகங்களில் சிலவற்றை நான் பார்த்ததும் என் ஞாபகத்திற்கு வருகிறது. அவர் நேஷனல் எலக்டிரிக் ஒர்க்ஸில், வேலை செய்யும் மிகப் பெரிய ஹாலில் கிரீஸ் தோய்ந்த கையுடன் உட்கார்ந்துக் கொண்டு ஆயுதங்களை எடுத்து வேலை செய்வதும் என் கண்முன் தெரிகிறது. தன்னுடைய விருந்தாளிகளுடன் சாப்பாட்டிற்காக மேஜையின்முன் உட்கார்ந்துக்கொண்டு, மாமிசமற்ற உணவின் விசேஷ நன்மையையும், ஒவ்வொரு பதார்த்தத்தின் விசேஷ தன்மை, காலரி, வைடமின் வகையராக்களைப்பற்றியும் பேசிக்கொண்டிருப்பது என்

நினைவிற்கு வருகிறது. நல்லது, நாயுடு அப்படிப்பட்ட ஒரு வகையைச் சேர்ந்தவர். அவர் ஒரு முழு மனிதர் முழு வாழ்க்கையோடு கூடிய ஒரு மனிதர். வாழ்க்கை முழுவதையும் உபயோகமான காரியங்களின்பொருட்டு பயன்படுத்தக்கூடிய ஒரு மனிதர்.

கோபால் பார்க் பங்களாவில் நாயுடுவின் விருந்தாளியாகத் தங்குவது. அதைப் பொருத்தமட்டில் ஒரு அனுபவம். ஒருவர் வீட்டிற்கும் விருந்திற்காக செல்ல விரும்பாதவர்கள் கோஷ்டியைச் சேர்ந்தவன் நான். ஏனென்றால் எனக்குத் தங்குவதற்கு ஒரு தனிப்பட்ட வசதி வேண்டியிருக்கும். தவிற எனக்கு எங்கேயாவது தங்கவேண்டும் என்றால் தனிப்பட்ட இடமாகவும் இருக்கவேண்டும். ஒரு சமயம் நான் நாயுடுவுடன் தங்குவதற்காக கோபால் பாக்கிற்குச் சென்றேன். எதிலும் குற்றம் கண்டு பிடிக்கும் என்னைப்போலுள்ள தனிப்பட்ட மனிதனாலேயே கோபால் பாக்கிலுள்ள வசதியை மெச்ச முடிந்தது. தென் இந்தியாவிலே இவ்வளவு வசதியுடன் இந்த ஒரு வீடுதான் இருககிறது என்று நான் உணர்ந்தேன். வரும் விருந்தாளிகளுக்கு அவரவர்கள் சவுகரியங்களுக்கு ஏற்றபடி வசதிகள் செய்துவைத்திருக்கிறார். என்னுடைய விருப்பங்களைச் சொல்லாமலிருந்தும், என் மனதை அறிந்து எனக்கு வேண்டிய சவுகரியங்களை செய்து கொடுத்த ஒரு அதி மேதாவி. அங்கு எனக்கு ஒரு அறை கொடுக்கப்பட்டது. என்க்கு வேண்டியவைகளெல்லாம் அங்கே காணப்பட்டன. நியூயார்க்கில் இராஜ போகங்களை உடையதான ரிட்ஸ் கோல்டன் (Ritz Colton) முதலிய ஹோட்டல்களில்கூட, நான் கோபால் பாக்கில் அடைந்த

வீட்டிலிருப்பதுபோன்ற உணர்ச்சி அடையவில்லை. கோபால் பாக்கில் இந்திய பண்பாடும் மேல்நாட்டு வசதிப் பொருள்களும் கலந்திருப்பதைக் காணலாம். இவைகள் எல்லாம் சாதாரணமாக ஒருவர் விரும்புவது.

அறைகளில் தேவையுள்ள இடங்களில் மின்சார விசிறிகளும், விளக்குகளும் பொருத்தப்பட்டிருக்கின்றன. பெரிய நிலக்கண்ணாடிகள், சுத்தமாக கழுவும் தொட்டிகள், கப்போர்டு, மெத்தை வைத்த சோபாக்கள், அருகில் மெல்லிய தோல்களினால் தைக்கப்பட்ட சாய்வு நாற்காலிகள் இவைகள் எல்லாம் அங்கே காணப்பட்டன. ஒரு பொத்தானை அழுத்தின மாத்திரத்தில் உங்கள் தேவையை கவனிக்க வேலைக்காரர்கள் வருவார்கள். வெவ்வேறு வேலைக்காரர்களைக் கூப்பிடவேண்டுமென்றால், எந்த பொத்தானை அழுத்தவேண்டும், எத்தனை தடவை அழுத்தவேண்டும் என்பதெல்லாம் அங்கிருக்கும் ஒரு குறிப்பு போர்டில் காணப்படும். ஒவ்வொரு விருந்தாளிகள் அறையுடனும், குளிக்கும் அறையும் சேர்த்துக் கட்டப்பட்டிருக்கிறது. தரையை சலவைக் கல்லால் இழைத்திருப்பதாலும், மற்றும் நவீன சவுகரிய சாதனங்களைப் புகுத்தியிருப்பதாலும் அந்த அறைகள் மிகவும் சுத்தமாக இருக்கின்றன. சாப்பாட்டிற்கு ஒரு குறிப்பிட்ட நேரம் இருக்கிறது. அப்பொழுது நீங்கள் நாயுடுவுடன் சாப்பிட அழைக்கப்படுவீர்கள். கோபால் பாக்கில் ஒவ்வொரு நாளும் விருந்தாளிகள் வருவதும் போவதுமாக இருக்கிறார்கள். அவர்கள் ஒவ்வொருவரும் தனக்கு நாயுடுவால் கொடுக்கப்பட்ட உண்மையான உபசாரத்தைக் கண்டு புளகாங்கிதமடைகிறார்கள். என்னுடைய

உண்மையான மதராஸ் சிநேகிதர்கள் ஒரு கேள்வி கேட்கிறார்கள். மதராஸ் வந்தால் ஏன் தங்களுடன் தங்காமல் ஹோட்டலில் தங்குகிறேன்? என்று. அப்போது நான் அதை மனதில் நினைத்து சிறு நகை காண்பிப்பேன். தென் இந்தியாவில் உள்ள ஒவ்வொரு வீடும் கோபால் பாக்கைப்போல் விருந்தாளிகள் விரும்பும் ஒரு சுவர்க்கமாக இருந்தால்! நான் ஏன் என் நண்பர்களுடன் தங்கக்கூடாது என்று மனதில் நினைத்துக் கொள்ளுவேன். இது வழக்கமாகிவிட்டது.

நான் மாத்திரந்தானா நாயுடுவிற்கு அநுகூலமாக இந்த எண்ணங்கொண்டிருக்கிறேன்? இல்லை. நாயுடுவைப் பற்றி கொண்டுள்ள அபிப்பிராயத்தை ஒத்துக்கொள்ளும் ஆயிரக்கணக்கான நண்பர்களும் இருக்கிறார்கள் என்பது எனக்கு நன்றாகத் தெரியும். அவரைப்பற்றி மாறுபட்ட அபிப்பிராயங்களைக்கூட சிலர் கொண்டிருக்கலாம்! அவருக்கு எவ்வளவு நண்பர்கள் உண்டோ, அவ்வளவு விரோதிகளும் உண்டு! ஆனால் நண்பர்கள் விரோதிகள் எல்லோருமே நாயுடுவை உயர்ந்த முறையிலே பாராட்டுகிறார்கள். நாயுடுவைப்பற்றி சொல்லப்பட்ட அபிப்பிராயங்களில், நமது ஆசியா கண்டம் பெற்றெடுத்த இணையில்லாத விஞ்ஞானி — நம் சர் சி. வி. ராமனைத்தான் சொல்லுகிறேன் — சமீபத்தில் நாயுடுவை அலங்கரித்த புகழுரைகள் என்னுடைய கவனத்தை கவர்ந்தன. இந்த வருஷம் மார்ச்சு மாதம் சர் சி. வி. ராமன் கோவையில் இருந்தார். அவருக்கு நாயுடு அவர்களால் தேநீர் விருந்து கொடுக்கப்பட்டது. சர் சி. வி. ராமன் அவரைப்பற்றி சில வார்த்தைகள் சொன்னதாவது :—

"...நான் அவருடைய அறைக்குச் சென்றேன் உடனே அவர் பேரில் எனக்கு அன்பு ஏற்பட்டது. ஏனென்றால் நீங்கள் இப்பொழுது காண்பதுபோல் இந்த ஒற்றை நாடியான உடம்பில், நாயுடுவைபற்றி புகழ்ந்து பேச நான் அநேக பெருந்தன்மைகளைக் காணுகின்றேன். நம் இளைஞர்களைப்பற்றி எடுத்துக்கொண்டிருக்கிற பெரிய பொறுப்பும், மாணவர்கள் வாசிப்பதற்காக இங்கே கட்டிடங்கள் ஹாஸ்டல் கட்டிக்கொடுத்திருப்பதும், மற்றும் மாணவர்களை எல்லா வேலைகளிலும் கைதேர்ந்தவர்களாகச் செய்யவேண்டுமென்று செய்கிற உதவியும் ஆகிய இவைகள் என் கவனத்தைக் கவர்ந்தன. ஆகையால்தான் அவரை அதிசயிக்கத்தக்க ஒரு உதாரண புருஷராக கருதுகிறோம். நான் விஞ்ஞானத்தில் மட்டும் என்னுடைய கவனத்தை எப்பொழுதும் செலுத்திக்கொண்டிருப்பதில்லை. ஒரு உபாத்தியாயராகவும் இருந்து நம் இளைஞர்களுக்கு உதவிசெய்ய முயன்றுகொண்டும் இருக்கிறேன். விஞ்ஞானத்திற்காகவே என் முழு கவனமும் செலவிடப்படுகிறது. அந்த ஒரு காரணத்தாலேயே நாயுடுவைப்பற்றி நான் கவனிக்கிறேன். மற்றொரு விஷயம் என்னவென்றால் அவர் பள்ளிக்கு சென்று பாடம் பயிலவில்லை. நான் இதை சந்தேகிக்கிறேன்! ஆனால் நாம் வியக்கக்கூடிய அளவிற்கு அவரிடத்தில் அறிவுத்திறன் மலிந்திருப்பதை நான் என்னுடைய க்ண்களால் காணுகிறேன். அவர் எல்லாவற்றையும் நன்கு அறிந்தவர்; மோட்டார் தொழிலை மாத்திரமல்ல, மற்ற எல்லா தொழிலையும் தெரிந்தவர். அவரிடம் நேற்று நான் மாட்டிக்

கொண்டேன். நேற்றைய இரவு நான் அவருடைய ஹாஸ்டலுக்குச் சென்றிருந்தேன். மாணவர்களிலே ஒருவன் எப்படி ஐயா நீங்கள் வைரத்தில் துவாரம் செய்கிறீர்கள் என்று கேட்டான். அதை சரியாகச் சொல்ல எனக்கு நினைவில்லை. ஆனால் நாயுடு அவர்கள் அந்த முறையை மாணவர்களுக்கு விளக்கிச் சொன்னார்கள். அவர் சொன்னது முற்றிலும் சரியான வழி. நாயுடு தன்னுடைய பதிலை உடனேயும் சரியாயும் சொன்னார். அந்த சம்பவம் என் மனதிலே நன்றாகப் பதிந்துவிட்டது. கோவை வாசிகள் தங்களிடையே இப்படிப்பட்ட ஒரு மனிதர் வசிக்க எவ்வளவு பாக்கியம் செய்திருக்கிறார்கள் என்று என்னை நினைக்கச் செய்கிறது. அவர் சிறந்த அறிவோடுகூடிய ஒரு மனிதர்மட்டுமல்ல, அமெரிக்கர்கள் கடைபிடிக்கும் "அறிவது எப்படி" என்பதுபோல நாயுடு அவர்கள் ஒரு பொருளைக் கண்ணுற்றால் அதைப்பற்றி நன்றாகத் தெரிந்துக் கொள்ளுகிறார். அவர் காரியத்தை நேரடியாக செய்கையில் செய்துகாட்டக்கூடியவர். போன தடவை நான் இங்கு வந்திருந்தபோது அவருடைய உள்ளத்தில் ஒத்த மனப்பான்மையைக் கண்டேன். விரோதிகளைச் சம்பாதித்துக் கொள்ளுவதில் நான் நிரம்பவும் தேற்சி பெற்றவன். நாயுடு அவர்களுக்கு கூட அந்த சக்தியிருக்கிறது. ஆராயும் அறிவுத் திறனும், காரியத்தை செய்ய வல்லமையும் உடையவர்களுக்கு இது சாதாரணமாக ஏற்படும் ஒரு சுதந்திரம். இந்த தேசத்திலுள்ள ஜனங்கள் வேலையை எப்படிச் செய்வது என்று உபன்யாசம் மட்டும் செய்வார்கள்; தங்கள் மனதில் உள்ளதே

தங்களுக்கே தெரியாது. அதனால் ஒரு சிலர் மாத்திரம் தாங்கள் எண்ணியபடி வேலையை முடிக்க முடியும். இது நாம் அறிந்த விஷயம். ஒரு வேலையை முடிக்க சாத்தியமான மனோதிடமோ அல்லது அதற்கு வேண்டிய இதர சாதனங்களோ இருந்தும் பிரயோஜனமில்லை. ஆனால் அதோடுகூட, அந்த வேலையை எப்படி செய்யவேண்டுமென்ற ஊக்கம், சங்கல்பம், விடா முயற்சி, "அறிவது எப்படி" என்ற குறிக்கோள் ஆகிய இவைகளும் இருக்கவேண்டும்."

"அவருக்கு பழையகால சம்பிரதாயத்தில் நம்பிக்கையில்லை. தற்காலத்திற்கு ஒத்த பண்பாட்டிற்கேற்ப ஒவ்வொன்றும் இருக்கவேண்டும் என்று விரும்புகிறார். இன்றையதினம் மத்தியானம் அவர் எனக்கு பௌதிக சாஸ்திரம், இரசாயன சாஸ்திரம், இஞ்ஜினீரிங் கல்வி, வீட்டிற்கு வேண்டிய பாக சாஸ்திரம் முதலிய 60 விஞ்ஞான விஷயங்களைப் பற்றியெல்லாம் சினிமாப்பட மூலமாக தமிழிலேயே கற்பித்தார்......"

"இந்த தேசத்தில் பிறந்த இந்திய மக்களின் விசேஷத் திறமையை நாயுடு அவர்கள் நடைமுறையில் காட்டுகிறார். அவர் ஒரு அரிய மனிதர். எதிர் காலத்தை அறியும் திறமையும் சக்தியும் உடையவர். மற்றைய மக்களின் உன்னத வாழ்க்கைக்கு உதாரணமாக விளங்கக்கூடியவர்...." என்று சர் சி. வி. ராமன் சொன்னார்.

மேலும் இந்தியாவின் நிதி மந்திரி சர் ஆர். கே. ஷண்முகம் செட்டியாரவர்களால் நாயுடுவைப்பற்றி குறிப்




கனம் வி. வி. கிரியின் ஆர்தர் ஹோப் பாலிடெக்னிக் விஜயத்தின்போது




ஆர்தர் ஹோப் காலேஜ் ஹாஸ்டல். கனம் V. V. கிரி, G. D. நாயுடு

பிடப்பட்ட சில வார்த்தைகளை கூறுகிறேன். இவை வாசகர்களுக்கு உற்சாகம் அளிக்கக்கூடியவை. செட்டியார் அவர்கள் சொன்னதாவது:—

"ஸ்ரீ நாயுடு அவர்கள் ஒரு மந்திரியை வரவேற்று, அவருக்கு ஒரு தேநீர் விருந்து கொடுத்து, அரசாங்கத்தை எப்படி நடத்தவேண்டுமென்று போதிக்கிறார். கல்வி இலாகா உப அத்தியக்ஷகருக்கு வரவேற்பளித்து அவரிடத்தில் கல்வி ஸ்தாபனங்களை எப்படி நடத்தவேண்டுமென்று வர்ணிக்கிறார். ஒரு தொழிற் விற்பன்னரை தேநீர் விருந்திற்கு வரவேற்று அவருக்கு நம் தேசத்திய தொழில் முறையைப்பற்றி எடுத்துச் சொல்லுகிறார். ஸ்ரீ நாயுடு அவர்கள் உணர்ச்சியோடு தம் அபிப்பிராயத்தைத் தெரிவிக்கும் முறை, அவருடைய உயரிய நேசபாவத்தின் உணர்ச்சியையும், காரியார்த்தமான விடாமுயற்சியையும், எல்லையில்லா அறிவின் ஆழத்தையும் மக்களுக்கு எடுத்துக் காட்டுகிறது."

ஒரு வார்த்தைகூட நாயுடுவைப்பற்றி மிகைப்படுத்தி சொல்லவேண்டும் என்ற எண்ணத்தால் அவர் சொல்லவில்லை என்று நான் நினைக்கிறேன். ஏனென்றால் நாயுடு அவர்கள் எந்த விஷயத்தைப்பற்றியும் தன்னுடைய சொந்த முயற்சியால் நன்றாக அபிவிருத்தி செய்யப்பட்ட அறிவால் குற்றங் குறைகளை எடுத்துக்காட்டி அலசி அதைப்பற்றி சுலபமாக பேசக்கூடிய வல்லமை வாய்ந்தவர்.

நாயுடுவின் நண்பர்கள் அவர்மேல் காட்டிய அன்பு அநேக விஷயங்களில் அவ்வளவு உண்மையானதாயும், இணையற்றதாயும் இருக்கிறது. ஒரு நாள் மிகவும்

பிரக்கியாதிவாய்ந்த கோவைவாசியான சி. எஸ். ஆர். முதலியார் அவர்கள் கண்களில் நீர் ததும்ப, நண்பர் என்ற முறையில் அன்பாக தனக்கு இந்த தொழில் விஞ்ஞானியை முதன் முதல் கோவைக்கும் பழனிக்கும் பஸ்ஸை ஓட்டிக் கொண்டிருக்கும்போதே தெரியும் என்று குறிப்பிட்டார்கள்.

"உண்மையாகவா?" என்று மற்றொரு கோவையின் பெரிய மனிதரான சர் ஆர். கே. ஷண்முகம் செட்டியார் ஆச்சரியப்பட்டு சொல்ல ஆரம்பித்தார் :—

> "சரி, அதற்கும் முன்பே அதாவது அவர் தன்னுடைய முதல் மோட்டார் சைக்கிளை ஓட்டிக் கொண்டிருந்தபோதே அவரை எனக்குத் தெரியும் என்று நான் உங்களுக்குச் சொல்லலாம்".

குறிப்பிடத்தக்க நம் இந்திய தலைவர்களில் ஒருவரும், தற்போது சிலோனில் இந்திய ஹை கமிஷனராக இருப்பவருமான ஸ்ரீ வி. வி. கிரி அவர்கள் நாயுடுவைப் பற்றி கொண்டுள்ள அபிப்பிராயத்தை நான் இங்கே தருகிறேன். அவர் நாயுடுவைப்பற்றி தாராளமாக அபிப்பிராயம் கொடுத்தார் :—

> "ஸ்ரீமான் நாயுடு அவர்கள் என்னுடைய பழைய நண்பர். நாங்கள் "ஆல் இந்தியா பிளானிங் கமிட்டியை" ஆரம்பிக்கும்போது, சர் எம். விஸ்வேஸ்வரய்யாவும் நானும், நாயுடு அவர்களே அந்தக் கமிட்டியில் முதன்மை ஸ்தானம் பெறவேண்டுமென்று நினைத்தோம். நாயுடு இந்தத் தேசத்தில் எளிதிலே

காணமுடியாத காரியத்தை நேரடியாகச் செய்து காட்டக்கூடிய ஒரு ரகத்தைச் சேர்ந்த இன்ஜினீயர்." என்று ஸ்ரீ வி. வி. கிரி அவர்கள் சொன்னார்கள்.

நாம் எப்படியோ அப்படிப்பட்ட மனிதரை இந்தியாவில் தெரிந்துவைத்திருக்கிறோம் என்பதுமட்டுமல்ல, அவர்களை அறிந்துகொண்டவுடன் அவரிடமுள்ள அறிவுத் திறனை நாம் நம் தேசத்திற்கு நன்மை பயக்கும் அளவிற்கு உபயோகப்படுத்திக்கொள்ளவில்லை என்பது தான் நமது கவலை. காலம் மாறிக்கொண்டிருக்கிறது. நம் சுதந்திர இந்தியாவும் ஒரு புதிய முறையிலே தோற்றம் அளிக்கவேண்டும். அப்படி ஏற்படும்போது நாம் சந்தர்ப்பங்களை கைநழுவ விடக்கூடாது. கடைசியாக அப்பொழுதாவது, நாட்டின் வளத்தையும், நாட்டு மக்களின் அறிவுத் திறனையும் ஒன்றுகூட்ட நினைத்து நாட்டை நல்ல நிலைமைக்குக் கொண்டுவர முயற்சிப்போமாக. இப்படிப்பட்ட வேலைகளில் நாம் முயற்சி எடுத்துக்கொள்ளும் போது திரு ஜி. டி. நாயுடு அவர்களைப்போன்ற அறிவாளிகளை தொழிற் துறையிலும், விஞ்ஞானத் துறையிலும் உபயோகப்படுத்திக்கொள்ளும் அளவிற்கு நாம் நிச்சயமாக வருவோம்.

யு. எம். எஸ். பவர் பிரஸ், கோயமுத்தூர்.